
"சுத்த சம்மத திருச்சபை"

படைக்கும்

# சம்மதம்

*உயிர்க்கலை*

*உயிர் பற்றிய உலகின் புனித வேதம்*



நூலாசிரியர். ரெ. வெங்கட்டரமண சாஸ்திரி

| | | |
|---|---|---|
| * முதல் பதிப்பு | : | மார்ச் 2008 |
| * தலைப்பு | : | சம்மதம் உயிர்கலை |
| * பக்கம் | : | 155 |
| * பதிப்பாசிரியர் | : | **கெ. வேலாயுதம்**<br>"சுத்த சம்மத திருச்சபை"<br>57, ஈஸ்வரன் கோவில் தெரு,<br>புதுச்சேரி-605001. |
| * விலை | : | **கேட்டவர்க்கு கேட்ட விலை**<br>**(உயிர் விலை மதிப்பற்றது)** |
| * நூல் வெளியீடு | : | "சுத்த சம்மத திருச்சபை"<br>57, ஈஸ்வரன் கோவில் தெரு,<br>புதுச்சேரி-605001. |
| * அச்சகம் | : | மஹா கிராபிக்ஸ்,<br>எண்.6, திருமுருகன் வீதி,<br>காமராஜ் நகர்,<br>புதுச்சேரி - 605 011.<br>போன் : 2212557. |

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | "உயிர்க்கலை" ஓர் உயரிய கலை | 1 |
| 2. | உயிர்க் கலையின் முடிவென்ன? | 4 |
| 3. | தன்னிடத்தில் தான் கற்கின்ற உயிர்க்கலை ! | 6 |
| 4. | இன்றைய வாழ்க்கை நிலை | 8 |
| 5. | தன் விதியை தானே விதித்தல் | 13 |
| 6. | உயிர் எனும் ஜோதி ப்ரதிஷ்டை | 14 |
| 7. | "சரீரத்தின் சயனக் கலை" | 19 |
| 8. | "சரீரம் எனும் கோவிலில் உயிரெனும் கடவுளின் பிரதிஷ்டை" | 25 |
| 9. | உயிர் தான் கடவுள் - உணர்வாய் மனிதா? | 32 |
| 10. | சர்வமதம் - "சம்மதம்" | 35 |
| 11. | இல்லறம் அதுவே நல்லறம் | 39 |
| 12. | இல்லற ஒழுக்கம் | 40 |
| 13. | இருப்பு கட்டுதல் - கோபினம் கட்டுதல் என்று பொருள் | 43 |
| 14. | காலன் வணங்கும் கடவுள் "உயிர்" | 46 |
| 15. | விதியை நம்பி விதித்தவனை மறந்தேன்? | 49 |
| 16. | உயிரெனும் ஆயுதம் | 52 |
| 17. | "மனோபலம் உடையவனுக்கு மகத்தான வெற்றி" | 55 |
| 18. | உயிரே அனைத்துக்கும் மூலம் | 58 |
| 19. | உயிரே உனை காக்கும் கடவுள் | 63 |
| 20. | "ஒன்றிடத்தே இருந்து ஒன்றை பெற்றேன்" | 65 |
| 21. | உயிர் கேட்டவர்க்கு கேட்டவிலை | 70 |

22. சரீரம் 77
23. "உயிர்தான் உனக்கு உரம்" 82
24. விருப்பத்தின் மாறுதலே "விதி"யாகிறது 84
25. உயிரற்றவையே தீண்டத்தகாதவை 85
26. மாயையின் மயக்கமே நாகரீகம் 86
27. "சம்மதத்தார் வாழ்வியல் பயணம்" 88
28. உயிர் மருந்தெனும் அமிர்தம் 92
29. "கடவுளுக்கு தெரிந்தது
மனிதனுக்கு தெரியாதது." 94
30. "விதியில் இருந்து விதித்தவன் வரை
ஒரு நெடுந்தூரப் பயணம்" 95
31. "உயிர் எனும் மஹா சக்தியிடம் மனம்" 97
32. விதி மாளும் வழியைச் சொன்னேன்
விளக்கமாக 99
33. "உயிரின் மீது ஒப்புயர்வற்ற
காதல் கொண்டேன்." 103
34. "ம்" என்பது மஹா ரகசியம் 105
35. உயிரே உடலின் ஆதாரம் 112
36. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் 114
37. உயிருக்கு உணவளிப்போம் 115
38. ஆசையை ஏன் துறக்க வேண்டும்? 118
39. உடலுக்குள் உயிர் அடங்குவதே மரணம் 120
40. உயிரின் சம்மதம் 123
41. "உயிர்" எனும் சொல்லின் சக்தி 127
42. "எம்மத(மு)ம் சம்மதம்" 129
43. "சுவாசத்தை விசுவாசிப்பவர் செல்லும்
மெய்வழிப்பாதை" 133

## ஆசிரியர் பக்கம்!

அன்புள்ளம் கொண்ட "உயிர்" அன்பர்களே,

உயிர் பற்றி நிகழும் சர்வதாரி ஆண்டு சித்திரைத் திங்கள் முதல் நாள் (13.04.08) அன்று தங்கள் கரங்களில் தவழும் இந்த உலக மனித குல பொது வேத மறை நூல் உலகில் முதன் முதலாக திருவருள் எனக்கு உபதேசிக்க தினமும் சிறு பகுதிகளாக அதிகாலை 3.00 மணி கொண்டு 6.00 மணிவரை படைக்கப்பட்டு கொண்டிருந்தது. அப்போது எல்லாம் இதன் நோக்கம், பயன்பாடு, எதையும் அறியாமல் பதிவு செய்து கொண்டு இருந்தேன். ஒரு நாள் திருவருள் என்னிடம் இந்த பொது மறை நூல் இன்றைய நாள் வெளிவரும் அதற்கென்று பாத்தியப்பட்ட ஒருவர் வருவார் என்று குறிப்பிட்டார், நான் அதைப்பற்றி எல்லாம் யோசிக்காமல் குறிப்புகளை எழுதுவதிலேயே கவனமாக இருந்துவிட்டேன். அத்திருவருள் குறிப்பிட்டது போலவே திரு வேலாயுதம் என்பவர் என்னிடம் 29.03.2008 அன்று திருவருள் உணர்த்தியபடியே வந்தார். நான் உள்ள விஷயத்தை சொன்னவுடன் அவரும் உடனடியாக புத்தக வடிவம் கொடுத்து வெளியிடும் காரியத்தினை செயல்படுத்தினார். திருவருள் இந்த நூலுக்கு "சம்மதம்" என்ற திருநாமத்தை பொருத்தி அந்நூலை வெளியிட்டு கொள்கைகளை வெளியிடும் நம் சபைக்கு "சுத்த சம்மத திருச்சபை" என திருநாமத்தை இட்டு சபைக்கான கொள்கைகளை "சம்மதக் கொள்கை" என வகுத்து கொடுத்தார்கள். நமக்குள் இருந்து நம்மை இயக்கும் உயர்

பொருளாகிய "**உயிர் பொருளுக்கான மறை நூல்** உலகில் முதன் முறையாக வடிவெடுக்க கருவியாக செயல்பட்ட எனது இப்பிறவியையும், எனை ஈன்ற எனது தாயார் திருமதி. கமலா அம்மாள் அவர்களையும் எனது தந்தையார் திரு. பா. ரெங்கராஜன் அவர்களையும், இந்நேரம் கண்ணீர் மல்க நினைவு கூறுகிறேன்.

இந்நூல் உயிரின் படைப்புகள், உயிரின் குணங்கள், என உயிரைப் பற்றி பல பரிமாணங்களை உலகுக்கு உணர்த்துவதாக உள்ளது. இதனைத் தவிர "உயிர்க்கலை" எனும் உயரிய உலகின் முதல் கலையான முற்றிலும் மாறுபட்ட தியானக்கலையான சாகாக்கலை, அதனால் நமக்கு கிடைக்கும் சாகா நிலை என பல உண்மைகளை அறிவுறுத்துகிறது.

திருவருள் பணித்திட்டபடியே திருவருள் கருணையினால் படைக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் யாவையும் திரு. வேலாயுதம் அவர்களிடம் திருவருள் பணித்திட்டபடி அமைக்கப்பட்ட "சுத்த சம்மத திருச்சபை" யிடம் ஒப்படைக்கப்பட்டு நம் திருச்சபை மூலம் வெளியிடப்படுகிறது.

13.04.2008 **(ரெ. வெங்கட்டரமண சாஸ்திரி)**
புதுச்சேரி நூலாசிரியர்.



07.04.2008 அன்று மாலை 5.10 மணிக்கு,
ஆசிரியர் திரு. ரெ. வெங்கட்டரமண சாஸ்திரி அவர்கள்
தன் கைப்பட எழுதிய "**சம்மதம் உயிர்வேத நூலின்**"
கையெழுத்து பிரதிகளை திருவருள் பணித்திட்ட வண்ணம்
"**சுத்த சம்மத திருச்சபையிடம்**" ஒப்படைக்க
அதனை திருச்சபை சார்பாக
திரு. **வேலாயுதம்**, திருமதி. சரஸ்வதி **வேலாயுதம்**
ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

ரெ. வெங்கட்டரமண சாஸ்திரி

திரு. ரெ. வெங்கட்டரமண சாஸ்திரி,
நூலாசிரியர்.

திரு. **வேலாயுதம்**,
பதிப்பாசிரியர்
சுத்த சம்மத திருச்சபை.

## வேண்டுகோள்

"சம்மதம்" புனித வேத நூல், மனித குலம், தற்போது சந்தித்து வரும் மனவியல் கோளாறுகள், நரை, திரை, பிணி, மூப்பு, சாக்காடு எனும் கொடிய, நோய்களில் இருந்து மனிதர்களை காக்கும் பொருட்டு, திருவருள் சம்மதத்தால் நூலாக்கம் பெற்று நமது சுத்த சம்மத திருச்சபை வெளியிடப்படுகிறது. இந்த வேதநூல் பொக்கிஷங்கள் அடங்கிய பெட்டகம். பூட்டப்பட்ட அந்த பெட்டகத்தை திறந்து பொக்கிஷங்களை அனுபவிக்க விரும்பும் உயிர் அன்பர்கள், பொக்கிஷ பெட்டகத்தின் சாவியான உயிர் தியானத்தின் "மஹா இரகசியங்கள் சபையில் பாதுகாக்கப்பட்டுள்ளது" என்பதை அறியவும். உயிர்க்கலை என்னும் சாகாக்கலையான அதிநுட்பமான தியானக் கலையினை கற்கவும், காய கற்ப மருந்துகளை அறிந்து அதனை உண்டு உங்களை அனைத்து ரோகங்களில் இருந்தும் விடுவித்துக் கொள்ளவும், சபையில் உறுப்பினராக சேர்ந்து குரு சிஷ்ய பாரம்பரியப்படி சிக்கற கற்று தேர்ந்து தெளிவு பெற்று சாகாநிலை அடைந்து காயத்தை கற்பூரமாக்கி, பின் ஜோதிமயமாக்க, உங்களை உங்கள் "சுத்த சம்மத திருச்சபை" இன்முகத்தோடு வரவேற்கிறது.

**"திருவருள் சம்மதம்"**
"சுத்த சம்மத திருச்சபை"
57, ஈஸ்வரன் கோவில் தெரு, புதுச்சேரி-605001.
போன் : 0413-2220232 / 9443220238

# அணிந்துரை



புதுவை மாநிலம், முதலியார்பேட்டை பிராமணாள் வீதியில் வசிக்கும் க.ர. வேணுகோபால் அவர்களின் குமாரர்

வே. ஜெயப்பிரகாஷ் ஆகிய நானும், திரு. ரெ. வெங்கட்டரமண சாஸ்திரிகள் அவர்களும், கடந்த இருபது (20) வருடங்களாக உயிருக்கு உயிரான நண்பர்களாகவும், இணைபிரியாத நண்பர்களாகவும், ஒளிவு மறைவு அற்ற, உற்ற தோழர்களாகவும், கருத்துப்பரிமாற்றங்களிலும், ஆலோசனைகள் செய்வதில் நண்பர்களாகவும் இருந்து வருகிறோம், "மருத்துவம், ஆன்மிகம்" கற்றுத்தந்த ஆசானாகவும் விளங்கி உயிர்காப்பான் தோழன்" என்ற பழமொழிக்கு இலக்கணமாகவும் அவர் இருந்துவருகிறார். தினமும், சாஸ்திரிகளை சந்திக்க வரும்பொழுதெல்லாம், அவர் கண்டு பிடித்த மருந்துகள், ஆன்மிக சம்பந்தப்பட்ட விளக்கங்கள், இவைகளைப்பற்றி விவாதிப்போம். கடந்த சில மாதங்களுக்குமுன் இறையருள் மூலம் தனக்கு "உயிர்தான் கடவுள்" என்ற உண்மை தெரியவந்ததாகவும், அதைப்பற்றி தான் எழுதியதை தினமும் என்னிடம் வந்து காண்பிப்பார். அவரிடம் ஒரு அபூர்வசக்தி இருந்துவந்துள்ளது பற்றி நானும் அறிந்தது உண்டு. எனவே அதில் உள்ள விஷயங்களை தனிமையில் அமர்ந்து தினமும் படித்து பார்ப்பேன், அதில் எனக்கு வார்த்தையால் வர்ணிக்க முடியாத அளவிற்கு மிக மிக உயர்ந்த கருத்துக்கள் உள்ளதாகவும், உலக மக்கள் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயமாகவும் என் மனதிற்கு பட்டது. இதை அவர் தினமும் ஒவ்வொரு கருத்தாக எழுதிகொடுத்துவிட்டு போய்விடுவார் நான் அதைப்பாதுகாத்து பத்திரப்படுத்தி

வந்தேன். ரெ. வெங்கட்டரமண சாஸ்திரிகள் தினமும் காலை 3 மணியிலிருந்து 6 மணி வரை ஒரு நாள் கூட தவறாமல் எழுதிவந்தார் அவர் அதிகமாக யாரிடமும் பேசமாட்டார் நான் ஒருவன் மட்டும் அவருக்கு ஆத்மார்த்த நண்பன். திரு. சாஸ்திரி அவர்கள் திருச்சிராப்பள்ளியில் 6 ஆம் வகுப்பு வரை படித்துள்ளார் அவருக்கு வயது தற்பொழுது 36 அந்தணர் குடும்பத்தில் பிறந்த இவர் வேதசாஸ்திரங்களை முறையாக கற்று அறிந்தவர் அவரது தாயார் மிகுந்த புண்யவதி ஆவார், மிகுந்த தெய்வபக்தி உடையவர்.அவர் தந்தையார் ப. ரங்கராஜ ஐயர் சிறந்த சங்கீதவித்வான் அவரிடம் சங்கீதம் முறையாக பயின்று வந்தார் எல்லாம் இருந்தபொழுதும் இறையுணர்வில் தான்அதிகநேரம் செலவுசெய்வார் அவர் எழுதிவைத்த அனேகம் வாக்கியங்கள் எழுத்து பிழைகள் முறைபடுத்தி காண்பிப்பேன். இந்த கருத்துக்களை அவர் எழுதும்பொழுது அவருடைய சிந்தனை அந்த எழுத்தில் இருக்காது. மெய்யுருகும் அவருடைய சிந்தனையிலுள்ள உயிரைப்பற்றிய ஆழமான கருத்துக்கள் யாவும் உலகமக்களை சென்றடையவேண்டும் என்று ஒவ்வொரு நாளும் இறைவனிடத்தில் நான் என்னுடைய வேண்டுகோளை பிறப்பிப்பது உண்டு, ஒரு நாள் வரும் சர்வதாரி ஆண்டு சித்திரை மாதம் முதல் நாள், இந்த செய்தி அனைவரையும் சென்றடையுமென்று அவர் கைப்பட எழுதி என்னிடம் கொடுத்தார். இதுவே முழுநேர வேலையாக இருந்ததால், இருவருக்கும் வருமானம் ஈட்டுவதற்குக்கூட வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது தேடி வந்த வேளைகளையும் விட்டு விட்டு, இதைப்பற்றியே சிந்தித்து கொண்டு இவ்வளவு காலங்கள் வாழ்ந்து விட்டோம். இந்த **உலக உயிர் மறை** இதை நான் மட்டும் படித்து கொண்டிருந்தால் போதுமா? அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டாமா என்று வினவினேன்? அதற்கு, அவர் என்னிடம் அருள் ஆதாரம் மட்டுமே உள்ளது,

அதைக்கொண்டு பொருளாதாரம் செய்யும்படி ஆணையிட்டார், சித்திரை முதல் நாள் வருவதற்கு இன்னும் 15 நாட்களே இருந்த நிலையில் என்ன செய்வதென்று புரியவில்லை. இறைவனிடம் மானசீகமாக வேண்டினேன், இதற்கு ஒருவழியை காட்டு என்று, அப்பொழுது 29.03.08 அன்று திரு. வேலாயுதம் நாயக்கர் அவர்தம் தம்பதியர் இதை அச்சிட்டு வழங்கித்தருவதாக உறுதி கூறினார். இவர்கள் தக்க நேரத்தில் வந்து உதவியது திருவருள் செயல் என்றே கருதுகிறேன். திரு. வெங்கட்டரமண சாஸ்திரி அவர்களிடம் திரு. பாலகிருஷ்ணன் நாயுடு, திரு. வெள்ளைமுத்து உடையார், திரு. அருணசலம் கவுண்டர், திரு. சக்தி என்ற சந்தானம் செட்டியார் ஆகியோர், சிஷ்யர்களாக நீண்ட காலங்களாக குருகுலவாசமாக இருந்து வருகிறார்கள். (7) ஏழுபேர் சிஷ்யர்களாக இருந்துவருகிறோம். இதில் எவரும் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று கருதாமல், அனைவரையும் சமமாகபாவிக்கும், நல்ல உள்ளம் கொண்டவர். திரு. வெங்கட்டரமண சாஸ்திரிகள் அவரிடத்தில் இருக்கும், திருவருள் எங்கள் அனைவரையும் ஒன்று சேர்த்ததாக கருதுகிறோம். உயிரைப்போற்றும் அன்பர்கள் அனைவரும் உயிராகிய கடவுளின் உள்ளத்தை நெருங்கவேண்டும் என்று, எனை ஈன்ற தந்தையாகிய "சுத்த சம்மத திருச்சபை" யினடத்தில் இந்த வேண்டுகோளை உயிர் பாதகமலங்களில் சமர்ப்பிக்கிறேன்.

வே. ஜெய்பிரகாஷ்.

வே. ஜெயப்பிரகாஷ்.

13.04.2008
புதுச்சேரி

## அறிவிப்பு

சம்மதம் புனித "உயிர்" வேத சாத்திர நூல் உலக மனிதகுலம், நலம், வளம், ஞானம், முக்தி ஆகியவற்றை அடையும் பொருட்டு சுத்த சம்மத திருச்சபையால் படைக்கப்பட்டு, உரிமை பதிவு செய்யப்பட்டு உலகில் முதன் முதலில் நூல் வடிவம் கொண்டு வெளிவருகிறது. இதனை வியாபார நோக்கில் யாரேனும் மறுபதிப்போ, மறு வெளியீடோ, இதில் உள்ள கருத்துகளை பொருள் செய்யும் நோக்கில் பயன்படுத்தினாலோ அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். ஆனால் திருவருள் சம்மதத்துடன் யாரும் பயன்படுத்த எமக்கு சம்மதமே.

**"திருவருள் சம்மதம்"**
"சுத்த சம்மத திருச்சபை:
57, ஈஸ்வரன் கோவில் தெரு, புதுச்சேரி-605001.

# முன்னுரை

வணக்கம்! இந்த முன்னுரை எழுதப்பட்டு இந்த வேதம் உலகுக்கு படைக்கப்படும் (13.04.08) சர்வதாரி ஆண்டு சித்திரைத் திங்கள் முதல் நாள், இந்நாள் ஒரு பொன்னாள், நன்னாள், உலகத்தின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாள். ஏன் எனில் உலகில் பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பின் மனித குலத்துக்காக, பிரபஞ்சத்திற்கு பொதுவானதும் ஒரே ஆதார சக்தியாகிய உயிராகிய கடவுளுக்கான உலகின் முதல் வேத பொதுமறைநூல் படைப்பாகிக் கொண்டிருக்கிறது. இந்நூல், எம் குருநாதர் ஆசீர்வாதத்தாலும், திருவருளின் கருணையாலும் திரு. ரெ. வெங்கட்ட ரமண சாஸ்திரிகள் அவர்கள் உபதேசிக்கப்பட்டார். பிறகு கடந்த 29.3.08 அன்று திருவருள் எங்களை ஆட்கொண்டு எங்களை ஆசீர்வதித்து எங்களுக்கு செய்த முதல் உபதேசம் இனி உலகமே உமது குடும்பம், உலகத்தார் அனைவரும் உமது பந்தங்கள் என்பது தான். பிறகே எங்களுக்கு தான் அறிந்த உலக இக பர உலக ஞானங்களையும் மருத்துவ ஞானங்களையும் போதித்து, இந்நூலுக்கு "சம்மதம்" என திருநாமம் பொருத்தி நம் திருச்சபைக்கு "சுத்த சம்மத திருச்சபை" என்னும் திருநாமம் இட்டு அதனை நிறுவி நிர்வகிக்கும் மாபெரும் பணியினை திருவருளை எமக்கு பணித்திட்டார். நம் திருச்சபை வாயிலாக உலகெங்கும் சம்மதக் கொள்கை பரவி உலகத்தார் அனைவரும் பயனுற வேண்டும் என்பதே திருவருளின் திருவுள சித்தம். மேலும், இச்சபையில் தன் சார்பாக திருவருள் கடையேனுக்கு கடையேனாம் அடியேனை நியமித்து நமது "சம்மதம்" புனித "உயிர்" அதனுக்காக இறைவனால் மனித குலத்துக்கு போதிக்கப்பட்ட உலகின் முதல் வேத நூல் சித்திரை முதல் நாள் அதாவது "உயிராகிய கடவுள்" தன்னை கோடானு கோடி ஆண்டுகளுக்கு பின் வெளிப்படுத்திக் கொள்ள திருவருள் சம்மதம் தெரிவித்து இந்த மறை நூல்

வெளிவரவேண்டும் என்றும் பணித்திட்டார்கள். இப்போது "கங்கு" எனப்படும், சிறிய தீப்பொறியை காட்டில் பொத்தி வைத்துள்ளோம், அது இந்த வேதம் வெளிவரும் நாள், காடு முழுதும் தீப்பிடித்து, காட்டுத் தீயாக பரவுவது போல் உலகெங்கும் பரவி உலகின் தலையெழுத்தினை மாற்றி, மனிதகுலம் முழுதும் "சம்மதம்" என்ற ஒரே மதத்தின் கீழ் கொண்டு வரும் என்பதே பேர்உண்மை, சம்மதத்துக்கான "சம்மதக் கொள்கை", "உயிரே கடவுள்", என்பது தான்.

நம் திருமறையில் திருவருள் போதிப்பது என்ன வென்றால் "உயிர்தான் கடவுள்". "உயிர்" தான் பிரபஞ்சம் முழுதும் வியாபித்துக் கொண்டு இருக்கும் ஒரே சக்தி. அது அசையாமல் இருந்து கொண்டு அனைத்தையும் அசைக்கிறது. அந்த "உயிர்" ஆணுக்குள் பெண் வடிவமாகவும் பெண்ணுக்குள் ஆண் வடிவமாகவும் இருக்கிறது. அது அசையும் பொருள்களுக்குள் சைவமாகவும், அசையா பொருள்களுக்குள் அசைவமாகவும் இருக்கிறது. உயிரே அனைத்துக்கும் ஆதார சக்தியாக விளங்குகிறது. நாம் விடும் சுவாசம் ஒவ்வொன்றும் "உயிர்" நம் மீது கொண்ட விசுவாசம் என்பதை நாம் மறந்து உயிரை விசுவாசிக்க மறந்ததே, நாம் படும் அனைத்து துன்பங்களுக்கும் காரணம். ஆகவே நாம் உடல் அபிமானத்தை மறந்து உயிர் அபிமானம் கொண்டு, ஒரு தடவை வாழ்நாளில் "உயிர்தான் கடவுள்" என்பதை உணர்ந்து மனமுவந்து கூறும் அடுத்த கனம் நமது உயிராகிய கடவுள் அனைத்து பாபங்களிலும் இருந்து நம்மை விடுவிக்கிறார். நமது "உயிர்" எனும் மஹா சக்தியின் முன் விதியின் விதி முடிந்து போகிறது, காலனுக்கு கல்லறையும் கட்டப்பட்டு விடுகிறது. காரணம் "உயிரே கடவுள்" என்று முதலில் அபிமானித்ததே அந்த காலன்தானாம், இது திருவருளின் வாக்கு.

உயிர்க்கலை என்பது நமது ஆதி மூலமாகிய உயிராகிய கடவுளையே நமக்கு காவலனாகவும், ஆயுதமாகவும், கேடயமாகவும், பயன்படுத்தி நமக்கு ஏற்படும் நரை, திரை, பிணி, மூப்பு, சாக்காடு ஆகியவற்றை வெல்வதற்காக நமது

திருவருள் கருணையால் போதிக்கப்பட்டுள்ள உலகின் முதல் கலை. முதன்மையான கலை, இதற்கு நிகரான கலை இது வரை உலகில் தோன்றியதில்லை, இனியும் தோன்றப்போவதில்லை என்பதே உண்மை. இந்த உயிர்க்கலையின் ஒரு அம்சம் தான், படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களான, உயிரணுக்களை உற்பத்தி செய்து கொள்ளுதல், உயிரணுக்களை பாதுகாத்தல் இறந்து போன உயிரணுக்களை வெளியேற்றுதல் என்பதாம். இம்மூன்று தொழிலையும் நம் திருவருள் அருளிய காய கற்ப மருந்துக்களை (உயிர் மருந்து)உட்கொண்டு, ஒருவர் முறையாக உயிர் தியானம் செய்து வந்தால், அவர் தேகம், இந்த உயரிய உயிர்க்கலை மூலமாக, ஊண் தேகம், உயிர் (கல்பம்) தேகமாக மாறும். கற்பூர தேகமாக மாறிய தேகம் திருவருள் கருணையினால் திருகுறிப்பு வரும் நாளில் கற்பூரமானது இறைவன் சபையில் ஜோதியாக மாறும் என்பது உண்மை, சத்தியம். இனி ஜீவசமாதி என்பதெல்லாம் கடந்தகால சமாச்சாரங்கள். இந்த புனித வேதத்தை உலகம் முழுதும் உள்ள நமது பந்தங்களாகிய மனித குலத்தில் அவதரித்த ஒவ்வொருவரும் கருத்தாழம் கொண்டு சிக்கற கற்று உயிர்க்கலையாம், "சாகாக்கலை" பயின்று, சாவியலை வாழ்வியலாக மாற்றி, காயத்தை கற்பகோடி ஆண்டுகள் வாழவைத்து, நாம் ஜனித்த இந்த உடலுடனே, ஒளி வடிவமாக துன்பத்தின் பிறப்பிடமான பூவுலகிலிருந்து, விடுபட்டு ஆனந்தத்தின் எல்லையான கடவுளின் வீட்டை நோக்கி பயணப்பட உங்களை அன்புடன் அழைக்கிறது, நம் சுத்த சம்மத திருச்சபை."

**"திருவருள் சம்மதம்"**


**கெ. வேலாயுதம்**

**சரஸ்வதி வேலாயுதம்**

"சுத்த சம்மத திருச்சபை"

57, ஈஸ்வரன் கோவில் தெரு, புதுச்சேரி-605001.

# திருவருள் சம்மதம்

## 1. "உயிர்க்கலை" ஓர் உயரிய கலை

உலகத்தில் யாரும் செய்திடாத ஒரு சாதனை! அது தான் சாகா நிலை. தீயில் வேகாத உடம்பு இந்த நிலைக்கு நமது மானுட சரீரத்தை மாற்றுவது எப்படி? என்பதைப் பற்றிய ஒரு விளக்கமே இங்கு படைக்கப்படுகிறது. கவனமுடன் கேளுங்கள், தலையில் உள்ள ஒரு மயிர் நரைத்து விட்டது என்றால் அந்த முடி சாகிறது என்று தான் அர்த்தம். வழுக்கை விழுந்து விட்டால், ரோமம் செத்து விட்டது என்று தான் அர்த்தம். ஒவ்வொரு ரோமமும் நாளுக்கு நாள் நரைத்து போக ஆரம்பித்து விட்டது. காலங்கள் கடந்து கொண்டு இருக்கிறது. இந்த கால வெள்ளத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளில் கட்டாயம் அடித்துச் செல்லப்படுகிறார்கள். யாரும் மரணமடைய ஆசைப்படுவதில்லை. படைத்தவன் தன்னால் படைக்கப்பட்ட உயிர் இறந்து போக விருப்பப்படுவதில்லை. படைத்தவன், அனைவரும் வாழவே விரும்புகிறான். மருத்துவர்கள் எவ்வளவோ போராடித்தான் பார்ப்பார்கள். ஆனால், விதிதான் வெல்லுகிறது. இது ஒரு துக்க சம்பவம் தான். இதை யாரும் விரும்புவதில்லை. அப்போது பொன், பொருள், மனைவி, போகம், கடவுள், மக்கள், மருந்து, புண்ணியம், நம்பிக்கை எதுவும் பயனற்று போகின்றன. மரணம் மட்டுமே வெற்றி வாய்ப்பைப் பெறுகிறது. மனிதன் உயிருக்கு அஞ்சி வாழ்ந்து கொண்டு இருக்கிறான். மரணம் இயற்கையானது என எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில் மரணத்தை வென்ற மாமனிதனை இந்த உலகம் அறிந்ததில்லை.

தனது மயிர் செத்துப் போனதை நினைத்து வருந்தாதவன் உயிர் போவதையும் நினைத்தும் வருந்துவது கூட இல்லை. எது நிலையானது? என்று அறியாமல் நிலை தடுமாறி வாழ்ந்து கொண்டு இருக்கிறான். நான் சித்திரகுப்தனின் ஆயுள் கணக்கு பற்றி இந்நூலில் எழுத ஆர்வம் கொண்டேன். தங்க

பஸ்பம் உண்டவனும் பஸ்பமாகித்தான் போகிறான். எமனை வெல்ல வேண்டும் என்பது தான் எனது விருப்பம் அந்த எமன் என்பவன் யார்? எமனுக்கும் உயிருக்கும் நீண்டகால பகையா என்ன? எமன் எந்த ஆயுதத்தால் நம் உயிரை கவர்ந்து செல்கிறான்? பாசக்கயிறு என்றால் என்ன? எமனுக்கு எமனாக மாற வேண்டுமெனில் நாம் என்ன செய்ய வேண்டும்? எமனின் இருப்பிடம் எது? எமன் இப்போது என்ன செய்துக் கொண்டிருக்கிறான்? அவனுக்கு என்ன செய்வது? என்றும் அவனை ஒரு முடிவுக் கட்டும் விதமாக எமது ஆராய்ச்சிகள் அமையும் என்பதில் ஐயம் இல்லை. இது ஒரு நீண்ட கடினமான ஆராய்ச்சி. ஆனால் இதற்கு ஒரு எளிய தீர்வு உண்டு. இந்த கேள்வி என்ன? எந்த ஒரு கேள்விக்கும் முன்பாகவே பதில் மனதில் வந்து சேர்ந்து விடுகிறது. என்னுடைய மனோசக்தியால் எமனை வெல்லும் ஆற்றலை பெற்றேன், தயங்குபவர் சற்று தள்ளி நின்று வேடிக்கைப் பாருங்கள். கெட்டுப் போன உடலைப் பொன்னாக மாற்றுகின்ற மெய்பொருளியல் தான் இது. இது தான் உயிர்க்கலை.

| | | |
|---|---|---|
| உணர்வுகளை உருவாக்கி கொண்டு வாழ்பவர்கள் | - | உத்தமர்கள் |
| உணர்வுகளை கொன்று வாழ்பவர்கள் | - | வேதாந்திகள் |
| உணர்வுகளை கட்டுப்படுத்தி வாழ்பவர்கள் | - | ஞானிகள் |
| உணர்வுகளை உள்ளடக்கிய சாதனைசீலர்கள் | - | யோகிகள் |
| சித்தத்துள்ளே சிவனைக் கண்டவர்கள் | - | சித்தர்கள் |
| உணர்வுகளை உணர்ச்சிகளை அழிப்பவர்கள் | - | காமுகர்கள் |

ஊனை உருக்கினால் உள் ஒளி மறையும்-காமுகர்கள் முடிவு.

ஒரு மனிதனால் 1000 மனிதனை உருவாக்கி விடுவது ஒரு சாதாரண செயல் தான். ஆனால் தனக்கு ஏற்றார் போல் ஒரு சரீரத்தை மட்டும் ஏன் உருவாக்கி கொள்ள முடியவில்லை. படைக்கப்பட்ட மனிதனை பொருத்தவரை

தந்தை தான் பிரம்மாவாக உள்ளார். அவர் இன்றி இவன் பூமியில் பிறந்து இருக்க முடியாது. தந்தையின் உடலை விட்டு 10 மாதங்கள் ஒரு இடத்தில் தங்கிய பின்பு உயிர் சரீரமாக உருவாகிறது. ஆனால் நம்மிடத்தில் அதே உயிர் பொருள் 10 நாட்களுக்கு மேல் தங்குவதில்லை. ஆக அந்த உயிர்பொருள் நமது உடலுக்கு தேவைப்படுகிறது. ஒரு புதிய உடலை உருவாக்குவதற்காக படைக்கப்பட்ட உயிர்ப் பொருள் உள்ளேயே தங்கி விட்டால் உயிர் உறுதியாக உடலில் தங்கிவிடும். மனம் பலஹீனம் உள்ளவர்க்கே உயிர் பசி, மன பலம் உடைய ஞானிக்கு பசியே உயிர் தான். திருமணம் செய்து கொள்ளாது எந்த பெண்ணுடனும் சல்லாபம் செய்யாத உத்தம சீலர்களுக்கு தனது அந்தரங்க வாழ்க்கையிலே எல்லா பசியும் தீர்ந்து போய்விடுகிறது. எல்லாம் ஒன்றுதான் உடலின் தோற்றத்தின் மாறுபாடுகளை விளையாட்டாக கண்ணாடியில் பார்த்து ரசித்து கொண்டு இருக்கிறார்கள். இது முதுமைக்கான பயணம், உயிர் பொருள் குறைய குறைய உடலின் பொலிவு குறைந்து கொண்டே போகிறது. காமனை எரித்ததாக, மன்மதனை எரித்ததாக கதை வேண்டுமானால் விடுவார்கள் ரதி மன்மதனை எரிக்க வேண்டியதன் அவசியம் ஈஸ்வரனுக்கு வரவேண்டிய காரணம் என்ன? ஞானக் கண்ணான 3-ஆம் கண்ணை கொண்டு தான் காம தகனம் செய்தான் ஈஸ்வரன். இது கொண்டாடப்படும் திருவிழாவாக உள்ளதே தவிர கடைப்பிடிக்கும் விஷயமாக இல்லாததுவே குறைபட வேண்டிய விஷயம். இந்த எமனே தான் பாசக்கயிறு வீசும் எமன் ஆவான். இந்த சிவன், எமனையும், காமனையும், நெற்றிக் கண்ணால் எரித்துள்ளார். இருவரும் ஒருவரே ஆகும். காமம் மனிதனை தகனம் செய்யும் சக்தியாக உள்ளது. உடல் முழுவதும் வெப்பம் உணர்ச்சியாய் பரவி அடங்குகிறது. சரீர சுகம் வேண்டி உயிர் சுகத்தை இழக்கிறோம். உயிர் சுகம் பெற சரீர சுகங்களை தியாகம் செய்ய வேண்டும். கை, கால், தலை போன்றவற்றை பிறர் அமுக்கி விடும் போது உள்ள எதார்த்த சுகம் எதுவோ அதுவும் சரீர சுகம் தான். தன் மீது தனக்கு உண்டான அன்புக்கு பெயர்தான் ஆன்மீகம். தன்னிடத்தில் தான் ரசிக்கத்தக்க ஒன்றும் கவனிக்கதக்க ஒன்றும்,

உணரத்தக்க ஒன்றும் உண்டு என்று உணரப்படுகின்றதோ அந்த உள் உணர்வுதான் உயிர் அதை தியானிப்பவனே சுயமாக இன்பம் அனுபவிக்கிறான். தனக்கு அன்னியமான வஸ்துவிடம் இருந்து பெறப்பட்ட இன்பத்தை விட இது மேலானது. தன்னிடத்தில் இருந்து தான் அனைத்தையும் கற்றுக் கொண்டான் அவன் உள்ளே இருப்பது ரகசியம், வெளியே இருப்பது செய்தி. உலகத்தில் லாபம், நஷ்டம், மட்டும்தான், பாவம், புண்ணியம் இரண்டும் நடைமுறையில் இல்லாத சட்டங்கள். சட்டம் போட்டவன் கல்லாகி விட்டான். இவனை கல்லாக சபித்தவன் எவன். இவனை கட்டிபிடித்து அழுதாலும் ஒரு சொட்டு கண்ணீர் கூட விட முடியாது. அதனால் உன்னை விட ஒரு சக்தி உனக்குள்ளே தான் இருக்கிறது. இதுவே உண்மை, நீயே உன்னை ஆளுகின்ற சக்தியுமாக இருக்கிறாய். இந்த நிலையில் எவன் பழகுவானோ அவன் உடல் உயிராக மாறும். உடம்பே உயிராக நிற்கும். உயிர் உடலாக மாறும். **உடம்புக்குள் உயிர் இருப்பதாக எண்ணுதலினாலேதான் மரணம்** ஏற்படுகிறது. **உயிரிலே உடம்பு இருக்கப் பழகுங்கள்,** அப்போது உயிர் பெரிய பொருளாக மாறும். **உடலை உயிராக பாவித்த மறுகணம் உயிர் உடலாக மாறிவிடும்.** அதாவது உயிர் பாரமான, தடித்த உருவமாக எண்ணுபவனிடத்தில் உடல் காற்றை விட மெல்லியதாக ஒலியை விடவும் மெல்லியதாக ஒளியாக மாறும் இந்த நிலை. இதுவே சாகாத கல்வி. இதுவே சாயுச்சிய நிலை **மனிதனின் 7-வது அறிவு** இதுவே. மனம்-நரம்பு மண்டலம்-மூளை-அறிவு-புத்தி-ஞானம் = நாதமண்டபம், இருதயம்-மார்பு-இருதயம்-ஆத்மா-உயிர்-பிரம்மம் = ஒளி மண்டபம், உயிர்-ஊற்றை சரீரம்-உடல்-மாமிருதம்-அகங்காரம்-பூமி-ஜல மண்டபம், இந்த ஜல மண்டலம் விந்து மண்டலமாக மாறும்போது ஒளி மண்டபமாக மாறும்.

## 2. உயிர்க் கலையின் முடிவென்ன?

உயிர்க்கலை என்பது சரீரம் என்ற ஒரு திடப்பொருளை ஒளிப்பொருளாக மாற்றி, சரீரத்தை உன்னுடைய உயிருக்குள்ளே புகுத்துதல் என்பதாம். சுவைகள் மொத்தம்

ஏழு ஆகும். உண்ணும் உணவே உடலில் சக்தியாக மாறுகிறது. அந்த சக்தியை உடைய, உடல், உயிரோடு சேரும போது மகா சக்தி ஆகிவிடுகிறது. உலகத்தில் தனித்துவம் வாய்ந்தவனாக வாழ்வாங்கு வாழ்வான். ஆனால் அந்த சக்தி உடலில் நிலைக்காது, திரவப் பொருளாக மாறி வெளியேறும் போது உடல் உயிரோடு உறவாடும் சக்தியை இழக்கிறது. தகுதி அற்று தன் உடலுக்கு கிழக்கோலம் சாபத்தால் ஏற்படுகிறது. உள்ளிருக்கும் உயிர் இவனை சபித்து தனக்கு சேர வேண்டிய ஒன்றை உடல் வீண் விரயம் செய்ததால் இந்த தண்டனை. உயிருக்கு வாகனமான இந்த உடலில் எமன் சவாரி செய்யும் எருமையாக மாறிவிடுகிறது. கொடிய வியாதி வர்க்கங்கள் எல்லாம் எமதூதர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். எமனுடைய பாசக் கயிறு என்பது எல்லாம் காதல் வலை வீச்சு தான் என்பதை மறவாதே. பலரும் நிலையற்ற உடலை வைத்துக் கொண்டு இருப்பதால் நிலையான பொருளை அடைய முடியாமல் போய்விடுகிறது. வாலிப பருவத்தில் உயிர் பொருளை விளையாட்டாக செலவு செய்கிறார்கள். வாலிபம் என்பது வசந்த காலமாகும். ஒரு ஆசிரியன் தன் மாணவனுக்கு ஒழுக்கத்தை மட்டும் போதிக்கிறான். ஆனால் உனக்குள் இருப்பவனோ கலைகள் அனைத்தையும் கற்றுக் கொடுக்கிறான். இது விவேகத்தை வரவழைக்கும் சக்தியாக உள்ளது. கொள்ளிக் கட்டையை கொண்டு தலையை சொரிந்து கொள்வது போல.

அன்னத்தால் உயிர் மகிமை அடைகிறது - ஆகவே அன்னம் கடவுளுக்கு சமம்

சுக்கிலத்தால் உடல் மகிமை அடைகிறது - "சுக்கிலம் உயிருக்கு சமம்"

ஆதித்தியனால் உலகம் மகிமை அடைகிறது - "ஆதித்யன் கடவுளுக்கு சமம்"

ஆசிரியனால் மாணவன் மகிமை அடைகிறான் - "ஆசிரியன் கடவுளுக்கு சமம்"

## 3. தன்னிடத்தில் தான் கற்கின்ற உயிர்க்கலை !

உடல் முழுவதும் ரத்தத்தில் சுக்கிலம் பரவும் போது திடமான உடல் ஒளியாக மாறுவதை உணர்வீர்கள். திடமான உடல், காற்றை விட மெல்லியதாகவும், ஒளியை விட மெல்லியதாகவும், பால்மனம் மாறாத குழந்தையாய், இறைவன் இவன் முகத்துள் விளங்கிடுவான். கற்பூரத்தைப் போல புத்தியும், என்றும் பதினாறாய் வாழ்வான். மேலும் மேனி மினு மினுக்கும், நரை கருக்கும், கிழவனை குமரனாக மாற்றும். இது 7-ஆம் அறிவு நிலை. சுக்லம் இல்லாமல் வாழும் சரீரம் பொருள் அற்ற வாழ்க்கை. உடலுக்கு தேவையான மருந்து சுக்லம் என்ற அமிர்தம் தான். இந்த ரகசியத்தை தேவர்கள் அறிந்ததால் சாகாவரம் பெற்றனர். இதுவே அமிர்தம் எனப்படும். பாற்கடலில் பாம்பை கொண்டு வந்து மலையை கட்டி கடைந்தார்கள் என்றார்களே இப்போது விளங்குகிறதா உண்மை ? தலைபுறம் அசுரர் என்றும் வால்புறம் தேவருமாய் கடைந்தனர்.

தலைபுறம் என்றால் ஆண்குறிக்கு எதிரில் செயல்படும் அசுர சக்திகள் வால்புறம் என்றால் நமது தேகம். மலை என்றால் மனம் என்று பொருள். அப்போது சிவன் ஆலகால விஷம் அருந்திய காரணம் எமன், நோய் ஊழ்வினை என்ற அனைத்தையும் சீவனான சிவனே சாப்பிட்டுட்டான். சீவனான சிவனுக்கு உயிர் போகாமல் அதன் சக்தியே அதனை காப்பாற்றியது. அதாவது, சிவனை பராசக்தி காப்பாற்றிய கதை. ஆலகால விஷம் முறிய சிவனுக்கு எந்த வைத்தியமும் செய்யப்படவில்லை. இதனை சற்று உற்று கவனியுங்கள், உள்ளுறுப்புக்கள் செயல் இழப்பு நேருகிறதே, அது எதனால் தெரியுமா ? அந்த உயிர் அணுக்களினுடைய பற்றாக்குறையே செயல் இழப்புக்கு காரணம்.

உயிர் அணுக்கள் தன் உள்ளுறுப்புக்களை செயல்பட வைக்கிற சிறிய சக்தி ஆகும். இதுவரை இந்த அணுக்களை உற்பத்தி செய்யும் அளவுக்கு விஞ்ஞானம் வளரவில்லை. ஆனால் இந்த உயிர் அணுக்களை உற்பத்தி செய்யும் மருந்தினை நான் கண்டுபிடித்து உள்ளதால், வயதான

முதுமைஅடைந்தவர்களுக்கும் எல்லா விதத்திலும் செல்லுபடி ஆகும் மருந்து ஆகும். எப்படி என்றால் என்னுடைய மருந்து. மட்டுமே உமிழ்நீரை கூட சுக்கிலமாக மாற்றும் சக்தியை பெறுகிறது என்றால் எல்லா உயிர் அணுக்களும் செத்துப் போன எந்த ஒரு முதுமையான வயதிலும் செல்கள் பற்றாக்குறையை 10 நாட்களுக்குள் நிவர்த்தி செய்து விடுகிறது. உளுத்துப் போன, அல்லது தளர்ந்த கிழசரீரத்தை கூட ஒளிமண்டபமாக மாற்றிவிட முடியும். புராண காலத்தில் குஷ்டம் பிடித்த கிழவன் ஒருவனை (திரிசங்குவை) உடலோடு சொர்க்கத்திற்கு அனுப்பிய கதை. அது விஸ்வாமித்திரரின் தவ பலம். இது என்னுடைய பலம் ஆகும். வாயில் உள்ள உமிழ் நீரை சுக்கிலமாக மாற்றும் என்றால், ரத்தத்தை அமிர்தமாக மாற்றும். உடலை ஒளி மண்டபமாக மாற்றும், திராட்சை பழத்தை போல் கண்கள், மாதுளை முத்து போன்ற பற்கள், நரை கருக்கும், உடல் சுறுக்கம் போக்கும், கண் கருவளையம் போதும், முதுமை போகும், சுக்கிலம் மணிபோல் ஆகும். உடல் உயிராக மாறும். ஜோதி மயமாக போகும் கற்பூரத்தை போல கரைந்து விடுவான்.

உயிர் அணுக்களை உற்பத்தி செய்யும் கலை - பிரம்மாவின் கலை - படைத்தல்

உயிர் அணுக்களை காப்பாற்றும் கலை - விஷ்ணுவின் கலை - காத்தல்

இறந்த உயிர் அணுக்களை வெளியேற்றும் கலை - சிவனின் கலை - அழித்தல்

நல்ல உயிர் அணுக்களை வெளியேற்றும் கலை - காமன் கலை - விதியின் பிறப்பிடம்

குருடனுக்கு நிறத்தையும், ஊமைக்கு வேதமும், செத்தவனுக்கு சோறும், செவிடனுக்கு ராக ஆலாபனையும், காமாந்தகனுக்கு காய கற்பமும், பக்தி இல்லாதவனுக்கு முக்தி வழி சொல்லுதலும் சாகும் முன் காதில் சொல்லும் மந்திரோபதேசமான கர்ண மந்திரத்துக்கு சமமானது என்பதை மனமே நீ அறிவாயா ?

விந்து + தேகம் = ஒளிதேகம் + உயிர்தேகம் = பரஞ்ஜோதியாவான்

ஓம் தலை, இது நாத மண்டபம், ஓங்கார மண்டபம் (விந்து இல்லாமல் நாதம் ஒளி)

உடல் இது ஒளி மண்டபம் - சுக்லம் இல்லாமல் உள்ள உடலில் ஒளி ஜோதியை ஏற்ற முடியாது. அப்போது சுக்லமான உயிர் உடல் ஜோதியாய் விளங்குமாம்.

"நான் என் வசமானால் அது என் வசமாகும்
அது என் வசமானால் சமாதி சாஸ்வதப்படும்,
நிலையற்ற தேகத்தில் உள்ள நிலையான -
தேகத்தை அழியாத இடத்திலே நிறுத்தி
சரீரம் முதலிய வாசனாதி கற்பனைகள் எவையும்
அற்று நின்ற இடத்திலே தங்கிய வஸ்துவை
உண்டு உறங்கி கொண்டு இருந்தேன்

பக்தியால் பற்றை அறுத்து
அற்ற இடத்தே ஞானம் பெற்று
பெற்ற இடத்தே கூடி நின்று
நின்ற இடத்தே சமாதியாமே!

அப்போது நான் பற்றற்ற நிலையில் தான் இருந்தேன், என்னை பிரம்மம் பற்றி இருந்தது.

## 4. இன்றைய வாழ்க்கை நிலை

பெற்ற தாய், தந்தை உணவு உண்ணும் போது சிறு துளி நெய்யும் பாலும், சோறும் போடாதவன் அவர்கள் இறந்த பின் பாலை ஊற்றுவதும் செத்தவரை அழைத்து சோற வைப்பதுவும் காசு கொடுப்பதுவும் ஊரை ஏமாற்றத்தான். இந்த செயலைப் பார்த்து ஈன்றவர்கள் சாபம் மாத்திரமே கொடுப்பார்கள். வரம் தருவது இல்லை. மனமார நெய்யினைக் கொண்டுபோய் பெற்றோர் பெயரை சொல்லி தீயில் இடும் நெய்யில் சிறுதுளி அவர்கள் வாழும்போது அவர்கள் வயிற்றில் போயிருந்தால் அவர்கள் எவ்வளவு ஆனந்தப்பட்டிருப்பார்கள்?

மனம் விட்டு பழகவும், மனம் விட்டு பேசவும் அனைவரும் விருப்பப்படுகிறார்கள். கணவன் மனைவி இருவரிடமும் கூட எந்த ஒரு அந்தரங்கமான விஷயங்களையும் பகிர்ந்து கொள்ளுவது இல்லை. அதாவது தன்மானம் பார்த்து இருவரும் பழகுகிறார்கள். சரி மனம் விட்டு அழுதாலும் யாரும் காது கொடுத்து கேட்க. தயாராக இல்லை. எனவே மனபாரம் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே போகிறது. இந்த மன பாரத்தை இறக்கி வைக்க ஒரு இதயம் தேவைப்படுகிறது. மனநோயை குணபடுத்த இன்னும் ஒரு மனம் ஒத்துழைக்க வேண்டும். மாதா, பிதா, குரு, தெய்வம் ஏதோ ஒன்றிடமாவது ஒருவனுக்கு நம்பிக்கை ஆழமாக இருந்து விட்டால் அதை அங்கே இறக்கி வைத்து விடலாம். எதன் மீதும் பக்தி இல்லாதவன் எவனோ, அவன் தன்னை அனாதை! என்று நினைத்து தாழ்வு மனப்பான்மை கொள்கிறான். தாழ்வு மனம் உடையவன் மது, போதை போன்ற தீய பழக்கங்களுக்கு அடிமை ஆகி விடுகிறான். **ஒரு மனிதனின் வெற்றிக்கு முட்டுக் கட்டையாக இருக்கும் தடை மனபாரம் தான்.** இதை சூனியம், செய்வினை, ஏவல், பில்லி, மருந்து இட்டது. தேவதைகள் நடமாட்டம் என்று சொல்லி அலைகிறார்கள். இந்த துஷ்ட சக்திகளால், தான் பாதித்து விட்டதாகவும் தான் உண்ணும் உணவிலே யாரோ ஒருவர் மருந்து வைத்து விட்டதாகவும், இது இன்னும் தன் வயிற்றுக்குள் உருண்டையாக இருப்பதையும் காட்டுவார்கள். இவரை பொருத்தவரை அதுதான் உண்மை. இதை மறுத்து பேசினால் கூட என்னை இவர்கள் பைத்தியகாரன் என்று பட்டம் சூட்டி விடுவார்கள். இவர்கள் கற்பனையில் ஏற்பட்ட, சூன்ய தீய சக்திகளை விஸ்வரூபமாக்கி கண்ணீர் விட்டு அழுகிறார்கள். கண்ணீர் விட்டு அழுதாலும் எந்த கடவுளும் காது கொடுத்தும் கேட்பதில்லை என்று புலம்புகிறார்கள். இதற்கு ஒரு தீர்வு செய்து தான் ஆக வேண்டும். ஆனால் அந்த தீர்வு அந்த மன நோயாளியின் மனம் ஏற்று கொள்ளும் விதமாக அமைய வேண்டும். அப்போது தான் பரிபூரண திருப்தியை அவன் அடைவான். அவன் மனம் ஏற்க மறுக்கும் எந்த மருத்துவ

முறையும் தற்காலிக சாந்தி மாத்திரமே. நிரந்தர தீர்வாக அமையாது. சில காலம் வேண்டுமானால் அமைதியாய் இருப்பார். பிறகு மீண்டும் அதே பிரச்சனை தனக்கு ஏற்பட்டு விட்டதாக சொல்ல ஆரம்பித்து விடுவார். முதலில் இவர்கள் சொல்லும் விஷயங்களை நாம் காது கொடுத்து கேட்க வேண்டும். கேட்காதது தான் முக்கிய பிரச்சனை. பிரச்சனை யாருக்குத்தான் இல்லை. இவர்கள் மனதிலிருந்து அந்த செய்வினையை நீக்க வேண்டும். அவர்கள் வயிற்றில் உள்ள மருந்தினை வெளியே எடுத்து அவர்கள் கண்ணுக்கு எதிரே காணும் படி செய்ய வேண்டும். இதற்கு காரணமான மருந்தினை எடுத்துவிட்டேன் என்று அவர்கள் கையிலே தந்து விட வேண்டும். இதனை இவர்கள் பார்த்து அப்பாடி இப்போது தான் நிம்மதி ஆச்சு என்று பெருமூச்சு விடுவார்கள். அவர்களை பொருத்தவரை எல்லாம் வெளியே வந்து விட்டது. இனி பயம் எதுவும் இல்லை, தான் நிம்மதியாக வாழலாம் என சந்தோஷபட்டு வீடு திரும்புவார்கள். இந்த நோயாளி நமக்கு எல்லாவிதமான முழு ஒத்துழைப்பும் தருவார். நம்பிக்கை தான் வாழ்க்கையாக உள்ளது தெரியுமா? நம்பிக்கை இல்லை என்றால் வாழ்க்கை இல்லை என்றுதான் அர்த்தம் ஆகும். நம்பினார் கெடுவது இல்லை. அவர்களுக்கு சிறிய சந்தேகம் நம் மீது ஏற்பட்டாலும் செய்யும் காரியம் எந்த பலனும் தராது. மிகவும் ஜாக்கிரதையாக செய்ய வேண்டும். இந்த மனநோயாளியை மன நோயாளியை என்று சொல்லக் கூடாது. அவர்களை மிகப் பெரிய அறிவாளி என்று தட்டிக் கொடுக்க வேண்டும்.

பிரச்சனை யாருக்கு தான் இல்லை. பிரச்சனையை யோசித்துக் கொண்டு இருக்கும் பட்சத்தில் தீர்வு என்ன என்று மூளை விடை அளிக்காது. காரணம் தனது முடிவு சரியாக இருக்காது என்ற அவநம்பிக்கை. இது ஒருவருக்கு ஏற்பட்டால் அந்த குடும்பத்தையே தாக்கும் கொடிய நோயாக மாறிவிடும். மற்றவரும் இவரை பார்த்து ஏதேதோ உளர ஆரம்பித்து விடுவார். இதற்கு சரியான தீர்வு மனம் அடங்க வேண்டும். **மனம் அடங்க மந்திரங்கள் தேவை இல்லை.** தியானம்

ஒன்றே போதுமானது. இதை செய்யாமல் இருப்பவர்கள் வாழாமல் வாழ்ந்து சாகாமல் செத்துக் கொண்டு துன்பப்படுகிறார்கள். கடுமையாக உழைத்தாலும் முன்னேறாமல் இருக்கிறார்கள். மனம் தளர்ந்து போன மர்மங்கள் இவைகள். இவர்கள் கால வெள்ளத்தில் சிறை பிடிக்கப்பட்ட பஞ்சவர்ண கிளிகள். இவர்கள் வீட்டுக்குள்ளேயே சிறை பிடிக்கப்பட்டு கிடக்கிறார்கள். இந்த மன சிறைக்குள்ளே அப்பாவியானவன் ஒருவனுக்கு ஆயுள் தண்டனை. உலக வாழ்க்கையில் ஏற்பட்ட பலவிதமான இன்னல்கள், குழப்பம், சிக்கல், கடன் தொல்லை, பகைவர்கள் என எல்லாம் கூடி சூழ்ந்து இவனை அழுத்துகிறது. அனைத்து பிரச்சனைக்கும் காரணம் அவர் தான். என்பதை அவர் ஏற்றுக் கொள்ள மறுப்பார். அப்படி உணராத பட்சத்தில் அவரால் அவருக்கு தீர்வு பெற முடியாது போகிறது. எனவே, அவரவரும் ஒரு சோதிடனையோ, சாமியாரையோ, மந்திரவாதியையோ, குறி சொல்பவரையோ கண்டு மனம் ஆறுதல் பெறுகிறார்கள். இவர்கள் தரக் கூடிய அருள் வாக்குகளில் மனக் குழப்பம் தீருவதாக எண்ணுகிறார்கள். நோயாளியை பொருத்த மட்டில் நோய் எப்படியாவது குணமடைய வேண்டும் அவ்வளவுதான். இவர்கள் மனோ வியாதிக்கு இந்த சோதிடர்களின் மனோதத்துவ சிகிச்சைகளுக்கு என் இதயம் கனிந்த பாராட்டுக்கள். இவர்களின் நம்பிக்கைகளை சரி, தவறு என்று எதையும் வர்ணிக்க கூடாது, அது முறையும் அன்று. அது உண்மையா, பொய்யா என்று அதை ஆராயாமல் அவர்கள் வழியே சென்று அவர்களை குணபடுத்த வேண்டும். அதற்கு எந்த மருத்துவனும் தயாராக இல்லாத பட்சத்தில் இந்த சோதிடன் பாதிக்கப்பட்டவன் கண்களுக்கு மாமேதையாகவே தெரிகிறார். அந்த ஆசாமியிடம் இருக்கும் நம்பிக்கை எந்த சாமியிடமும் இருப்பது இல்லை. மன நோயாளிக்கு மனம் விஹாரப்பட்டு உள்ளது. அவர்கள் வாயில் வரும் வார்த்தைகளும் அப்படியே அமைகிறது. சிந்தையிலும் தீய எண்ணங்கள் தாண்டவம் ஆடும் போது விகாரமான மற்றும் கோரமான உருவத்தை வழிபாடு செய்கிறார்கள். காரணம்

இவர்களின் மன விஹாரங்களை போக்க விஹாரமான உருவத்தை வணங்குதல் தீர்வாக நினைக்கிறார்கள். இவ்வுலகில் இவர்களின் வாழ்க்கை முறைகளும் மிகவும் விசித்திரமாகத்தான் உள்ளது. மேலை நாடுகளிலும் கூட இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. அங்கும் ஏறத்தாழ இதுபோன்ற நம்பிக்கை வைத்தியங்களும், அரங்கேறிய வண்ணம்தான் உள்ளது. மேலை நாடுகளிலும் கூட இப்படிப்பட்ட மோகினி ஆட்டம் எல்லாம் காண்போர் மனதை கொள்ளை கொள்ளும் விதமாக அமைந்துள்ளது. இது எனக்கு வேதனையாகத் தான் உள்ளது. சாமி ஆட்டம், பூத ஆட்டம், ஆவிகளின் அட்டகாசம், காட்டேரி இன்னும் பல ஆட்டங்களும் அதிகரித்துக் கொண்டே தான் போகிறது. கடவுளுக்கு மாமிசம், சுருட்டு, சாராயம், கள்ளு இவைகளை கோரமான கடவுளுக்கு அர்ப்பணித்தல், சாமி வந்து ஆடுதல், பேயை ஓட்டுதல், சூன்யம் எடுத்தல், மருந்தை எடுத்தல் இப்படிப்பட்ட செயல்கள் அரங்கேறிய வண்ணம் தான் உள்ளது. இது கிராமத்து மக்களின் மனோதத்துவ சிகிச்சைகள். கிராமங்களில் மனோதத்துவ நிபுணர்கள் இவர்கள் தான். சிலருக்கு தூக்கத்தில் பயங்கரமான கனவுகள் ஏற்படுகிறது. தனக்கு வேண்டாதவர்கள் செய்த தீங்கான செயல்களை கண்ணால் கண்டேன் என்று சொல்லி எதிரிட்டவரை மெய் சிலிர்க்க வைப்பார்கள். இந்த கனவும் காட்சிகளும் அடுத்து அடுத்து தொடர்கதை போல் வந்து கொண்டே இருக்கும். அதே போல் ஏதோ ஒரு நல்ல சக்தி. ஒன்று தன்னை அவ்வப்போது அதனிடத்தில் இருந்து காப்பாற்றிக் கொண்டு வருவதாகவும் சொல்லுவார்கள் எந்த கதையிலும் வில்லன், கதாநாயகன், கதாநாயகி போன்றவைகள் இல்லாமல் படம் எடுக்க முடியாது. அதே போல் கனவிலும் வில்லனும் கதாநாயகனுக்கும் சண்டை நடக்கும். ஏதோ ஒரு விதத்தில் ஒருவருக்கொருவர் உரிமை இருந்தால் மட்டுமே தன் மனதில் உள்ள விஷயங்களை வெளியே சொல்ல வேண்டும் என்ற ஆர்வம் ஏற்படும். இவையனைத்திற்கும் தீர்வு நம்முள் இருக்கும் நம்மைப் படைத்த உயிராகிய கடவுளை ஆராதனை செய்வதுதான்.

## 5. தன் விதியை தானே விதித்தல்

அவரவரும் ஏதோ ஒரு நம்பிக்கையில் வாழ்ந்து வருகிறார்கள். எல்லோரும் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற சட்டங்கள் எங்கும் இல்லை. எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்று என்னும் போது எல்லா சிக்கல்களும் உண்டாகின்றன. மனசாட்சிக்கு விரோதமாக நடப்பவர், பேசுபவர், எண்ணுபவர்க்கு ஏற்படும் தண்டனை இப்படித்தான் ஏற்படுகின்றது. தன்னை ஒரு பலசாலியாக எண்ணாதவன், நோயாளியாக தன்னை எண்ணிக் கொள்கிறான். உழைக்காத சோம்பேறி தன்னை ஏழை என எண்ணுகிறான். விதியை மதியால் வெல்லலாம் என்று சிலர் சொல்லுகிறார்கள் என் அனுபவத்தில் விதி முதலில் வெல்லுவது மதியை தான் என்ற போது எதை வைத்து அதை வெல்லுவது நீங்களே சொல்லுங்கள். சமுதாயத்தின் மீது தனக்குள்ள வெறுப்புக்கு காரணம் தன் மன அழுத்தமே என்று எப்போது தான் உணருவான். நகத்தால் கிள்ளி எறிய வேண்டிய விஷயத்தை கோடாரியை எடுத்து பிளக்கப் போகிறார்கள். மனப்பூர்வமாக ஒரு பெண்ணை நேசிக்கிறேன் என்று சொல்லிவிட்டு பிறகு வேறு ஒரு பெண்ணுடன் நேசம் கொள்கிறான். காரணம் என்ன? மனம் மாறக் கூடிய இயல்பு உடையது.

காலங்களின் மாற்றங்களுக்கு தக்கவாறு மனமும் அவ்வப்போது தன்னுடைய இயல்பை மாற்றிக் கொள்கிறது. எந்த ஆடவனும் ஒரு பெண்ணை அறிவுப் பூர்வமாக நேசிப்பதாக சொல்லுவதே இல்லை. அவன் அறிவாளியா என்று எந்த பெண்ணும் பார்த்துப் பழகுவதும் இல்லை. காதலுக்கு கண்ணும் இல்லை என்பது தவறு. ஒருவரை ஒருவர் கண்ணால் பார்த்து தான் தன் மனதை இழக்கிறார்கள். உண்மையில் காதலுக்கு சுத்தமாக அறிவே இல்லை. ஒரு பெண்ணை அறிவுப் பூர்வமாக நேசிக்க அங்கு என்ன இருக்கிறது என்று கேட்கிறார்கள். இதிலிருந்து நீங்களே புரிந்து கொள்ளுங்கள் செய்வினை என்ற வார்த்தையை ஏன் சொல்லுகிறார்கள் தெரியுமா? யாரும் செய்த வினை அல்ல. தன்னுடைய வினைதான் அது. அதுவும் தன்னாலே

தனக்காகவே சிருஷ்டித்துக் கொள்ளப்படுகிறது. தனக்கு கருத்து ஒற்றுமை இல்லாதவர்களிடத்தில் மேலும் மனக் கசப்பை அதிகரித்து அவர்கள் மீது பகைமையை பாராட்டி உறவுகளுக்குள் விரிசலை ஏற்படுத்திக் கொண்டு வாழ்கிறார்கள். மனிதர்கள் இப்படிப்பட்ட மனோ வியாதியால் பீடிக்கப்பட்டு உள்ளார்கள். எந்த பக்தியும் இல்லாத பகுத்தறிவாளர்கள், சுயநலக்காரர்கள் என அழைக்கப்படுகிறார்கள். தன் உழைப்பையே தெய்வமாக பாவித்து வாழ்பவர்கள் இந்த மனோவியாதிக்காரர்களிடம் இருந்து ஒதுங்கி வாழ்கிறார்கள். இவர்கள் நாத்திகர்கள் என்ற பட்டம் பெற்றவர்கள். இப்படிப்பட்ட மனநோயாளிகள் 70% பேர் இது போன்ற பாதிப்புக்குள்ளானவர்கள். உலகம் எங்கும் இவர்கள் இருக்கிறார்கள் குறிப்பாக, ஏழ்மை எங்கு அதிகம் உள்ளதோ அங்கெல்லாம் இது புகுந்து விடுகிறது. ஏழ்மை, நோய் இரண்டுமே ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகவே உள்ளது. இந்த இரண்டும் உள்ள இடத்தில் செய்வினை என்ற அரக்கன் வந்து விடுகிறான். இவன் தனக்கு வேண்டாத மனிதர்களை பழிவாங்க வெறி பிடித்த நாய்களை போல நடக்க ஆரம்பித்து விடுகின்றான். உண்மையை அறியா மூடன் குடிக்காமலேயே அவன் குடி அழிவதற்கு காரணமாகிவிடுகிறான். இதில் படித்த முட்டாள்களிலிருந்து படிக்காத மேதைகள் வரை பாதிக்கப்படுகிறார்கள். இவர்களை பின்பற்றி அடுத்த தலைமுறையும் பாதிக்கப்படுகிறது. இதை நினைத்தால் தான் மேலும், வேதனையாக உள்ளது.

## 6. உயிர் எனும் ஜோதி ப்ரதிஷ்டை

கற்பூர ஜோதியிலே அப்படி என்ன தான் தெரிகிறது உங்களுக்கு ? காலங்காலமாக செய்யப்பட்ட உங்கள் ஆய்வில் தலைமுறை தலைமுறையாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஆய்வு முடிவு என்ன? என்பதை சற்று ஊகிக்க முடியுமா உங்களால் ? தெரிந்ததை எனக்கு சொல்லக் கூடாதா ? மூளை என்ற கற்பூரத்தை பற்ற வைத்து ஜோதியை ஏற்படுத்தி உலகத்து இருளையும் உங்கள் இல்லத்து இருளையும் விலக்கி வைக்க வேண்டுமையா ! இதுவே அணையாத விளக்கு, இணை

இல்லாத விளக்கு, உலகத்துக்கு பொதுவான கலங்கம் அற்ற விளக்கு, ஆன்மவுயிர் விளக்கு, அறிவை கொடுக்கும் அருள் விளக்கு, ஆன்ம பரிசுத்த விளக்கு, ஜோதிமயமான விளக்கு, பத்ம விளக்கு, நாத மண்டலத்தில் ஒளிக்கும் பிரணவ விளக்கு, தேவ ஜோதி, பரஞ்ஜோதி விளக்கு, காம தகன்ம் செய்யும் காமாட்சி விளக்கு, ஒளி வட்டமான ரத்ன ஜோதி விளக்கை ஏற்ற தேகத்தை திரியாக்கு. உடலில் உள்ள கொழுப்பை கரைத்து எண்ணையாக்கி ஊற்றி கபாலம் அதை அகல் ஆக்கி புத்தியை பற்ற வைக்க வேண்டுமடா மனிதனே! அதற்கு உயிரை ஜோதியாக்கி சித்தத்தினுள்ளே தீபம் அதை பிரதிஷ்டை பண்ணு. இதுதான் மகனே தூங்காமணி விளக்கு. இதுவே உன் குல தெய்வமும், பரம்பரை பரம்பரையாய் போற்றிய பராபர விளக்கும் இதுவே. இதுவே உயிர். இந்த உயிர் தான் கடவுள். தூங்காமணி விளக்கே என மனம் உருகி அங்கேயே நின்று விடுவாய் மனிதா. தாயை விட பெருங்கருணை வடிவாய் நிற்கும், கோடான கோடி சூர்யப் பிரகாசமும் இதுவே ஆகும். கோடான கோடி தனம் வந்து பணிந்து நிற்கும், மனம் அற உன் குறைகள் அதனிடத்தேச் சொல்ல வேண்டாம். தானாக உன் குறைகள் பனிப் போல் விலகும். வினையான ஊழ்வினையான கொழுப்பு தீர்ந்த பின்பு தீயோடு விளக்கதுவும் சேர்ந்தே எரியும். உண்மையிலேயே ஆன்மீக தீபம் இதுதான் ஐயா. உத்தமனார் உன் உள்ளத்தில் உள்ள இருளை போக்க, ஜோதிமயமான சாமி வந்தாச்சு. சடுதியில் எல்லாம் ஜெயமே. இது காலத்தை முன் கூட்டியே கணக்குப் போட்டு வைத்துக் கொள்ள உதவுகிறது. நான் சொல்லும் ஒவ்வொரு விஷயங்களையும் உரசிப்பார். அப்போது தான் எல்லாம் வெட்ட வெளி என்று தெரியவரும். நிர்வாண தீட்சையும் இதுவே விதியை விலக்கி ஊடுருவி உள் நோக்குதல் என்று பெயராம்.

விதி தேவனின் விதி முடிந்த இடம் இதுவே. கால தேவனின் கல்லறைகள் இதுவே. விதித்தவனிடம் விதி என்பது கற்பனை மாத்திரமேயாகும். படைத்தவனே உன்னை கண்டு பிரமித்து போவான்! நல்லதாக இருந்தால் அது நம்மை தேடி

ஏன் வர வேண்டும். அது சரியில்லை என்பதற்காகத்தான் நம்மை தேடி வருகிறது. ஆகவே, இது விதியாகும். அது வரும் முன்பே தெரிந்துக் கொள்ளலாம் வருவது சரியில்லாதது தான். நல்லவைகளை தேடி நாம் மட்டுமே போக வேண்டியுள்ளது. இது மதியாகும். பருவம் அடையாதவளை மனைவியே ஆனாலும் குழந்தை பெற இயலாது. அது போல், பக்தி இல்லாதவனுக்கு விளக்கை பற்றி விளக்கவே முடியாது. கண்ணில்லாத குருடனுக்கு பச்சை என்ற வர்ணம் எப்படி தெரிகிறது என்று புரிய வைக்க முடியுமா ? மற்ற அனைத்து உறுப்புகளும் செயல்பட்ட போதும் அது சாத்தியமாகாது, அது போல் தான் இதுவும். செத்துபோனவன் ஜோதியாய் போனான் என்று சொல்கிறார்கள். அவர்கள் ஜோதி என்பதை கொள்ளிக் கட்டையாக எண்ணுகிறார்கள். தகனம் செய்வதை ஜோதியாய் ஆனதாக நினைத்து, திருப்தி அடைகிறார்கள். திருமணம் செய்யும் காலத்தில் கணவன் மனைவியாக இருந்து அக்னியை வலம் வரச் சொல்கிறார்கள். தம்பதியர் இருவரும் வலம் வரவேண்டிய அக்னி உள்ளேயே இருக்கிறது. எல்லாப் புண்ணியங்களும் அதிலேயே தான் ஜெனிக்கின்றன. புண்ணியாஜனமும் அதுவே, பாபங்களை எல்லாம் நாசம் செய்கின்ற பரமானந்த ஜோதிப்ரவாகமும் அதுவே, இருளை போக்குகின்ற சக்தி விளக்குக்கு மட்டுமே உள்ளது. தங்கள் உள்ளத்துக்குள் இருக்கும் இருளை போக்க வீட்டுக்குள் விளக்கு ஏற்றுகிறார்கள், ஆலயத்தை சுற்றிலும் ஆயிரம் தீபங்கள் ஏற்றலாம் அழகிற்காக, ஆனால் உள்ளத்தை புனிதமாக்க ஒரே ஒரு தீபம் ஏற்றுங்கள்.

விளக்கு என்பது சரீரம், தீபம் என்பது உயிர், விளக்கின் நிழல் மாயாசக்தி, நெய் என்பது கொழுப்பு, பக்தி என்பது தூண்டுதல். இதுவே உயிர் ஜோதி, நூறு கோடி சூர்ய பிரகாசத்திற்கு இணையான மங்கள ஜோதி, பாதி மதி சூடியவன் ஆன ஜோதி, படைக்கப்பட்ட ஜீவன் அனைத்தும் ஆகும் ஜோதி, சாதி, மத, பேதம் எல்லாம் கடந்து நிற்கும் பரமானந்த தத்துவ ஜோதி, முதலில் இதயத்தில் இருந்து மூளைக்கு பற்றும். பிறகு, உடல் முழுவதும் பற்றிக் கொள்ளும்

ஜோதி, அப்போது உடல் முழுவதும கலச கும்பம் போல சுழி அடக்கி சூழ்முனையில் அமரும் பாரு. எல்லா ஜீவக் கோடி ஆத்மாக்களும், சத கோடி தேவ ரிஷிகளும் பணிந்து ஏற்றுகின்ற சரண கமலாலயம். **சரணம் அடைகின்ற சரண கமலாலயத்தில் செத்த பிறகு செல்ல எனக்கு விருப்பம் இல்லை. வாழும் போதே எனக்கு சொர்க்கம் வேண்டும்.**

. கைலாயத்தை செத்த பிறகு காண்பதில் எனக்கு எந்த விதமான விருப்பமும் இல்லை. **கையருகே இருக்குது கைலாயமாகும்.** உன்னை குருவாக உருவாக்கும் உத்தமனார் கோயில் அதற்குள்ளே செல்லு அங்கே சாஸ்திரங்கள் இல்லை. ஆசாரங்கள் இல்லை. விரதங்கள் இல்லை வேள்விகள் இல்லை, மந்திரங்கள் இல்லை, உபாசனைகள் இல்லை, மரபுகள் ஏதும் இல்லாத சுத்த மெய்ஞான ஜோதி தானே, நான் சொல்லும் தெய்வம். **ஆயுதங்கள் ஏதும் இல்லாத நிராயுதபாணி விதித்தவனிடத்தில் விதியேதும் இல்லை.** விதித்தவன் இடத்தில் இது எல்லாம் பொய். உன்னை விட அது விரும்பும் பொருள் எதுவும் இல்லாததால், **உன்னை மட்டும் அதனிடத்தில் நிவேதனம் செய்வாயாக. சரீரம் சமர்ப்பயாமி ஜீவன் சமர்ப்பயாமி, உயிர் சமர்ப்பயாமி, அகங்காரம் சமர்ப்பியாமி, சர்வம் சமர்ப்பயாமி** என்று உன்னை, அதனிடத்தில் சமர்ப்பணம் செய்து சரணாகதி அடைந்ததால் பாபங்களுக்கு எல்லாம் பிராய சித்தம் இதுவே. **சோத்தைப் பார்த்தால் ஏமாந்து போகின்ற சோம்பேறி அதுவல்ல.** கடவுளிடத்தில் பக்தனுக்குண்டான பக்தி இயல்பான ஒன்றுதான். அதை கற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. கடவுளை சுற்றி வந்து வணங்கலாம். கடவுளை காண சுற்றி கொண்டே போனால் வழியில் கட்டாயம் எமன் எதிர்படுவான். அப்போது எந்த மந்திரமும் வந்து உதவாது போகும். ஏமாந்து போகாதே. எல்லா சம்பிரதாயங்களும், சாஸ்திரங்களும், கடவுளுக்கு இல்லை. கடவுளை கட்டுப்படுத்த எண்ணுகிறான் மனிதன்.

மன நோயால் பாதிக்கப்பட்ட எத்தனையோ கோடிக்கணக்கான மனிதர்களின் உள்ள குமுறலுக்கு எனது செய்தி மருந்தாக அமையும். மனம் நொந்தவர்களுக்கு விருந்து படைத்திருக்கிறேன். இது மன விலங்கை உடைத் தெறிய வந்த கோடாரி ஆகும். அப்பாவி மக்களின் ஏக்க குரலுக்கு எனது செய்தி, ஒரு விடைத்தாள். உங்கள் மனதில் உள்ள அழுத்தமும் விகாரமும் சேர்ந்து சூனியம் என்று கருதப்படுகிறது. சூனியம் என்றால் பூஜ்யம் என்று பெயர். மனஇருள் என்று பெயர்.

எனது கருத்தால் உங்கள் கருத்தை உடைத்து எறிந்து விட்டேன். இனி பலிபூசை இல்லை. பலிச் சோறு இல்லை. மன்னவனே மதி மயக்கம் இல்லாது தெளிவாக நில்லு. படைத்தவன் உந்தனுக்கு பகையாக இல்லை. **அறியாமை நிமித்தமாய் படைத்தவனை விட்டு விலகி நிற்கிறாய் ஆனால் இது விலக்க முடியாத பந்தம்.** பார் முழுவதும் சென்று நீ வெற்றியை தேடு, சோதி அது வெற்றிக்கு துணையாக நிற்கும். துவண்டு மனம் வாடும் போது தீபம் ஏற்று. ஆத்ம ஜோதியினிடத்தில் இருந்து தான் மனோபலம், புத்திபலம் பெறுகிறது. மனதுக்கு எப்போதும் நிலையான பலம் கிடையாது. மனதுக்கு புத்தியிடம் எப்போதும் ஒரு எதிர்பார்ப்பு உள்ளது. மனதுக்கு புத்தி புகட்ட வேண்டி உள்ளது.

**மரங்கள் அசைவுக்கு காரணம் காற்று, உடலில் உள்ள அசைவுக்கு காரணம் உயிர். உடலில் உயிர் என்ற ஒன்று இல்லாதது போலத் தான் இருக்கின்றது.** அது இல்லை என்று மறுப்பதற்கு இல்லை. அது போலத்தான் **இவ்வுலகில் கடவுள் என்ற ஒருவன் இல்லாதவன் போல தான் இருக்கிறான்.** அவன் இல்லை என்று மறுப்பதற்கு இல்லை. **உயிர், கடவுள், காற்று** இந்த மூன்றும் உணர முடிகிறதே தவிர காண்பதற்கு அரியது. மனிதன் தன்னிடம் இருந்து உயிரை வேறுபடுத்திப் பார்க்கிறான். **உடலே உயிரின் மொத்த வடிவமாக நிற்கிறது.** உடம்பு உயிர் எடுத்ததோ? உயிர் உடம்பு எடுத்ததோ? என்று சொல்ல முடியாத அளவுக்கு பின்னி பிணைகிறது.

உயிர் உடலில் நிலையான தன்மை கொண்டது. உயிர் உடலை எடுத்துக் கொண்டு பூமியில் சிசுவாய் ஜெனிக்கிறது. மீண்டும் இந்த உடம்பு உயிரை எடுத்து நின்றால் தேகம் காலங்களை கடந்து அழியாமல் கர்ப்பக்கோடி காலங்கள் அழியாமல் தேகம் முழுதும் உயிராய் நிற்கும். தேகத்துக்குள் உயிர் இருப்பதாக நினைப்பவனுக்கு இது சாத்தியம் அல்ல. உயிருக்குள் தேகம் இருந்தால் மட்டுமே இது சாத்தியம். உலகத்தில் உள்ள எல்லா ஜீவனும் கால தேவனிடம் தோற்றுத் தான் போய் இருக்கிறார்கள். ஞானிகளும், சித்தர்களும், ரிஷிகளும் இந்த நிலையை அடைவே பல்லாண்டு காலமாக போராடி இருக்கிறார்கள். அவர்களையும் காலம் வென்று விட்டது. நரை, மூப்பு, சாக்காடு கடந்து என்றும் பதினாராய் வாழ கனவு கண்டது தான் மிச்சம். மார்க்கண்டேயன் கூட என்றும் பதினாறாக இல்லை. எல்லா தேவர்களும், அசுரர்களும் சாகா வரம் வேண்டி தவம் செய்ததாய் நாம் படித்தது உண்டு. ஆனால் எவரும் நிலைத்தது இல்லை. இரும்பை தங்கமாக மாற்றுவதை விட கடினம் உடலை உயிராக்குவது என்பது. என்னை பொருத்தவரை இது மிகவும் எளிமையான சாதாரணமான விஷயம் தான். உண்மையை அறிபவன் தான் ஞானி. இவ்வுலகத்தில் எந்த ஒரு மனிதனும் மடிவதில் எனக்கு விருப்பம் இல்லை. சுக்கிலத்தில் இருந்து நாதம் வெளிப்படுகிறது. நாதமும் உயிரும் சேரும் போது ஜோதி ஆகிறது. எனவே தான் நாதமும், ஜோதியுமாய் இறைவன் இருப்பதை உணர்த்தவே சூட தட்டும், மணியும், ஜோதியே கடவுள் என காட்டுகிறது என்பதை உணருவாயா மனிதனே ?

## 7. "சரீரத்தின் சயனக் கலை"

ஆயுத பூஜை அன்று உலகு எங்கும் கலைமகளுக்கு வந்தனம் செய்கிறார்கள். எனது ஆயுதம் எழுதுகோலும், ஏடும் தான். இதை தேவிக்கு காணிக்கையாக்குகிறேன். மூச்சுப் பிடிப்புக்கு ஒரு எளிய மருத்துவம் சொல்கிறேன். எனது அனுபவ வைத்தியம் ரெங்கநாதர் என்னிடம் சொன்னார் என்றே வைத்துக் கொள்ளுங்கள் திருப்பாற் கடலில் பள்ளி

கொண்டுள்ள ஸ்ரீ மன் நாராயணராகிய ஸ்ரீ ரங்கநாதக் கடவுளை ஒரே ஒரு தடவையாவது காண வேண்டும். அவர் எப்படி படுத்து உறங்குகிறார் என்பதை சற்று உற்று கவனியுங்கள். இப்படித்தான் படுத்து உறங்க வேண்டும் என்கிற முறையை பகவான் நம்மிடத்தில் தெரிவிக்கிறார். இது அனந்த சயனம் முடிவில்லாத, எல்லை இல்லாத கோடானு கோடி எல்லை கடந்த ஆனந்தம் என்பதே பொருள்.

சௌக்கியத்துக்கு எந்த குறையும் இல்லாமல் இப்படி நிம்மதியாக உங்களால் படுத்து உறங்க முடியுமா? உழைப்பாளிக்கும் செல்வந்தனுக்கும் வீரனுக்கும் கூட இப்படி ஒரு உறக்கம் கொள்ள முடியாது. ஞானியால் மட்டுமே தான் அப்படி உறங்க முடியும். அதாவது, உறங்கும் போது கூட சரீர ப்ரக்ஞையுடன் உறங்குதல் வேண்டும். அப்படி தூங்கிக் கொண்டு இருப்பவன் முக மலர்ச்சியுடன் உறங்குவான். பிரம்ம முகூர்த்தத்தில துயில் எழுவானாம். எழும் போது முகம் ஊதி பிரேத கலையாய் இருக்காது உடலில் துர்நாற்றம் வீசாது. ஆகவே தான், அவருடைய சக்தியானவள் (உயிர்) பெருமான் உறங்கும்போது, அவர் திருப்பாதத்தை அழுத்தி நினைவுபடுத்தியும். அவரை பார்த்துக் கொண்டும் இருப்பதாக வடிவமைக்கப் பட்டுள்ளது. முறையற்ற உறக்கம் முகத்தில் பிரேத களையை உண்டு செய்யும். உறங்கி விழித்தவுடன் உடம்பிலே எழும் பிணவாடைக்கு என்ன காரணம்? சரீரத்தை நமது உயிர் கவனிக்க மறந்த சில மணி நேரத்திலேயே இந்த அவலட்சனத்தை அடைகிறது. சரீர கவனம் இருக்கும் வரை இது அழகுடையதாக இருக்கிறது மேனியில் நாற்றம் ஏதும் இல்லாமல் இருக்கிறது. கவனம் தான் உயிர் என்பதை இந்த கடவுள் மக்களுக்கு உணர்த்துகிறார்.

தனது மனைவியை காலை அழுத்த சொல்லிவிட்டு தான் மட்டும் உறங்கும் அளவுக்கு அவர் ஒன்றும் கொடுமைக்காரன் அல்ல. **மனிதன் தன்னுடைய வாழ்நாளில் ஒரு நாளை உறங்கும் போது தான் கடக்கின்றான்.** ஒரு நாளை கடந்த உடன் பிறகு பிரேத களை வந்து விடுகிறது. அதை மறைக்க தைலம் பூச்சு, பல் துலக்குதல், மலம் கழித்தல், ஜலங்கழித்தல்

சற்று உண்ணுதல், அலங்காராம் செய்து கொள்ளுதல். வாசனை திரவியங்களை பூசிக் கொள்ளுதல் இப்படி செய்து கொண்டு வெளியே வருகிறான். பெருமான் என்ன மரணப்படுக்கையில் படுத்துக்கிடக்கிறாரா? அவரை ஊர் மக்கள் அனைவரும் சென்று பார்த்துவிட்டு வருகிறார்களே, என்னதான் தெரிகிறது. இப்படி ஒரு முகமலர்ச்சியுடன் உறங்குவது, அசாத்தியமான விஷயம் என்று நினைக்க வேண்டாம். எல்லாம் சாத்தியமே ஆகும். இவரைப் பற்றி நான் சொல்லும் ஒவ்வொரு விஷயமும் தேவ ரகசியமாகும். கேட்டு நீங்கள் கண்டிப்பாக அதிர்ச்சி அடைவீர்கள் என்று முன்கூட்டியே சொல்கிறேன், எச்சரிக்கை!

பெருமாளை பார்த்து நாமம் போடுவது எப்படி என்று கற்றுக் கொள்கிறார்கள். வடகலை நாமம், தென்கலை நாமம் என்று இரண்டு வகைகள். இது வெறும் கோடுகள் தானா? ஆம் இந்த கோடுகள் மிகவும் ரகசிய குறியீடு தான் தெரியுமா ? ஆயக்கலைகள் 64 என்று தெரியும். இதில் வடகலை, தென்கலை ஏன் சேர்க்கப்படவில்லை ? என்ன கலை ? செல்வந்தனைப் போல படுத்து உறங்குபவன் கடன்காரன் தான். மீட்டப்பட்ட தந்தியின் ஓசை எவ்வளவு மென்மையானதோ, அது போல உடல் நன்கு சுதி சேர நரம்புகள் நன்கு இழுத்துக்கட்டப்பட வேண்டும். அப்போது தான் உடலில் ஆரோக்கியம், சந்தோஷம் எல்லாம். இல்லை என்றால் நல்ல சிந்தனையையும், நல்ல அறிவையும், ஞானத்தையும், பலத்தையும், உயிரையும் இழந்து போவான் என்பதை மனமே நீ அறிவாயா ?

பெருமாள் கோயிலில் நாமத்துக்கு இருக்கும் மரியாதை வேறு எதற்கும் இருப்பதில்லை. சுவர் எங்கும் நாமங்கள். இவர்கள் சம்பிரதாயங்களில் எவ்வளவோ மாறுபாடுகள். இருந்த போதிலும், வணங்கப்படும் தெய்வம் நாராயணனே ஆகும். நாமம் போடுகின்ற நாமக்கட்டிக்கு கூட அதன் அதிரகசியம் தெரியாது. நாராயணனே அதை அறிவானாகும். நாலாயிர திவ்ய பிரபந்தங்களில் கூட சொல்லப்படாத ரகசியங்கள் ஆகும். தேவ இரகசியங்களை வெளியிட்டால்

தேவ சாபம் ஏற்படும் அபாயம் உள்ளதால் அதை இதுவரை யாரும் சொல்லியதே இல்லை. இருந்தும் சொல்கிறேன். பெருமாளின் மீது பாரத்தை போட்டு விட்டு பகவானின் மேனியை மட்டும் திருமேனி என்று ஏன் அழைக்கிறார்கள். அவர் மேனியில் அப்படி என்னதான் வித்தியாசம் உள்ளது. அவர் மேனி முழுவதும் கருநீலமாக உள்ளதே ஏன்? அப்படி கார்மேக வண்ணனாய் இருக்க காரணம் என்ன? தசாவதாரங்கள் எப்படி? ஏன்? எதற்காக? மஹாவிஷ்ணு பெண்ணாக உருமாறி மோகினி அவதாரம் எடுத்தது எப்படி? ஏன் மோகினி அவதாரத்தில் மோகினி அவதாரம் பற்றி அதிகம் பேசப்படுவது இல்லையே. அந்த இரகசியம் என்ன? பல்லாயிரம் கோகுலஸ்தீரிடம் ஆடிப் பாடிய அட்டகாசங்களின் உண்மை என்ன? எப்படி ஒரு ஆணுடன் ஆயிரம் பெண்கள் ஆடுவது நடைமுறையில் சாஸ்வதம் ஆகும்? தேவேந்திராதி தேவ ரிஷிகள், சிவன், பிரம்மா ஆகிய அனைவரும் கண்டு அஞ்சிய அசுரர்களை அழிக்கவும், சம்ஹாரம் செய்யும் சக்தி எங்கிருந்து இவருக்கு மட்டும் வந்தது. அனைவரையும் மயக்கும் சக்தி அவரிடம் உள்ளது என்பது அனைவரும் அறிந்ததே. சங்கு, சக்கரம் என்றால் என்ன ? சக்கரத்தை வைத்து எப்படி அழித்தார். பாம்பு படுக்கை ஏன் ? திருப்பாற் கடலில் ஏன் பள்ளி கொண்டார் ? இதை பற்றி எல்லாம் இங்கு விளக்குவோம் யாம், நன்கு கருத்தில் கொள்க.

இடது பக்கத்தில் எந்த கோளாறுகள் இருந்தாலும் இடது பக்க வாதம் இருந்தாலும். இருதய கோளாறுகள் இருந்தாலும் வலது முழங்கையை ஊணி உள்ளங்கையில் தலையை வைத்து சயனம் கொள்ளவும். உடனடியாக அந்த தொல்லை நீங்கிப் போகும். வலது பக்க மூச்சு பிடிப்பு இருந்தாலும் இப்படியே செய்யலாம். அப்படி கையை ஊணி படுக்க முடியாத பேர்கள் தலையை அப்படி உயர்த்தி வைத்துக் கொள்ளவும். இதுவும் இயலாத பேர்கள் இடது பக்க கோளாறு உள்ளவர்கள், வலது பக்கமாகவும், வலது பக்கமாக கோளாறு உள்ளவர்கள் இடது பக்கமாகவும் படுக்கவும். குறைந்தபட்சம் முகத்தை திருப்பி வைத்து ஏதோ ஒன்றை பார்த்துக் கொண்டிருந்தால்

கூட போதுமானது. பொதுவாக எந்த கோளாறும் இல்லாதவர்கள் வலது உள்ளங்கையை தலையில் ஊணி உறங்குதல், உயிருக்கும் நலம்.

இதே போல வலது பக்க உடம்பில் எந்த கோளாறுகள், பக்கவாதங்கள், மூச்சுப்பிடிப்பு, தசைப்பிடிப்பு, சுளுக்கு எது இருந்தாலும் கையை ஊணி ரங்கநாதரைப் போல படுத்து சயணிக்கவும். எப்போதும் மல்லாந்து உறங்குவதும் குப்புற உறங்குதலும் கூடாது என்பதை இதன் மூலம் தெரியப்படுத்துகிறேன். மருந்து இல்லாமல், மரணப்படுக்கை தவிர்க்க இந்த அனந்த சயனம் மிகவும் பழகவேண்டிய தியான முறை ஆம்.

சந்தியா காலம் மாலை 6.00 மணிக்குமேல் உணவு எதையும் உண்ணக் கூடாது. படுக்கப் போகும் முன் தண்ணீர் சிறிது அருந்தி விட்டு படுக்க வேண்டும். வயிற்றில் காற்று இடைவெளியும்தண்ணீரும் தான் இருக்க வேண்டும். தவம் செய்ய வேண்டும் என்றால் காட்டுக்குத் தான் போக வேண்டும் என்பதில்லை. உங்களுடைய உறக்கத்தை தவமாக்கிக் கொள்ளுங்கள் அதை பழகுவது எப்படி என்பதை ரெங்கநாதரிடம் போய் கற்றுக் கொள்ளுங்கள். அவரே உங்களுக்கு பொருத்தமான குரு.

"வீணை" என்ற வாத்தியம் பெருமை வாய்ந்தது. மந்திர நாதம் ஓதும் திறன் படைத்த ஒரு தந்தி வாத்தியம். கலைவாணி மீட்டுகின்ற நாத வீணையை பார்த்து இருக்கிறீர்களா. அவள் வாசித்ததை உங்கள் காதால் கேட்டது உண்டா ?

**இந்த சயனத்தில் அந்த தேவகாணம் கேட்கும்.** வீணையின் சுருதி அவ்வப்போது கலைந்து தான் போகும். அதை சேர்த்துத் தான் தீர வேண்டும். அப்படி சுதி சேர்க்காத வாத்தியத்தில் இருந்து அபஸ்வரம் தான் வரும். அதை காதால் கேட்டால், உள்ள மன நிம்மதியும் அதனால் கெட்டுவிடும். வீணை அழுது புலம்பும். உடலும் ஒரு வீணையின் அமைப்பில் தான் அமைந்துள்ளது. ஆனால் அதை விட இதில் நரம்புகள் அதிகமாக உள்ளது. தந்திகள் அனைத்தும் தலையில்

கட்டப்பட்டுள்ளது. கழுத்துப் பகுதி எல்லா நரம்புகளும் சேரும் இடமாக அமைகிறது. எண் சான் உடம்புக்கு தலையே பிரதானமான நரம்பு மண்டலம் ஆகும். கழுத்தை வளைத்து தலையை உள்ளங்கையில் அழுத்தி சயனிக்கும் போது பாதம் வரை உள்ள எல்லா நரம்புகளும் இழுத்து சிரசில் கட்டப்படுகின்றன. தளர்ந்து போன நரம்புகளை இழுத்து பலப்படுத்துகிறது. **மனிதனின் உடல் பலம் என்பது நரம்புகளில் தான் அமைந்துள்ளது.** இது தளர்ந்துவிட்டால் மனமும் தளர்ந்து விடும். உடலும் தளர்ந்து விடும். சுருதி சேர்க்கப்படாத உடலில் இருந்து வேதனையும், வலியும், நோய்களும் தோன்றுகிறது என்பதாகும்.

**கவனம் தான் உயிர், கவன சக்திதான் ஞானம்,** அடிப்படையில் சுக்கில நாசம் செய்தவனுக்கு கவன சக்தி இருக்காது. கவனத்தை தன் வசப்படுத்துதலே அனந்த சயனத்தின் பயன் ஆகும்.

சரீரம் கீழே விழாமல் பார்த்துக் கொண்டு இருப்பது உயிர் தான். கவனம் எங்கு உள்ளதோ உயிர் அங்கு உள்ளதாகத்தான் அர்த்தம். அதற்கு ஓர் உதாரணம் கவனசித்தி அடைய வேண்டும். ரெங்கநாதர் கூட உன் ரெங்கநாதத்தை கவனித்துக் கொண்டு இருக்கிறான். ரெங், ரெங், ரெங், ரங் என்ற நாதத்தையும் கவனித்து கொண்டு இருக்கிறான். ரங் என்ற பீசாட்சரம் 'ரம்' என்ற அக்னி ஆகும். அக்னி எழுத்து வடிவமாகும் போது ரம் என்றும் அதுவே ஒளி வடிவமாகும் போது 'ரங்' என்றும் ஆகும். எல்லா நோய்களையும் நாடியை வைத்து தான் சொல்லுகிறார்கள். எனவே, நாடியை ஒழுங்குபடுத்துதலே சரீரத்தை ஒழுங்குபடுத்துதல் ஆகும் என்பது கருத்து.

உடலில் உள்ள சுக்கிலத்தை கழட்டி விட்டு நிம்மதியாக உறங்குகிறார்கள். உடல் என்பது அன்னத்தின் ரசத்தால் ஏற்படுத்தப்பட்டது. உடலில் உள்ள ரசம் சுக்கிலம். இது உயிர் திரவம் ஆகும். இதை இழப்பது கேடு கெட்ட முட்டாள்தனம் ஆகும். **திராணி இல்லா தேகம் ஊருக்கு** பாரமாக போகும்.

வெறும் சக்கை. பனி உருகி அருவி ஆவது போல உயிரும் உடலும் உருகி சுக்கிலமாகிறது. ஷேத்திராடணம் செய்யும் வழியில் வழிப்பறிக் கொள்ளையில் பொருளிழந்த இவர் வீட்டுக்கும் திரும்பாது, பகவானையும் தரிசனம் செய்ய முடியாமல் காட்டினில் எரிகிறார், கட்டிலில் செத்தவன் கதை இது. முடிவாக சயன தியானம் எனும் அனந்த சயனத்தில், நித்திரை கொள்ளும் போது மனம் தன்னாலே உறங்கி விடுவதால், நமக்கு மனதை தடுக்க வேண்டிய அவசியம் இல்லை. மனம் உறங்கும் போது, சரீரமும், அறிவும் ஓய்வெடுத்துக் கொள்ளும் அப்போது உயிர் மட்டும் விழிநிலையில் இருக்கும். அதுவே நமக்கு இயல்பான, இயற்கையாக எவ்வித சிரமமும் இல்லாத தவம். வாருங்கள் நாம் உறக்கத்தையும் தவமாக்குவோம்.

## 8. "சரீரம் எனும் கோவிலில் உயிரெனும் கடவுளின் பிரதிஷ்டை"

பிரம்ம முகூர்த்தம் என்பது விடியற்காலை 3.00 மணியில் இருந்து 4.30 மணிக்குள்ளாக குறிப்பிடுகிறேன். அல்லி புஷ்பம் மலரும் நேரம் இந்த நேரத்தில் தான் பகவான் திருப்பள்ளி எழும் நேரம்.

கோவிலை கட்டிவிட்டு அதில் ஒரு சாமியை வைத்து சுற்றி வந்து வணங்கினால் அது உனக்கு மட்டும் தான் சாமி. மற்றவர் கண்ணுக்கும் கருத்துக்கும் வெறும் பொம்மை தான். அந்த பொம்மையிடம் பக்தி சிரத்தைகள் மற்றவர்களுக்கு ஏற்படாது. உடலில் உள்ள உயிரை ஆத்மாவாக பிரதிஷ்டை செய்ய வேண்டும். சிற்பி தான் அந்த பொம்மையை உருவாக்கினான். உருவத்தை மட்டும் தான் உருவாக்கினான். கும்பாபிஷேகம் செய்தால் தான் உயிர் ஏற்படுகிறது. அதே சிற்பி அதை தொடக் கூட முடியாது. அதை வணங்கித் தான் செல்ல வேண்டும். அதே போல் நமது தாய் தந்தையர்கள் கூட சிற்பியை போலத் தான். நம்மை பொருத்தவரை அவ்வளவுதான். உன்னுடைய உயிரை கடவுளாக எப்போது பிரதிஷ்டை செய்கிறாயோ அன்றுதான் நீ புனிதனாக

மாறுகிறாய். அதுவரை உன்னை பாபங்கள் சூழ்ந்தே இருக்கும். எல்லா தோஷங்களுடன் கூடியவன் பாபி என்று அழைக்கப்படுகிறான். தன் உயிரை கடவுளாக உணரும் வரை எந்த மன்னிப்பும் இவனுக்கு கிடையாது. இது எப்படி என்றால் சிறு வயதிலேயே பிரம்மோபதேசம் லௌகீக முறைப்படி செய்வது வழக்கம்.

பிராணணை பிரம்மம் என்று தன்னிடத்திலேயே பிரதிஷ்டை செய்து கொள்ளுதல், அதற்குறிய மஹா மந்திரங்களை ஜபித்தல், படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில் வேந்தர்களை மூன்று வேளையும் வணங்குதல். காலை கதிரவனை விஷ்ணு என்றும், மதியம் ருத்திர ஸ்வருபமாகவும் மாலை பிரம்மா சொரூபமாக ஆதித்தனை வணங்குதலும் இதனால் பிராண சக்தி பர தேவதையாக உருவெடுக்கின்றது. அந்த ஒளி பொருந்திய கடவுள் உள்ளே கோயில் கொள்கிறார். இதுவே தேவதாத்ம பிரதிஷ்டை, இதை உபநயனம் என்று சொல்லுகிறார்கள். பொம்மைக்கும் சாமிக்கும் உள்ள வித்தியாசங்கள். கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள வேறுபாடுகள்தான். ஒன்றுதான் இரண்டாக இருக்கிறது எனினும் இரண்டும் ஒன்று கிடையாது - "துவைதம்" எனப்படும்.

சாஷ்டாங்க நமஸ்காரம் செய்யும் போது இடது பக்கம் வலது பக்கம் கன்னம் பூமியில் படும் படி செய்ய வேண்டும். கைகள் இரண்டும் தலைக்கு மேல் உயர்த்தியபடி செய்தால் உடல் என்ற வீணையில் துள்ளியமாக நன்கு சுருதி சேர்க்கப்படுகிறது. அப்போது பெரியவர்களை நாம் வணங்கும் போது மஞ்சள் கலந்த அரிசியால் ஆசிர்வதித்தனர், நீண்ட ஆயுளுடன் இருக்க வேண்டும் என்றும், சௌக்கியமாக இருக்க வேண்மென்றும் இந்த ஆசனம் நீண்ட காலம் வாழ வழி செய்கிறது.

சரீரம் உறங்கிக் கொண்டு இருக்கும் போது, சரீரத்தை உயிர் கவனிக்காததால், பகலில் விழிக்கும் போது சரீரத்தில் பிணவாடையும், பிரேத களையுடன், வாய் துர்நாற்றமாயும்,

கண்ணில் ஊளை வாயில் கோழையுடனும் எழுகிறான். அதே வேளையில் பல லட்சக்கணக்கான உயிர் அணுக்கள் இரவிலே தான் இறந்து போகின்றன. தவம் செய்யும் ஞானியின் உடல் இப்படி நாறுவது இல்லை. ஞானி தன்னை உணர்ந்த நிலையில் அல்லவா இருக்கிறான். தன்னை ஆன்மாவாக உணர்ந்த நிலையில் உறங்கும் போது உயிரே சரீரமாக படுத்து கிடக்கும். ஆகவே, தேகம் கெடுவது இல்லை. இந்த முறையில் தான் ஒவ்வொருவனும் உறக்கம் கொள்ள வேண்டும் என்று அறிந்து கொள்வாயா மனிதா? உயிர்தான் கடவுள்.

உயிருக்குள் சரீரம் இருப்பதாக எண்ணுதலே தியானிப்பதுவே சரீரம் கெடாது இருப்பதற்கு ஒரே ஒரு வழியாக உள்ளது.

அதற்கு உனக்குள் உயிர் என்ற ஒன்று இருப்பதாக நினைப்பதை மறக்க வேண்டும். உயிருக்கு ஒரு வடிவத்தை கொடுக்காது இருந்தால், உடலும் நிலைக்காது பிறகு உயிரும் இருக்காது. கடவுள் சிலை என்பது வெறும் "கல்" தான். அதில் எந்தவிதமான சந்தேகமும் வேண்டாம். உயிருக்கு ஒரு வடிவம் தருகிறோம். அவ்வளவு தான். உயிர் ஓர் வடிவம் பெற்றவுடன் கடவுள் என்ற நிலையை அந்த கல் அடையும் போது, "மனிதனே" நீ மட்டும் ஏன் இப்படி சிலை போல் நின்று கொண்டு இருக்கிறாய். பாறைகள் கூட படைத்தவன் ஆகும் போது, நீ மட்டும் ஏன் கல்லை கடவுளாக்கிய கற்பனையே போதுமென்று உனக்குள் இயங்கும் உண்மை கடவுளை நினைக்க மறந்தாய்.

கோபியர்களுடன் கண்ணன் ஆடும் போது, தன்னையும் ஒரு பெண்ணாக பாவித்துக் கொள்வான். அசுரனை வெல்ல அசுரனாகவே மாறுவான். மிருகத்தை அழிக்க மிருகமாகவே மாறுவான். வணங்குபவரை கண்டால் வணங்குவான். எதிரிட்டது எதுவோ, அதுவாகவே நிற்கும் கலைஞன் ஆவான். இது ஒரு தந்திரக் கலை. இப்படித்தான் ஒரு மனிதன் பூமியில் வாழ வேண்டும் என்பதற்கு இவனின் சரித்திரம் ஓர் எடுத்துக்காட்டு. உயிரை வசமாக்கிய வீரன்.

தனக்கு எதிரிட்டது எதுவோ அதை எதிரியாக பாவிக்க மாட்டான். தனக்கு எதிரிட்டது பிரம்மம் தான் என்று தியானித்தவுடன் அது தோல்வியை தழுவும். உலகத்தில் ஒருவன் எப்போதுமே ஜெயிபபது எப்படி சாத்தியமாகும்? நீங்களே சொல்லுங்கள். கீரியும் பாம்புமாக சண்டை போடமாட்டான். பாம்போடு பாம்பாக சண்டை போடுவான். பெரிய வீரனும், பெரிய செல்வந்தனும், அனைவரும் தோற்றது கண்ணனின் தந்திரத்தில் சிக்கித்தான். **உலகத்தை வெல்லவும், உலகத்தை ஜெயிக்கவும், தந்திரம் ஒன்று தான் வேலை செய்யும். எந்த மந்திரமும் செல்லுபடியாகாது** என்பதை அறிவாயா! சூழ்நிலையை உணரக் கூடிய சக்தி **"ஜோதிடம்"- சோதித்து திடம் செய்து கொள்ளுதல் ஆகும்.** தனக்கு ஏற்ற சூழ்நிலையை தானே ஏற்படுத்திக் கொள்வது தந்திரமாகும். எதிரியின் பலகீனமான காலத்தை கணக்கிட்டு தன் முழு பலத்துடன் சூழ்ந்து அழுத்துதல் சூது. தன்னுடைய பலகீனம் தெரிவிக்காமலும் எதிரியின் பலகீனம் பற்றிய பரிசோதனை செய்து "உலகம் தனக்குள் இருப்பதாக அபிமானிப்பான். அதற்கு எதிரிட்டவனை கடவுள் என்று உபாசியுங்கள், உயிர் என்று உபாசியுங்கள், உபாசனை தேவதை எதிர் நின்று வெற்றியை உனக்கு வாரித்தரும், அப்போது உனது சங்கல்பத்துக்குத்தான் இந்த உலகம் கட்டுபடும் படி, இந்த **உலகத்தை நாயை பழக்குவது போல் பழக்க வேண்டும். விகர்பத்துடன் நிற்கும் எதிரியை சங்கல்பத்தால் வீழ்த்த வேண்டும்.** சவிகற்பமாக இருந்து சங்கர்பம் சுத்த சங்கர்பமாக செய்து கொள்ள வேண்டும். இதுவே லோக ஷேமத்திற்கான மந்திரம் இதுவே ஆகும்.

வடகலை, தென்கலை என்று இரண்டும் பாஞ்சராரத்தம், வைகாநசம், என்று அழைக்கப்படுகிறது. இடது பக்கம், வலது பக்கம் என்று பெயர் பெறும். இடது கை புறமும், வலது கை புறமும் என்று பொருள். எனவே, தான் கிழக்கு கலை மேற்கு கலை இல்லை. இறைவனின் இடது திருவடி, வலது திருவடி ஆகும்.

"மற்றவர்களுக்கு உதவாத சரீரம், தனக்கே பாரமாகிவிடும்" என்பது தெரியுமா ? மற்றவர்களின் நலனுக்காக எவன் சரீரப் பிரயாசை செய்கிறானோ அவன் கர்மயோகி. கர்மத்தை கர்மமே என்று செய்யாமல் அதை யோகமாகவும், சிரத்தையுடனும் செய்ய வேண்டும். இதையே பகவானுக்கு செய்யும் போது பக்தியுடன் செய்ய வேண்டும். மனம் ஒத்துழைக்காது போனால் சரீரம் முழுமையாக வணங்கி ஒரு காரியத்தையும் செய்யாது போகும்.

**தன்னலம் அற்ற அன்பும், அறனும், தியாக வடிவம் பெறுகிறது.** "வினை" ஒழிய கர்மம் செய் இதுவேதான் என்னுடைய கர்மயோகத்தின் விளக்கம். இல்லையேல் சரீரமாக்கப்பட்ட வீனை ஒழிந்துவிடும். ஒரு சரீரத்தை குணமாக்க 100 மருத்துவர்களும் 1000 மருந்துகளும் லட்சக்கணக்கான தன நாசமும், கருமம் செய்யாதவருக்கு கடவுள் போட்ட அபராதம் என்று கருதுகிறேன். வந்த நோய் எப்போதும் போகாது, உடலை விட்டு, இது பீடை என்றும், அபராதம் பிடித்தவனாய் தரித்திரவானாக மாற்றும் ஆகவே, இதற்கு பரிகாரம் உழைப்பு.

அன்பு என்ற சொல்லை சற்று உயர்த்தி சொல்லும் போது பக்தி என்ற பெயர் உருவாகிறது. **ஆன்ம நேயம் தான் ஆன்மீகம்** என்பது. என் மீது நான் கொண்ட அன்பு தான் இந்த உலகம் அனைத்தையும் நேசிப்பதற்கு காரணமாக விளங்குகிறது. தன் மீது தனக்கு வெறுப்பு இருக்கும் பட்சத்தில் எதைப் பார்த்தாலும் வெறுப்பாகத்தான் இருக்கும். உலகம் உன்னிடத்தில் வந்து ஒடுங்குகிறது. இது வேத வாக்கியம். கலவையை குழைத்து, மணலை கலந்து, குழப்பி சுவர் வைக்க, உருவாகுமா சுவர்? கல்லை வைத்து அடுக்கினால் தானே, சுவர் உருவாகும், அது போல் எண்ணங்கள் என்பது கலவையைப் போன்றது. வெறும் எண்ணங்களைக் கொண்டு எதையும் சாதிக்க முடியாது. எண்ணங்கள் எல்லாம் செயல் வடிவம் பெற உயிர்ப்பு வேண்டும். வாழ்வில் ஒவ்வொரு விஷயத்தையும் தன்னுடன் இணைத்துக் கொண்டு வாழ்வதே லட்சிய வாழ்வாகும். அப்படி

ஒரு உயர்ந்த நெறி தான் அஹிம்சை ஆகும். இதுவே சுத்த சம்மத நெறியாகும்.

சம்மதம், அஹிம்சை - சத்தியாகிரகம் - ஆத்ம சாந்தியும் உயர்ந்த தத்துவங்கள் ஆகும்.

உடலை அசைக்கும் சக்திக்கு பெயர்தான் உயிர். உயிர் அசையாமல் இருப்பதால் உயிர் சைவம். **அசையும் சரீரம் அசைவம் ஆகும். உயிர் மட்டுமே சைவம்.**

கடவுள் அன்பின் பிறப்பிடம் - அருள் வந்தது - அருள் ஞானம்.

தாய் பாசத்தின் பிறப்பிடம் - சரீரம் வந்தது - தேகாபிமான ஞானம்.

தந்தை உயிரின் பிறப்பிடம் - உயிர் வந்தது - ஆத்ம ஞானம்.

குரு - அறிவின் பிறப்பிடம் - ஞானம் வந்தது - பரமானந்த ஞானம்.

இவ்வுலகில் உயிர்தான் கடவுள் என்ற செய்தி, எத்தனை பேருக்கு தெரிந்து இருக்கும்? உயிரின் வடிவம் என்ன ? என்று எவராலும் சொல்ல முடியுமா? அந்த வடிவமே கடவுளின் உண்மையான வடிவம் ஆகும். **உணர்ச்சியே உயிரின் மொத்த வடிவமாகும். "உயிர்" உணர்ச்சியின் வடிவமாக உள்ளது** என்பது எத்தனை பேருக்கு தெரிந்து இருக்கும். உண்மையில் இதை அறியாதவன் உயிர் வாழ்ந்து என்ன பயன். **உயிரை பற்றியே அறியாமல் வாழும் இந்த உயிர் வாழ்க்கை எனக்கு வேடிக்கையாக உள்ளது.** எல்லோரும் கடவுளின் நம்பிக்கை இல்லாமல், மதம் பிடித்து அலைகிறார்கள். உண்மையை அறியாத வேடிக்கை மனிதர்கள் இவர்கள் வாழ்நாட்களை வீண் விரயம் செய்கிறார்கள். இவர்களின் அறிவு வீட்டுக்கும் பயன்படாது, நாட்டுக்கும் பயன்படாது, தனக்கும் ஒரு பயனும் இல்லாது மறைந்து போகிறார்கள். பயன்அற்று காலவிரையம் ஆனதுவே மிச்சம்.

என்னை படைத்தவன் கல்லாக நிற்பதையும், கல்லறைக்குள் கிடப்பதையும் என் அறிவு ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. மதத்தின் பெயரால் கடவுளை மூடுகிறார்கள். இது அக்னிக்கு சாம்பல் போர்வை. மலை மூடிய பனி, உங்களின் ஒருமித்த கருத்தும் இதுவாகத்தான் இருக்கும் என நம்புகிறேன். ஏனெனில் எனது செய்தி முழுமையாகவே உண்மை மட்டும் தான். உணர்ச்சி என்பது உயிரின் வெளிப்பாடு. உயிர் தான் கடவுள்.

ஆனாலும், உயிரும் உணர்ச்சியும் இரு துருவங்கள். இவைகள் ஒன்றை ஒன்று எப்போதும் சந்திப்பது இல்லை. "உயிர்", உணர்ச்சியாக வெளிப்பட்டு போய் விடுகிறது. உயிரும் உணர்ச்சியும் எப்போதும் ஒன்றை ஒன்று சந்திக்கிறதோ! அப்போது இந்த பூமியில் ஒரு ஜீவன் ஜனனமாகிறது. உயிரை ஆண் சக்தி என்றும் உணர்ச்சியை பெண் சக்தி என்றும் இரண்டும் இணைந்த சக்தியை மஹா சக்தி என்றும், நபும்சக சக்தி என்றும் அழைக்கப்படும்.

உணர்ச்சியை எவன் கட்டுப்படுத்துகிறானோ, அவனுக்கு உயிர் கட்டுப்படும். எவனுக்கு உயிர் கட்டுப்பட்டதோ அவனுக்கு பிரபஞ்சத்துள் உள்ள இயற்கை எல்லாம் கட்டுப்படும். தன்னுள் ஒன்றாய் அவனையும் இணைத்துக் கொள்ளும். இதிலிருந்து சொல்ல வருவது என்னவென்றால் உணர்ச்சிவசப்பட்டுத் தான் மனிதன் தன்னுடைய உயிரை இழக்கிறான். அறிவு வயப்படாததால் தடுமாற்றம் ஏற்படும். அறிவு வயப்படாத குற்றத்திற்காக இந்த தண்டனையை சரீரம் அனுபவிக்கிறது. "தடுமாற்றமே மரணம்". பதட்டமே மரணத்தின் அறிகுறி. எந்த நிலையிலும் நிற்க முடியாமல் போகும், மனத் தடுமாற்றம் என்ற அவஸ்தையை அனுபவித்து ஜீவனை விட்டு உடல் பிரிகிறது.

மனிதனின் உயிர் உற்பத்திக்கு எது காரணமாக இருந்ததோ அதுவே ஆதி, அதுவே உடல் உற்பத்தி ஆவதற்கும் காரணமாக அமைகிறது. ஆனால், இது அந்தம்

இல்லாப் பொருளுமாகவும் உள்ளது. இதை அறியாத மூடனுக்கு அந்தம் மரணம், ஆதி அந்தம் இல்லாத ஜீவன் ஜோதியாக விளங்குகிறது. சரீரம் நோய்களின் பிறப்பிடமாகவும், உயிர்வாழ மருந்துகளை தவிர வேறு மார்க்கம் எதுவும் இல்லை என்றும் எண்ணி ஏமாறுகிறான் மனிதன் மருந்தை உயிராக எண்ணுகிறீர்கள். நான் உயிரை மருந்தாக எண்ணுகிறேன்.

## 9. உயிர் தான் கடவுள் - உணர்வாய் மனிதா?

அற்ப மனிதர்களை, அபூர்வமான மனிதர்களாக்கவே எனது இந்த முயற்சி. இது திருவினையாக்கட்டும் கடவுளுக்கு கூட தெரியாத ரகசியம் ஒன்று இருக்கிறது. தான் ஒரு கடவுள் என்பது மட்டும் தான் அவனுக்கு தெரியாது அது. கடவுள் இல்லை, எங்கும் இல்லை என்று எவன் திடமாக சொல்லுவானோ அவனுடைய இதயத்தைத் தவிர கடவுளுக்கு பாதுகாப்பான இடம் இருக்க முடியாது. அதற்கு இதுவே அர்த்தம். ஒன்றை கட்டுப்படுத்தும் போது, மற்றும் ஒன்று, அதனினும் வேறானதாக வெளிப்படுகின்றது. அதைத்தான் "அருள்" என்ற சொல்லுகிறார்கள்.

"திருவருள்" என்னும் சிறப்பு பெயரும் இதற்கு உண்டு. அருள் என்ற ஒன்று வந்து மனிதனுக்குள் ஆட்டி வைக்கும். அதாவது, நிலை நிறுத்தும் அசைகின்றவனை நிலை நிறுத்திப் பார்ப்பதுவே இதன் தொழில் ஆகும். இது அனைவரையும் ஆட்டி வைக்கும் அபூர்வ சக்தி. இந்த சக்தியை அடைந்தவனை நான் அபூர்வ மனிதன் என்று குறிப்பிடுகிறேன். கட்டிய மனைவி, பெற்ற தாய், ஈன்ற பிள்ளைகள் இவைகளை விட நம்மை அதிகம் பேணிக் காக்கும். இதை "அமானுஷ்ய சக்தி என்று அழைக்கிறார்கள். இந்த சக்தி தன்னுடைய இயல்பான சக்தியை கொண்டே தன்னை தானே காப்பாற்றிக் கொண்டு, தன்னை சார்ந்தவர்களையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு செல்கிறது. இப்படி பல ரிஷிகள் சமாதியிலிருந்து தன்னுடைய பக்தர்களை காப்பது இம்முறையே ஆகும். மனிதன் எந்த

கட்டுப்பாடும் இல்லாமல், மிருகத்தைப் போல் வாழ்வதை சுதந்திரம் என்று எண்ணுகிறான். இதை சந்தோஷ வாழ்க்கை எனவும் எண்ணுகிறான்.

எனவே, இந்த மிருகத்தை மற்றொரு மிருகம் அடித்து சாப்பிடுகிறது. நான் காம சிந்தனையைத்தான் சொல்கிறேன். செயல்படவேண்டிய காமம் சிந்தனையில் நின்று மனோவிஹாரங்களை ஏற்படுத்துகிறது. நல்ல சிந்தனைகள் அற்றுப் போன மனிதனும், ஒரு வகையில் மிருகம் தான். எத்தனையே கடவுள் இருப்பதாக சொல்லுகிறார்கள். ஆனால் என்னைப் போல உயிர் தான் கடவுள் என்று எவரும் ஆணித்தரமாக சொன்னதில்லை. அறிவு கெட்டவனுக்கு உயிர் திரவமாக மாறி நீர் போல ஒழுகி விடும். பிறகு, தேகம் மண்ணோடு மண்ணாக மக்கிப் போகும் உங்களுக்குத் தெரியுமா?

உடலுக்கு உணவை விட, காற்றே மிகவும் அவசியம். அதாவது, ஒரு வேளை உணவு, ஒருவேளை காற்று, ஒருவேளை நிறைவான அன்னம், ஒரு வேளை உறக்கம். இந்த உறக்கத்தை தியானமாகவும், தவமாகவும் ஆக்கிப் பழக வேண்டும். தன்னிடத்தில் தனக்குள்ள நம்பிக்கை தான் கடவுள் நம்பிக்கை. தன்னிடத்தில் தனக்குள்ள பக்திக்குப் பெயர் தான் கடவுள் பக்தி. தானே தனக்குப் பகையாகிக் கொண்டு, தன்னம்பிக்கை அற்றுப் போய், தன்னுடைய நிழலை கண்டு தானே அஞ்சி ஓடுபவனுக்கு துரத்துகின்ற நிழல் தான் அந்த வேடிக்கையான "விதி". உயிர் அற்ற ஒரு சொல் விதி என்பது. அறிவு கெட்டுப் போகின்றவருக்கு உயிர் என்பது வெறும் வெட்ட வெளியாகத் தான் தெரியும். வெட்ட வெளிக்குள்ளே உயிர் என்ற ஒரு பொருளை, வெட்ட வெளிச்சமாகவும் நிர்வானமாகவும், உள்ள உயிர் பொருளை ஆராதனை செய்வதே நிவேதனம், ஆசமனம், தியானம், சமாதி, ஆசனம் என்பது ஆகும். இது முறையே உணவு உண்ணுதல், படுத்தல், உயிருடன் படுத்து உயிருடன் எழுதல், உயிராகவே நிலைத்தல், அமர்தல் அதர்வது உயிர் மேல் உயிருடன் அமர்தல், உட்கார்தல்,

என்னே, இது ஒரு அற்புத வாழ்க்கை ! என மகிழ்தல், பரமானந்தம் எனப்படும் "உயிர்தான் கடவுள்."

குறிப்பாக நடைபழகும் காலத்தில், குழந்தை பருவத்தில், ஒன்றை நாம் கூர்ந்து கவனிப்பது இல்லை. பலம் பொருந்திய காலை முன்னே வைத்துக் கொண்டு, பலம் இல்லாத காலை பின்னே அதாவது இழுத்துக் கொள்ளும். அதைப் போலத் தான், மனதை முதலில் இளமையாக்கிக் கொண்ட பிறகு, அதாவது மனதை குழந்தை வடிவம் ஆக்கி கொள்ள வேண்டும். மனம் பூரணமாக குழந்தை வடிவம் பெற்று விட்டால் அதற்கு பொருத்தம் இல்லாத கிழ தேகம், பொருத்தமின்மையை உணர்ந்து மனதுக்கு ஏற்ற ஒரு வடிவத்தை எடுத்து நிற்கும். இது நடைமுறை சாத்தியம் என்பது முற்றிலும் உண்மை. மனிதனின் ஒவ்வொரு விருப்பத்தையும் உணர்ந்து தான் சரீரம் ஒவ்வொரு நாளும் அசைகிறது. உடலின் அசைவுக்கு காரணம் மனம் என்பதே முக்கிய செய்தி. ஏனெனில் உடலின் முழுபலத்தையும், மனம் என்ற பெட்டிக்குள் தான் கடவுள் வைத்து இருக்கிறான். மனம் தனது கட்டுப்பாட்டை இழக்கும் போது, சரீரம் தாறுமாறாக சென்று கெட்டுது அழிந்து விடுகிறது. மனக் கட்டுப்பாடு இல்லாதவர்களுக்கு மார்க்கம் எதுவும் இல்லை. மனம் இருக்க வேண்டிய நிலையில் இருந்தால், மார்க்கம் இங்கு உண்டு. மனம் மாற்றம் அடையும் போது சரீரம் தன்னால் மாற்றம் அடைகிறது. மனதை கட்டுப்படுத்துவது அறிவு எனப்படும். அறிவு அசையும் போது மனம் என்ற பெயர் பெறுகிறது. மனம் உறங்கும் போது சரீரம் ஓய்வு எடுக்கும். தீர்க்கமான இரண்டு மனங்களின் கூட்டு அமைப்பு இரண்டு மனமும் ஒன்று கூடி ஆடை களைந்து மானபிமானமும் களைந்து, தேகம் உணர்ச்சியின் வடிவமாகவே எடுத்து நிற்கும். இரு தேகமும் ஒரு தேகமாகவே மனதை திறக்கும் போது உயிர் வெளிப்படுகிறது. அதாவது உயிர் பொருள் வெளிப்பட்டு போய் விடுகிறது. ஒரு தேகத்தால் ஆகாத காரியம் இரு தேகங்கள் சேரும்போது அந்த காரியம் ஈடேறுகிறது. ஒன்றோடு ஒன்று மானபிமானம் விட்டு சேரும்போது தான்,

மற்றொன்டு உருவாகும். இரண்டையும் அழித்துதான் ஒன்றை உருவாக்குகிறான். ஒன்றை உருவாக்க, தான் அழிவதற்கு கூட விருப்பமாக உள்ளது. ஒரு சரீரத்தில் இருந்து 1000 சரீரங்கள் பிறக்கிறது. ஆனால், தனக்கென ஒரு நிலையான தேகத்தை மட்டும் ஏன் தன்னால் ஏற்படுத்திக் கொள்ள முடியவில்லை? **சாவதற்கு பெயர் தியாகம் என்றால்; அந்த தியாக தினத்தை ஏன் துக்க தினமாக மக்கள் அனுஷ்டிக்கிறார்கள்.** உயிர் தான் கடவுள் என்று தியானிப்பவரின் மனம் குழந்தையின் வடிவெடுக்கும். கடவுளும் குழந்தையும் கொண்டாடும இடத்திலே. குழந்தையின் முகத்திலே ஒரு கோடி துக்கம் மறைந்து போகும். இதுவே ஆறாவது முகம். உள்ளறிவு உடையவன், தன்னை மட்டுமே உற்று நோக்கும் அறிவு உடையவனாக இருப்பான். தன்னைக் கண்டு தான் பொறாமைப் படுவானே ஒழிய, மற்றவற்றை கண்டு பொறாமை கொள்ள மாட்டான். தன்னறிவையும், சுயசிந்தனையும். தற்போதமுடையவனும் பிற ஒன்றை உற்று நோக்காதவன் ஆவான். எனவே, பொறாமை கொள்ளும் அளவுக்கு ஏதும் அரியதாக இருக்காது.

சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் இந்த 5 முகங்கள் ஒடுங்கும். 6ஆவது முகம் அது மனம், இதுவோ மனிதனின் 7ஆவது அறிவு ஞானம். எட்டாவது ஞானம் இதுவே சண்முகனின் கவசமும் இதுவே ஆகும்.

## 10. சர்வமதம் - "சம்மதம்"

உயிருக்கு அழிவில்லாத போது அதையே நம்பியுள்ள தேகம் மட்டும் எப்படி அழிந்து போகும். உயிர் உடலில் சாஸ்வதமாக பிரதிஷ்டை செய்தால் தேகம் விழுவது எப்படி சாத்தியப்படும்? உயிர் கடவுளாகும் போது, உடல் மட்டும் சாத்தானாக எப்படி போகும். எந்த உயிருக்கும் தெரியாத ரகசியம், "உயிர் ஒன்றே தான் கடவுள்" என்பது, உயிருக்கு அன்னியமாக கடவுள் ஏதோ ஒரு இடத்தில் இருக்கிறான், என்று எண்ணுதல் மத அபிமானம் ஆகும். கடவுள் இல்லாத இடமே இல்லை. எல்லா இடங்களிலும் நீக்கமற

நிறைந்துள்ளது. உயிரிடத்தில் நான் கொண்ட அன்பு மற்ற உயிர்களிடத்திலும் அன்பு எல்லையில்லாமல் பரவி நிற்பது "ஆன்மீகம்" என்பதுவாம். ஒரு மரத்தின் வேர்களுக்கு ஊற்றப்படும் தண்ணீர், இலை, காய், பூக்கள், தண்டுகள் இயற்கை சூழல், பறவைகள், நிழலில் படுக்கும் மற்ற ஜீவன்கள் அனைத்திற்கும் அதன் பலன் சென்று அடைகிறது. அது போல, மூலமாக உள்ள உயிர் பரமானந்தம் கொள்ளும் போது அவனைச் சார்ந்துள்ள அனைவரும் ஆனந்தப்படுகிறார்கள். உற்றார், உறவினர், நண்பர்கள், மனைவி, மக்கள், எல்லோரும் தான். **அதாவது ஒருவன் இறந்து போனால் யார்யாருக்கெல்லாம் துக்கம் உண்டோ! இவன் பரமானந்தம் அடையும் போது அனைத்தும் அவ்வண்ணமே பரமானந்தம் கொள்கிறார்கள்.** உயிரிடத்தில் நான் கொண்ட அன்புக்கு எல்லையே இல்லை. உயிரை வாழ்த்தும் போது வாழ்கிறது, உயிரை போற்றும் போது ஆனந்தப்படுகிறது, தாய் தந்தை இருவரின் எல்லையற்ற ஆனந்தத்தில் ஜனித்தவன், அதனால்தான் ஏதோ எல்லையற்ற ஆனந்தத்தை தேடி அலைகிறான். அந்த ஆனந்தம் கிடைக்காத போதும் கூட தேடி அலைவது நிற்பதே இல்லை. கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தான் தேடி அலைகிறது, எறும்பிலிருந்து யானை வரை. இனியும் கிடைக்காது என்ற அவநம்பிக்கையை மனிதன் அடையும் போது, அவன் போடும் வேடம் தான் முதுமை கோலம். இவனின் வருத்தம் தீர மீண்டும் கல்லைக்கட்டிக் கொண்டு அழுவான். கல்லறைக்குள் இருப்பவனை நம்புவான். உயிரை கடவுள் என்பதை சாகும் வரை உணருவதே இல்லை. இவ்வுலகில் எல்லாம் புதுமை தான். ஆனால், உயிர் ஒன்று தான் உண்மை! எல்லா மதமும் ஏற்றுக் கொள்ளும், இந்த மதத்தை, எனவே, இது சம்மதம் எனப்படும். **உயிருக்கு சம்மந்தமான மறை நூல் இதுவே ஆகும்.** நான் எவ்வளவோ காலங்கள் நான் ஏன் பிறந்தேன் என சிந்தித்ததுண்டு. அதற்கு விடை தெரியாத போதெல்லாம், நான் பிறந்ததை எண்ணியே வருத்தப்பட்டதும் உண்டு. "உயிர் தான் கடவுள்" என்ற தத்துவத்தை நிலை நாட்டவேதான் நான் பிறந்தேன் என்று அறிந்ததிலிருந்து பிறப்பை எண்ணியே

பேரின்பம் அடைகிறேன். சிற்றின்பங்களின் மேல் எனக்கு சிந்தையில்லை. உயிர் என்னும் கடவுளால் வரையப்பட்ட கற்பனை ஓவியம் தான் இந்த தேகம். இந்த ஓவியம் உயிர் என்னும் கடவுளால் சித்தரிக்கப்பட்ட கற்பனை காவியந்தான் வாழ்க்கை. உயிர் என்னும் கடவுளால் வடிவமைக்கப்பட்ட வண்ணச் சிலை தான் இந்த சிலை (சரீரம்). உயிர் வழங்கிய இந்த சிலைக்கு விக்கிரகம் என்று பெயர். **உயிராகிய கடவுள் இந்த சரீரத்தை உருவாக்கினான்.** உயிர் தனது படைப்புத் திறனை முழுமையாக நம்மிடம் வெளிப்படுத்தி இருக்கிறது. ஒன்றை ஒன்று மிஞ்சும் அளவிற்கு அதன் திறனும் படைப்புகளில் உள்ள வித்தியாசங்கள், ஏற்றத் தாழ்வுகள் என்று கருதப்பட்டு வருகிறது. ஏற்றத் தாழ்வுகள் சரியா? தவறா? என்று அந்த உயிருக்கு மட்டும் தான் தெரியும். உயிரை வணங்குவதற்கு பதிலாக எந்த பொம்மையை சென்று வணங்கினாலும், அந்த பாசாங்குதனத்தை எள்ளி நகைக்கும். "உயிர் தான் கடவுள்" என்பதை வாழ்நாளில் ஒருநாள் கூட வணங்காதவனுக்கு முதுமையும், நோயும், மரணமும், தண்டனைகளாக ஆகிவிடுகின்றன. எந்த ஜீவனும் சாகும் வரை இதை உணர்வதே இல்லை. உண்மையை அறியாததால் மூடனாகிவிடுகிறான். உயிரின் மொத்த உருவமும் உணர்ச்சி மட்டும் தான். இவ்வுணர்ச்சி சரீரத்தில் பிரதிபலிப்பதன் மூலம், சரீரத்தை எத்தனையோ அழிவுகளில் இருந்தும் ஆபத்துக்களில் இருந்தும் தன்னை காப்பாற்றிக் கொள்கிறது. உயிரிடத்தில் தேகம் எல்லா உபகாரங்களையும் பெற்று, மகிழ்ந்து விட்டு, நன்றியை மட்டும் ஏதோ தெருவில் போகும் எருமை மாட்டிடம் சொன்னால், அந்த உயிர் சீற்றம் கொள்கிறது. எனவே, கடவுளை நம்பாத நாத்திகன் வாழும் சந்தோஷமான வாழ்க்கையைக் கூட ஆஸ்திகனால் வாழ முடியவில்லை. அதன் ரகசியம் இது தான். எருமையை வணங்குபவருக்கு சோதனையும் வேதனையும் நோயும் தீராதபகைமையுடன் வேதனைப்பட்டு வாழ்வார். **எந்த கடவுளையும் வணங்காதவன் அடையும் ஆனந்தத்தில் நூறில் ஒரு பங்கு கூட ஆஸ்திகர்கள் அடைவது இல்லை.** உங்கள் கடந்த காலத்தில் பழகிய மனிதர்களிடம் உள்ள

வாழ்க்கையினை கொஞ்சம் உரசிப்பாருங்கள். நான் சொல்ல வரும் நியாயம் உங்களுக்கே தானாக விளங்கும். இது ஒன்றேதான் நீங்கள் தரித்திரம் இல்லாமல், சௌபாக்கியங்களுடன் நிம்மதியாக வாழ வழி செய்யும் மஹா மந்திரத்தின் இரகசியத்தை நான் உள்ள படி உங்களுக்குச் சொல்லிவிட்டேன். இதை ஏற்றுக் கொள்வதும், ஏற்றுக் கொள்ளாததும் உங்கள் விருப்படியே செய்து கொள்ளுங்கள். வாழ்க்கையில் உள்ள வசந்த கால நினைவுகள் என்றென்றும் **அழியாதவைகளாக இவ்வுள்ளத்தில் தீபம் போல் என்றும் உயிர் பிரகாசிக்கிறது.** உள் ஒளி அடங்கும் போது தான், இதயத்தின் அந்த ஓசையும் அடங்கிப் போகும். வினை தீரும் வரை அந்த தீபம் பிரகாசமாக எரியும். வினையாகிய கொழுப்பு உருகிக் கொண்டு, அந்த தீபம் ஒளிரும். வினை முழுவதும் தீர்ந்த பின்பு தீபம் முற்றிலும் அணைந்துவிடும். **வினை முழுவதும் தீர்ந்த பின்பு வினையால் எழுந்த தேகமும் மட்டும் எப்படி கிடக்கும் இங்கே?** எனவே, அந்த உயிருக்குள் தேகம் ஒளியாக புகுந்துவிடுகிறது. வினையால் எழுந்த தேகத்தை ஒளிப்பிரவாகமாக மாற்ற வேண்டுமானால், முதலில் உடலை உயிராக மாற்றிக் கொள்ள வேண்டும். இந்த தீபத்தின் குணம், தயை மட்டுமே. வினை ஒழிய தீபம் ஏற்று. உயிர் தான் கடவுள் என்று ஏற்றுக் கொண்டவர் அதை தியானிக்கும் போது அந்த தீபம் தனக்குள்ளே எரிவதை காண்பர். ஒளியும், ஒலியும் சேர்ந்து ஜோதியாக பிரகாசிக்கும் "உயிர்" என்ற நாடி அங்கு துடிப்பது அந்த தீபத்தில் தான், அந்த இடத்திலிருந்து உடலில் நாடி உணரப்படுகிறது. நாடித் துடிப்பாகப்பட்டதுவே "நாதம்" எனப்படும் "கீதம்" எனப்படும், "வேதம்" எனப்படும், "மந்திரம்" எனப்படுவதாம். உயிராகப்பட்டது உணர்ச்சியின் வடிவமாக உள்ளது. அங்கே **உயிர் என்பது துடிப்பாகவும், உணர்ச்சி என்பது தீபமாகவும் உணரப்படும்.** அதற்கு முன், தேகம் முழுமையும் "உயிராக" இருக்க காண்பர். இதுவே முடிவான நிலை. இந்த நிலையில் தேகம் மெழுகு போல் உருகி, ஒளியோடு ஒளியாக உட்கலந்து தேகம் யாவும் அதில் ஒடுங்கும். மலைபோன்ற தேகம், மண்மேடு போல் ஆகாது. வினைச் சாராத நிலையும்

இதுவே. உயிர் சார்ந்த வாழ்க்கையும் இதுவே. மனஇருள் விலக, ஜோதி வழிபாட்டை நாடு. உயிருக்குள் தான் தேகம் இருக்கிறது என்பது தான் உண்மை. உடம்பினுக்குள் உயிர் இருப்பதாக எண்ணுபவருக்கு, உடம்பை விட்டு உயிர் வெளியேறும் மார்க்கம் ஆகும். உடலுக்கு எந்த பாதுகாப்பும் உயிரை தவிர வேறு எதுவும் இல்லை. உயிர் ஒன்றே உடலினுடைய கவசம். உடலுக்கு இந்த உயிர் தேவைப்படுகிறது. எனினும் உயிரை மட்டும் இந்த தேகம் மதிப்பதில்லை. **உயிரை ஓவியமாகவோ, சிலையாகவோ உருவாக்க நம்மால் முடியுமா?** கருணையே வடிவான உயிருக்கு, இரும்பு இதயத்திற்குள்ளேயே சிறை வாசம் எதற்கு? எனவே உயிர் உணர முடியாத பொருளாகவே ஆகிவிடுகிறது. மனிதனும் ஓர் வகையில் மிருகம் தான், என்று எண்ணத் தோன்றும் அளவிற்கு, சிரிப்பதை கூட மறந்து விட்டான். எனவே, ஒரு மிருகத்தை மற்றொரு மிருகம் அடித்துச் சாப்பிடுவதை இயற்கை என்று அந்த விதத்தில் ஏற்றுக் கொள்கிறேன். எந்த தகுதியுமே இல்லாதவனை தரைமட்டம் ஆக்குகிறது, அந்த உயிர். ஈரம் இல்லா இதயத்திற்குள் உயிருக்கு வேலி கட்ட முடியாது. உயிர் உடலை விட்டு தாண்டித்தான் போகும் ஓர் நாள், தலை தொங்கிப் போனவனை சிம்மாசனத்தில் அமர்த்தினாலும், அவனை தலைவா என்று மக்கள் சொல்வது இல்லை. காரணம் உயிர் தான் ஒவ்வொருவருக்கும் தன்னிகரில்லாத தலைவனாக உள்ளது. உயிரே தலையாய பொருள்.

## 11. இல்லறம் அதுவே நல்லறம்

காதலுக்காக உயிரை கொடுக்கிறேன் என்கிறார்கள். உயிரை கொடுக்கிறார்கள். ஆனால் தனது கட்டிய மனைவிக்காக ஒரு கணவனும் உயிரைக் கொடுப்பது இல்லை. காரணம் காதல் என்பது கற்பனா சக்தி. கற்பிதம் என்பது மாயை, கற்பனை எப்படி வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம், எவ்வளவு வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம், ஆனால் வாழ்க்கை, என்பது இப்படித்தான் வாழ வேண்டும் என்ற விதிமுறைக்கு உட்பட்டது. எனில் காதலியுடன் காதலன்

வாழ்ந்து பார்க்கும் போது சலிப்பு ஏற்பட்டு விடுகிறது. காதலியும் புளித்து போகிறாள். தேரை வடம் பிடித்து இழுக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு பாதி தூரம் இழுத்து வந்து விட்டு பெருமழை வந்துவிடவே, தெருவிலேயே விட்டு விட்டு ஓடிவிட்டார்களாம். அப்போது மழையிலே நனைந்த பொம்மைகள் ஒன்றுக்கொன்று பேசிக் கொண்டதாம். சும்மா கிடந்த எங்களை தெருவில் கொண்டு வந்து நிறுத்திய புண்ணியவான்களை எண்ணி சாபம் தந்ததாம். இப்படி, வாழ்க்கையை என்ன என்று கூட அறியாத பெண்ணிடம் ஆசை வார்த்தை காட்டி, கஷ்டம் வந்ததும் தெருவில் விட்டு விட்டு ஓடிய, இலக்கிய காதலும் உண்டு. தான் நடப்பதற்கே சக்தி இல்லாத போது, ஏன் அந்த சாமியை இழுத்து வர வேண்டும், வீண் பழி தானே.

## 12. இல்லற ஒழுக்கம்

இப்படி தேகபலம், மனோபலம், புத்திபலம் இல்லாதவன் இறை நிலைஅடைவது என்பது எப்போதும் அசாத்தியம். செத்தவன் சிம்மாசனத்தில் ஏறி கிரீடம் தரித்து என்ன செய்ய போகிறான். வெறும் விழலுக்கு இரைத்த நீர் போல் ஆகும். பல காலம் சும்மா கிடந்த பொம்மைக்கு கூட தலை எழுத்து சரியில்லை என்றால் நடுத் தெருவுக்கு வந்து நாராயணா என்று சொல்லிக் கொள்ளும். ஊர் மக்களிடம் வந்து எந்த சாமியும் தேரிழுக்கச் சொல்லவில்லை. "சாமி சும்மாத் தான் கிடக்கிறதே" என்று சொல்லியே தெருவில் கொண்டு நிறுத்தியதாம் அந்த "விதி". கோவிலை கொள்ளை அடிக்க கொள்ளையர்கள் போடும் நூதன சதி என்று அந்த பொம்மைக்கு ஒரு ஆனந்த சிரிப்பு. துன்பம் வரும் வேளையில் சிலர் சிரிப்பது உண்டு அல்லவா. அப்படித் தான். சாமிக்கு குடை பிடிக்க வந்த குள்ளன் ஒருவன் மழையில் குடை நனைந்து விடப் போகிறதே, புதிய குடையாகவும் உள்ளதே என மிகவும் பொறுப்பாக எடுத்துக் கொண்டு ஓடி விட்டானாம், அவன் வீட்டுக்கு. அப்போது தான் அந்த ஊரின் லட்சனம் அந்த சாமிக்கே விளங்கியது.

இப்படி வீட்டில் சும்மா கிடந்த பெண்களுக்குக் கூட தலை எழுத்து சரியில்லை என்றால், தெருவில் நின்று அசிங்கப்பட வைத்துவிடும். எனவே தான், குருபலம் உள்ளதா எனப் பார்த்தும் ஜாதகப் பொருத்தம் பார்த்தும், கடைசியாக மனப்பொருத்தம் பார்ப்பதுவும், வழக்கமாக உள்ளது. தேர் என்று சொன்னது பெண் அழைப்பு, பொம்மை என்று சொன்னது அந்த பெண்ணை. கோவில் என்று சொன்னது அந்த பெண் வீட்டை. கொள்ளையர்கள் என்று சொன்னது மணமகன் வீட்டாரையும், காதலனையும் குறிப்பதாய் சொல்லப்பட்டு உள்ளது. இப்போது தெரிகிறதா ? காசு இருந்தால் தான் காதல் ஜெயிக்கும். மோக வார்த்தையை கொண்டு மயக்கி விளையாடும் விளையாட்டு "சூதாட்டம்". பல்லு இல்லாத கிழவனும் கரும்பு திண்ண ஆசைப்படுவான். எனது இந்த காதல் அறிவுரையை எந்த பெண்களும் கேட்க மாட்டார்கள். நான் செத்தவன் காதில் சென்று மந்திரோபதேசம் செய்கிறேன் என்பது எனக்குத் தெரியும். வாலிப விளையாட்டை விளையாட துவங்கும் முன் விதியின் விளையாட்டை சற்று அறிய முற்படுங்கள். வாழ்க்கை என்பது வசந்தம் மட்டும் தான் என்று எண்ணுவது குழந்தைத்தனம். வாழ்ந்தவர்களுக்கு மட்டும்தான் வாழ்க்கை என்ன என்பது தெரியும். ஒரு தந்தை தன் பெண்ணை மட்டும் நம்பலாம், ஆனால் அவள் பருவத்தை நம்பக் கூடாது. பிறவிக்கு தகுந்தபுத்தியும், குலத்துக்கு தகுந்த புத்தியும் ஆசாரமும் முக லட்சணத்துக்கு தகுந்த வீரியமும் சூழ்நிலைக்கு தகுந்த வாழ்க்கையும் என்றும் மாற்ற முடியாதவைகள். தகுதியும், தரமும் அறிவதுதான் ஜாதகப் பொருத்தம். புறத்தோற்றத்திற்கு ராஜாவாக காட்சி தருபவனின், உள்ளுடம்பில் செல்லரித்துப் போனதை இது காட்ட வல்லது. படைப்பின் ரகசியம் எல்லாம் படைக்கப்பட்ட எதற்கும் தெரியாது. எல்லாம் ஒரு விதிக்கு கட்டுப்பட்டு உள்ளது. அந்த விதிக்கு சம்மந்தம் இல்லாத இருவரை சேரவிட்டால் ஒருவரால் ஒருவர் அழிந்து போய்விடுவார். இதுவே இருவருக்கும் விதியாகும், விபரீதம். இரு பெண்கள் ஒருவரை ஒருவர் மணம் செய்து கொண்டதற்கு சமானம். இரு ஆண்கள் ஒருவரை ஒருவர் மணம் செய்து

கொண்டதற்கு சமானம். இப்போது உள்ள நிலையை எண்ணி மட்டும் பெண் கொடுப்பவர், ஏமாந்து போவார். எப்போதும் உள்ள நிலையை எப்படி அறிவது. அதுவே சாதக பாதக பலன். தோஷம் என்பது ஒருவரிடத்தில் உள்ள குறைகள் என்று எண்ணுங்கள். தோஷ கிரஹங்களுள் அர்ப்பசாந்தி அடைவர். சுப கிரகங்களின் பலன் நிறைவான இன்பத்தையும், வளமான வாழ்வையும் தரும். திட்டமிட்டு மனிதன் வாழ வேண்டும், இல்லையெனில், பிறர் திட்டத்துக்கு இரையாகிப் போவான்.

இல்லறத்தான் சாமியாரைப் போல் சமத்துவம் பேசக்கூடாது. "இல்லறம்" இதனை நல்லறமாக வாழ சூழலை உணரும் சக்தி உள்ளவனாக, இவன் மாற வேண்டும. தனது சூழ்நிலை சரியில்லை என்பதற்காக வாழ இயலாதவன் ஆகி விடக்கூடாது. சிறந்த சூழ்நிலையை தேடிச் சென்று, வாழ வேண்டும். பறவைகள் தான் வாழும் சூழ்நிலையை உணர்ந்து, விருப்பமற்றுப் போய் பல்லாயிரம் மைல்கள் கடந்து வந்து இங்கு சிலகாலம் தங்கிவிட்டு பிறகு அங்கேயே சென்றுவிடும். உலகத்தில் உள்ள எல்லா பறவை இனங்களுக்கும், நமது தென்னிந்தியாவே தாய்வீடு போல் ஆகும். இங்கு வந்து பற்பல பறவைகளும், முட்டை இட்டு குஞ்சு பொரித்துவிட்டு தன் நாட்டுக்கும் சென்று விடும். ஆனால் மனிதன் மட்டும், ஒரே இடத்தில், ஒரே பிரச்சனையில், வாழவும் இயலாமல், சாகவும் முடியாமல் இரண்டுக்கும் இடையில் உள்ள விதி என்னும் வலைக்குள் அகப்பட்டு சிக்கி தவிக்கிறான். வலையில் அகப்பட்ட மானை வெளியே கொண்டு வருவதற்கு தான் "பரிஹாரம்" என்று பெயர். வலையைவிட்டு வந்த மான் வேறு காட்டுக்கு குடிபோக வேண்டும். அதை விட்டு விட்டு இந்த காடுதான் என் சொந்த நிலம் இதை விட்டுப் போக மாட்டேன் என்று அங்கேயே படுத்து உறங்கினால், இனியும் இவனை படைத்தவன் கூட காப்பாற்ற முடியாமல் போய்விடுகிறது. விதியாகப்பட்ட சூழ்நிலை சரியில்லாதபோது தனக்கு என ஒரு சூழலை ஏற்படுத்திக் கொண்டு வாழுங்கள். அல்லது உங்களுக்கேற்ற சூழல் உள்ள இடத்தை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். பறவைகளை போல விதி என்ன செய்து விடும

பார்த்துவிடலாம் என்று மான் அங்கேயே படுத்து கிடப்பதற்கு சமம். திருமணத்துக்கு வரையிலும் இப்படிப்பட்ட சட்டதிட்டங்களை ஞானிகள் வகுத்து உள்ளார்கள்.

சும்மா கிடைக்கிறதே என்று சொல்லி, அடிக்கடி ஒரே குட்டையில் போய் விழுந்து விழுந்து எழுந்து இருந்தால், எழுந்து நிற்பதற்குக் கூட பலம் இல்லாமல், விழுந்தே கிடக்க வேண்டியதாகி விடும். எனவே அளவுக்கு மேலே அமிர்தமாக இருந்தாலும் உண்ணுதல் விஷம். மூட்டுகளில் இரத்த ஓட்டம் இருக்கும் வரைதான் எழுந்து நடமாட முடியும். பிறகு மாத்திரை மருந்து சாப்பிட்டு நடைபிணமாக மாறுவான். சும்மா கிடந்த சங்கை ஊதி கெடுத்தானாம் ஆண்டி என்பது இதுதான். உடம்பை பராமரிக்க மறந்து போனவனுக்கு உடம்பே தனக்கு பெரும் பாரம் ஆகிவிடும். பிறகு நாம் மற்றவர்களுக்கு சுமையாகிப் போவோம். எனவே எதையும் கொஞ்சம் இருப்பு கட்டிக் கொள்வது உத்தமம்.

## 13. இருப்பு கட்டுதல் - கோபினம் கட்டுதல் என்று பொருள்.

தினமும் உயிரே எனது உணர்வுகளை உன்னுடன் பகிர்ந்து கொள்ள உன்னை எனக்குள் அழைக்கிறேன். நீ இல்லாத இடம் ஏது? வந்த இடம் எது? என்று தெரியாமல், போகும் இடமும் எங்கு? என்றும் புரியாமல் பிறந்த இடத்தையே தேடிக் கொண்டு அலைந்தால், போகும் இடத்துக்கு எப்போது தான் புண்ணியத்தை தேடுவது? புண்ணியமில்லாத செயல்களில் ஈடுபட்டு, வீரத்தை அல்லவா இழந்து போகிறான். வீரம் இழக்கும் போது விவேகத்தையும் இழக்கிறான். வீரமும் விவேகமும் இழந்தவன் தேகத்தில் சூட்டையும் சொரனைனையும் இழந்து நடைபிணமாக மாறி மருத்துவமனைக்கும் வீட்டுக்கும் அல்லாட ஆரம்பித்து விடுகிறான். சாகாமல் இருக்க வேண்டும் என்ற ஆசையும் இல்லாமல், வாழ வேண்டும் என்ற விருப்பமும் இல்லாமல், சாவதற்கும் விருப்பம் இல்லாமல், மனமும், நடையும் தடுமாறி மரணமடைகிறான். மரணமடைந்தவனைப் பார்த்தால் எனக்கு

மட்டும் ஏனோ அழுகை வரவில்லை. சிரிப்பு தான் வருகிறது. எனினும் நான் கல்மனம் கொண்ட கல்நெஞ்சக்காரன் அல்ல. எமனையே தின்று ஏப்பம் விட்டுவிடுவேன் என்று வீராப்பு பேசிய தந்திரமான நரியினை வேட்டையாடி கொன்றுவிட்டவன். இந்த ஏமாளித்தனத்திற்கு மக்களிடையே நல்ல வரவேற்பு காணப்படுகிறது. புத்தி இல்லாமல் செத்ததை எண்ணி வெட்கப்படுகிறேன். வேதனைப்படுகிறேன். மரணத்தின் அந்த நியாயம் நான் ஏற்பதற்கு இல்லை. அநித்திய பொருளின் மோகத்தில் நித்திய ஜீவனை அல்லவா இழந்து விட்டான். ஒவ்வொரு நாளும் வாழ்க்கை வாழ வேண்டும் என்பதற்காக வாழ்க்கையையே போராட்டமாக்கிக் கொண்டவன், தான் யாரோ ஒருவருக்காக வாழ்வதாக எண்ணிக் கொண்டு, ஏதோ ஒன்றினை தேடிக் கொண்டும் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொன்றையும் இழந்து விட்டு, தன்னிடம் இழப்பதற்கு ஒன்றும் இல்லாத சூழ்நிலையில் தன் உயிரை தானே இழந்து போனவனை கண்டால் எனக்கு வெட்கமாக உள்ளது. சுயபுத்தியும் சுய சிந்தனையும், சுய அபிமானம் என்ற மூன்றும் இல்லாத வெறும் சுயநலத்தால், தான் வாழ்ந்ததை எண்ணியே வருந்தட்டும். இந்த ஜென்மம் எடுத்தது எதற்கு என்று அறிவதற்குள் அந்த, ஜென்மமே அழிந்து விட்டதை எண்ணி வருந்தட்டும். எமனைக் கண்டு விட்டால் ஊர் முழுவதும் அச்சம், வாழும் வகை அறியாமல், போகும் பாதையில் புத்தி தடுமாறி எங்கெங்கோ அலைந்துவிட்டு, நோய்வாய்பட்டு உயிர் இழந்தான். முட்டாள்களே எத்தனை நோய்கள் உள்ளது என்று ஆராய்ச்சிகள் செய்துவிட்டு பலவகையான மருந்துகளையும் பலகாரம் சாப்பிடுவது போல் சாப்பிட்டு விட்டால் நோய்போய் விடும் என்று ஏமாந்து போய்விட்டாய். தான் ஏமாந்தது கூட தனக்கு தெரியாத ஒரு நிரந்தர ஏமாளிதான் குணமடையாத நோயாளி ஆவான். சத்தான மாத்திரைகள் போதும் என்பதற்காக சாப்பாட்டினை மறந்துபோன சாமர்த்திய சாலிகள்.

**மருந்தை உயிர் என்று கருதுகிறார்கள் நான் உயிரே மருந்தென்று கருதுகிறேன்.** சாப்பிடும் எந்த உணவிலும்

சத்து இல்லை. உயிர் சத்து மட்டுமே தான் உடலுக்குத்தேவைப்படும் ஒரே சத்து. இந்த உயிர் சத்து மற்றைய எல்லா சத்துக்களையும் கிரகிக்க வல்ல மஹா சக்தி ஆகும். உடலை காக்கவல்ல கடவுளாகியவன் இருக்கும் போது, கண்டவனும் இந்த உடலை தொடவும் சம்மதிக்கலாமா? என் சம்மதத்தைக் கேள்! உடல் உயிர்பொருளாக மாறும். சுக்கிலாதிகளால் தேகம் வந்து பூமியில் வீழ்ந்ததையும், உயிர் பொருளில்லாதவனின் உடல் பூமியில் செரித்து போகிறது, என்ற அப்பட்டமான உண்மையை அறியாமல் செத்துப் போனவனை எண்ணி வெட்கப்படுகிறேன். மருந்து இல்லாமல் வாழ முடியும், ஆனால் உயிர் இல்லாமல் வாழ முடியாது. மருந்தை உயிர் என்று கருதுகிறார்கள். மருத்துவமனைகள் என்ன நோயாளிகள் உறங்கும் தியான மண்டபங்கள். உடலை கூறுபோடுபவர்கள் என்ன கடவுளுக்குச் சமமா.

மக்களின் கருத்து. "மருந்து இல்லாமல் வாழ முடியாது மருந்தே உயிர்"/என்னுடைய கருத்து. "உயிர் இல்லாமல் வாழ முடியாது உயிரே மருந்து".

மருத்துவன் தன்னை காத்துக் கொள்ள தந்திரம் செய்கிறான், மந்திரங்கள் போல் ஓதுவான் சாகசக்காரன், படித்தவன் பாமரனிடம் பேசும் கொச்சை வார்த்தைகள். மாத்திரையை கொண்டு உயிர் பெறச் செய்ய முடியுமா? சாகும் உடம்பு சல்லாபத்துக்கு அழைத்தால் சாகும் உடம்பை சாகாமல் வாழும் தெரியுமா? பாசபந்தங்கள் பற்று தொலையாத வரை உயிர் உடலை விட்டு பிரியாது. ஏ நண்பா! என்னிடத்தில் அன்பு, பாசம், கருணை பற்றுதல் இல்லாத போது நீ எப்படி என்னிடத்தில் பழகுவாய். பாசபந்தங்கள் அற்றுப்போன ஒரு மரக்கட்டையை உன் மனைவியும் வெறுப்பாள். உணர்ச்சி எதுவும் இல்லாதவர் மரக்கட்டைக்கு சமம். பந்த பாசம் இல்லாதவனிடத்தில் உயிர் நிலைக்காது. தன் சரீரத்தில் உள்ள ஸ்மரனையாகிய உணர்ச்சியை குதூகலப்படுத்து. உணர்ச்சியை செத்துப்போக விடாதே. தன் உணர்ச்சி தன்னை எப்போதும் கெடுக்காது. தன் உணர்ச்சியை பிற ஒன்றின் மீது

பாய்ச்சுதல் கலவி ஆகும்.

சாகும் முன் தன் கணவனை மனைவி நினைத்தால் எளிமையாக காப்பாற்றி விடலாம். ஒரு பெண்ணின் உண்மையான அன்புக்கு கட்டுப்பட்டு அந்த ஜீவன் நிற்கும். அங்கேயே அப்படியே நிற்கும். ஒரு பெண் கணவனுக்கு விருப்பத்தை ஏற்படுத்தி, அவன் அன்பு உருவான பின் அடைக்கலம் புகுகிறாள். உயிர் திரவம் வற்றிப் போன முதியவனுக்கு மோகினி வந்து வலை வீசினாலும் மோகம் பிறப்பது அசாத்தியமாகும். எனவேதான், எளிமையாக பெண் வலைக்கு அகப்படுகிறான். மோக வாழ்க்கைக்கு தன்னை தயார் படுத்த முடியாத பட்சத்தில், நடைபிணமாக மாறி, சாவு எப்போது வரும் என்றும், எமன் எந்த பாதை வழியே வருவான் என்பதையும், ஆவலுடன் எதிர்பார்த்து, எமனையே கடவுளாக பாவித்து வாழ்ந்தவனை எண்ணி நான் வெட்கப்படுகிறேன். அப்படியானால் நான் காமக்கலையை வலியுறுத்துகிறேன் என்று எண்ணி விடாதீர்கள். "உயிர்கலை" என்பது "சாகாக்கலை" அதையே வலியுறுத்துகிறேன். ஏ தம்பி சின்ன பையா உனக்கு வயது 100 மட்டும் தான் ஆகிறது. 10,000 அல்ல கலங்க வேண்டாம். இந்திர கோபத்தால் கிழ தேகம் போய், பாலன் போல் ஆவாய் சம்மதம் சொல்லுகிறேன் உயிர் மீது ஆணை.

## 14. காலன் வணங்கும் கடவுள் "உயிர்"

உயிரை உயிரோடு இணைக்கும் போது, உருவாகும் உணர்ச்சி காம உணர்ச்சி ஆகும். உயிரையும் உணர்ச்சியையும் இணைத்து உடலோடு பொருத்துவது உயிர் உணர்ச்சி. அதற்காக கலவி, செய்தால் பாபம் என்று சொல்லவில்லை, தகுதி இல்லாத எவனும் அதை எண்ணிப் பார்ப்பது, முடவன் கொம்புத் தேனுக்கு ஆசை பட்டதுபோல் ஆகும். கலவிக்கு தயாராகும் சரீர தகுதியை எப்போதும், எந்த காலத்திலும் இழக்கக் கூடாது. ஆதியான சுக்கில சுரோனிதமே மூலப் பொருள். சுக்கிலமாகப் பட்டதுவே வேர் ஆகும். வேர் பலமாக இருக்கும் வரை எந்த புயலுக்கும் மரம் விழாது. வேர்

அழுகாத வரை மரமும் சாகாது. பல லட்சக்கணக்கான ஜீவனுக்கு அடைக்கலமாக இந்த தேகம் இருக்கும் வரை யாருக்கும், எப்போதும் சுமை இல்லை.

சுமைதாங்கியாகவும், வழிகாட்டியாகவும் எல்லா உயிரையும் தன்னுயிராக மதித்து வணங்குவது சம்மதக்கொள்கை என்றேன். உயிர் தான் எழுதிய "சம்மதம்", பிற உணர்ச்சிக்கு நீங்கள் வயப்படாமல், உங்களை நீங்கள் பாதுகாத்துக் கொள்ளுங்கள். யாரிடமும் உணர்ச்சியை விட்டுப் பழகாதீர்கள். அந்த உயிரைத்தவிர, **உங்கள் உயிர் உணர்ச்சியை எப்போதும் கவ்னத்தில் கொள்ளுங்கள்,** இதுவே "தியானம்". எப்போதும் தியானம் "உயிர்தான் கடவுள்", சரீரமே அதன் சன்னிதானம், அதை போற்றுதல் ஒன்றே யான் பெற்ற இன்பம், அதை வையகம் பெறட்டும் என்பதுவே வேண்டுதலாகும். எல்லா மதங்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட **உயிராகிய சம்மதத்தின் குரல் உலகமெங்கும் ஒலிக்கத் துவங்கி விட்டதை உணர்வீர்களாக.** நம்மில் "மாயை" என்பது எப்போதும் இல்லை. மயங்குகின்ற புத்தி இல்லாதவனிடம் மாயை வந்து எதைத்தான் செய்யும்.

சுத்த மாயை உற்ற நண்பன் ஆவான். ஊழ்வினை எல்லாம் உனக்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கி வைக்கும். **போகும் உயிரை பிடித்து நிறுத்தும் மஹாமந்திரம் உயிர்தான் கடவுள்.** "உயிர்" அதனை உணர்ச்சியின் வடிவமாக ஆராதனை செய்வோம். வாருங்கள். உயிரை தவிர வேறு ஒன்றை கடவுளாக பாவித்தல், செத்தவனை வைத்து சாமி கும்பிடுவதற்கு சமம். தன்னை சுற்றி உள்ளவர்களை உங்கள் மனதை முழுமையாக புரிந்து கொண்டது உங்கள் உயிர் மட்டும் தான். **நீங்கள் சிறிது அதை உற்று நோக்குங்கள்.** உங்களுக்குள் அது ஆயிரம் சித்துக்கள் செய்யும். **உயிர் தன்னைத்தானே எப்போது வெறுக்குமோ, அப்போது அந்த கணமே அதன் எதிரில் எமன் வந்து நிற்பான். எமன் அறியாமல் உயிர் போகாது, உயிர் அறியாமல் எமன் வருவது இல்லை. உயிர் உடலிடம் வாழ**

வழி இல்லாத சூழ்நிலையில், தன்னை அழைத்துச் செல்ல எமனுக்கு அழைப்பு விடுக்கிறது, செல்வதற்கு தயாராக உள்ள உயிரை எமன் அழைத்துச் செல்கிறான்.

உயிருக்குத் தேவையான உயிர் பொருள் உடலில் இல்லாத போது இந்த உடலால் உயிராகிய கடவுளை ஆராதிக்க இயலவில்லை. இயலாமையாலே மரணம்.தகுதியான உயிர்ச்சத்து உடலில் இல்லாததாலே உயிர் நிலைக்கின்ற தகுதியை, உடல் இழந்து போகிறது. உன்னுடைய குழந்தையானாலும், நீ அதனிடத்தில் பற்றையும், பாசத்தையும் இழக்கும் போது அந்த குழந்தை பாசத்திற்காக ஏங்க துவங்கி விடுகிறது. அந்த ஏக்க காலம், இறுதி நேர ஏக்க மூச்சு எனப்படும். உயிரின் ஏக்கத்தையும், வருத்தத்தையும் போக்கவே எமன் வந்து நிற்கிறான். இவ்வுலகில் எல்லா உயிர்களிடத்தும் எமனுக்கு இருக்கும் பாசம் யாருக்கும் புரியவில்லை. அவனுடைய பாசமாகிய கயிறுக்கு கட்டுப்படாத எந்த உயிரும் இல்லை. அப்படியானால் எமனுக்கு உயிராகிய கடவுளிடத்தில் எவ்வளவு பக்தி இருக்கும் என்று நீங்களே சற்று எண்ணிப்பாருங்கள். இந்த உண்மை உலகுக்கு எப்போதும் புரியாது. புரியாத நிலையிலும், உயிர்தான் கடவுள். என்னே நின் கருணை. எனக்குச் சொன்னது, "உயிர்தான் கடவுள்" என்ற ஒரு மந்திரத்தை மட்டுமே. யாரும் காண்பதற்கரிய தேவர்களும், ரிஷிகளும் கூட கண்டிராத பெரிய நூலினை நான் மட்டும் திறந்து பார்த்தேன், அந்த பெரிய நூலில் எழுதப்பட்டிருந்த ரகசிய வார்த்தை உயிர்தான் கடவுள் என்பது மட்டும் தான். அதைப் பார்த்தவுடன் பதறிப் போனேன். பைத்தியம் போல் ஆனேன். இவ்வளவு காலமும் எதை எதையோ கடவுள் என்றும், உண்மை என்றும், ஆசாண் என்றும், "இறுமார்ந்து" இருந்தேன். அந்த இறுமாப்பில் இடி விழுந்து போனது, என் அறியாமை. சொல்லில் அடங்காத சோகம் கொண்டேன் இவ்வளவு காலம் விழலுக்கு இறைத்த நீரை எல்லாம் எண்ணி வருத்தமானேன். விழல் ஒரு நாள் பலன் தரும் என நம்பியே மோசம் போனேன். "உயிர்தான் கடவுள்"

என்று சொன்ன அந்த நாள் தொட்டு இந்த நாள் வரையிலும் இதற்காகவே ஜென்மம் முழுவதையும் தருகிறேன். உயிர் மௌனமாகவே இருந்து எல்லா விளையாட்டையும் விளையாடிக் கொண்டு இருக்கிறது. அந்த உண்மையை இப்போதுதான் என் மனம் கிரகித்தது. உலகத்தில் எத்தனையோ அதிசயங்கள் நடப்பதாக கேள்விபட்டது உண்டு, எனக்குள்ளே இருக்கும் இவ்வளவு பெரிய ரகசியத்தை எண்ணி வியந்து போகிறேன். உண்மையில் **இந்நிலையில் எல்லோரும் பரமானந்தம் அடைவர்.** எள்ளை கசக்க எண்ணெய் வரும், பாலை கசக்க வெண்ணை வரும், உடலை கசக்க உணர்ச்சி வரும், உணர்ச்சியை கசக்க உயிர் வரும், உயிரை கசக்க கடவுள் தெரிவான். இருப்பது மெய் என்றால் பார்ப்பது உறுதி, பார்ப்பது உறுதி என்றால் என் சம்மதத்தைக் கேள். "உயிர்தான் அந்த கடவுள்."

## 15. விதியை நம்பி விதித்தவனை மறந்தேன்?

உலக மக்கள் அனைவருக்கும் தான் அரசனாக வேண்டும் என்ற ஆசை உள்ளது. அதில் யாரோ ஒருவன் மட்டும் அரசனாக ஆகிவிடுவான். மற்ற அனைவரும் அரசனாக தகுதி இல்லாதவர்கள் அல்ல. அதுதான் காலத்தின் கட்டாயம். தகுதி இல்லாதவன் கூட அரசனாகுவான், அரசாளுவான். தரங்கெட்டவனையும் உயர்ந்தவனாக்குகிறாய், உயர்ந்தவனை தரங்கெட்டவனாக்குகிறாய், இதனால் அனைவரும் குழப்பம் அடைந்து எல்லாம் விதியின் விளையாட்டு என்று கருதுகிறார்கள். விதியை எண்ணி அஞ்சுகிறார்கள். கிரஹங்கள் உலகை ஆள்வதாக கற்பனையில் இருக்கிறார்கள். **விதியினிடத்தில் உள்ள நம்பிக்கை விதித்தவனிடத்தில் இருப்பது இல்லை.** தான் செய்த பாபங்கள் தொலையவே தானங்கள் செய்கிறார்கள். இத்தனை செய்தும் நேரம் காலம் பார்த்தும் வாழ்பவர்கள் வாழ்வில் வளர்ச்சி பெறாமல், மேலும் மேலும் வேதனையும், சோதனையும், கலக்கமும், கஷ்டமும் அதிகரிக்க, அதிகரிக்க மேல்மேலும் அந்த விதியை பற்றி கருத்துக்களையே கேட்கிறார்கள். வேறு போக்கிடம் புரியாமல் அலைகிறார்கள். இவர்கள் நம்பிக்கையில் இருப்பது

விதிமட்டும் தான், எனவே விதி இவரிடம் விளையாடிப் பார்க்கிறது. தான் செய்வது சரியா தவறா என தீர்மானிக்க இயலாதவன் யார் மீதும் நம்பிக்கை இல்லாதவன், ஏதோ ஒன்றின் மீது நம்பிக்கை வைத்து வாழ்கிறான். அதிஷ்டம் எப்போது வரும் என்று ஏங்குகிறார்கள். எல்லாம் உன் இஷ்டம் என்பதை அறியாத மூடர்கள். அது + இஷ்டம் என்பதை அறியாத மூடர்கள், அது + இஷ்டம் = அதிஷ்டம், உன் இஷ்டம் அல்ல என்பதுவே அதன் பொருள் ஆகும். **விதியின் விளையாட்டில் கடைசி ஆட்டம் மரணம் மட்டும் தான்.**

தான் நிலையாகவும், சந்தோஷமாகவும் வாழ வேண்டும் என்ற விருப்பமே சோதிடத்தில் விருப்பத்தை தூண்டுவதாக உள்ளது. 'விதி' என்பது நிலை இல்லாமையை உணராத மனிதனின் எதிர்பார்ப்புக்கு மாறாக சங்கடங்களை ஏற்படுத்துகிறது. தனக்கு ஏற்பட இருக்கும் ஆபத்துகளை முன் கூட்டியே உணர்ந்து கொண்டால் சிறிதளவாவது ஜாக்கிரதையுடனும், முன்னெச்சரிக்கையுடனும் இருக்கலாமே என்று எண்ணுவது தவறு ஒன்றும் இல்லை. வரும் முன் காப்பது புத்திசாலியின் செயல்தான். சூழலை உணர வேண்டியது மிகவும் அவசியமே. சூழ்நிலையான ஊழ்நிலையை மாற்றி அமைக்கும் சக்தி விதிக்கு இல்லை. நவக்கிரகங்களின் விருப்பத்துக்குட்பட்ட வாழ்க்கையை இவர்கள் வாழ்வதாகவும், எனவே தனது விருப்பமும் அதன் விருப்பத்துக்கு ஒத்ததாய் அமையும் போது, வெற்றியை அடையலாம் என்பதுவும் இவர்களின் நம்பிக்கை. நவக்கிரகங்களின் ஒன்பது துவாரங்களும் மனிதன் உடலில் இருப்பதாகவும், நவதுவாரங்களில் ஏதோ ஒரு துவாரத்தின் வழியாகத்தான் உயிர் செல்லும், என்ற அச்சத்திலும், பயத்திலும் உறைந்து போய் கிடக்கிறான். பயம் வேறு பக்தி வேறு தெரியுமா?

சூழலையும் தன்னுடைய நிலையையும் ஆய்வு செய்ய மனிதனுக்கு ஏதோ ஒரு கரு தேவைப்படுகிறது, அவ்வளவுதான். அந்த கரு எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். உதாரணமாக, குறி சொல்லுதல், பிரசண்ணம் பார்த்தல், ஜாதக பலன், கைரேகை, தொடுகுறி, உடுக்கை

அடித்தல், சாமியிடம் உத்தரவு கேட்டல் ஆகியன ஆகும். இறை நிலையில் நிற்பவர்க்கு அல்லால், மற்றவர்க்கு சூழ்நிலையை உணரும் சக்தி இல்லை. தேவையற்ற சிந்தனைகளை மனதில் கொண்டு நினைப்பவருக்கு, தேவையற்ற சூழல்கள் உருவாகும். தேவையற்றவர்களேயே தரிசிப்பார்கள், தேவையற்ற வார்த்தைகள் பேசுவர், தேவையற்ற செயல் நடக்கும், பாதிப்பு நிகழும். அடிப்படையில் சிந்தனையில் உள்ள ஏதோ ஒரு குழப்பமே பல சிக்கல்களை உருவாக்குகிறது. இறை உணர்வை சிந்தை முழுமையாக பெறும் போது, அங்கு உள்ள குழப்பம் தீர்ந்து போகிறது. சிந்தனைக்கு தெளிவு கிடைத்த மாத்திரத்தில், வாழ்க்கையில் சிக்கல்கள் கழன்று விடுகிறது. **சிந்தனை மாறும் போது சூழ்நிலையும் மாறும்.** அநித்திய வஸ்துக்களை நித்திய வஸ்து ஆளுவதே ஒழுங்கான விதி. நித்திய வஸ்துவை அநித்திய வஸ்து ஆளும் போது, கெட்ட சூழ்நிலை என்று உணர வேண்டும். அப்போது மிரட்டும், விரட்டும் பயம் கொள்ளச் செய்யும், வெறுப்பு, கவலை, அழுகை, கொலை செய்யத் தூண்டுதல், பஞ்சமாபாதகம் செய்ய தன்னை தூண்டுதல், ஆகியன செய்விக்கும். நித்திய வஸ்துவை நித்திய வஸ்துவே ஆளும் போது விதியை கடந்த நிலை எனவும், நம்மை கண்டு சூழ்நிலை அஞ்சும் வண்ணமும், மாற்றும் வண்ணமும் உணரலாம் என்றும் சொல்லுகிறேன். உங்களுடைய சூழலை நீங்கள் மட்டுமே உணர முடியும். அதற்கு துணை தேடுவது முட்டாள்தனம். **உங்களுடைய கர்மாக்களுக்கு நீங்களே கர்த்தாவாக இருக்கிறீர்கள்.** ஆகவே கர்த்தாவே எல்லா காரியங்களும் செய்ய வேண்டும். அவரவர் பசிக்காக அவரவர் சாப்பிட வேண்டும். **இன்பத்தில் ஆரம்பம் துன்பத்தில் முடிவு அதுதான் விதி.** துன்பத்தில் ஆரம்பம் இன்பத்தில் முடிவு இதுதான் "சம்மத வாழ்க்கை".

ஏதோ மனதிருப்திக்காக செய்யும் ஒரு சில காரியங்கள், சிறிது நேரம் எல்லாம் குணமாகிவிட்டது போல ப்ரமையை தான் ஏற்படுத்துமே ஒழிய, நிரந்தர தீர்வு பெற சிந்தனையில் இறை உணர்வு பெற வேண்டும். அது செயல்களிலும் இறை

உணர்வு வழியும் வண்ணம் இருக்க வேண்டும். அப்போது சூரியனை கண்ட பனி போல் எல்லாம் விலகிப் போகும். கடவுளை நினைக்க வேண்டும் என்பதற்காகத்தான் கடவுள் எல்லா கஷ்டஙகளையும் தருகிறார், ஆகவே அவனை தொழுதால் இதிலிருந்து விடுபடலாம், என்ற அச்சம் உண்டாகும். பக்தி பயமாக இருக்கும் வரை பலிதமாகாது. ஆதார சக்தியை எதார்த்தமாக பழகிக்கொண்டு வாழ்வியலோடு அதனை இணைத்துக் கொண்டு வாழ்பவர்க்கு விதி என்பது இல்லை. இதே ஆதார சக்தியை எதார்த்தமாகப் பழகிக் கொண்டுத் தன் உடலோடு அதனை இணைத்துக் கொண்டும் வாழ்தல் "சாகாக்கலை", இப்படிதான் வாழ வேண்டும் என்ற கலையை உயிராகிய கடவுள் எனக்குச் சொன்னார்.

## 16. உயிரெனும் ஆயுதம்

சிந்தனையில் சிக்கல் உள்ளவன், கடவுளிடம் எப்படி பழகுகிறான் என்பதை சொல்ல விளக்கம் தருகிறேன். குழவி கல்லை போல் குழந்தை விளையாடிக் கொண்டு, படுத்துக் கிடக்க, அந்த குழந்தையிடம் பாசமுடன், பக்தியும் இல்லாமல் அந்த குழந்தையை ஆட்டுக்கல்லை தூக்குவதாக எண்ணிக் கொண்டு முக்கிக் கொண்டும், முனகிக் கொண்டும், தூக்குபவரின் முகத்தில் உள்ள நெற்றி சுருக்கத்தை அந்த குழந்தை பார்த்து அலற ஆரம்பித்துவிடும். அழுகையை அடங்குவதற்காக, அவர் அந்த இடத்தை விட்டு வெளியேற வேண்டி வரும், இது தவறு. முதலில் குழந்தையிடம் சிரித்து பழகி, விளையாட்டு காட்டி, அதன் போக்கு என்ன என்பதை நன்கு அறிந்து, குழந்தையிடம், குழந்தையாகவே பழகி, குழந்தையே நம்மை பார்த்து குழந்தை என்று எண்ணும் விதத்தில் பழகிய பின்பு, அதை பூப்போல எண்ணி தூக்கி திரிபவர்களுக்கு, கீழே இறக்கிவிட்டால் ஆபத்து ஆகும். உன்னை விட்டு ஒரு கனமும் அகலாது உன்னை அது (உயிர்). குழந்தை என்று பாவிக்கும் வரை உனக்கு எந்த குறையும் ஏற்படாது. எனவே இதனிடம் நீ பழக ஆரம்பிக்கும் முன் உன்னுடைய எல்லா கோமாளித் தனத்தையும் மூட்டை கட்டி போட்டு விடவேண்டும். அந்த குழந்தையை (உயிரை)

பயமுறுத்தும் விதமாக ஏதாவது வேஷம் கட்டிக் கொண்டு அதன் எதிரில் நின்றால் மோசம் போவார். குழந்தையின் முகத்தை கண்டால் கோடி துக்கம் மறையும் கோடி பாபங்கள் மறையும். தெய்வ காரியங்களாக இருந்தாலும் உலக காரியங்களாக இருந்தாலும் சரி, ஆர்பாட்டம் சிறிதும் இல்லாமல் மிகவும் அமைதியாக செய்தால் மட்டுமே அது சித்தியாகும். **ஆர்ப்பாட்டங்களால் அழிவு ஏற்படும், அதை "திருஷ்டி" ஏற்படும் என்று சொல்லுவர்.** ஆர்பாட்டங்களில் தோன்றும் அலங்கோலமான சூழல்கள். உங்களை மற்றவர் விரும்பும் விதமாக நீங்கள் பழக வேண்டும். பிறர் விருப்பம் என்ன என்பதை அறிந்த பின்பு மட்டுமே பேச வேண்டும். பிறர் விருப்பத்துக்கு மாறாக நடக்கக் கூடாது. நமக்கு விருப்பம் இல்லாத சூழ்நிலையில் அங்கு நிற்கக் கூடாது. **விருப்பம் ஒத்தவரோடு பழகு. ஒத்தது செய்வான் உயிர்வாழ்வான் மற்றவர் எல்லாம் செத்தாரில் வைக்கப்படும்.** நாளைய சிந்தனையை மனதில் கொண்டு, இன்று ஒன்று செய்வதுவே பிழைக்கும் வழி. பாபத்தை நினைக்கச் சொல்லி எந்த சக்தி தன்னை தூண்டுகிறதோ, அதே சக்திதான் துன்பத்தையும் தருகிறது தாராளமாக. அதே சக்திதான் பாபத்தைச் செய்ய சொல்லி தன்னை தூண்டுகிறது. இந்த கர்மாக்களை செய்பவன் பாவி ஆகிறான். இதுவே வேடிக்கையான விதியின் விபரீத செயல்கள், வெறும் கயிற்றை கண்டே படைகள் அஞ்சி ஓடினால், பாம்பை கண்டால் பரலோகம் போய்விடும். விதி துவக்கத்தில் விதித்தவனுக்கு தொடர்பு உண்டு. விதிமுடியும் போது விதித்தவனுக்கு எந்த தொடர்பும் இல்லை. விதி என்பது செத்த பாம்புக்கு சமம்.

மேலும் இடையில் இவன் தன்னிச்சைபடி சர்வ சுதந்திரமாக வாழவேண்டிய காலங்களில், எல்லாம் இல்லாத விதியை எண்ணி அழுது புலம்புவார்கள், உண்மையான இந்த அச்சம் சதிதானே ஒழிய விதி அல்ல. மதி இல்லாதான் சூழலை சதி என்று எண்ணி விதி தேவதைகளுக்கு விரதம் இருக்கிறான். கல்யாணங்கள் கால்விலங்கு, குழந்தைகளோ கைவிலங்கு, கடனோ கழுத்து விலங்கு, சொந்தங்களோ சோக விலங்காக

தன்னைதானே மீளமுடியாத சிறையில் வைத்துக் கொண்டவர், தான் மரணம் ஆவது ஒன்றினையே விடுதலை நாள் என்று எண்ணுகிறார்கள். அனைவரையும் காப்பவன் "நீ" தான் என்று எண்ணிக்கொண்டு, உனக்கு நீயே வைத்துக் கொண்ட சிறைவாசம். நீ இல்லை என்றால் அனைவரும் அனாதையாகிவிடுவார்கள் என்ற உன் எண்ணம் தான் உன்னை ஆட்டி படைத்துக் கொண்டு இருக்கும் விதி, உண்மையில் நீயே உன்னை எண்ணிப்பார் நீயே ஒரு அனாதைதான். ஒரு அனாதையானவன் நாயை எடுத்து வளர்ப்பதற்கு சமானமாகும். இவ்வுறவுகள் யாவும் உயிராகிய கடவுளை மதிக்காதவன் விதியின் காலிலே வதை பட்டழிகிறார்கள். ஓடுபவனை மட்டுமே துரத்துகிறது விதி. அது ஓடும்வரை துரத்தும். ஓடுவதற்கு எவ்வளவு விருப்பமோ, அதை விட உன்னை துரத்துவதற்கு விருப்பம் அதிகம். அந்த விதி உன் நிழல்தான் என்பதை நீ எப்போது அறிவாயோ அப்போது தான் இந்த அச்சத்தில் இருந்து விடுதலை பெறுவாய். பயத்திலே இருதயங்கள் உறைந்து போனது எத்தனையோ கோடி. காற்றுப்பையை அளவுக்கு அதிகமாக ஊதும் போது வெடிப்பது போல, மனதில் இன்பமும், துன்பமும் அளவு கடக்கும் போது, இருதயம் வெடித்துச் சிதறுகிறது. இன்பம் அதிகமாகும் போது அளவுக்கு அதிகமாக விரியும். துன்பம் அதிகமாகும் போது அளவுக்கதிகமாக சுருங்கும். (இது இரத்த தாரைகளில் இரத்த உறை ஏற்பட காரணம் இதுவென்று அறிக) விதி என்பது ஒருவனை விஷம் கொடுத்துதான் சாகடிக்க வேண்டும், என்பது இல்லை. வெல்லத்தை கொடுத்தே கொன்றுவிடும். சீதபேதி ஆகும் போது குழந்தைக்கு வெல்லத்தை மட்டுமே கொடுத்து வந்தால், எந்த வைத்தியமும் செல்லுபடி ஆகாமல் ரத்தபேதி கண்டு இறந்து போகும் அதுபோல், மனதில் எந்த சலனமும் இல்லாமல் இருப்பவர்களுக்கு இன்பம் துன்பம் இரண்டும் ஒன்றுதான். பரமானந்தம் அடைந்தவன், எதை கண்டும் பதறாமல் சிலைபோல் அப்படியே நிற்பான். காலங்களைக் கடந்தும் நிற்பான். உயிரை கடவுளாக பாவிப்பவர்க்கு எல்லா காலங்களுக்கும் ஏற்ற உடல், எல்லா சூழ்நிலைக்கும் ஏற்ற

மனம், எல்லா தட்ப வெப்பங்களுக்கும் ஏற்ற உணவு, எல்லா குணநலத்துடன் இனிமையாக பழகும் சுபாவம், எந்த திசைகளிலும் தன் புத்தி மட்டும் மாறாமல் "உயிர்தான் கடவுள்" என்று பாவிப்பவர்கள் வாழ்வில் எல்லா நலன்களையும் பெறுவார்கள். சிலைகள் இல்லாத கோவில் உண்டு, கோயில் இல்லாத ஊரும் உண்டு. "உயிர்" இல்லாத இடமே இல்லை. உயிர்களாலே நிறைந்த பூமியில் "உயிர் ஒன்றே கடவுள்". திரிகாலமும் இதுவே உண்மை, விதி உன்னை கண்டு கையெடுத்து வணங்கட்டும். விதித்தவன் உன்னை ஆளட்டும்.

## 17. "மனோபலம் உடையவனுக்கு மகத்தான வெற்றி"

"உயிர்தான் கடவுள்" என்று ஒருமுறை உன் வாழ்க்கையில் சொல்லி உயிரை போற்றுபவர்க்கு உடல் உறுதியாகும். உடல் உறுதி உடையவர் காரியத்தில் வெற்றி உறுதி ஆகும். உலகில் உடல் உறுதியுடன் நிற்க முடியும். எந்த மன சஞ்சலமும் இல்லாமல் சலனம் இல்லாமல் **மனம் சிலை போல் நிற்கும்.** அந்த சிலைக்குள்ளே உயிர் நிலைத்து உள்ளதை கண்டு உலகம் உன் வசமாகும். எந்த நிலையிலும் உயிருடன் ஒத்து நின்று உலகத்துடன் பழக கற்றுக் கொடுக்கும். வெறும்ட ஜடமாய் நின்று ஜடத்துடன் பழகுபவர், உயிராகிய உன்னைக் கண்டால் அசந்து போவார். மாட்டை வண்டியில் பூட்டி ஓட்டுவதும், நாயை வாசலில் கட்டி போடுவதும், பசுவை தொழுவத்தில் கட்டி பால் கறத்தலும், காளையை ஏறுபூட்டி சேற்றில் ஓட்டுதலும், எப்படி குற்றம் இல்லையோ, அப்படித்தான். காந்தம் தான் இரும்பை ஈர்க்கிறது, இதுவே உண்மை. உயிர் பலத்தால் உலகை வெல்லுவாய் மனிதா. உனது எண்ணங்களிலும், பார்வையிலும், பழக்க வ்ழக்கங்களிலும் வித்தியாசத்தை ஏற்படுத்திக் கொள். எப்போதும் உன்னுடைய சூழ்நிலை அறிந்து கொண்டே உன்னுடன் பழகுகிறது அந்த விதி. உன்னுடைய மாற்றத்தை பார்த்து பக்குவமாக நடந்து கொள்ள அது முயற்சிக்கட்டும். விதியின் விருப்பத்தைப் பார்த்து

அறிந்து உன் விருப்பத்தை மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்காது. உயிரைத் தவிர வேறு கடவுள் இல்லை என்பதை உணர்ந்து உயிருடன் பழகு. உயிருடன் வாழக் கற்றுக்கொள். உயிருடன் எப்போதுமே யதார்த்தமாக பழகு, உண்ணும் உணவிலும், அருந்தும் நீரிலும் சுவாசிக்கும் காற்றிலும், பழகும் மனிதர்களிடம் கூட உயிருக்கு விரோதமானது என்றால் சற்றே விலகி நில்லு. மீறினால் அதுவே விஷமம், விஷம் ஆகும். உண்ணும் உணவில் உயிர் சுவை இருப்பது மிகவும் அவசிய கொள்கை. உயிருக்கு விரோதமான ஒன்றினை அமிர்தமே ஆனாலும் அதை உடல் ஏற்கும் போது நோய் ஏற்படுகிறது. கடவுளால் தீண்டத்தகாத பொருள் ஜடப் பொருள். இந்த ஜடப்பொருளை உயிரின் சம்மதக் கொள்கைக்கு விரோதமாக நடப்பவர்களின் சோகங்களுக்கு எல்லையே இல்லை, முடிவும் இல்லை. ஒரு நூலில் சேர்க்கப்பட்டுள்ள, பற்பல மணிகளை கோர்த்து அதில் ஒரு முடிச்சு போட்டதால் மாலையானது, அந்த முடிச்சு எப்போது அவிழுமோ, அப்போது மணிகள் எல்லாம் சிதறிப் போய் விடும், செய்திகளாக ஊர் முழுவதும். அந்த முடிச்சுக்கு பெயர்தான் "உயிர் முடிச்சு" என்பர். தொப்புள் கொடி உயிராகிய அந்த முடிச்சு அவிழாத வரை சேர்க்கப்பட்டுள்ள மணிகள் மாலை என்று அழைக்கப்படும். அறுந்து போன மாலையை, உதிர்ந்து போன பூக்களாக கருதி தெருவில் வீசிக்கொண்டே செல்கிறார்கள். இதை எடுப்பதும் கோர்ப்பதும் இயலாமல் போகின்றது. மணிகளின் பாரத்தை குறைத்து நூலின் எடையை அதிகரிக்க செய்ய வேண்டிய முயற்சி மிகவும் முக்கியமானது ஆகும். தந்தையாலே நீ பிறந்ததால் படைப்புக்கு ஆதியான பிரம்மா உன் தந்தைதான். இதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. உனக்கும் தாய்க்கும் தொப்புள் கொடி இடைவெளி தூரம் தான், இந்த தாய் தந்தைக்கும் உனக்கும் உண்டான நெருக்கம் உயிரின் முழு சங்கமத்தால் உண்டான நெருக்கம். தாய் தந்தை இருவர்பால் குழந்தையிடம் போடப்பட்ட முடிச்சு, ஒன்றையே பார்த்தபடி இருவரையும் நிற்க செய்தது. சுக்கில சுரோனிதமாக இணைந்து பிண்ணிய உயிர் முடிச்சு தான் தொப்புள் கொடி என்பது. கட்டி

பிடித்து படுத்தால் குழந்தை பிறக்கும் என்பது உறுதி இல்லை. இருவரும் ஒருவருக்கொருவர் முழுமையாக அன்பு உறுக்கொண்டு வாழ்ந்தபோதும் உறுதி இல்லை. ஒருவரை ஒருவர் விரோதித்தும், வெறுத்தும், வாழ விருப்பம் அற்று ஒதுங்கி வாழ்ந்து வந்தாலும் கூட உயிராகிய கடவுளுக்கு இதில் "சம்மதம்" உண்டு என்றபோது, அவருக்கு குழந்தை பிறந்தே தீரும் இவ்வுலகில் "உயிரின் சம்மதம்" ஒன்றே உலகை வெல்லும் ஒரு ஆயுதம். உடல் பலத்தைக் கொண்டு உயிரினை படைக்க இயலாது. உயிர் பலத்தை கொண்டுதான் உடலை உருவாக்கி உள்ளதை உணர்வீர்களாக. மணிகள் கயிற்றில் தொங்கவில்லை, முடிச்சில் தொங்குகிறது. முடிச்சுதான் அவிழ வேண்டும் என்பது அல்ல. நூல் எங்கு வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் அறுந்து சிதறலாம். இதற்கு விதி காரணம் அல்ல. காரணம் நூலைவிட மணிகள் பலமாக இருப்பதுவே. நூலைவிட மணிகளை போஷிப்பதுவே, மதிப்பதுவே, போற்றுவதுவே நினைப்பதுவே. உடலை இளைத்து உயிரை பலப்படுத்து. ஊனை உருக்கி உள் ஒளி பெருக்கி என்பதன் பொருள் இதுதான். (நூல்-உயிர், மணி-உடல்)

உள்ஒளி என்றால் "உயிர்":நாதம் + விந்து = ஒளிநாதமான உயிரும் + விந்துவும் சேர்ந்தால் = ஜோதிமயமாவாய் அதாவது சாகாநிலை அடைவாய் என்பதுவே அதன் பொருள். ஊனை உருவாக்குவது எப்படி? எனில் உயிர் பொருளை உடலில் பெருக்குவது மட்டுமே. உன்னை முதலில் உருக்கிவிட்டு பிறகு, உள் ஒளியை பெருக்குவது முடியாது. இரண்டும் ஏக காலங்களில் நடக்கும். சூரியோதயமும் சந்திர மோட்சமும் போல. நான் எதையுமே ஒரு பொருட்டாகவும் எண்ணுவது இல்லை ஏன் தெரியுமா, நீதான் என் உயிர். நானே நானாக இல்லாது போனேன். நான் மட்டும் இங்கே தனித்து இருந்து என்ன தான் செய்வேன். எல்லோரும் என் உயிராகிய கடவுள் என்றேன். ஆதி அல்ல அந்தமல்ல. உயிர்தான் ஒன்றே கடவுள். பிறப்பு அல்ல, இறப்பு அல்ல உயிர் ஒன்றே கடவுள். பெரியது அல்ல சிறியது அல்ல எதார்த்தமான உயிர் அது ஒன்றே

கடவுள். அந்த கடவுளுக்கு விருப்பமான காதலி நான் மட்டும் தான். "உயிர்தான் கடவுள்."

## 18. உயிரே அனைத்துக்கும் மூலம்

உயிர் வாழ்க, உலகமெல்லாம் வாழ்க, மண்ணில் நல்லது உயிர் வாழ்க, எங்குமான தெய்வம் வாழ்க. உரு அருவாய் நின்ற தெய்வம், "உயிர் ஒன்றே கடவுள்" உத்தமனார் எனக்குச் சொன்ன மறையே "நீ வாழ்க, மந்திர மலையது, மந்திர கடலது, மூன்று எழுத்து உயிர்" வாழ்க உடலினுள் சூழ்க. பாப இருள் என்னை சூழா வண்ணம் பாவிப்பர் உயிர்தான் எதிரிட்டவர் என்று. **உயிருக்கு உயிராக பழகுபவர் அல்லால் மற்றவர்க்கு "சாகாநிலை" அரிது என்று உணர்த்திய குருவே வாழ்க.** எளியவன் கையில் அகப்பட்ட பொக்கிஷமே, "உயிராகிய பொருளே" உன் கட்டளை என்ன? சம்மதமே நீ சொல்லு. அந்தமில்லா வாழ்வே, சுத்த சம்மதமே, தெய்வமே. நீ என்னுடைய உடம்பையே உன் உறைவிடமாகக் கொண்ட இயற்கையே, "உயிரே கடவுள்" நீ வாழ்க. உயிரினுள் உயிர் பிறக்க எண்ணுவார். அவர் உயிருடன் மட்டும் உயிர் விட்டு பழகுவர் சம்மதத்தார் என்றும் வாழ்க. அருள் நிறைய பொருள் நிறையும், பொருள்நிறைய துன்பம் அகலும், துன்பம் அகன்ற மரணமில்லா பெருவாழ்வு. உயிர் பொருளை உதாசீனப்படுத்துபவர் உருகுலைந்து உயிர் இழப்பர். தன்னைத்தானே தாங்கிக் கொள்ளும் கலியுக தெய்வம் உயிர் பரிபூரணமாகவும், ஆயுள் காலங்களைக் கடந்தும் ஆனந்தமான வாழ்வும் நல்கும் என் உயிரே வள்ளலே வாழ்க. முதியவனுக்கு இளமை உண்டு. தீராத நோய்களை எல்லாம் தீர்ப்பதுவும் உண்டு. வாழ அறியாதவரை வாழ்விக்க வந்த உயிரே நீ வாழ்க. தன் உயிர் தந்து என் உயிர் காக்கும் கடவுளே வாழ்க. உறக்கமதை தவமாக்க எனக்கு மட்டும் சொன்ன எந்தையே உயிராகிய தெய்வமே வாழ்க.

உயிரை விட்டு நிற்கும் கடவுள் இல்லை. கடவுளை விட்டு உயிர் தனித்து நிற்கவும் இல்லை. உயிரே கடவுளாய் நிற்பதுவும், தேகமதில் ஓர் உயிரே அதன் ஓர் அணு அதனுள்

பலகோடிதேகமாக நிற்கும். எங்கும் உள்ளது ஓர் உயிரே. தனித்து ஒருவர்க்கும் உயிர் என்ற ஒன்று எப்போதும் இல்லை. எங்கேயும் இல்லை. விஸ்வ பிரபஞ்சங்கள் முழுவதிலும் நிறைந்த என் ஓர் உயிரே, உயிர் என்ற ஓர் நூலின் அடியில் தொங்கும் கோடான கோடி மணிகள், நன்றியை மறந்த மணிகள் எல்லாம் உதிர்ந்து போச்சு. எப்போதும் நூல் இழைக்கு மோசம் இல்லை. உடலில் உயிர் அது காற்றுபோல் உள்ளது என்றும் வெளியேறிப் போகும் என்றல்லவா கற்பனையில் உளறினேன். என்னிடத்தில் நீ வந்து சொன்னது குழ குழப்பாகவும் பசைபோல் உள்ளது. உயிர் என்ற ரகசியத்தை எனக்குச் சொன்ன உயிராகிய கடவுளே. பதினாறு போல அறுபதை ஆக்க வகையது சொன்ன கடவுளே வாழ்க. அறுபதிலே நிரம்பி வழிந்தால், பதினாறுதானே என்று உரைத்த இறைவனே உயிரே நீ வாழ்க. சாண் உயிர் உறுப்பே என் சாண் உடம்புக்கு அஸ்திவாரம் என்றாயே. அஸ்திவாரம் தளர்ந்து போனால் உடல் தளர்ந்து போச்சு என்றும், காரணத்தைச் சொன்ன கடவுளே நீ வாழ்க. உயிரை மயிர் என்று எண்ணி வெட்டி எறிந்தவரை விறகோடு சேர்த்து வைத்து எரிக்கிறார்கள் என்றாய், உயிர் சத்து இழந்த, இறந்தது ஆகும். நொந்து தளர்ந்து வீழ்ந்தது, மண்ணில். கற்றது ஒன்று, “உயிர்கலை” மட்டும். “உயிர் கலையாய் ஓதுதல்” வேதம் என்றாயே நீ. சுயசிந்தனை இல்லாமல் வீண் விரயம் செய்தாரை நோய்கள் சூழும் வகையது என்றாயே கடவுளே. மாமிச தேகம் போய் சுக்கில தேகமாய் மின்னுமடா தேகம், நட்சத்திரம் போலே கண்பார்வையாமே. உள்ளோடும் சுக்லம் கண்களில் தெரியும். ரத்த ஓட்டம் மேனியில் ஓடுவதை பிறர் காண்பர், நமக்குள்ளேயே நின்று நம்மை காக்கிறது. அதனுக்குள்ளேயே நாம் இருப்போம் வருகிறீர்களா?

நமனை அஞ்சோம், உயிரை கொடுத்து உயிரிடம் பழகுபவரின் உடல் அழியா வண்ணம் உயிர் நம்மை காக்கும். உயிருக்குள் சரீரம் ஒளிந்து கிடப்பது பல்லாயிரம் ஆண்டுகள் உயிரினுள் ஒளியாத தேகம் எப்படி ஒளியாகும். இந்த பூமியை விட்டு ஒழிந்து போகாமல் உனக்குள்ளேயே உயிருக்கு

கட்டுப்பட்டு நில்லு. உன்னை வெல்ல ஒருவரும் இல்லை. உன்னை வெல்லும் ஆயுதம் எங்கும் இல்லை. நீயே அனைத்தையும் வெல்லும் அற்புத சக்தி, நீயே அனைத்தையும் காக்க வல்ல சக்தியும் ஆவாய். உனக்குள்ளேயே நின்று உன்னையே நீ நோக்கினாய், உயிருடன் உன் அன்பு அங்கே நிலைத்து இருக்கும் வரை, தேகம் நிலைத்தே நிற்கும். நீயே எனக்குள்ளேயே இருந்து சுவாசித்துக் கொண்டு இருக்கிறாய், என்னை நீ விசுவாசித்துக் கொண்டும் இருக்கிறாய். ஆனால் என் வாழ்க்கையில் உன்னை மட்டும் விசுவாசிக்க மறந்தே போனேன் உயிர்ச்சத்துள்ள உணவுகளை கண்டறிந்து அதை உணவாக உண்ணப் பழகுங்கள், ஒரு உயிரை கொடுத்து மறு உயிரை காப்பாற்றும் கலையை கற்றால். உயிர் உடலில் சிறப்புடன் விளங்கும். ஒருவருடன் ஒருவர் மனம் விட்டு பழகுதலுக்கு காரணம் உயிரின் மீதுள்ள மோகம்தான். உயிர் உணவு என்றால் உதாரணம் வில்வம் பிசின், வேப்பன் பிசின், முருங்கைப் பிசின், பாதாம்பிசின், போன்ற உணவுகளை உயிர் விரும்பி ஏற்கிறது.

உயிர் உணவு என்றால் என்ன? உணவுக்கும், உயிர் உணவுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

உதாரணம்: முருங்கை கீரை உணவு, முருங்கைக்காய், முருங்கைப் பிசின்.

| | | |
|---|---|---|
| வில்வ விருட்சம் | - | வில்வம் பிசின் |
| பாதாம் பருப்பு | - | பாதாம் பிசின் |
| வேப்பங் கொழுந்து | - | வேப்பன் பிசின் |
| விலாம்பழம் | - | விளாம் பிசின் |
| மாம்பழம் | - | மாம்பிசின் |

இப்படி ஒவ்வொர விருட்க்ஷங்களும் தன்னுடன் உள்ள, உயிர் பொருள் அனைத்தையும் கூட்டி ஓர் சிறு துளியாக வெளியேற்றிவிடும். அந்த பிசின் தான் அமுத்தத்துக்கு நிகரான உயிர் மருந்து ஆகும். உயிர் உணவு ஆகும். இந்த மரத்தினுடைய உயிர் பொருளை சிறிதளவு சிறிதவையாக ஆகாரங்களில் சேர்த்துக் கொண்டு வாருங்கள். இதை உயிர்

விரும்பி ஏற்கி ஏற்கிறது. உயிர் விருப்பத்தை அறிந்து உயிருடன் பழகுங்கள். உயிர் இருக்கும் போதே அதற்கு வேண்டியதைக் கொடுத்து, அதை திருப்தி செய்ய முயற்சி செய்யுங்கள்.

**(குறிப்பு:- உணவாக உண்ணுவது எப்படி என்ற முறையை எமது அடுத்த பதிப்பில் வெளியிடுகிறோம்.)**

அன்பு, பாசம், காதல், பக்தி, நட்பு, உறவு இவைகள் பல வடிவங்கள். எதுவும் குற்றம் இல்லை. உயிராகிய கடவுள் அறியாமல் எவரும் குற்றம் செய்யவில்லை. உன்னை மன்னிக்கும் அதிகாரம் உயிர் ஒன்றைத் தவிர வேறு எதற்கும் இல்லை, தண்டிக்கும் அதிகாரமும் இல்லை. "உயிர்" எல்லாவற்றிற்கும் அனைத்திலும் சர்வ சாட்சியாக நின்று கொண்டு இருக்கிறது. அது அறியாமல் ஒரு துரும்பைக் கூட நகர்த்த இயலாத பட்சத்தில் அதுவே அனைத்தையும் அறியும் சாட்சியாகவும் கடவுளாகவும், இருந்து நமது வாழ்க்கையை சித்தரித்துக் கொண்டு இருக்கிறான். ஒரு உயிருக்கு பல உயிர்கள் நட்பை ஏற்படுத்தி ஒரு உயிருக்கு, பல உயிரையும் பொறாமையை ஏற்படுத்தி, ஒவ்வொரு நாளும் நம்முடன் உயிராகிய கடவுள் நட்பு, பகை என்ற பெயரில் உறவாடி வருகிறது. எல்லா குழப்பங்களும் உறவுக்காகத்தான். என்பதை புரிந்து கொள். தன்னை உருவாக்கி கொள்பவர்களிடத்தில் பகைமை செய்ய வேண்டிய அவசியம் அதற்கு இல்லவே இல்லை. விஷத்தை சாப்பிட்டவன் எப்படி உயிர் வாழ்வான். விஷத்தையே சாப்பிட்டுட்டு எப்படி சுகமாக வாழ முடியும். உயிருக்கு விரோதமான வகைகள் செய்வதுவும் விஷம்தான். உயிருக்கு விரோதமானதை செய்பவன் "உயிர்தான் கடவுள்" என எப்போது உணருகிறானோ, அப்போதே அவன் புணிதனாக மாறுவான். பாபங்களை சிறிதும் அனுகாத சுவர்கலோக வாழ்வை இங்கேயே எல்லோரும் பெறுவார்கள். உண்மையில் எவரும் பாபிகளும் அல்ல புண்ணியர்களும் அல்ல. எல்லாம் சூழ்நிலைக்கு தகுந்த காரியங்களைச் செய்கிறது. காரியங்களுக்குத் தகுந்த பலனை அவரவரும் பிரித்து எடுத்துக் கொண்டார்கள். அதை அவர் பணம் என்றும் சொத்து

என்றும், பாவம் என்றும், புண்ணியம் என்றும் பிரித்து எடுத்துக் கொண்டார்கள். பணத்தை கட்டி பிடித்துக் கொண்டு, பாபத்தை மட்டும் தான் பகவானிடம் சமர்ப்பிக்கிறார்கள்.

இவ்வுலகில் உள்ள பாபங்களை அனைத்தையும் அவன் ஒருவனிடத்திலே ஒப்பு கொடுத்து விட்டால் மக்கள் நிம்மதியாக வாழலாம் என எண்ணுகின்றனர். கடவுள் அப்பாவி இல்லை, உயிராகிய கடவுளிடத்தில் பாபங்களுக்கு பரிகாரம் தண்டனை மட்டும்தான். மன்னிக்கும் அதிகாரம் உண்டு என்பதற்காக ஓர் அரசன் எல்லாவற்றையும் மன்னித்துக் கொண்டு போனால் அது நீதியும் அல்ல. அரசனுக்கான அழகும் அது அல்ல. ராஜ விசுவாசிகள் ஆனாலும் குற்றம் செய்தோரை பாரபட்சம் இன்றி முழுமையாக தண்டிக்கும் அதிகாரத்துடனும், நீதியகம் இருந்து வருகிறது. குற்றம் புரிந்தவன் அதை தானே முன் வந்து உயிராகிய கடவுளிடத்து ஒப்புக் கொண்டாலும், அவன் தான் செய்த குற்றங்களுக்கு ஏற்ற தண்டணையையும் கேட்டுப் பெற வேண்டும். தண்டனை காலங்களுக்கு பின்பு புனிதராவர். கணக்கில்லாமல் பாபங்களை செய்பவர், தண்டனை இல்லாமல் எவ்வளவு காலங்களுக்கு சுற்றி வர முடியும். தண்டனையை பெறாததினாலேயே குற்றம் செய்தவர்கள் கூட அச்சப்படாமல் தைரியமாக செய்கிறார்கள். குற்றவாளிகள் தண்டனை அனுபவிக்காமல், சர்வ சுதந்திரமாக திரியும்போது, கடவுள் என்பவன் இல்லவே இல்லை என்று தனது அனுபவத்தை சொல்லி திரிகிறார்கள். இப்படியே பாவம் ஏதும் செய்யாதவர் வாழ்நாளில் எப்போதும் நரக வேதனையுடன் தான் வதைபடுகிறார்கள். கடவுளை நம்புபவரும் பாவம், செய்யாத புண்ணியரும், இப்படி கண்டவன் கால்களிலும் மிதிபட்டு அழிவது போன்ற அவல நிலைக்கு தள்ளப்பட்டாலும், கடவுள் இல்லை என அபிமானிப்பதில் எந்த குற்றமும் இல்லை. ஆனால் எல்லோரும் செய்த குற்றம் கடவுள் யார்? என்பது அறியாததினாலேயே வந்த குழப்பங்கள் இவை எனலாம். நீ தெருவில் போகும் நாயிடமும் கழுதையிடமும் போய் உன் நன்றியை சொல்லும் போது, அந்த நாய் கடிக்கும் அதிகாரத்தை நீயே அதற்கு

வழங்குகிறாய். சம்மந்தம் இல்லாதவனை அழைத்து வந்து, சம்மந்தம் இல்லாத விஷயங்களைப் பேசி, சங்கடப்பட்டு அழிகிறார்கள். உன்னிடம் உள்ள கடவுளை உனக்கே தெரியாது என்று சொல்லுவது, எந்த விதத்திலும் நியாயம் இல்லை. உனக்கு தலைவனாக இருக்க வேண்டியவனை நீ தலைவனாக மதிக்காததினாலேயே, அவன் அனைத்திற்கும் சாட்சியாக நின்று உன்னை அழிக்கிறான் என்பதை உணர்வாயாக.

தன்னை சுற்றி உள்ள சொந்த பந்தங்கள் எல்லாம் ஒவ்வொன்றாக இறந்து போன பின், தான் வாழ வேண்டும் என்ற ஆசையும் செத்துப் போய்விடுகிறது. தன் மீதே தனக்கு ஒரு சிறு பற்று கூட இல்லாதவன், பரதேசியாவானே ஒழிய, பரஞ்சோதி ஆக மாட்டான். இவன் தனக்காக ஒரு நாளும் வாழவில்லை. தன்னை ஒரு நாளும் நேசிக்கவில்லை. இவனை போய் கடவுள் என கருதுபவர் முட்டாள்கள், பைத்தியக்காரன் தெருவிலுள்ள தாள்களை எடுத்து பணம் என சொல்லியதாம் அந்த பணம் எங்கும் செல்லாத காசு, எங்கும் செல்ல முடியாத தேய்ந்து போன காசு.

## 19. உயிரே உனை காக்கும் கடவுள்

உயிரை கடவுளாக மதிப்பவனை குற்றம் செய்யாதவாறு உன்னை பார்த்துக் கொள்ளுவான். கடவுள் தனக்கு அன்னியமாக ஏதோ ஒரு உலகில் உள்ளான் என்ற கற்பனையே, மனிதனின் எல்லா துணிவான குற்றங்களுக்கும் இடமாக அமைகிறது. கடவுளை காண்பது அரிது என்று திடமான நம்பிக்கை மட்டுமே தான் எல்லா தீவிர செயல்களுக்கும் காரணம். சுதந்திரமுள்ள நாட்டிலும் கூட கள்ளர்கள் பதுங்கிதான் வாழ்வார்கள். உண்மையில் அரசன் என்பவன் இருந்தால் வெறும் பொம்மையை வைத்து ராஜாவாக கொண்டாடும் வரை கள்ளர்கள் எல்லோரும் செல்வந்தர்களாகவும், தர்மவான்களாகவும், தாராளவான்கள் என்றும் போற்றப்படுவார்கள். இந்நிலையில் கள்ளர்களை கண்டு அச்சத்தால் கடவுள் தலைமறைவு ஆகிப் போய்

எங்கேயோ சென்று விட்டான். ஆகவே தான் கடவுளை காண்பது அரிது என்கிறார்கள். பாவங்களில் இருந்து தன்னை காத்துக் கொள்ள கடவுள் புண்ணிய லோகத்துக்கு புறப்பட்டு சென்று விட்டார்கள். பாவக்காசை செலவு செய்து பல்லக்குத் தூக்கினால் பொம்மை ஏறாமலா போய்விடும் என்று எண்ணுகிறார்கள். இந்த எல்லா அகம்பாவங்களுக்கும், ஒரே காரணம் தவறான வழிமுறை, தவறான செயல் விளக்கம், தவறான பழக்க வழக்கம், தவறான அணுகுமுறை, தனக்குள் தான் கடவுள் இருக்கிறான், "உயிர்தான் கடவுள்" என்ற உண்மையை எப்போது உணருவானோ அப்போதே ஒவ்வொரு மனிதனும் தான் சிந்திக்க துவங்குவான். குற்றம் பேசவும் அஞ்சுவான். பாவங்களை செய்ய பயப்படுவான். சத்தியம் வெல்லும். காட்டுக்குள்ளே நெருப்பை எவ்வளவு காலங்கள் பூட்டி வைக்க முடியும். அப்படித்தான் இந்த செய்தி காட்டை மிஞ்சும் அளவுக்கு மிஞ்சி விட்டது. இவ்வுலகில் உயிர்தான் கடவுள், உயிரே நீ என் இதயத்தில் இருப்பதால்தான் இன்னும் நெஞ்சுக்குள் இரத்தம் ஓடிக் கொண்டு இருக்கிறது. இல்லையேல் எப்போதோ நான் இறந்து போய் இருப்பேன். உயிரே என்னை விட்டுப் போகாதே. என்னுடைய வாழ்க்கையை நானே நரகமாக்கி கொண்டுவிட்டு, என்னை காப்பாற்றச் சொல்லி உன்னிடம் நான் மன்றாடுவதில் எந்த நியாயமும் இல்லை, என்பது எனக்கு தெரிந்திருந்தும், நான் உன்னையே சரணடைகிறேன். எனக்கென்றும் உற்ற தெய்வம் நீ மட்டும் தான். விளையாட்டாகவும், வேடிக்கையாகவும் பொழுதுபோக்காகவும் கையில் செல்வமும் இளமையும் இருக்கிறது என்ற ஆனவத்தில் செய்த தவறுகள் என்னை வந்து தாக்கும் போதுதான், நான் செய்தது பாவம் என்றே எனக்கு விளங்குகிறது. பிறரை பாதிக்கும் போது வேடிக்கை விளையாட்டு, அதுவே தன்னை பாதிக்கும் போது வேதனை சோதனை என்று சொல்கிறேன். பந்தை சுவற்றில் அடித்தால் மீண்டும் என் மேலே திரும்பி பாயும் என்பதை அறியாமல் செய்ததை எண்ணி கவலைப்படுகிறேன். யானை தன் தலையில் தானே மண்ணையும் சேற்றையும் பூசிக்கொண்டதற்கு சமம், இளமையில் நான் அறியாமல்

பெய்யாத பாவம்.

## 20. "மூன்றிடத்தே இருந்து ஒன்றை பெற்றேன்"

உயிராகிய கடவுளே என்னிடம் வந்து உயிர்தான் கடவுள் என்று உன்னை அறிமுகப்படுத்திக் கொண்டதன் நோக்கம் எனக்கு புரியாத புதிராகவே உள்ளது. இதை நான் பறை சாற்றும் விதமாக ஆனேன்." சம்மதம்" மட்டுமே என் வாழ்வாக கருதி நின் பேரருளால் முழுமூச்சுடன் பாடுபடுவேனாக.

ஒன்றை இழந்து ஒன்றைப் பெற்றேன். ஒன்றிலே ஒன்றி வாழும் இவ்வாழ்க்கையில் என்றவனை விட்டு பிரியா நிலைபடுத்தி பூரணமாக்குவாய் கடவுளே. என்னைக் கடந்தும் எனக்குள்ளேயும் உள்ள உயிராகிய கடவுளே என் வாழ்வு நின் கருணை அல்லால் என் முயற்சி கடுகேனும் எனக்கு இல்லை, "தான்" என்ற கர்வத்தால், தரம் கெட்டுப் போனேனே ஒழிய உருப்படி ஆகிலேன். காமன் அம்புகள் என் மீது தாக்கி ரணமாகி சாகாவண்ணம் போர் முனையில், வாலிபத்தில் வந்து என்னை கவசம் போல், காத்திட்ட தெய்வமே, வஞ்சியர் என்னை கொள்ளை கொள்ளா வண்ணம் என்னை நீயே முழுதும் ஆட்கொண்ட கருணை தெய்வமே, நின் பேரருள், நின் பெருங்கருணையும் உயிரினிடத்துள் சூழ்ந்து நிலைக்கும்படி செய்வாயாக. வள்ளளே, உன்னிடத்தில் அனைவருக்கும் உள்ள உரிமையை கூட உன்னிடத்தில் வந்து வாய்விட்டு கேட்க அறியாத பிள்ளைகளுக்கு நீயே உன் மனம் இரங்கி அவர்களின் உரிமையை அவர்களிடத்திலே தந்தால் தான் என்னை? இது முறையோ? நியாயமா? பதில் சொல்வாய் தாயே. பெற்றவளிடத்தில் பிள்ளை பசியாற தவம் செய்ய வேண்டுமா? பசி என்று எண்ணும் போதெல்லாம் தாய்தான் வருவாள். தாயே என்றுன்னை எண்ணும்போதெல்லாம் பசி ஏற்பட்டு போய்விடுகிறது. தாய் அறியா பிள்ளையானேன். எடுப்பார் கைப்பிள்ளையாகிப் போனேன். வெறும் கையை தலையில் வைத்து வெறும் தரையில் வெறும் உடம்புடன் குடிக்க கஞ்சியத்து குவலயத்தில், என்னை ஏன்? என்று கேட்போர் நாதியற்றுப் போய், சாகக் கிடந்த என்னிடம்

"சமத்துவம்" என்ற "சம்மதம்" பேசியே தெருவிலே கிடந்த என்னை திருவிளக்கு ஆக்கிய தயாபரனே, விதி என்று நினைத்து வாழ்ந்துவிட்டு செத்திருப்பேன், ஒழிய நின் தயை இல்லாதிருந்தால் சுகப்பட்டு இருக்க மாட்டேன். என்னிடத்தே நலம் விசாரிக்கும் அளவுக்கு எவரும் நலமாகவும் இல்லை, சமயத்தில் நான் கூட அறிவாளியாக பேசுவதை எண்ணி நானே என்னைப் பார்த்து பைத்தியம் போல் சிரித்ததுவும் உண்டு. மற்றவர் எல்லாம் புறப்பட்டுப் போகும் முன் என்னிடத்தில் ஒரு வார்த்தையேனும் பேசாமல் போனதை எண்ணி வருத்தப்பட்டேனே. ஒழிய நயந்து போக அறியேன். நால்வகை மதமும் நாற்பது சாதியிடமும் கையேந்தி உண்பவன் போல் ஆனேனே! சைவமோ, அசைவமோ எம்மதமும் நான் அறியேன். ஏதும் இல்லா நிர்குணனே நீயே என் சம்மதம் ஆகிப் போனாய். உப்பிட்டு அன்னம் தந்த கைகளில் எது உயர்வு, எது தாழ்வு என்றால் என்னிடத்தே எல்லாமும் "சம்மதம்" ஒழிய வேறில்லை. இல்லை என்று சொன்ன கைகளுக்கு கூட நன்றி உள்ளவனாக வாழ்கிறேன். என் பசி அறிந்து அள்ளித்தந்த கைகள் என் சம்மதத்தின் கைகள் மட்டும்தான். கடவுளே நீ சதி செய்வதாக விதியின் ஆய்வர்கள் வீதியில் பேசிக்கொண்டு, போனதை அரைகுறையாய் காதில் கேட்டு, இவர்களை எண்ணி வருத்தப்படுகிறேன். காமாதிகளால் குருதி கெட்டுப் போனார். வெறும் பதறு ஆகிப் போனார். ரத்தத்தில் சூடு சொரனை அத்துப் போய் நெஞ்சில் இரத்தம் உறைந்து மரணம் மிகு பேர் ஆனார். விதி எனவே வீண் வார்த்தைப் பேசி, மனதை கரையாக்கி சுருண்டு விழுகிறார். விதித்தவனே வாய்திறவாய்.

இவர் விளையாட்டு வினையாகிப் போனது அரியார்? வீனாக வீழ்வினையை பேசியே பாழும் கிணறுபோல் வத்திப்போனார். வீரம் இல்லான் ஒரு முழத்துக்கு குறையாமல் மீசை மட்டும் வைத்துக்கொண்டு சரக்கு இல்லாமல் போட்ட சடுகுடு ஆட்டம், "வெறும் கையில் முழம் போட்டவன்." முதல் இழந்து போன முதலாளிக்கு வியாபாரம் செய்யும் ஆசை இல்லாமலேயே நேர்ந்த மரணம். இதயத்தில் இடிதாக்கியது போலாகியது.

ஆற்றல் என்பது உயிரினுடையது ஆகும். அது உடலுடன் சேர்ந்தே செயல்படுகிறது. உயிரும் ஆற்றலும் சூட்சும சக்தியாக விளங்குகிறது. உடலில் உயிர் ஒட்டி இருப்பது போல் தோற்றத்தை பொய்யாக ஏற்படுத்துகிறது. ஆகவே தான் உடலை விட்டு உயிர் பிரிகிறது. பச்சை மரம் கூட பட்டு போவதற்க காரணம் உயிரை உடல் கவனிக்காத குறைபாடே ஆகும்.

மரங்கள் அசையும், தண்ணீர் அருந்தும், உணவு உட்கொள்ளும், உறங்கும், நோய்கள் ஏற்படும், மகிழ்ச்சி, வருத்தம், தொடு உணர்ச்சி, இனப்பெருக்கம், சுவாசித்தல், பரோபகாரம், நிழல், சிறிய சிறிய சொந்தங்கள், நட்புகள், வருவார், போவார், என எல்லா விதத்திலும் நமக்கு தாழ்வு இல்லாமல் வாழ்கிறது. உண்மையில் தாவரங்களின் நிழலிலேதான் மனிதன் வாழ்க்கை இருக்கிறது. உணவே உயிருக்கு ஆதாரமாக விளங்குகிறது. மனிதனுக்கு பேசும் சக்தி இருப்பது போல் மரங்களுக்கு கேட்கும் சக்தி இருக்கிறது. இதை உணருகின்ற சக்தி மட்டும்தான் மனிதனுக்கு இல்லை. ஆகவேதான் மனிதன் மரத்தை அழிக்கிறான். மரங்கள் இல்லை என்றால் மனிதன் என்ற இனம் உயிரும் வாழ இயலாது. உயிரின் பிரதான சக்தி உணவே. உதாரணம்:- இப்போது உடனடியாக செய்யப்பட்டு, உடனேயே பரிமாறப்பட்ட உணவாக இருந்தால் உண்பவர் மனம் மகிழ்ச்சியுடன் உண்பார். அளவுக்கு அதிகமாகவே சாப்பிடுவர். ஆனால் அதுவே காலை உணவை இரவு சாப்பிடும் போது முகம் சுளித்துக் கொண்டு, வேண்டாம் என்று சொல்லிக் கொண்டு வெறுப்புடன் உண்பர். அதுவே மறுநாள் உண்ணச் சொன்னால் ஓட்டம் பிடிப்பார். என்ன காரணம் அந்த உணவு செத்து விட்டது. உயிர் அற்ற உணவை உடல் ஏற்பது இல்லை. நாம் செய்யும் உணவுக்கு கூட ஆயுள் காலம் உள்ளது. காண்பீரே, சாப்பாட்டுக்கு 1 நாள் ஆயுள் காலம், பாலாக இருந்தால் தயிராக மாறி 2 நாள் ஆயுள் காலம், ஊறுகாய்க்கு 3 மாதம் ஆயுள் காலம், மாவு பொருள்களுக்கு 1 மாதம் ஆயுள் காலம் மருந்துகளுக்கு 6 மாதம் ஆயுள்காலங்கள் உள்ளது.

ஊறுகாயின் பலம் உப்பு. உப்பு பலமாக இருக்கும் வரை ஊறுகாய் கெடாது. உப்பு உயிராகவும், ஊறுகாய் உடலாகவும் உள்ளது.

தன்னுடைய உயிரை தானே தியானிக்கும் போது "உயிர்", "கடவுள்" என்ற வடிவம் பெறுகிறது. ஊற்றை தேகம் ஒளி உடம்பு ஆகிறது. உனக்குள் இருக்கும் ஒப்பற்ற சக்தியை விட்டுவிட்டு உன்னை வேறு ஏதோ ஒரு சக்தி ஆட்டிப்படைப்பதாக எண்ணுகிறாய். வாழ்க்கை அலை போலவும் கேள்விக் குறியாகவும் உள்ளது. எதற்கும் பதில் இல்லை. எல்லா பிரச்சினைக்கும் சமாதானம் வெறும் வார்த்தைகள் போதாது, உயிராகிய கடவுளுக்கே பசிக்கு சோறும், நோய்க்கு மருந்தும் போல தரித்திரவானை செல்வத்தால் போஷிக்கும் பால் மனம் மாறாத இந்த உயிராகிய கடவுளை கண்டவன், எல்லா பாபங்களில் இருந்தும் முழுமையாக விடுபட வைக்கிறது. இதுவே பாபங்களை தீர்க்க வந்த புனிதமான கங்கை, கோவிலுக்குள் விளங்கும் கற்பூர தீபம் கண்டார் சோதி வழி போவர். எதை நீ காண்பாயோ அது நீ ஆவாய், தீபத்தை கற்பூரம் நெருங்கும்போது கற்பூரம் எப்படி பற்றி எரிகிறதோ அதேபோல, உயிரிடத்தில் சரீரம் நெருங்கிப் பழகும் போது உடல் உயிராக மாற்றம் அடைகிறது. அது காலம் மட்டும் இதுவே உடல் பூமிக்குள் புதைந்து போகாது இருக்க ஒரே வழி. உயிருக்குள் உடல் புதைந்து வாழும் வண்ணம் தியானியுங்கள். ஒருவருடைய அனுபவத்தை மற்றவர் கற்பனை செய்ய இயலாது, உணரவும் முடியாது. அனுபவ கல்வியே நிலையான கல்வி, உயிர் கலை என்பது, சாகா கலையாம், அந்த சாகா நிலையை உணர்ந்து அறிவார் பலர் இயற்கை மனிதன். ஒரு பெண்ணிடத்தில் ஆண் நெருங்கிப் பழகும் போது, அப்பெண் தன் உணர்வையும் மாற்றிக் கொண்டு, தன்னை சார்ந்தவனின் உணர்வையும் எப்படி மாறுகிறாளோ அப்படித்தான். உயிர் கடவுள் நினைவை அடையும் போது தேகம் உயிராக மாற்றம் அடைகிறது. தன்னுயிரைக் கொண்டே ஆனந்தம் அடைவதாம். தன்னுயிருடன் தான் பழகுதலும் உயிர் தன்னுடன் நேசம்

கொள்ளுதலும் அதனிடத்தில் அதுவாகவே தேகம் நிலைத்திருக்கும் என்ற எளிய முறை "சாகா கல்வியை" எனக்கு சொன்னது, மனிதா, நீ அன்றோ காண முடியாத கடவுள் உருவத்துடன் தான் அலைந்து கொண்டு இருக்கிறாய். தன்னை காண இயலாது என தானே கதை சொல்லுகிறாய். எனக்குள் இருந்து கொண்டே, என்னை ஆட்கொண்ட கடவுளே என்னை பக்குவப்படுத்தி பழக்க வைப்பதாக வாக்குறுதி எனக்கு தந்த எம் இறைவன், அச்சம் தீர்க்க வந்த அருமருந்தே ஆனவன். சாதி சமயம் மதங்கள் இல்லா பொது நீதியான நின் சம்மதம் தடை ஏதுமின்றி அனைவருக்கும் சுலபமாய் இந்த செய்தி கிட்டட்டும். தன்னை உயர்த்திக் கொள்ள அனைத்தையும் தாழ்த்திப் பேசும் துன்மார்க்கத்தான் எவரும் இல்லாத "சம்மதம்". நின் சம்மதமே, என் "சம்மதம்" என்றே வாழ்கிறேன். என்மீது நீ என்ன மாயம் செய்தாயோ நான் அறியேன். நான் திடீர் என்று எப்படி மாறிப்போனேன் என்பதை நானே அறியவில்லை. **சம்மதம் என்பது ஓர் பாசவலை, உயிர் வாழ்வன அனைத்தும் இதில் அகப்படும்.** வலையை விரித்தவர்க்கே அகப்பட்டது சொந்தமாகிப்போனது போல, இந்த உயிராகிய கடவுளை இந்த தேகம் சென்றடையும்.

திடப்பொருளும் திரவப்பொருளும் கூடி ஓர் உயிர் பொருளாக மலர்ந்து மணம் வீசுகிறது. மகிழ்ச்சியும், கிளர்ச்சியும், தளர்ச்சியும் மாறி மாறி முதுமையை அடைவதாய் சொன்னாய். உயிரின் ஆனந்த சரீரத்தில் நிலைத்து வாழாத தேகம். நிலை தடுமாறிய வாழ்வை எண்ணியே கலங்குகிறேன். உயிருடன் இயற்கையாக கூடி வாழ தெரியாதவன் சாவை இயற்கை என்று ஏற்றுக் கொள்கிறான். மரணம் என்பது நோய் என்று என் சிந்தைக்கு வந்து செப்பிய உயிரே, உனது வார்த்தையில் கூட உயிர்ச்சுவையையும், இரக்கத்தையும் உணர்கிறேன். **உயிரோடு வாழ்பவர் அவர் எப்படி சாவார் என்று எளிமையாக நீ கேட்ட கேள்வியில் என் ஜென்மமே சுருங்கிப் போனதை நீ உணர்வாயா?** உனக்கு மட்டுமே எனது எல்லா உணர்வுகளையும் புரிந்து கொள்ளும் சக்தி இருக்கிறது. எனது உரிமையை கூட நீ சொல்லித்தான் நானே

அறிந்து கொண்டேன். என் உணர்வுகளை மதிக்க ஆள் தேடிக் கொண்டு அலைந்தேன். எவரும் கிடைக்காத சோகத்தில் ஆழ்ந்து போனேன். உணர்வுகளை பகிர்ந்து கொள்ள என் உணர்ச்சிக்கு பொருத்தமான உயிரே உன் சன்னிதானத்தில் வந்து நின்று என் அழுகுரல் கேட்டு எழுந்து வந்து உயிராகிய கடவுளே! என் தேகம் நோய்பட்டு அழியாமல், உயிருடன் கூடி வாழ்தல் ஆனேன். கூடி வாழ்பவர்க்கு கோடி இன்பம் நல்கும் எம் இறை அல்லால் மற்றதுடன் கூடி அழிவது தின்னம் என்று உணர்ந்து விட்டேன். என்னை ஆண்டு கொண்டு அருளிய எம் இறைவனின் "சம்மதம்" எனது வாழ்வு. உன்னை தனித்து ஒய்வு எடுக்கவும் நான் விரும்பேன் உன்னை விட்டு கனமும் விலகி இருக்கவும் நான் அறியேன். உன்னையே நினைத்து, நினைத்து உருகும் தேகம் உயிருக்குள் தானே உட்புகுந்து தேகம் வாழ்வதை அறியும். இந்த எளிய செய்தி, எவரும் அறிய வகை சொல்லுவாயே. சந்தேகத்தில் என் தேகம் எவ்வளவு காலம் வாழும் என்பதை அறியேன். சந்தேகத்தில் இவ்வளவு காலம் வாழ்ந்தது எண்ணி வியந்து போகிறேன். ஆச்சரியமாகிப் போனேன். உடலில் உயிர் என்பது ஏதோ, ஒட்டிக் கொண்டு இருப்பதாகவும், அது எப்போது வேண்டுமானாலும் போகலாம் என்றும், விதி முடிந்தவுடன் சென்று விடும் என்றும் நான் உன்னை எவ்வளவோ முறை அவமதித்த போதும், உதாசீன படுத்திய போதும் கூட என் அறியாமையை பொறுத்த பொறுமைமிக்க பெருமை வாய்ந்த அருட்கடலே. இந்த நன்றி கெட்ட என்னிடத்தில், எனக்கே வெறுப்பு இருக்கும்பட்சத்தில், என்னை நீ நேசிப்பதை எண்ணி எண்ணி வியந்து போகிறேன். உயிரின் மீது காதல் அறியாத கயவன் காம வயப்பட்டு அந்த சூட்டில் கருகுகிறான். அவனை காப்பாயா?

## 21. உயிர் கேட்டவர்க்கு கேட்டவிலை

உயிரை மறந்தவன் அப்படி செத்துப்போவதே நீதி என்று மரணத்தை நியாயப்படுத்திய காலனே உயிருடன் இருக்க பழகும் கல்வியை, "சாகா பொருளை" **இவ்வுலகில் விலைபோக அருளுவாய் கடவுளே! என்ன விலை இருக்குமோ என்று உண்மையில் தயக்கத்துடன் ஏழை**

நான் கேட்டேன்? அதற்கு நீ கேட்டவர்க்கு கேட்ட விலை என்றாய். நான் அழுது விட்டேன். உன் கருணையை எண்ணி கலங்கிப்போகிறேன் என் தவறான கேள்விக்கு கூட சரியான பதிலை சொல்லும் போதுதான், ஒருவருக்கு ஒருவர் அதிகமாக நேசிக்கத் துவங்குவார்கள் அப்படி ஒரு சந்தர்ப்பத்தை இப்போது ஏற்படுத்திய திருவருளே நான் உன் அடைக்கலம். முன் நாளில் கற்று உணராதவர், பின் நாளில் வேதனைப்படுவர்.

மரணம் என்றால் என்ன? இது வரை யாருக்கும் தெரியாத ரகசியம் ஒன்று இப்போது சொல்கிறேன். இந்த நூலைத் தவிர வேறு எங்கும் இதற்கான ஆதாரங்கள் இல்லை. இதை ஏன் நீங்கள் தெரிந்து கொள்ளும்படி அறிவுறுத்துகிறேன் என்றால், மரணம் என்றால் என்ன என்பது கூட தெரியாதவர்கக்கு அதை கடக்கக்கூடிய தகுதி இல்லை. இப்போது அதற்கான வியாக்யானத்தை சமர்ப்பிக்கிறேன். சிவம் + சக்தி = இது இரண்டும் சேர்ந்த கயிற்றுக்கப் பெயர் தான் உயிர். ஆண், பெண் என்கின்ற கால வளையம். இதை ஒன்று சேர்க்கும் போது சிவம் எது சக்தி எது என்று தெரியாமல் மறையும் இதுவே சூட்சுமம். ⊙

இதைதான் அரியும் சிவனும் ஒன்று அறியாதவன் வாழ்வில் மண்ணு என்று சொல்லுகிறார்கள். இதே வார்த்தையை வேறு ஒன்றாக மாற்றி சொல்கிறார்கள். இப்படி சிவசக்தியாய் சேர்ந்த ரூபத்துக்கு பெயர்தான் பிந்து வட்டம். நாத விந்து என்பது இதன் பெயர். இதுவே அபின்னமான உயிராகிய கடவுள் இதை உயிர் என்றும் அழைப்பர். இதே போல் இந்த முக்கோணம் மூன்று தொழிலை குறிக்கும்

எல்லாம் △ முக்கோணம்

| | | | |
|---|---|---|---|
| நேற்று | இன்று | நாளை | - வேலைகள் |
| சிவன் | விஷ்ணு | பிரம்மா | - மும்மூர்த்திகள் |
| கடந்த | நிகழ் | எதிர்காலம் | - 3 காலங்கள் |
| முதியவன் | வாலிபன் | குழந்தை | - 3 பருவம் |
| ஆண் | பெண் | அலி | - தேகத்தின் வகை |

| | | | |
|---|---|---|---|
| ம | உ | அ | - ஓம்காரம் |
| அழித்தல் | காத்தல் | படைத்தல் | - 3 தொழில் |
| சுழுத்தி | சாக்கரம் | சொப்பனம் | - துரியம் |
| ஆகாயம் | பூமி | அந்திரம் | - 3 லோகங்கள் |

உடல், உயிர், ஆவி என்ற மூன்றும் கூடியதுவே ஒன்றின் பிறப்பு ஆகும். ஆவி என்றாலேஅரூபமாக உள்ள உயிர் எழுத்தாகப்பட்ட நாத வடிவமே ஆகும். அதுவே கவனசக்தி என்று அழைக்கப்படுகிறது. நாதம் என்றால் சப்தம். இந்த நாதத்தை கவனித்துக் கொண்டு, உயிர் உடலில் இருந்து கொண்டு இருக்கிறது. கவனம், தடுமாறியே மரணம் ஏற்படுகிறது. வண்டி என்பது உடல் அதை இயக்குகின்ற சக்தி தான் உயிர். ஓடுகின்ற குதிரை மனம், புத்தி என்ற இரண்டும், இதன் கடிவாள மூக்கணாங் கயிறுதான் கவன சக்தி, அது தான் உயிர். ஆசை என்னும் பொருள்களை வண்டி நிறைய ஏற்றிக் கொண்டு மனதில் எந்த தீர்மானமும் இல்லாமல் செல்லும் நெடுந்தூரம், பயணம் விடியலை தேடி மிகவும் அவசரம், விவேகமற்ற ஒரே வேகம், காலத்தின் விபரீதங்களை உணராத கால்களின் வேகம் எண்ணற்ற கனவுகளுக்கிடையே. அவ்வப்போது பெறப்பட்ட ஞானம், வெறும் பதறு ஆகும். பண்ணைக்கும் உதவாது, பசிதீர்க்கவும் உதவாது. உலகத்தில் வாழும் தகுதி அற்றுபோய் அவ்வுலக வாழ்க்கை வாழவும் தகுதி இழந்து போய்விடுகிறான், தெருக்கூத்தை பார்த்து கைகளை தட்டும் அற்ப சுக ஜீவிதன். இந்த வேடிக்கை மனிதர்களின் கேளிக்கை விளையாட்டு கதைகளை போல் வாழ்வும் சீக்கிரமே முடிவு பெறுகிறது. ஒரு மனிதன் ஞானியாக ஆக முடியாது ஆனால் ஞானியாக வாழ முயற்சி செய்யவேண்டும். ஆண்மையுள்ள உள்ள வீரனை பார்த்து மற்றொருவன் பொறாமை பட்டாலும், அத்தகுதியை அவனுக்கு அடைய முடியாது. ஒருவனின் வாழ்வு மற்றொருவனுக்கு ஒருக்காலும் பொருந்தாது. அதுவே பாக்கியம் என்பதாம். தனது சொந்த நிலையை மறந்து விட்டு தன்னை வேறு ஒன்றாக மாற்றிக் கொண்டு வாழும் உயரிய தரம் உடைய வாழ்வாக இருந்தாலும், அவ்வாழ்வு போலியானது, எனவே குற்றம்.

உதாரணத்துக்கு தவம் செய்ய காட்டுக்கு போகுதல், மந்திரம் ஓத மலைக்குச் செல்லுதல். கடவுள் இவன்தான் என்று கண்ணை மூடிக்கொண்டு கற்பனை செய்து கொள்ளுதல், நெருப்பில் இறங்குதல், வேஷம் கட்டிக் கொள்ளுதல் தன்னைத் தானே வதைத்துக் கொள்ளுதல், பேசாமல் இருத்தல், உண்ணாமல் இருத்தல், உறங்காமல் இருத்தல். இவர்கள் தங்கள் பிடிவாதத்துக்காக உயிரை விடவும் தயங்காத பிடிவாதிகள். அவரவர்களின் கருத்து அவரவர்களுக்கு சரியாகத்தான் தெரியும். ஆனால் முடிவு மட்டும் சரியாக இருப்பது இல்லை. இதுவே நடைமுறை சிக்கல். மருந்து உண்ண வைத்தியனிடம் அடம்பிடிக்கும் குழந்தைகளுக்கு உன்னும் மருந்தில் உள்ள கசப்பு தெரியுமே தவிர, அதன் குணம் அழும் பிள்ளைக்குத் தெரியாது. விபரம் ஏதும் அறியாதவனே குற்றம் செய்கிறான். அதைபோல் உயிர்ச்சுவையை எப்போது சுவைப்பானே. அப்போதே தீபத்தை நெருங்கிய கற்பூரத்தைபோல், அறிவு சுடர்விட்டு பிரகாசிப்பான்.

பாலுக்கும் கள்ளுக்கும் உள்ள வித்தியாசத்தை உணராதவரை, இவன் ஞானியாக முடியாது. எனவே இரண்டையும் உண்டு, பிறகு நல்லது எது கெட்டது எது என்று தானே தீர்மானித்து அதை அறிய வேண்டும். நல்லது கெட்டது இரண்டும் அறிந்தவனே பக்குவப்பட்ட மனிதன். பாலின் அருமையை உணரவேண்டுமானால் கண்டிப்பாக கள்ளை குடித்து தான் ஆக வேண்டும் என்ற கட்டாயம் உள்ளது. எனவே பாவம், புண்ணியம் இரண்டையும் செய்கிறான். இவன் கண்ணுக்கு இவை எதுவும் தெரியாது. லாபம், நஷ்டம், இன்ப, துன்பம் மட்டும் தான் தெரியும். உலக வாழ்வுக்கு இவைகளே ஆதார சக்தி. உயிரை கடவுளாக எண்ணுபவர்க்கே எது பாவம் எது புண்ணியம் என்பது தெரியும். உதாரணம் - பெற்ற தாயை காலால் உதைத்து நோகச் செய்தவன், செத்த பின்பு சாமி என்று கும்பிடுவான். இந்த இரண்டு குணமும் ஒவ்வொரு மனிதரிடத்திலும் உண்டு. மனித குணத்தில் தேவ குணம், ராட்சஸ குணம் என்பது, வந்து வந்து தலையை காட்டிவிட்டு

போகும். இவன் நிர்குணமான உயிரிடம் எப்போது பழகி அதன் குணத்தை கற்பான்? பொன் பொருள் எவையும் விரும்பாமல், உன்னை மட்டுமே விரும்பும் என் சுவாமியிடம் சரண் அடைவாயா?

⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙------- இது ஒளிவட்டப் பாதை

என் முடிவான கருத்து இது மட்டுமே. இந்த உயிர் என்ற நூலில் தொங்ககின்ற மணிகள் எல்லாம் மனிதனின் தேகம். வெறும் உடல்தான் நூலாகப்பட்ட உயிரில் கோர்க்கப்பட்டு உள்ளது. ஒவ்வொரு மணிகளுக்கும் இடையிலும் ஒரு சிறிய நூல் தனது என்று உணரப்படும். நான் என்று எண்ணும் உயிர் என்னும் பெயர். மணிகள் உடைந்து, உடைந்து விழுந்து கொண்டே இருக்கும். மணிகள் மட்டும் பலக்ஷீனமாய் போய், உயிரை விட்டு உடல் நழுவுகிறது. ஆனால் உயிர் அதே இடத்தில் அப்படியே உள்ளது. எதற்கும் அசையாமல் இருக்கிறது அந்த உயிர். ஒரே உயிருக்குள் பல்லாயிரம் கோடி சரீரங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே உயிர் ஒன்று இருப்பதாக அபிமானித்தல் தான் மாயை. இதனாலேயே சுயநலம் ஏற்படுகிறது. சுயநலம் தவறு அல்ல. ஆனால் பொறாமையே சண்டையாக மாறுகிறது. பொது நலனிலும் அக்கறை வேண்டும். மகான்களின் ஜனனம் வரலாறு படைக்கும், வீரனின் வாழ்க்கை சரித்திரம் சொல்லும் ஒவ்வொரு மனிதனின் பிறப்பிலும், ஏதோ ஒரு புதுமை உள்ளதை நீங்கள் ஒவ்வொருவரும் அறிய முற்படுங்கள். பகவானை அடைய ஆயிரம் வழிகள் உண்டு, எனினும் ஒருவர் சென்ற பாதை மற்றொருவருக்கு எப்போதும் பொருந்தாது. உன்னிடத்தில் கேட்கப்படும் கேள்விகளுக்கு மட்டுமே நீ பதில் சொல்ல வேண்டும். கேள்வி என்பது ஞானம். ஞானம் என்றால் விதை. அது உயிர் பசியை தூண்டுவதாகவும் பக்குவப்படுத்துவதாகவும் உள்ளது. ஒளிவட்டப் பாதையில் போவோர் உரு அழிந்து உயிராகுவர். ஒளிமேனியில் உட்கலந்து வாழ்வர், பல்லாயிரம் ஆண்டு கடந்தும் வாழும் திருமேனி இதுதான் என்று திருமகனார் எனக்கு சொன்னார்.

வெறும் மரியாதை நிமித்தமாக கடவுளை வணங்குபவனுக்கு, பக்தியை விட பயம் மட்டுமே மேலோங்கி நிற்கும். எப்போது மனதில் கேள்வி பிறக்குமோ, அப்போது தான் அத்றகான ப்திலை தேட முடியும். அதற்காக எல்லா கேள்விகளையும் படித்து பதிலை ஒப்புவித்துவிட்டு கடவுளிடத்தில் கக்குவது மூலம், நீ ஒரு மஹானாக ஆக முடியாது. மனப்பாடம் செய்வதில் தலை சிறந்தவர்களுக்காக பட்டிமன்றங்கள் வேண்டுமானால் கைகொட்டும. கேள்வி ஞானமே, ஞானத்தின் விதை என்பதை உணர்ந்து, அந்த மூலப் பொருளான உயிரினிடத்தில் உயிராக பழகுவாய் மனமே. உனக்கு கேட்கப்படும் கேள்விகளுக்கு நீ எப்போது சரியான விடையை கண்டு பிடிப்பாயோ அப்போது இந்த தேகம் ஒளிப்பிழம்பாக மாறி உயிருடன் உயிராக உட்கலக்கும். இதற்கு யாருடைய் உபதேசமும், அறிவுரையும் தேவை இல்லை. உயிரினுடைய வேகத்துக் பெயர் விவேகம் உணர்ச்சிக்குப் பெயர் தான் வேகம். சரீரத்தின் வேகத்துக்கு பெயர் காமம். வேகத்தை கட்டுபடுத்தும் போது விவேகம் வளரும். ஞான வாழ்க்கை என்பது உயிருக்கு விருந்து. ஆசிரியனால் கேட்கப்படும் கேள்விகளுக்கு மாணவன் பதில் அளிக்க கடமைப்பட்டவன் ஆகிறான். பதில் சொல்ல இயலாத பட்சத்தில் ஆசிரியன் மாணவனை அடிக்கிறார். இதை பார்த்து மாடு மேய்க்கும் சிறுவன் ஏளனமாக சிரித்துவிட்டு சென்றானாம். மாட்டை மேய்ப்பது அதைவிட சிறந்தது ஆகாது. அதுபோல் ஆன்மீகவாதியானவன், வாழ்க்கையில் படும் ஒவ்வொரு இன்னல்களுக்கு பிறகும் ஒரு சாதனை இருக்கிறது. சோதனை, வேதனை, பின் சாதனை உயிர்தான் கடவுள் என்ற தத்துவத்தை சாதிக்கவே பூமியில் நீ ஜெனித்து உள்ளதை நீ அறிவாயாக. ஊற்றை தேகத்தை ஒளி உடம்பாக மாற்றுவதே சாதனை. ஞானி என்பவன் பிறப்பில், வாழ்வில், இறுதியில் மற்றவர்களுக்கு முற்றிலும் மாறுபட்டவனாக இருக்கவேண்டும். கொள்கை அளவில் வித்தியாசங்கள், எந்த வேஷமும் இன்றி, உயிரைப் போல் எதார்த்தமாக பழகு, பெற்ற பிள்ளை, கட்டிய மனைவி அனைவரையும் நண்பனாக

பாவித்து பழகு. உறவுகளை பலப்படுத்தும்போது பாரம் அதிகமாக சுமக்க வேண்டி வரும். பூமியில் ஜனிக்கும் ஒவ்வொன்றும் தன் விருப்பப்படியே வாழ வேண்டுமென்று விரும்புகிறது. அதன் சுதந்திரமான வாழ்வை கட்டுப்படுதுவது வாய்க்காலில் ஓடும் தண்ணீரை காலால் தடுத்தற்கு சமம். ஓர் இடத்தில் ஜெனிக்கும் ஒவ்வொரு ஜீவனுக்கும் இந்த உலகம் அனைத்தையும் சொந்தம் கொண்டாடும் பூமியில் புதிய வரவுகள் எல்லாம் உறவுக்காகத்தான். மேன்மேலும் பகைமை அதை பாராட்டி வெளியே செல்லும். பக்குவமாய் பழகிக் கொண்டு இறைவனை தேடு. அப்படி உன் மனதில் எந்த கேள்வியும் கேட்கப்படாத நிலையில், பகவானிடத்தில் நீ விரும்பிய கேள்விகளை தைரியமாக கேள். அவனுக்கு பதில் தெரிகிறதா என்று ஆராய்ச்சி செய். இதுவே மூடனுக்கான ஞானம். இவ்வழி சென்றால் போக தெரியாதவனுக்க அவ்வழி ஒன்று. சம்மந்தம் இல்லாதவைகள் எல்லாம் உன்னிடத்தில் உரிமை பாராட்டுகிறது. ஆனால் உனக்கு உரிமையான இடத்தை விட்டு சம்மந்தம் இல்லாதவன் போல் ஒதுங்குகிறாய்.

உடலில் உயிர் சத்துக்கள் இல்லாமல் போனால் வெறும் உடம்பிற்குள் உயிர் தங்க முடியாமல் போய்விடுகிறது. கோடையில் தண்ணீர் பஞ்சத்தை கணக்கிட்டு மழைக்காலத்தில் பொழியும் மழை நீரை பொக்கிஷம் போல் பாதுகாக்க வேண்டியது மிக்வும் அவசியமான ஒன்று. தண்ணீர் வளத்தை ஒத்துதான் நிலத்தின் வளம் அமைந்து இருக்கும். ஏனைய எல்லா சத்துக்களும் உள்ள பூமியில் நீரின் சுரப்புகளின் பிறப்பிடம் மழைதான். பூமியின் தண்ணீருக்கும் மழை நீருக்கும் எவ்வளவோ வித்தியாசங்கள் இருந்த போதிலும் கூட எல்லாம் தண்ணீர்தான். மழை நீரினால் தான் பஞ்சத்தை போக்க முடியுமே தவிர ஊற்று நீரை கொண்டு நாட்டை குளிர வைக்க முடியாது. இது பசும்பாலுக்கும் எருமை பாலுக்கும் உள்ள வித்தியாசம். ஆனால் இரண்டும் மாட்டுப்பால்தான். குணத்தால் சிறிது வேறுபாடுடையவை. அதுபோல் சுக்லமும் உயிரும் ஒரு தொடர் சங்கிலி ஒன்றை

போல் ஒன்று இல்லை. ஆனால் இரண்டும் ஒன்று தான். ஒன்று இல்லாமல் ஒன்று இல்லை காரணம் இரண்டு பாலையும் ஒன்று சேர்த்தபோது பால் கெட்டுவிட போகிறதா? அதுவும் இல்லை. ஒன்றில் இல்லாத குணம் ஒன்றில் இருக்கிறது. திரவ ரூபமானவையும், வாயு ரூபமானவையும் கூட்டி அக்னி ரூபமாவது பற்றி ஆகாசத்தில் ஒன்று கலப்பதுவே நம் முயற்சியாக இருக்கட்டும்!

## 22. சரீரம்

என்சான் உடம்புக்கு தலையே பிரதானம், அவை அனைத்திலும் கண் மிகவும் பிரதானமான ஒன்று. கண்பராமரிப்பு என்பது மிகவும் அறிந்து கொள்ள வேண்டிய விஷயம் ஆகும். காலையில் எழுந்தவுடன் குளிர்ந்த நீரில் கையை கழுவிவிட்டு கண்களை கழுவுங்கள். கண்ணுக்கு எந்த மருந்தும் போடாதீர்கள். கண்ணைபற்றிய தூரப்பார்வை, கிட்டப்பார்வை எல்லாம் கண்களின் பலவீனம் தான் என்பதை உணருங்கள். பொன்னாங்கன்னி, கரிசலாங்கன்னி, மஞ்சள் கரிசாலை, மணத்தக்காளி போன்ற கீரைவகைகளை தினம் சேர்த்து கொள்ளுங்கள்.

நாம் சிரிக்க வேண்டுமானால் தெருவில் வருபவரை பார்த்து சிரிக்கக் கூடாது, வீட்டுக்குள்ளேயே சிரிக்கலாம். அழுகை என்பது கூட ஒரு நல்லப் பயிற்சி முறைதான் ஆகும். அழுவதினால் கண்களின் வழியாக மூளையில் உள்ள தேவையற்ற துர்நீர் வெளியேறுகிறது. கண்ணை மறைப்பது திரை அல்ல “ஓதம்”. ஓதம் என்றால் துர்நீர் என்று பொருள். எப்போதாவது அழக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தால் நன்றாக அழுதுவிடுங்கள். சமைக்க சமையலறை, குளிக்க குளியல் அறை, படுக்க படுக்கை அறை, மலம் கழிக்க கழிவறை போல அழுவதற்கு எங்கே போவது? எழவு வீட்டுக்குத்தான். அங்கு தாராளமாக வாய்விட்டு அழலாம் யாரை வேண்டுமானாலும் கட்டிக் கொண்டு அழலாம். இரவு பகல் பாராமல் அழுதுகொண்டே இருக்கலாம். அப்படி வாய்விட்டு அழுவதினால் மண்டைபாரம், கண்ணை பற்றிய ஓதம், மூளை

நரம்புகளை கசக்கி வெளியேறுகிறது. அழுபவர் எவரையும் தடுக்காதீர்கள். இது கண்களின் தூர் நீர். எழவு வீடுகளில் "ப்ளாகணம்" பாடும் கிழவிகளுக்கு இது ஒரு உத்தியோகமாகவே உள்ளது. மூன்று வேளை சாப்பாடு போட்டு காசு கொடுப்பார்கள். இவர் கும்பலாக சென்று மூக்கை சிந்தி கைக்குட்டைகள் நனைய அழுவார். கண், மூக்கு, மூளை, காது, அனைத்தும் உணர்ச்சி வசப்படுகின்றன. மனதில் உள்ள பாரத்தை குறைக்க வல்லது.அழுபவர்களுக்கு சோறுபோட்டால் நன்றாக சாப்பிடுவார்கள். அழாத குழந்தை உண்ணாது, உண்ணாத குழந்தை உறங்காது, கண்களில் ஒரு சொட்டு கண்ணீர் கூட வராமல் இருப்பவரைப் பார்த்து உங்கள் கைவரிசையை அவரிடம் காட்டவும்.

நம் உடலில் உள்ள அனைத்து உள் உறுப்பும் ஏதோ ஒரு சக்தி இல்லாமல் இயங்கவில்லை. அந்த அனைத்து உள் உறுப்பும் தன்னைத்தானே இயக்கி கொள்ளும் சக்தியும் அதனுக்கு இல்லை. இருதயம் எத்தனை காலங்கள் துடிக்கும் என்று எவராலும் திட்டமிட்டு கூற இயலாது. மரணத்துக்கு, நோய் முதல் காரணம் அதுவே முழுகாரணமும் ஆகாது. உயிர் என்ற தனிப்பொருள் உடலுக்குள் எந்த வடிவமாக உள்ளது. உயிர் தங்கும் ஆலயம் தான் இருதய கோசம். அங்கு இருந்து தனது சக்தியை மற்றைய உடல் உறுப்புகளில் பிரதிபலிக்கிறது. மற்ற உறுப்புக்கள் என்று சொல்வதைவிட, மூளையில் பிரதிபலிக்கிறது. இருதயத்தில் எண்ணுதல் மட்டுமே தொழிலாக இருக்கிறது. விஷயங்களை சேகரிக்கும் சக்தி மூளைக்கு மட்டும் தான் உள்ளது. மூளைக்கு கவன சக்தி, (மூன்று காலங்களையும் உணர்வதாக உள்ளது). இருதய உணர்வின் பிரதிபலிப்புதான் அனைத்து உணர்ச்சிகளும். உணர்ச்சியின் பிரதிபலிப்பு கோபம், சந்தோஷம் வருத்தம் மட்டும்தான். உயிரின் உணர்ச்சியை தேகம் முழுவதும் மயிர்கூச்சல், சிலுத்தல் என்ற பெயரால் உணரப்படுகிறது. சிறிய வயதிலே இப்படி சிலுப்பது உணரப்படும். ஆனால் காலப்போக்கில் முதுமை வயதில் உடல் சிலுக்காது, என்றும், உடல் உயிருடன் ஏதோ ஒட்டியும் ஒட்டாமலும் பட்டும்

படாமலும் பழகிக்கொண்டு இருக்கும் ஒரு நண்பன். ஆனால் ஒரு நாள் உடல் உயிரோடு உரசும்போது, உடலுக்கு ஒரு சக்தி பிறக்கிறது. அதை மயிர்க் கூச்சல் என்கிறோம். தனது காதலியுடன் காதலனுக்கு உள்ள நெருக்கம் எப்படி உணர்வு பூர்வமாக உணரப்படுகிறதோ அப்படி தான் அந்த உணர்வு உயிர் என்ற பொருள், சக்தியின் வடிவமாக இருப்பதால், பலவீனப்பட்ட உடல் உயிரிடம் உரசி சக்தியை உணர்ச்சிபூர்வமாக அனுபவிப்பதை உணர்கிறோம். மேகத்தோடு மேகம் உரசும்போது மின்னல், இடி, மழை பொழிகிறது. மோகங்கொண்டு ஒரு ஆண் பெண்ணுடன் உரசும்போது இன்பம் ஜெனிக்கிறது. கதறி அழும் பிள்ளையை தாய் கட்டித் தழுவும்போது அமுது பிறக்கிறது. அதைப்போலத்தான் உடல் உயிருடன் உரசும்போது ஏற்படும் சிலிர்ப்பு குதூகலம் என்று பொருள்படும். ஆனால் உயிர் உடலுடன் ஒரு நாளும் உரசுவது இல்லை. இது பழகவேண்டுமானால் தவம் செய்ய வேண்டும். அப்போது மட்டுமே அது சாத்தியமாகும்.

உயிருடன் உயிர் உரசும்போது மனிதன் குழந்தையாய் பூமியில் ஜெனிக்கிறான். உயிர் + உயிர் (உரசும்போது) = வெப்பமாக உயிர் வெளிப்படுகிறது. வெப்பத்தை வெளிப்படுத்தி உயிர் வெளியே செல்கிறது. அந்த ஒளி பொருந்திய உயிரே ஒரு திரவப்பொருளாக மாறும்போது உஷ்ணத்தை ஏற்படுத்திக் கொள்கிறது. உயிர் உயிருடன் உரசுவதை, உடலுடன் உடல் உரசுவதாக எண்ணிக் கொள்கிறோம். இந்த செயல் ஈடேற இருதயம் நன்கு ஒத்துழைக்கிறது. எனவே இருதயத்தில் உள்ள உயிர் தன் இனம் வளரவேண்டி, ஆவலுடன் தன்னை மற்றவனுக்காக விட்டுக் கொடுக்கிறது. தன்னை இழக்கும் முன் உற்சாகமாகவும், தன்னை இழந்த பின் திருப்தியும் ஏற்படுகிறது. உயிர் தன்னை விட்டுக்கொடுத்த அந்த சம்பவத்தின் பலனாய் உடலில் தளர்ச்சி, அசதி, உறக்கம் ஏற்படுகிறது. பிறகு மறுநாள் மீண்டும் புத்துணர்ச்சியுடன், தன்னை தயார் செய்து கொள்கிறது. எப்போது தன்னை தயார்

செய்து கொள்ள முடியவில்லையோ அப்போது தான் வலுக்கட்டாயமாக உயிரின் விருப்பம் சிறிதுமில்லாமல் இருக்கும்போது அதை பலாத்காரமாக கலவிக்கு அழைக்கிறது, இந்த சரீரம். உயிரின் இயலாமையை உணராத கொடியவன் கண்மூடித்தனமாக மாத்திரைகளை உண்ணுகிறான். இது எள்ளு புன்னாக்கு வைத்து பால்வளத்தை பெருக்குவது போன்ற முயற்சி தான். மாடு உடையுமே தவிர பால் வளம் பெறாது. பல ஆண்டுகளாக மழை இல்லாத நாட்டிலே, ஏரித் தண்ணீர் உள்ள வரைமட்டும் தான் உயிர் வாழ முடியும். குளங்கள் கூட ஒரு சிலகாலத்தில் அடிக்கின்ற வெய்யில் கொடுமையால் வற்ற ஆரம்பித்துவிடும். இந்த நிலையை பஞ்சம் என்று சொல்கிறோம். பிறகு உணவுப் பற்றாக்குறை, பசி, பஞ்சம், பட்டினி, நோய், களவு போன்றவைகள் ஏற்படும். பயிர்கள் பஞ்சத்தில் வாடுவது போல், தலையில் மயிர்கள் நரைத்துப்போகிறது. அதன் மினுமினுப்பு மாறிப்போகிறது. மனிதனைப் போன்று எந்த இனமும் சுய இன்பம் அனுபவிக்கவில்லை. கருவுற்ற பெண்ணுடன் கூடி, தனது உயிர் பொருளை இழக்க விரும்புவது இல்லை. தன்னால் இயலாத நிலையில் முயற்சிப்பது இல்லை. எந்நேரமும் அதே சிந்தனையுடன் இருப்பது இல்லை. உயிர்ப்பொருளை அநியாயமாக செலவு செய்யக் கூடாது, என்று எல்லா ஜீவனுக்கும் தெரியும். மனிதன் ஒருவனைத் தவிர. உயிர் இல்லாமல் வெறும் உடலை வைத்து எதையும் சாதிக்க இயலாது.

ஊறுகாயை பாதுக்காக்க உப்பு எவ்வளவு அவசியமோ, அதுபோலத்தான் உடலை பாதுகாக்க உயிர் பொருள் மிகவும் அவசியமானதாகிறது. மற்றைய அனைத்து காசு, பணம், வீடு, உறவு எல்லாம் சாடியும், மூடியும் போலத்தான். தண்ணீர் இல்லாமல் பூமி வறண்டு வெடிப்புற்றிருக்கும் ஊர் அழிந்த நிலை எப்படியோ? அப்படித்தான். சுக்கிலம் இல்லாமல் உடல் வறண்டு தோலில் சுருக்கம் ஏற்பட்டு இருக்கும் உருகுலைந்த நிலைமையினை முதுமை என்று வர்னிக்கிறேன். எது "தவம்" உடல் உயிருடன் சேர்ந்தே பலகாலங்கள் இருப்பது "தவம்".

தியானம், சமாதி இது உங்களுக்கு புரியாத பாஷை, அதனால் அறிவுக்கு விளங்காது எனவே, இதை மேலும் ஆய்ந்து சொல்ல முயற்சிக்கிேன். உடலுக்குள் உயிர் இருப்பதாக மனிதன் தன்னை அபிமானித்து கொள்கிறான். இந்த அபிமானம் தான் சாதாரணமாக உயிர் ஜீவன்கள் அனைத்தும் எண்ணிக்கொண்டு உள்ளது. ஆனால் உயிரிலே உடல் இருப்பதாக தன்னை அபிமானித்தல் தான் தவம். இப்படி நீண்டகாலங்கள் உயிரில் உடல் இருப்பதாக தன்னை அபிமானித்து பழக்கப்படுத்திக் கொண்டு வாழ்பவர்கள், இந்த ஒரு சுகத்தை தவிர உண்மையான சுகம் வேறு இல்லை என்று முடிவு செய்து கொண்டு விடுகின்றனர். இவர்கள் ஒதுங்கி வாழ்கிறார்கள். காரணம் நமது எந்த கருத்துக்களிலும் இவர்களுக்கு உடன்பாடு இருப்பது இல்லை. நாம் அனைவரும் உயிர் அணுக்களை உற்பத்தி செய்ய தெரியாதவர்கள், நமக்கு தெரிந்தவரை நன்றாக உயிர்பெருளை செலவு செய்துவிட்டு செத்துபோவதும், அடுத்த தலைமுறை ஆள சொத்து சேர்த்து வைப்பது மட்டும் தானே. "உயிரை மதிக்காதவனை உயிர் எப்படி மதிக்கும்". நோய்கள் மட்டும் தான் அதற்கு சரியான தண்டனை என இயற்கை முடிவு செய்துவிட்டது. இயற்கையை மாற்ற முயன்றால் இயற்கை சீற்றமடைகிறது, உடல் உபாதைகளுக்காக வேண்டி மருந்துகளை கண்டபடி சாப்பிடுவதினால், உயிர் சீற்றம் அடைகிறது. கோபமாக இருக்கும் நாயிடம் கோலைக்கொண்டு போகக்கூடாது. உயிரின் ஆவேசக்கணல்பட்டு சரீரம் பிடிமண் ஆகிறது. உயிரை உற்பத்தி செய்யும் அறிவுக்கு பெயர்தான் பிரம்மரகசியம் ஆகும். வேறு எதோ இருப்பதாக சொன்னால் எவரும் இந்த கருத்தை மறைப்பதற்காகத்தான் என கதை விடுவார்.

படைத்தவன் எதையும் அழிக்க விரும்புவதில்லை. படைக்கப்பட்டவன் தன்னைத் தானே அழித்துக் கொள்கிறான். அழிபவனைக் கண்டு வருத்தப்படுவதுமில்லை. என்னைப் பொருத்தவரை படைத்தவன் அவனுடைய வேலையில் ஒரு நிமிடம் கூட ஓய்வு இல்லாமல் இருக்கிறான். "மிகச் சிறந்த உழைப்பாளி படைப்பவன்தான்".

உயிர் பொருள் ஒன்றே உயர்பொருள். இது எனது தாரக மந்திரம். மற்றைய உயர்ந்த பொருட்களை எல்லாம் காக்க வல்ல சக்தியும் இதுவே. நம்மைப் படைத்தவன் கடவுள் என்ற நம்பிக்கையில் எவருக்கும் மாற்று கருத்து இருக்கவே முடியாது. அவர்தான் இந்தக் கடவுள். உனக்குள்தான் அந்த கடவுள் இருக்கிறான் என்று மறைமுகமாக சொல்லுகிறார்கள்.

கடவுளுக்கு உருவம் கிடையாது, "உருவமும் அரூபமாகமாகவும் உள்ள சக்தி". படைப்புக்கு ஆதி, (உயிர்) படைக்கப்பட்ட பொருள்கள் அனைத்துக்கும் தலைவனானவன், அவனே உனக்குள் இருக்கிறான். உள்ளே இருப்பவனைவிட்டு ஏன் வீணாக வெளியே தேடுகிறாய்.

## 23. "உயிர்தான் உனக்கு உரம்"

மக்களே காலத்தேவனுக்கு ஒரு சமாதிகட்ட வேண்டும் வாருங்கள். அதன் வழிவகைகளை சொல்கிறேன் கேளுங்கள். காலன் உங்களைக் கண்டு அஞ்சுவான் பாருங்கள். காலன் ஒரு கோழைதான். அவன் பலகீனமானவர்களை மட்டுமே தாக்குவான். பலம் இருந்தால் என்னுடன் மோதிப்பார்க்கட்டும். காலனை எதிர்த்து இதோ எனது சவால். காலைப் பிடித்து கதறினாலும் கட்டாயம் என் கேள்விக்கு பதிலை சொல்லியே ஆகவேண்டும். தான் பலமில்லாத கோழையாக இருப்பதனால் ஒருவனை பலகீனப்படுத்தி மரணத்தைத் தருகிறான். இல்லையெனில் எதிர்பாராத, விபரீத விபத்தினை ஏற்படுத்துகிறான். ஆனால் "காலன்" எதிர்பார்த்து தான் இவை ஏற்படுகிறது. காரணம் என்ன தெரியுமா? பலமானவர்களைத் தாக்க இது புதிய சூழ்ச்சி. தந்திரக்காரன் போடும் மந்திரங்கள் என் முன்னே தவிடு பொடி ஆகும் தானே. காலனை வீழ்த்தும் அஸ்திரத்தை நான் தருகிறேன். படைத்தவன் இருக்க இந்திரனே எதிர் நின்று தடுத்தாலும் கூட மன்னவனே மதிமயக்கம் விலக்கி நில்லும்,

ஒரு ஆலமரத்தின் ஒரே விதைக்குள்ளே ஒரு ஆலமரமே உள்ளது. இதை உனக்குள்ளே செரிக்கும்படி செய்ய உயிர் உரமாகும்."

உயிர்தான் உனக்கு உரம், அது,
இறைவன் உனக்கு தந்த வரம்,
ஞானிகள் பணிந்திட்ட சிரம், (தலை)
கரங்களை ஏற்றி நின்றால் வரம்
சுந்தரனே உந்தனுக்கு முதுமை இல்லை.
முதுமை இல்லாபேருக்கு மரணம் இல்லை."

இப்படி வாழ்கின்ற நாட்களை நீங்கள் வசந்தமாக மாற்றிக்கொண்டு வாழுங்கள்.

உயிர் தான் மிகப் பெரிய பொருள், உடல் மிக சிறிய பொருள், என்ற உண்மை விளங்குவதே ஞானம். உருவத்தில் உடல் பெரியதாகவும் உயிர் சிறியதாகவும் தெரிவது மாயை. இந்த மாய வலையில் மனிதன் மாட்டிக்கொண்டு நோய்களில் தவிக்கிறான். கன்னி வைத்த கள்வன், காமப்பேய்களின் தலைவன், இரக்கமற்ற அரக்கன், ஏமாந்தவருக்கு இராசாவானவன்! "காலன்"!

நீங்கள் உங்களுக்காக வாழக் கற்றுக் கொள்ளுங்கள்.

1. உயிர் அனுக்களை உற்பத்தி செய்து கொள்ளுங்கள்.

2. இறந்து போன உயிர் அனுக்களை வெளியேற்றுங்கள்.

3. உயிருடன் உடல் உரசியபடி எந்நேரமும் இருக்க பழகுங்கள்.

இப்படி சில நாட்கள் பழகினால் கூட அது வாழ்நாள் முழுவதும் உன்னைவிட்டு பிரியாமல் இருக்கும். இந்த நட்புத் தொடர குறைந்தபட்சம் அவனுக்கு உயிர் அனுக்கள் தேவை. அந்த உயிர் அனுக்களை கொண்டு உடல் இருந்தால் தான் உயிரில் இருந்து உடல் சக்தியை கிரகித்துக் கொள்ள முடியும். (இதுவே சுத்த ஒழுக்க நெறி) இது உடலை உயிர் என அபிமானம் செய்வதாய் பொருள். இதுவே காலப்போக்கில் உண்மையாய் ஆகிவிடுகிறது.

மேற்சொன்ன மூன்றும் இருப்பவனிடம் எமன் செத்து மடிவான். ஆள்வைத்து உயிர் பறப்பவனை ஒரு பெண்ணாக கூட மதிக்கமாட்டேன். "உயிர்தான் கடவுள்" என்பதுதான்

உண்மை.

மருந்து என்ற ஒன்று எப்போது தேவைப்படுகிறது என்றால் இறந்து போன உயிர் அனுக்களை வெளி-யேற்றுவதற்காக மட்டும்தான், உதாரணமாக மலம், சிறுநீர், ரத்தம், கிருமிகள், இவைகளை வெளியேற்றுவதற்கான ஆயுதம் தான் இது. தற்போது நடைமுறையில் உள்ள அனைத்து மருந்து மாத்திரைகள் செய்யும் அனைத்து வேலைகளையும் வேப்பமரத்தின் இலையும் மஞ்சளும் செய்து முடித்துவிடும். கலியுகத்தில் உணவுக்கு பதிலாக வந்த மாத்திரைகள் ஊரை ஏமாற்றும் வித்தை. இவைகள் தான் "ஏ" மாத்திரைகள், "பி" மாத்திரைகள், எனும் ஏமாத்திரைகள்.

## 24. விருப்பத்தின் மாறுதலே "விதி"யாகிறது

உயிர்தான் கடவுள் என்பதை ஒரு மனிதன், வாழ்நாளில் எப்போதாவது ஒரு நாள் உணர்ந்து தான் ஆகவேண்டும். அதுவரையிலும் நோய்களில் இருந்து மனிதனுக்கு விடுலையே இல்லை. வாழ்நாளை நரகமாக்கிக் கொண்டவர்களை பார்த்தால் வருத்தமாக உள்ளது. அவர்கள் படும் துன்பத்தில் உயிரை விட்டுவிடலாம் என்று கூட நினைக்கிறார்கள். அவர்களின் கண்ணீருக்கு எனது செய்தி ஒரு கைக்குட்டை. கருவறையில் இருந்து மனிதன் வெளிப்படுகிறான். அதற்கு முன்னே அந்த இடம் இதற்காகவே தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. யாருடைய உயிர் யாரிடத்தில் ஜெனிக்க வேண்டும் என்று முன் கூட்டியே முடிவு செய்யப்பட்டு, அந்த இடத்தை ஏற்படுத்தி இருக்க வேண்டும். அப்படியானால் விதி என்ற ஒன்று பிறப்புக்கு முன்பே முடிவு எடுக்கப்படுகிறது. பிறப்பை ஒன்று முடிவு செய்கிறது. பிறப்புக்கு முன்பே அது செய்கிறது. பிறக்க வேண்டும் என்ற விதி எனக்கு சற்று மூத்தவன். வாழ்நாளிலே ஆசைகள் அநேகம் வருவதுண்டு. படைத்தவனின் விருப்பம் மட்டும்தான் இங்கு ஈடேறுகிறது. உடல் விருப்பம் வேறு, உயிர் விருப்பம் வேறு, உடல் சரீர சுகத்தை தான் விரும்புகிறது. எனினும் நமது விருப்பத்துக்கு ஒருபோதும் தடை சொல்லாத சக்தி(உயிர்), இப்படி தனது

விருப்பத்திற்கு எந்த விதத்திலும் தடை போடாத விதியாக இருப்பதனால் அது உணரமுடியாமல் போகிறது. பாதிப்பு ஏற்படும் போது மட்டும் விதியின் பெயரை சொல்லி, மனிதன் சலித்துக் கொள்கிறான். இப்படி ஒரு ஆண்மகன் ஒரு பெண்ணை தனக்கென கற்பனை செய்து கொள்கிறான், அதுபோல் ஒரு பெண் தனது வருங்கால கணவனை இப்படியே கற்பனை செய்து கொள்கிறாள். ஆனால் அது நேருக்குமாறாக தடைபோடும் சக்தியாக அமைவதை விதி என்று சலிக்கின்றனர்.

விதி என்பது நமது விருப்பத்தைக் கேட்பது இல்லை. விதியின் விருப்பம் என்ன என்றுதான் உலகம் எங்கும் சோதிடரிடம் அருள்வாக்கு கேட்கிறார்கள். ஜோதிடர் என்ன விதிக்கு தரகனா? விதித்தவன் ஒருவனைத்தவிர மற்ற எவரும் அறிந்துகொள்ள முடியாத ரகசியம். படைத்தவனை பொருத்தவரை விதி என்பது ஒரு கற்பனை, மேலும் மன மாயைகளால் ஏற்படுத்தப்பட்ட கதாபாத்திரங்கள் மட்டுமே. அவன் மட்டுமே உண்மையான பரம்பொருள். தலைவனிடத்தில் ஓர் காதலிக்கு இருக்கும் நியாயமான உணர்ச்சிக்கு பெயர்தான் காதல். அதுவே இங்கு பக்தி என்று அழைக்கிறோம்.

1. காதல், கல்யாணம், கல்வி, குழந்தை, பேரன் - போன்றவைகள் இல்லறத்தானுடையது இல்லற ஒழுக்கம். சனாதனதர்மம். அங்கு இதுவே நியாயம்.

2. தியானம், தவம், பக்தி, ஞானம், முக்தி, சமாதி, தீட்சை, ஆசாரம் - இவைகள் துறவறத்தாருடைய ஆன்ம ஒழுக்கம். சன்யாச தர்மம், இங்கு இதுவே நியாயம்.

## 25. உயிரற்றவையே தீண்டத்தகாதவை

உயிர் இல்லாத எந்த பொருளும் தீண்டத்தகாதவையே. உயிர் உள்ள பொருள்கள் மட்டும் தீண்டத் தகுந்தவை. அற்ப உயிர்களை வருத்தி உண்ணுதல் பாவம். ஆடு, மாடு, கோழி போன்றவற்றை கொன்று தின்னுதல் ஒழுக்கமற்ற செயல்.

கரும்பிலிருந்து எடுக்கப்பட்ட, தீங்கு செய்யும் இயல்பு உடைய வெள்ளை சர்க்கரை ஒரு பாஷாணத்துக்கு சமமானது. இதை உண்பதால் வியாதிகள் உருவாகும். இரசாயணம் கலந்த உணவு, அலங்கார பொருட்கள் பயன்படுத்துவது மிகவும் ஆரோக்கிய கேடு. ஆயிரம் வருடங்களுக்கு மேல் வாழும் பனைமரச்சாற்றிலிருந்து உற்பத்தியாகும் பனைவெல்லம் மிகவும் உயர்ந்தது. இதைபோல வேறு என்ன உண்ணுதல் உத்தமம் என்று அறிந்து உண்ணப்பழகு. இல்லையெனில் வாழ்க்கை பொருள் அற்றதாய் போகும். ஏதோ ஒரு தானியத்தை நம்பியே உயிர் வாழாதே. உலகிலே பல்லாயிரக்கணக்கான தானியங்களும் உனக்காகத்தான் படைக்கப்பட்டுள்ளன. உனது விடாபிடியான பழக்க வழக்கங்களுக்கு அடிமையாக இருக்கிறாய். நீ ஏமாந்து போவதற்குள், உன்னை நீயே மாற்றிக்கொள்ள முயற்சி செய்வாயா? இது காலம் கடந்த என் ஞானம். உனது உயிருக்கு உகந்ததை, தேர்ந்தெடுத்து உண்ணப் பழகு.

## 26. மாயையின் மயக்கமே நாகரீகம்

தன்னை சுற்றி உள்ள சூழ்நிலை சரியில்லாத போது தன்னுடைய சூழலை உணர ஜோதிடம் பார்க்க வேண்டிய அவசியம் இருக்காது. உலகம் கெட்டுத்தான் போய் இருக்கிறது. இதிலே உள்ள மனிதனுடைய மனம் கெட்டுப் போகாமல் பாதுகாக்கப்பட . வேண்டியது. மிகவும் அவசியமாகும். காட்சிகளை கண்ணால் காணலாமே தவிர காட்சிகளுக்குள் நீயும் ஒரு கதாபாத்திரமாக உன்னை உனக்குள்ளே சித்தரித்துக் கொள்ளாதே. கண்ணால் பார்ப்பது வெறும் காட்சிகள் மட்டும் தான். காட்சிகள் எல்லாமே காண்பவனை ஏமாற்றத்தான், கூத்து நடக்கிறது, கூத்து ஆடுபவர்கள் எல்லோருமே வேஷம் கட்டித் தான் ஆகவேண்டும், வேஷம் போடாமல் எதார்த்தமாக நிற்பவனை, தன்னுடைய ஆட்டத்தில் சேர்த்துக் கொள்ளாது இந்த உலகம். உலகத்தில் லாபம், நஷ்டம், பிறப்பு, இறப்பு, காதல், கல்யாணம். இவைகள் மட்டும்தான். லாபம், நஷ்டம் பார்ப்பவர்களுக்கு பாவமும், புண்ணியமும் கிடையாது.

இவர்கள் செய்யும் எல்லா பாவங்களுக்கும் கடவுள் துணை நிற்பதாக கற்பனை செய்து கொள்கிறார்கள்.

பொருள் தேடுதல் ஒன்றை மட்டுமே வாழ்க்கையாக எண்ணி வாழ்கிறார்கள். காசைக் கடவுளாக எண்ணுபவர்கள் எவரும் மேலை நாடுகளில் கூட இல்லை, இது இந்தியாவில் மட்டும்தான். அந்த காசுகளைக் கொண்டே கடவுளையும் வாங்க துணிகிறார்கள். செத்துப் போனவர்களை கடவுளாக எண்ணும் இவர், உயிருடன் இருக்கும் ஒருவரை கூட மனிதனாக மதிப்பது கிடையாது. இந்த உலகத்தை விட்டு செத்து தொலைந்தவனும் கடவுளும் ஒருவன் என்றால் இவர்களுடைய கற்பனையில், கருத்தினில், கடவுள் கண்ணை மூடிக்கொண்டு உறங்கிக் கொண்டு இருக்கிறானா?

ஒரு நாட்டினுடைய கலாச்சாரம், பண்பாடு, பழக்க வழக்கங்கள், பாரம்பரியம், நாகரீகம் எல்லாம் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்கிறது. இவை எவைகளுக்கும் நிலையான தன்மை இல்லை. ஒரு நாட்டிடம் மற்ற நாட்டு மக்களுக்கு உண்டான மோகமே அதன் காரணம். எங்கு ஒரு மனிதன் மனிதனாக மதிக்கப்படுகிறானோ, மனிதனை எங்கு மனிதன் நேசிக்கிறானோ, எங்கு ஓர் தனிமனித வாழ்வில் ஒரு தனிமனிதனுக்கு உள்ள அடிப்படை குறைகள் களையப்படுகிறதோ, அதுவே சிறந்த நாகரீக உலகம் ஆகும்.

ஒரு நாடு அழிவதற்கு முன்னாள் அந்த நாட்டினுடைய கலாச்சாரம் தான் முதலில் அழியும். பிறகு அந்த நாட்டில் வேறு ஒரு நாகரீகம் தோன்றும். பண்பாட்டையும், பழக்க வழக்கங்களையும், காலத்துக்கு தகுந்தார் போல் மாற்றிக் கொள்வதில் தவறு இல்லை. நமக்கென ஓர் தனித்தன்மை வேண்டும். உதாரணமாக, பட்டினியால் செத்துப் போனவனுக்கு சோறு வைத்தால் சாப்பிட்டு விட்டுப் போவான் என்ற நம்பிக்கையில், ஊறிய மனிதன் உயிருடன் இருக்கும்போது சோறு போட்டு இருந்தால் செத்துப் போயிருக்க மாட்டானே. இப்படி செய்து இருந்தால் புண்ணியம். அதுபோல தன்னைப்பற்றிய சிந்தனை எந்த மனிதனுக்கும்

இருப்பதில்லை. தன்னை அறிவதில் தனக்கு ஆர்வம் இருப்பதும் இல்லை. நாட்டு நடப்பை சிந்திப்பதாக கதைவிடுகிறார். தன்னை அரியாதவன் உலகத்தை அறியமாட்டான். தன்னை கவனிக்க கூட தனக்கு நேரம் இல்லை என்று, தன்னை தானே உதாசீனப்படுத்தும் இவர் தனக்கு நோய் ஏதேனும் வந்தால் அலறுகிறார்.

## 27. "சம்மதத்தார் வாழ்வியல் பயணம்"

தினமும் செய்தால் தவம், அதை என்றோ ஒரு நாள் செய்தால் தியானம், ஒருக்கணமும் அதை மறவாது இருந்தால் பக்தி. அது ஊதுவத்தியைப்போல் உள்ளேயே புகைந்து கொண்டே இருக்க வேண்டிய விஷயம். காற்றிலே அதன் மணம் பரந்து வீசுவது போல நமது அன்றாட செயல்களிலும் பேச்சிலும், நடத்தையிலும், எண்ணங்களிலும் பக்தியின் விஸ்வாசம், வத்தியின் மனத்தைப் போல எங்கும் பரவும். இந்த வழிபாட்டு முறையை உயிராகிய கடவுள் சரீரமாக்கப்பட்ட ஆலயத்தில் இருந்து கவனிக்கிறான். அந்த பக்தி உண்மையா, பாசாங்கு தனமா என்று அறிவான். எந்த உயிரையும் ஹிம்சிக்காமல் வாழும் அகிம்சையான வாழ்வு வாழ முயற்சி செய்யுங்கள். இப்படியே "சம்மதத்தார்" வாழ்வியல் பயணம் செய்யும்படி ஆணையிட்டேன்.

உயிர் வேறு அல்ல, உயிர் அணுக்கள் வேறு அல்ல. அணுக்களின் செயல்களை நம்மால் உணர முடிவதில்லை. அணுக்களின் செயல்களுக்கும் உடலின் செயல்களுக்கும் சம்மந்தம் உள்ளது. அணுக்களைக் கொண்டு ஒரு உறுப்பை உருவாக்கம் செய்ய முடியும். முழு உடலையும் உருவாக்க முடியும். எல்லாவற்றிற்கும் காரணம் உயிர் அணுக்கள் மட்டும் தான். வேர் அழுகிப் போனால் மரம் செத்துப் போகும், உங்களுக்கு தெரியுமா? இதை தான் "விந்துவிட்டவன் நொந்து கெட்டான்" என்பது பழமொழி. வாழ்க்கைக்கு மூலிகைகள் பெரும் அளவில் கைகொடுத்து உதவி செய்கிறது. "மருந்தே உணவு, உணவே மருந்து" என்ற அறிவார்கள் இல்லை. வாலிப பருவத்தில் மிதமிஞ்சிய

விளையாட்டால் உடல் சத்து இழந்து போய் வெறும் சக்கையாகி விடுகின்றது. இப்பிறவியில் வாலிப பருவம் ஒன்றை மட்டுமே வசந்தகாலமாக கருதுகிறார்கள். எதையும் செய்வதற்கும், எதையும் உண்பதற்க்கும், எங்கு வேண்டுமானாலும் போவதற்கும் உள்ள திறன் உடைய காலம் இதுவே. இப்பருவத்தைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும், என்பதற்காகவே இவ்வுலகில் கோடிக்கணக்கானவர்கள் முயற்சி செய்து எல்லாம் வீணாகிவிட்டது. கடைசியில் தலைமுடிக்கு சாயம் அடித்துக் கொள்ளுதல், பல்லு கட்டிக் கொள்ளுதல், கண்ணுக்கு கண்ணாடி, காதுக்கு எந்திரம், நடக்க முடியாதவருக்கு வண்டி வாகனம், வாயில் சுருட்டு நாற்றத்தை மறைக்க வாசனை திரவியம், உதடுக்கு சாயம், கண்ணுக்கு மை, மீசைக்கு மைப்பூச்சு. கையாலாகாதவர்க்கு கைத்தடி போன்று மனிதன் முற்றிலும் தன்னை ஒரு எந்திரமாக்கிக் கொள்கிறான். எந்திரமாக மாறிப்போய் எந்திரங்களுடனே வாழ்ந்து எந்திரமாகிவிட்ட, எந்திர மனிதனுக்கு நான் சொல்லும் "கிழவனை குமரனாக்கும் வித்தை" ஏற்றுக் கொள்ள முடியாது என்பது எனக்குத் தெரியும்.

உங்களுக்கு தெரிந்ததெல்லாம் தொலைக்காட்சி பெட்டி, மின் விசிறி, குளிர்சாதனப்பெட்டி, வண்டி, வாகனங்கள், மின்சாரம் தவிர வேறு எதுவும் இல்லை. மரங்களில் உள்ள வேர்களில் உயிர் அணுக்கள் இறந்து போன பிறகு அதுவே உள்ளேயே தங்கி விஷமாக உருவெடுக்கிறது. இதைத்தான் நான் வேர் அழுகுவதாக உதாரணம் தந்துள்ளேன்.

முதல் போடாமல் தொழில் செய்ய முடியாது. முதலில் போட்டது தான் பிறகு லாபத்தை ஈட்டித் தருகிறது. ஆதியான சுக்கில தான் உயிர் எனப்படுவது, அது தந்தையிடமிருந்து பெறப்பட்டதால், தந்தையே பிரம்மாவாகும். எனவே தங்கிய இடம் தாயின் மடியில், அதாவது தந்தையாரின் சுக்கிலம் உயிராகவும், தாயின் ஸ்ரோனிதம் தேகமாகவும் வடிவெடுக்கிறது. உடலை விட்டு உயிரும், உயிரைவிட்டு உடலும் தனித்து இருக்க முடியாது. சுக்கிலமும் +

ஸ்ரோனிதமும் = சிவனும், சக்தியுமாக ரூபம் எடுத்து நிற்கிறார்கள். இந்த இருவேறு கலவையில் உற்பத்தியான மனிதன் எல்லை இல்லாத இன்பத்தில் ஜனித்தவன். எனவே எல்லை இல்லாத, எல்லை கடந்த இன்பத்தை அடைய வேண்டி ஒவ்வொரு ஜீவனும் தனது வாழ்நாளில் முயன்று, அந்த இன்பத்தை ஒரு நாள் கண்டிப்பாக அடையும். அப்படி அடைந்து அனைத்துமே மகிழ்ச்சியை கொண்டாடி மகிழ்கிறது. தான் மட்டும் சாப்பிடுவது, தான்மட்டும் மகிழ்வது என்று இல்லாமல் பிறரையும் அழைத்து மகிழ்ச்சியையும், பகிர்ந்து கொள்கிறார்கள். எவனும் இந்த பூமியில் பாவம் செய்ததால் பிறக்கவில்லை. அப்படி ஒரு பாவ மூட்டையை எந்த தாயும் தன்னிடத்தில் சுமப்பதாக எண்ணுவது இல்லை. கடவுளே அனைத்துக்கும் காரணமாக இருக்கும்போது இவன் எப்படி பாவம் செய்திருக்க முடியும். பாவி என்பவன் எவன் தெரியுமா? இப்பிறப்பில் தனது வாழ்க்கையில் தான் சந்தோஷப்படத்தக்க எவ்வளவோ விஷயங்கள் இருந்தும். அதில் எந்த ஆனந்தத்தையும், அனுபவிக்காமல், வருந்தத்தக்க ஏதோ நிறைவேறாத ஆசையை எண்ணி வேதனை கடலில் ஆழ்ந்து போனவன். குற்ற உணர்வுடனும், மனவேதனையுடனும், வாழ்பவனே உண்மையில் பாவியாவான். "உயிரை கடவுள்" என்று பாவிக்க தெரியாதவனே பாவி. ராஜாவுக்கு கோமாளி வேஷம் எந்த வகையிலும் பொருந்தாது. உயிரை கவனத்தால் உணர்பவனுக்கு சரீரம் ஒரு பாத்திரமாக தரப்பட்டு உள்ளது. இந்த மண்கலயத்தை பொன்னாக மாற்றும் வித்தையை விட்டுவிட்டு, பின் மண்ணோடு மண்ணாக மண்கலயம் கலந்து போகிறது. எண்ணங்களில் புதுமை இருக்கலாம். உண்மை இருக்க வேண்டியது மிகவும் அவசியம். எந்த சட்டத்துக்கும் மனிதன் கட்டுப்படுவது இல்லை. கொள்கை இல்லாமல் வாழ்பவனே குற்றம் செய்கிறான். குற்றம் செய்பவனை தண்டிக்கும் முழு அதிகாரம் மனசாட்சிக்கு மட்டுமே உள்ளது. ஆண்டவனுக்கு கூட அந்த அதிகாரம் அரசனை விடவும் குறைவுதான். மனதுக்கு சாட்சியாக இருப்பவனைதான் "விதி" என்கிறோம். இந்த விதியை மதியை தவிர வேறு எந்த ஆயுதத்தாலும் வெல்ல முடியாது.

அறிவு உயிரில் ஆழ்ந்து ஐக்கியமாகிய நிலையை "ஞானம்" என்கிறோம். அந்த இடத்திலேஅது நிலைத்து நின்றுவிட்டால் அந்த மீளாத நிலைக்கு பெயர் சமாதி. தன்னிடத்தில் தான்பெற்ற இன்பத்தை, ரகசியத்தை உபதேசிப்பது "தீட்சையாகும்". அறிவு இல்லாத மனிதன் எங்குமில்லை. அறிவை எப்படி இயக்குவது என்று அறியவே குருகுலவாசம் பயன்படுகிறது. ஒரு மனிதனுடைய அறிவை கூர்மைப்படுத்துவது என்பது ஆசிரியரை தவிர வேறு எவராலும் முடியாது. அறிவை இயக்குவதற்காகவே குருமார்கள், பாரம்பரியமாகவும் தேவ தூதர்களாகவும் பூமியில் படைக்கப்படுகிறார்கள். குருவை சாராதவனின் அறிவு மழுங்கிப் போகும். மழுங்கிய அறிவினால் தனக்கும் பயன்படாது, உலகத்துக்கும் பயன்படாத பதர்போல், பிறர் தூற்றும் போது பறந்து போவான். பச்சை மண்ணை கொண்டு வந்து தான் பாத்திரம் பண்ண முடியும். ஓட்டைச் சட்டியையும், உடைந்த பாத்திரத்தையும் குயவனால் மட்டுமல்ல, எந்த குருவாலும் ஒட்டவைக்க முடியாது.. அறிவு முற்றிலுமாக மழுங்கிப் போனவன் தன்னை குருவாக தானே தன்னை அபிமானித்துக் கொண்டு வேஷம் போட்டுக் கொள்வான். இவன் கோடைகாலத்தில் வருகின்ற வேர்"குரு"வாகும். விலை உயர்ந்த சீமாட்டிகளுக்கும், பேராசைக்காரருக்கும் குல"குரு"வாக விளங்குவான். மனிதர்கள் மதம் பிடித்து அலைகிறார்கள். இவர்கள் எவருக்கும் உண்மை என்பது சிறிதும் தெரியாது. தெரிந்தவர்கள் எவரும் சொன்னது இல்லை. **"கண்டவர் விண்டதில்லை விண்டவர் கண்டதில்லை".**

எந்த உயிரும் தன்னுடைய பலத்தை இழப்பதை என்னால் ஏற்க முடியவில்லை. இது இயற்கைதான் என்று என்னால் ஏற்றுக் கொள்ள என் அறிவு மறுக்கிறது. இறந்தவனை நான் எழுப்புவேன் என்று சொல்லவில்லை. உடலை உயிராக மாற்றும் வித்தை மிகவும் எளிய வித்தைதான். எந்த அளவுக்கு எளியது என்றால் சாட்டையை சுற்றிப் பம்பரம் விடும் நேரத் தானாகும். கணநேரக் கல்வி,

காலம் முழுவதும் நோயற்ற வாழ்வு, காலங்களையும், வயதையும், விதியையும், நோயையும், பயத்தையும், மரணத்தையும் கடந்து வாழ்வது. **"கணநேரக் கல்வி"தான், நான் நடந்து வந்த பாதைகள் வெகுதூரம்தான், நான் கண்டெடுத்த மாணிக்கத்தை மக்களினுடைய பாத கமலத்தில் சமர்ப்பிக்கிறேன்.** நான் சொல்வது எல்லாம் உண்மைதான் என்பதை உங்கள் உயிரே அறியும்."

நான் தேவ்தூதன் அல்ல, தேவனும் அல்ல, வானத்தில் மின்னுகின்ற நட்க்ஷத்திரமும் அல்ல. உயிர் மாத்திரமே நான், உயிரைத் தவிர வேறு எதுவும் இல்லை. உயிர்கள் வாழவேண்டி சாகும் அளவுக்கு முயற்சி எடுக்க நான் தயாராகவுள்ளேன். உயிரைக் கொடுத்தும் உயிரைக் காப்பாற்ற துணிவேன்.

மாமிசத்தை உண்பவனுக்கு "உயிர்தான் கடவுள்", என்பது எப்படி விளங்கும். அப்படி அதை அறிய முற்பட்டால் அவன் மனசாட்சியே அவனை கொன்றுவிடும். எனவே அவர்கள் அறியாமல் இருப்பதே உத்தமமாகும். பிறர் தேகத்தை அதன் விருப்பமில்லாமல் தொடுதல் அனாசாரம், ஆசாரம் இன்மை, பாவம் சூழும், **நூற்றுக்கு 5% வீதம் பேர்கள்** மட்டுமே புலால் மறுப்பு, **புலால் உண்ணாமை, போன்ற கொள்கையுடன் வாழ்வார்கள். ஏனையோர் அசைவர்கள் ஆகும். இந்த 95% பேரும் இந்த சாஸ்திரத்தை கற்க முற்பட்டால் அவர்களுக்கு அவதி வரும்.**

## 28. உயிர் மருந்தெனும் அமிர்தம்

உடலில் எலும்பு, தோல், இரத்தம், ரோமம், குடல், மூளை, பற்கள், நகம், கருப்பை, சிறுநீர்பை, நரம்புகள் எல்லாம் எப்படி உண்டானது என்று யோசித்துப் பாருங்கள். சுக்கிலமும் ஸ்ரோனிதமும் தங்கி சிலகாலம் கழித்து ஏற்பட்டது இந்த அவயங்கள் அனைத்தும்.

உதாரணமாக ஒரு மாங்காயை 10 நாட்கள் மூடி வைக்கும் போது, மிகுந்த சுவையுடைய ஒரு பழமாக

வடிவெடுக்கிறது. மாங்காய் புளிப்பு பழுத்த பிறகு இனிப்பு, அதுபோலத்தான் உடலில் உள்ள ஆதியான விந்து என்று சொல்லப்பட்ட சுக்கிலம் தங்கிய பிறகு தியானம் பழக வேண்டும். அதாவது தவம். "தவம்" என்றால் என்ன? எப்படி செய்ய வேண்டும்? எங்கு செய்ய சிறந்த இடம்? அதனால் பயன் என்ன? எதை நினைத்துக்கொண்டு இருக்க வேண்டும்?

நான் தரும் காயகபத்தை (உயிர் மருந்தெனும் கற்ப மருந்து சபையின் பாதுகாப்பிலுள்ளது) உண்டுவிட்டு பால் அன்னம், பழம் அல்லது மோர் அன்னம் சாப்பிட்டுவிட்டு உட்கார்ந்து தியானம் செய்யவும். தாயின் வயிற்றில் குழந்தை எப்படி அமர்ந்ததோ அப்படித்தான். குழந்தை, தாயின் வயிற்றில் எவரின் முயற்சியினாலும் உயிர் வளருவது இல்லை. எல்லாம் இயற்கைதான். மனதை ஆசாபாசங்களுக்கு இடம் கொடுக்காமல் எதார்த்தமாக இருப்பதே நன்று. கை அடக்கம், வாய் அடக்கம், மன அடக்கம், கால் அடக்கம், கண் அடக்கம் எல்லாம் அடங்கிய நிலைதான் நீ உன் தாய் வயிற்றில் செய்த "தவம்". அதையே மீண்டும் ஒருமுறை செய்யப் பழகு. கற்பம் என்ற உயிர் மருந்தை உண்டால் உடலை சுக்கிலமாக மாற்றும். வியர்வை, உமிழ்நீர் கூட சுக்கிலமாக மாறிப்போகும். 100 வயது கிழவனுக்கும் உடலில் சுக்கிலம் இல்லை என்பதுதான் ஒரே குறை. அது இருந்து உற்பத்தி ஆகும் பட்சத்தில் இவன் ஒரு வாலிபன் தான், இதில் எந்த ஐயமும் இல்லை. உடல் தளர்ந்ததுக்கும், ரத்தம் சுண்டியதர்க்கும், கூட காரணம் சுக்கில பற்றாக்குறைதான். சிலர் இளமையிலேயே முதுமைப்போல் இருப்பதற்கு காரணமும் இதுவே. 100 வயது கிழவனும் போகம் செய்ய தகுதி உடையவனே. தகுதியுடைய எவரையும் நான் அவர்களுக்கு கட்டுப்பாடு விதிக்கவில்லை. எனினும் உற்பத்திக்கு வழியை அறிந்துகொள். "இறைக்கும் கிணறுதான் சுரக்கும்" என்ற வியாக்கியானம் சுரப்பு நின்று போனவர்க்கு தேவையில்லா பழமொழி. இதை உடலில் தக்கவைத்து கொள்ளவும். தன்னை முதியவன் என்று தாழ்மையாக என்னுபவர் பயன் பெறுவது கடினம். தீயில் வைத்து எரித்தாலும் என் நெஞ்சம் வேகுமோ?

ஓர் ஆண்டு தவம் செய்தால் போதுமானது. புதிய சரீரம், திடகாத்திரமான சரீரம், தங்கத்தை ஒத்த ஜொலிப்புடனே அழகிய தேகத்தை, கருமையான ரோமங்களுடன் மீண்டும் ஓர் ஜனனம் எடுப்பீர்கள். செத்தவன் எழுந்தது போல் "மறுஜெனனம்" செத்து பிழைத்தவன் இவனே, என ஜகம் போற்றும்.

## 29. "கடவுளுக்கு தெரிந்தது மனிதனுக்கு தெரியாதது."

மூன்று விஷயங்கள்

1. இறப்புக்கு பிறகு என்ன ஆவான் என்பது

2. பிறப்புக்கு முன்பு எப்படிப்பட்ட நிலையில் உயிர் இருந்தது.

3. இந்த உடல் எப்படி உற்பத்தி ஆனது.

மேற்கண்ட இரகசியம் எல்லாம் தெள்ளத் தெளிவாக அனுபவித்து அறிந்து கொள்ளும். ஒருவன் இந்த நிலையில் பசுவை ஒத்த குணமுடையவனுக்கும் ஆணவம் ஏற்பட்டு போய்விடுகிறது. பிறகு அந்த ஆணவம் அவனுக்கு எமனாக மாறிப்போகும். ஆகவே கடவுளை, இயற்கையை, உயிரை நிந்தனை செய்யாதே. இறந்து சில நாள் கழித்து கண்விழிப்பேன் என்று சொன்னதுவும் இந்த நிலையில் இருந்துதான். உயிருடன் சொர்க்கம் போக முயன்ற மகாபலியும் இப்படித்தான். ஏனைய அசுரர், தேவர்களும் இதையே பின்பற்றினார்கள். நீண்ட நேரம் உட்கார்ந்தால் கால் மரத்துப் போவதும் சுக்கிலம் குறைவதால்தான். என்னைப் போல் இவ்வளவும் வெளிப்படையாக சொன்னது ஒருவரும் இல்லை. இதை கடவுள் ஆராதனை போன்று கதைவிடுகிறார்கள். ஒவ்வொருவனும் இந்திரனாகத்தான் வடிவெடுக்க வேண்டும் என்று சென்றானே தவிர இந்திரனை காண செல்லவில்லை. இந்திரனை எண்ணி தியானித்தால் அவனை ஒத்த தேகம் பெறுவர். இப்போது புரிகிறதா? எதை நீ நினைக்கிறாயோ, அதுவாகவே நீ ஆவாய். கடவுளை நினைத்து தவம் செய்தால்

அவனை ஒத்த திரு உருவம் பெறுவாய். வேண்டிய வரத்தைப் பெறுவதும் இப்படித்தான்.

சூழ்ந்த வினையே சூழ்நிலைதான், அதை ஊழ்வினை என்கிறார்கள். தன்னால் செய்யப்படும். தன்வினையை கூட செய்வினை என்று சொல்லித் திரிகிறார்கள். கடவுளிடத்தில் கூட நியாயமான பக்தி தேவை. மூடத்தனமாக நீ பேசுவதை எப்படி கடவுளால் ஏற்றுக்கொள்ள முடியும். எவனோ ஒருவன் செய்த தீவினை உன்னை வந்து எப்படி பாதிக்கும்.

நோயாளிக்காக மருத்துவன் மருந்துன்ன முடியுமா?

## 30. "விதியில் இருந்து விதித்தவன் வரை ஒரு நெடுந்தூரப் பயணம்"

நல்வினை என்றும், தீவினை என்றும் இருவினைகளும் நாம் செய்வது. இவையால் பாவம் என்றும் புண்ணியம் என்றும் இருவினைகளும் புகை மண்டலம் போல் நம்மை சூழ்கிறது. நன்மையும் தீமையும் பிறர் செய்ய நம்மை வந்து ஒருநாளும் சாராது விலகும்.

நல்வினை + தீவினை = விதி என்று பெயராம். விதித்தவனை பொருத்தமட்டில் விதி என்பது இல்லை. விதியைப் பொருத்தமட்டில் விதித்தவனுமில்லை. விதி விசாரத்துக்குப் பெயர் கிரஹவிசாரம். விதியை நம்புபவருக்கு காலதேவனே கடவுள் எனப்படுவான். பாவத்தால் பழிவந்து சேருகிறது. புன்னியத்தால் மகிழ்ச்சி வந்து சேருகிறது. ஆனால் எவையும் நிரந்தரமானது இல்லை என்பதுதான் இவர்களின் நம்பிக்கை. அதாவது சோதித்து திடம் செய்து கொள்ளவேண்டிய சாஸ்திரம், சோதிட சாஸ்திரம், என்று அழைப்பர். விதியை முன்கூட்டியே உணர்வது வாடிக்கை மனிதர்களின் வேடிக்கை செயல். செல்லுகின்ற திசையை நாம் முன்கூட்டி அறியவும். புத்தி, சக்தியாகப்பட்டது நமக்கு பாதகமா, சாதகமா என்பதையும். சாதகத்தை கொண்டு கணக்கிட்டு சாதக பாதக பலன்படி பதமாக நடந்து கொள்ளுதல், அதிசாமர்த்தியமாம். எல்லாம் கடவுளின் செயல்

என்ற நம்பிக்கைகள் ...வர்களுக்கு இல்லை. விதியை எப்படி வெல்லுவது ...என்ற தந்திர சாஸ்திரம். கால தேவ பரிவாரங்...ளுடைய ஒவ்வொரு அசைவையும் கவனித்து மதி நட...பதாலும், கிரஹ தேவதையை தனக்குள் ஆவாகனம் செய்து கொண்டு, அஞ்சியவர் முன்னே நின்று திரிகால வர்தமானங்கள் செய்வது சோதிடமாகும். அதாவது நேற்று, இன்று, நாளை எனப்படுபவை மூன்று காலமாகும். ஆகாசம், அந்திரம், பூமி என்ற மூன்றையும் அடக்கி ஆளுவது கிரஹங்களே ஆகும் என்பர். மனம் விரக்தி உற்றவர் விதியின் பெயராலேயே விதித்தவனை தொழுவது வழக்கம். கடவுளின் பெயரால் அர்சிப்பது விருப்பமற்றது. கால தேவன் போடும் கைவிலங்கே இங்கு கல்யாணம் என்பதுவாம். மணம் செய்து கொள்ளும் மணமகன், மணமகள் இருவரின் விருப்பத்தைவிட காலதேவனின் சம்மதமே முதன்மை நீதிமன்றம். இவனால் புறக்கணிக்கப்படும் திருமணங்களை மக்கள் எவரும் ஏற்றுக்கொள்வது இல்லை, காலதேவனான "எமனுக்கு" இருக்கும் மரியாதையில் கடவுளுக்க நூற்றில் ஓர்பங்கு கூட இருப்பது இல்லை, என்பது தான் சமயத்தோரின் வருத்தமாகும். சிவனைக் கண்டால் எமன் நடுங்குவான். ஆனால் நம்மைக் கண்டால் ஏறி (மிதிக்கிறான்) அழுத்துவான். இவன் சூழ்ந்து அழுத்தும் ஆற்றல் பெற்றவன். சூழ்நிலையை உருவாக்குபவன். சந்தர்ப்பமும், சூழ்நிலையுமே தான் மனிதனுடைய வினையாக உருவெடுத்து, சரீரமாக நிற்கிறது. குறிப்பாக ஒரு உதாரணம் சொல்லுகிறேன், ஒரு ஞானி தான் உறங்கி கொண்டு இருக்கும்போது ஒரு கொசு வந்து அவரைக் கடிக்க, அதை அடித்துக் கொன்று விட்டாராம். இப்படி மாதத்திற்கு 3000 கொசுக்களுக்குமேல் அடித்தால், இவருக்கும் மற்றவருக்கும் என்னதான் வித்தியாசம். ஜீவகாருண்யத்தை இவர் பேசுவது எந்தவிதத்தில் பொருத்தமானது. இப்படி ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி, அதற்கு இவனே சாட்சியாக நின்று ஊழ்வினை சூழ வைப்பான். ஒருவனை வருத்துவதற்காக எவரின் அனுமதியையும் பெற வேண்டியது இல்லை. கடவுள் காலதேவனை வைத்து தெருக்களிலே கூத்து நடத்துகிறார்.

உயிருக்கு ஒன்பது வாசல் நவத்துவாரங்கள் தேவகிரகங்கள் மொத்தம் 9 அதில் ஒவ்வொன்றுக்கும் 9 திசையும், 9 புத்தியும் மொத்தம் = 9 X 9 = 81 திசா புத்திகளும் மாறி மாறி வரும். எப்போது மனிதனுக்கு ஒரு திசையும், ஒரு புத்தியும் ஏற்படுமோ அதுவரை, இவைகளின் காலக் கொடுமைகளுக்கு எல்லையே இல்லை. சன்மார்க்கம் ஒன்றே மனிதன் செல்ல வேண்டிய அருள் திசை, பொருள் திசை, ஞான திசை. ஜீவகாருண்யம் ஒன்றே நிலையான புத்தி உடையவை. அருட்புத்தி, பொருட்புத்தி, ஞானபுத்தி, காற்றும், மழையும் திசைமாரி திசைமாரி ஒரு குறிப்பிட்ட காலங்களில் மட்டும் இருந்து மறையும். காலங்களின் மாற்றங்கள் வேனிர்காலம், எனவும் அதில் வெப்பகாற்றும் குளிர்காற்றும் மாறி மாறி போவதுபோல், விதி என்ற திசையும் புத்தியும் மாறி மாறி அடிக்கிறது. எந்த காற்றுக்கும் அசையாத மலைபோல் இந்த தேகம் கிடக்க உயிருடன் பழகு, அப்படி இல்லாதவரிடம் விதி வந்த விளையாடும்.

## 31. "உயிர் எனும் மஹா சக்தியிடம் மனம்"

மனம் என்னும் கடலிலே எண்ணங்கள் என்னும் அலைகள் ஓயாமல் அடித்துக்கொண்டுதான் இருக்கும். மனம் குழப்பம் அடையும்போது சூறாவளி அலைகளாக கூட எழும்பும். கடலுக்கு அமைதி என்பது எப்போதும் இருப்பதில்லை. அதைப்போலத்தான் மனதில் அமைதி என்பதுவும். கரையில் நின்று கிளிஞ்சலை பொறுக்குபவர்களை மட்டும்தான் இந்த அலைகள் பயமுறுத்தும். ஆனால் நடுக்கடலில் உள்ள அமைதியை கரையில் நின்று வேடிக்கைப் பார்ப்பவரால் உணரமுடியாது. நடுக்கடலில் சலனம் அற்ற அமைதி. ஜலப்பிரவாகத்தில் தோன்றும் நீண்ட அமைதி, ஆழம் செல்ல, செல்ல அமைதி அதிகமாகும், அதைப்போலத்தான், மனம், அறிவு, உயிர், காற்று, அக்னி, அப்பு, ஆழ்கடலுக்கு செல்பவரே இந்த அற்புதத்தை காண்பார். கடவுளை நம்பி கடலில் இறங்குபவர், வெறும் கையோடு வரமாட்டார். ஆழ்கடலில் எரிவதும், ஒரு நிலவுதான், ஒரு தீபம் தான்.

என் உடலையும் அறிவையும் ஒளிமயமாக்கிய உயிராகிய கடவுளே, உன்னை நான் மனமார நேசிக்கிறேன். உன்னிடத்தே என் சரீரம் கூடி பெறாத இன்பத்தை, மற்றவருடன் கூடி இன்பம் யாசித்து அலைந்தேன், இத்தனை காலமும் துன்பப்பட்டேன். நிலையான இன்பம் என்பது இறுதிவரை இல்லை என என் அறிவுக்கு புலப்படுத்திய தெய்வமே. இன்பத்தின் ஆரம்பமும் விதியின் துவக்கமும் துன்பத்தில் முடிவு பெறும். இல்வாழ்க்கையில் இன்பம் என்பது கனவுகளும், கற்பனைகளும் ஆகிப்போகும் இறுதியில் துன்பமும், அழிவும் தந்து போகும். பெற்ற தாய், தந்தையும் ஒதிய குருவான தெய்வம் நீ! உடலோடு உயிர் கலந்த வண்ணம் நீ! மதுவையும், மாதுவையும், பேராசையும் தொலையவும், நலம்பெற அருளிய பொதுவான தெய்வம் நீ! உயிரிலிருந்து உடல் வந்தது அரியார், உயிரிலிருந்து இன்பம் அடைவதை அரியார், உயிர்தான் இன்பம் என்பதை சிறிதும் உணரார். ஆவி என்கிறார், பேய்கள் என்கிறார், பிசாசுகள் என்று சொல்லித்திரியும் இவர் தெய்வம் என்பதை எப்போதும் அரியார். பிற ஆத்மாவை திருப்தி செய்ய காரியங்கள் செய்யும் இவர் வாழ்நாளில் ஒரு நாளும் எய்திடமுடியாத் திருப்தியை, ஒரு நாள் கருமகாரியத்தில் எப்படி திருப்தி அடைவார். வாழ்நாளில் உயிரிலிருந்து உடலை கழற்றி எரியவும் கற்றுக்கொண்ட இவர் உதாசீனத்தால் ஒன்றுக்கும் உதவாமல் போய்விட்டார்.

பெற்ற தாய், தந்தையால் எவ்வளவு காலம் நம்மை காப்பாற்றஇயலும்? கட்டிய மனைவி இந்த தேகத்தை எவ்வளவு காலம் கட்டி அனைக்க இயலும்? கட்டிய வீடும், பெற்ற பிள்ளையும், கட்டுகட்டான பணமும் இருந்தும் என் செய்வது? மொத்தத்தில் மரணமாகிப் போனால் வாக்கரிசி போடவே காத்துக்கிடக்கும் மக்களையும், உறவுகளையும், நண்பர்களையும், நம்பியே மோசம் போவார். இவ்வுடலுக்கு உயிரை தவிர வேறு ஒரு நண்பன், உறவு, கடவுளும் கிடையாது. தனக்கு அன்னியமான எவையும், உடலுக்கு சுகம் கொடுக்கும் என்பது பொய். உடலுக்கு வேண்டுமானால் நோய், சோகம், வருத்தம் தரலாமே ஒழிய, வேறு ஒன்றைக் கட்டாயம்

தர இயலாது. பதவியை நீ காப்பாற்றிக் கொள்ள வேண்டுமே ஒழிய, பதவி உன்னை ஒரு நாளும் காப்பாற்றாது. தன் பதவியில் இருந்து பதவியை காப்பாற்றி கொள்வதற்குள் அந்த பதவியின் காலம் முடிந்துவிடும் என்பது பதவியிலிருக்கும் எவருக்கும் தெரியாது. ஆனால் மற்றவையைக் கொண்டு இன்பம் பெற வேண்டும் என்ற உன்னுடைய விருப்பம் ஒன்று மட்டுமே உண்மையானது. ஆனால் நியாயமற்றது என்பதை நீயே உணருவாய். தாய், தந்தை, மனைவி, மக்கள், வீடு எல்லாவற்றையும் நீ காக்கவேண்டுமென்ற விதி உனக்கு உள்ளதே தவிர, அதனிற்கு எவ்விதியும் இல்லை. உனக்குள்ளே ஒரு கற்பனை, கற்பனைக்குள்ளே ஒரு வீடு, அந்த வீட்டுக்குள்ளே ஒரு குடும்பம் இது ஒன்றே உனது வாழ்வாதாரமாக எண்ணிக்கொண்டு வாழும் இப்பிறப்பில் உனக்குள் இருக்கும் உயிர்தான் இவை அனைத்தையும் காக்க வல்ல பெரும் சக்தி உடைய தெய்வம் என்பதை மட்டும். ஏன் நீ உணரவே இல்லை. இதை உணராத நிலையிலும் எல்லாவற்றிலும் உயிர் ஒட்டிக்கொண்டு இருக்கிறது. இந்த உடல் மட்டும் ஏதோ அன்னியஸ்தர்களை பார்த்தால் ஒதுங்கி நிற்பதுபோல, இந்த தேகம் ஒதுங்கி வாழ்ந்து ஒழிந்து போகிறது. இதுதான் அந்த விதியின் விளையாட்டு, அறியாமை ஒன்றே மரணத்திற்கு காரணமான விதி. உயிரினிடத்தில் இருந்து விலகி நிற்பதுவே நோய் எனப்படுவது. அதனிடத்தில் ஒட்டி உரசுபவரின் தேகத்தில் 100 கோடி சூரிய பிரகாசத்தை ஏற்படுத்தும். உயிரைத் தொட்டவரின் விதி கெட்டு அழியும்.

## 32. விதி மாளும் வழியைச் சொன்னேன் விளக்கமாக

"உயிர்க்கலை", "வாழும் கலை" "சாகாக்கலை" முடிவு "சாகாநிலை" இது ஒன்றே "வேதம்", முடிவான "வேதம்", இதுவே முடிவான "தெயவம்" இதுவே முடிவான வார்த்தை இதுவே, "உயிர் ஒன்றே கடவுள்".

தனது பாவங்கள் தீரவே கங்கைக்குச் சென்று பாவத்தை கழுவுகிறார்கள், புனித நீராடுகிறார்கள். இது உடலில் உள்ள அழுக்கைப் போக்குமே ஒழிய மனதிலுள்ள கரையை போக்க

முடியாது. இந்த பாவப் பிறவியின் மனதில் கரைகள் பல சோகங்களாக உள்ளதை யார்தான் அறிவார். இந்த மனபாரத்தைச் சொல்ல இடம் அறியாமல் ஊர் ஊராக சுற்றி அலைகிறார்கள். புண்ணிய நதிகளில் நீராடி பாவ மூட்டையை அங்கே விட்டுவிட்டு வந்துவிடலாம் என எண்ணுகிறார். மனதில் உள்ள வலியும் வேதனையும் பாவ சுமைகள். கவலையும், வருத்தமும், கோபமும் இவை மூன்றும் பாவத்தின் லட்சணங்கள். இவை எவையும் செத்தவனுக்கு கிடையாது. மற்றவர் எவர்க்கும் உண்டோ? நாணயத்தின் இருபக்கங்களையும் நமது இருகண்களால் ஒரே நேரத்தில் எப்படி தரிசிக்க இயலாதோ, அப்படித்தான், ஞானமும், உலகமும் ஆகும். நாணயத்தில் ஒரு பக்கம் இல்லாது போனால் அது செல்லா காசு அதுபோல், ஞானமறியாத உலகத்தானும், உலகமறியாத ஞானியும், செல்லாத காசு போல் ஆவார்கள். மனிதனே! உயிரின் கண்களுக்கு மட்டுமே தான் இந்த நாணயத்தின் இரு பக்கங்களும் தெரியும். ஊண் கண்களுக்கு இது புலப்படுவது அரிது. அரைகுறையாக உணரப்பட்ட மனிதன் வேகாத பிணத்துக்கு சமம். உயிரை உணர்பவன் முழுமையையும் உணருவான். வெகு காலமாக நமது சமையல் மைதானத்தில் உழைத்து உழைத்து ஓடாக தேய்ந்து கொண்டு இருக்கும். சமையல் பாத்திரங்களுக்கு, எத்தனை ஜென்மம் உழைத்தாலும் அதன் சாபம் தீரப்போவது இல்லை. அந்த ஜடத்துக்கு உயிர் இருப்பதாக நீ கற்பனை செய்து கொள்ளலாமே தவிர ஜடம் உயிர் ஆகாது. அதுபோல் உயிருடன் இருக்கும் ஒன்று வாழ்க்கையில் உழைத்து உழைத்து தேய்ந்து போனவனாக இருந்தாலும் அந்த முதியவன் ஒருநாளும் ஜடம் ஆகமாட்டான். மனிதனுக்கு பயன்படாத பொருளை ஜடம் என்று எண்ணுகிறான். பயன்படக்கூடிய பொருளை உயிர் இருப்பதாக எண்ணுகிறான். மண்ணைப் பார்த்து வாஸ்து என்பவன், விண்ணைப் பார்த்து என்ன சொல்லுவான். பணம், காசு, தங்கம், வீடு, வாகனம் இவைகளுக்கு உயிர் இருப்பதாக எண்ணுகிறவன். தனது உயிராகிய கடவுளின் சாபத்தை அடைவான்.

ஒரு ஜடப்பொருள் உயிர் பொருளை ஆள்வதாக கற்பனையில் இருக்கிறான். ஜடப்பொருளை மதிப்புக் கொடுத்து வணங்குகிறான். மதிப்பீடு செய்கிறான். விலை இல்லாத உயிர் பொருளை விலைக்கு விற்க முடியாத காரணத்தால் அதன் மதிப்பு தெரியாமல் உதாசீனப்படுத்துகிறான். உயிர் மனிதன் ஜடப்பொருளை அடையவேண்டும் என்பதை வாழ்நாள் லட்சியமாக கொள்கிறான். வாழவேண்டும் என்பதற்காக சாகவும் துணிகிறான். மனிதன் ஜடத்திடம் பழகி ஜடமாக மாறிவிடுகிறான். ஜடப்பொருளிடம் யாசித்து வாழ்கிறான். ஜடப்பொருளுக்கு தான் தலைவனாக வேண்டும் என்ற விருப்பமும் திருப்தியும் உயிர் பொருளை மறக்க செய்கிறது. தரமான தாரத்திடம் தகராறு செய்து விட்டு, தரக்குறைவாக பேசிவிட்டு, தரங்கெட்டவளுடன் அவளை சொந்தமாக்கி கொள்ள நினைத்தலே பாவம். தாசிகளை உயர்த்தி, தாரத்தை பழித்தால், கொடும் பாவங்கள் கூடி குடும்பத்தை அழிக்கும்.

உயிர் பொருளை ஆள்பவன் வீட்டில் செல்வம் என்பது நாயைப் போல் செருப்பு விடும் இடத்தில் படுத்து கிடக்கும். அந்த நாயைத் தேடி அலைய வேண்டியது இல்லை. சாயங்கள் பூசப்பட்ட அழகிகள் உன்னிடத்தில் வந்து ஊழியம் செய்வார்கள். எல்லா சுகங்களும் உயிரை மதிப்பவர்க்கு மட்டும் தங்கு தடையின்றி தாராளமாக கிடைக்கும் என்பதை பழகிப்பாருங்கள். அந்த உண்மை உங்களுக்கு விளங்கும். உண்மையை உலகுக்கு எடுத்துச் சொல்லுங்கள். மனிதன் பிறந்த இடத்தையே, தேடிக்கொண்டு அலைந்தால் போகும் இடம் தன்னை, எப்படி தெரிந்து கொள்ளுவான்? எப்போது தெரிந்து கொள்ளுவான்? யாரிடம் தெரிந்து கொள்ளுவான்?

அதற்கு நீங்கள் உபகாரமாக இருங்கள். வாழும் இடத்தையும், வாழ்ந்து கொண்டு இருப்பதையும், வாழுகின்ற வாழ்க்கையையும் மறந்துவிட்டு, கல்லைக் கழுவி கரைசேரக் கருதுகிறார், புனிதமான கங்கை "உயிர்" தான் என்றுஅறியாத கயவர்கள். செத்த பின்பும் திருந்துவதில்லை. எனவே இதுவே

இவர்களுக்கு குறைந்த பட்ச தண்டனையாக எமன் தருகிறான். மேலும் தேவை என்றலையும் திருப்தி இல்லாத மனிதனின் ஏக்கம் எல்லாம் ஒரு குண்டு விறகில் அடங்கிப் போய்விடுகிறது, அந்த ஆன்ச். செத்த பின்பு உனக்கு துணையாக வருவது எமன் மட்டும்தான், உன்னிடம் வாழ்ந்த எதுவும் உனக்கு துணையாக வருவது இல்லை. நீ செய்த பாவங்களுக்கு இவை எல்லாம் சாட்சியாய் நிற்குமே தவிர எவைகளாலும் எந்த புண்ணியமும் இல்லை. எல்லாம் தண்டமாகும், என்ற விரக்தி அந்த ஜீவனுக்கு ஏற்படும், அதனை பிரேத நிலையாக பாவிப்பர். உயிர் இல்லாத சரீரத்துக்கு சொல்ல முடியாத சோகமே 'பிரேதநிலை" என்று அழைக்கப்படுகிறது. கட்டுகட்டாய் பணத்துக்கு, கட்டுப்படாத ஆசை ஒரே கட்டு விறகில் அடங்கிப் போய்விடுகிறது. விலை இல்லாத பொருளை, விலைபோகாத பொருள் என்று எண்ணி ஏமாந்து போகிறான். ஏதோ ஒன்றில் ஏமாந்தவனுக்கே பெரிய சோகம் ஏற்படும் என்றால். எல்லாமுமே ஏமாந்து போனவனுக்கு, எவ்வளவு பெரிய வருத்தம் ஏற்படும் என்று மனிதனே நீ இருக்கும் போதே எண்ணிப்பார். எனது இந்த சம்மதத்தை தவிர உலகில் இதுவரையிலும் எழுதப்பட்ட எந்த சாஸ்திரமும் உனக்கு ஒரு சிறிதும் உதவாது. கங்கையில் குளித்தவனுக்கு தனி வரிசையில் சிறப்பு சலுகை உண்டா?

உயிர்விட்ட உடலை கொண்டு போய் தகனம் செய்த பிறகும் கூட. இழந்த அந்த தேகத்தை தன் நினைவில் நிறுத்திக் கொண்டே வாழும். அது மீண்டும் ஒரு தேகத்தை எடுப்பதற்கான முயற்சியை செய்யும். தனது நினைவில் உள்ள தேகத்தைக் கொண்டே மீண்டும் தேகத்தை எடுக்கும். தனக்கு சம்மதம் இல்லாத இடத்திலும், சம்பந்தம் இல்லாத இடத்திலும் அது மீண்டும் ஜனிப்பது இல்லை. ஒரு கதையினுடைய முடிவுக்கு பிறகும் அதே கதைதான் துவங்குகிறது. ஒவ்வொரு ஜென்மங்களும் தொடர்கதையாகிப் போன விஷயங்கள். நடந்த விஷயங்களுக்கும் நடந்து முடிந்து கொண்டு இருக்கும் விஷயங்களுக்கும் நடக்க வேண்டிய நிகழ்வுகள் அனைத்தையும் அறிந்தே அமைதியாக உள்ளது. ஒருவரை

ஒருவருக்குஅறிமுகப்படுத்துகிறது. புதிய செய்தியை அறியும் ஆர்வம் ஏற்பட்டு, அதை அனுபவித்து, அனுபவத்தை வாழ்க்கையாக வாழ்ந்தே வருகிறது. ஆனால் தன்னைமட்டும் யார்? என்பதை அறிமுகப்படுத்திக் கொள்ளாத சர்வ சாட்சியாகிய "உயிரே" அனைத்தையும் உணர்ந்த "கடவுள்" ஆவான்.

## 33. "உயிரின் மீது ஒப்புயர்வற்ற காதல் கொண்டேன்."

கற்பனை உலகத்தில் சஞ்சாரம் செய்யும் கதாநாயகியை நான் நேசிக்கவில்லை. எனக்குள் இருப்பவனையே நான் நேசிக்கிறேன். தன்னையும் தன்னைச் சார்ந்த அனைத்து உலகத்தையும் படைத்தவன் யாராக இருக்க முடியும், என்று எல்லா மனிதனும் எண்ணிப்பார்ப்பது உண்டு. இவ்வுலகத்தின் பொதுவான கடவுள் "உயிரை தவிர வேறு எதுவும் இருக்கவே முடியாது, என்று மிகவும் ஆணித்தரமாக என்னுள் விளங்கிய "உயிராகிய கடவுளே", உன்னோடு வாழ்ந்த சில கால ாழ்க்கை கனவாகிப் போகாமல் நினைவில் நிலைத்திருக்க அருள்வாய் கடவுளே.

ஏற்கனவே குழம்பியுள்ள என் மனத்தை மேலும் குழப்பாமல் நீ சொன்ன அந்த வார்த்தையில் தெளிவு மிகவே செய்த குரு நீ! ஆதலால் வேறான குருவை காணேன், குரு வேறு அல்ல, எனக்குள் என்னையே குருவாக்கிய தெய்வமே, உருவான எனக்குற்ற தெய்வமே, நீ தான். அனைத்தையும் காப்பவன் நீ. அனைத்தையும் ஆள்பவன் நான் எனும் கர்வம் கொண்டலைந்தேன் இவ்வுலகில். என்னை ஆளும் இறைவன் யார்? என்ற உண்மை அறியாமல் கண்டதையும் நம்பி மோசம் போனேன். காசு கொடுத்து கடவுளையும் வாங்க துணிந்தேன். ஆடு, மாடு போல் கடவுளையும் ஒரு பொருளாக எண்ணிய எனது வியாபார சிந்தையால், சேர்த்த இந்த பாபங்கள் அனைத்தையும் விட்டு மோட்சம் பெற அருள்வாய் மன்னனே. எனக்குள் இருந்து கொண்டே என்னை ஆள்பவனை எனக்கு தெரியாதென்றேன். வாழ்வில் நான் செய்த பாவ ஜீவனத்தை

எண்ணி மிகவே வாடினேன். செயல் இழந்து போனவனே செத்தவன் ஆகிறான். அருள் வெளிக்குள்ளே மட்டும் இருள் இல்லை (மரணம் இல்லை). அருள் வாழ்க்கை அருள்வார் நித்தம், தனிமைச் சிறையில்லை, எண்ணில் அடங்கா சோகம் கொண்டவர் இங்கே சொல்லில் அடங்கா ஆனந்தத்தில் நிறைந்தார். ஆதியில் இருந்து அந்தம் வரை "உயிர் ஒன்றே கடவுள்" என்பதை அந்தம் வரை சென்றுணர்ந்தேன்.

கருவறைவிட்டு வெளிவரும் பிள்ளை, மண்டியிட்டு வணங்கியே பூமிக்கு வந்தடையும். தன் காலால் எட்டியே உதைத்து பனிக்குடம் தன்னை உடைத்து மண்ணில் தவழவே மகத்தான தவமது பத்துமாதம் மட்டும். அடுத்தலோகத்து சிந்தை எப்போது வருமோ, அது வரை அந்த முட்டையே அதனுக்கு வீடு. சுத்தமான சுக்கில ஸ்ரோனிதங்கள் தேகமாய் உருவெடுக்கும் வரை மிக்கவே பொறுமையுடன் காத்து நிற்கும். பூரண தேகம் பெற்ற பிறகே பூமிக்கு வருவதற்கு அழைப்பு எதிர்ப்பார்த்து அமர்ந்திருக்கும். நூதனமாய் உலகத்தில் பிரவேசிக்கும். அது வரும்முன்னே அதன் சொந்த பந்தங்கள் வருகையை எதிர்நோக்கி ஏங்கிக் கிடக்கும். வந்த உடன் வாரி அனைத்து கொள்ளும், ஆயிரம் கரங்கள் இங்கு இருந்தபோதும் அதன் ஒரே எதிர்பார்ப்பு. தாயின் கரங்கள் மட்டும்தான். பாசத்தை அரியவும், பசியை போக்கவும் அந்த ஒரு கரத்தாலேதான் இயலும். அதன் ருசிக்கும் பசிக்கும் ஏற்ற பக்குவமான அமுது அங்கேயே அதனுக்கு அவ்வப்போது வரும். இந்த அமுது அருந்தும் சுகத்தில் தாயின் அன்பான உபசரிப்பில், சரீரம் உருவான விதத்தை அது மறந்து போகும். ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மேனி, ஒவ்வொரு உறுப்பும் எப்படி வளர்ந்தது என்ற சகல ரகசியங்களும், இவ்வுலகத்தில் ஜனித்த அத்தனை ஜீவனுக்கும் தெரிந்த விஷயம் தான். வெறும் சுக்கில ஸ்ரோனிதம் சரீரம் ஆகாது. அதைப் பக்குவப்படுத்தவே தவம் அது செய்தார் போலே. மனிதன் நிரம்ப சுக்கிலம் ஏற்படுத்திக்கொண்டு கை கால் அடக்கம், வாயடக்கம், மன அடக்கமுடன் தன்னை உயிர் என்று உயர்ந்த நிலையில், சரீர அஹங்காரம் அற்று நில்லு. அப்போது தாய் கருவறைக்கு

ஒப்பாய், கர்ப்ப கிரஹத்துக்கு ஒப்பாய், நீ இருக்கும் குகையிலும் நாதம் கேட்கும், சங்கை கவிழ்த்து காதில் வைத்தார், போல், நாதம் ஒன்று கேட்கும். அதாவது எந்த சத்தமும் இல்லாத இடத்தில் கிசு, கிசு என்றும் (ஓம், ராம்) "ம்" என்ற நாதம் கேட்கும். இவ்வுலகத்துக்கும், உடலுக்கும் "சம்மந்தம்" "ம்" என்ற நாதமே ஆகும். உலகத்தில் ஏதோ ஒரு சத்தம், ஏதோ ஒரு மூலையில் அது எங்கு பார்த்தாலும் நிறைந்தே இருப்பது. **அதுவே உலகத்தின் உயிர். அதை ஓம் என்கிறார்கள், எல்லா சத்தத்துக்கும் அடிப்படையானது "ம்" தான். அந்த சுதியில் மனதை வயப்படுத்த வேண்டும்.**

## 34. "ம்" என்பது மஹா ரகசியம்.

உயிரின் கவனத்தில் கொண்டு வந்து சரீரத்தை நிலைநிறுத்துவது.

மனம் மிகவும் எளிமையாக சுருதியில் லயிக்கும் தன்மை உடையது. சுருதியை விட்ட சங்கீதத்தில் மோட்சம் ஏதும் கிட்டாது. புரியாத விஷயத்தை வெகுகாலம் ஆலாபனை செய்துகொண்டு இருக்க முடியாது. உயிர் என்றால் என்ன என்பது தெரியாமல் வெகுகாலம் வாழ இயலாது. "ம்" என்ற சுருதியே ஸ்மிருதியாக (வேதம்) விளங்குகிறது. இது மௌன வார்த்தை எனப்படும். வாய்திறவா வேதம். இதை வாயை திறந்து சொல்லும் போது ராம், ஓம், யாம், லாம், வாம், இப்படி "வேதம்" என்ற சொல்லின் முடிவான எழுத்து "ம்" உன்னுடைய உயிரை, நீ யார் என்று அறிவுப்பூர்வமாக உணரும்போது நாதமாக உணருகிறாய். சுக்கிலம் இல்லாதவனுக்கு கவனம் இருக்காது. கவனம் இல்லாதவனுக்கு நாதம் கேட்காது. சரீர கவனம் அற்றுப்போனால் மரணம் ஏற்படுவது நிச்சயமே. ஆனால் நீ உயிரை கவனிக்கும்போது சரீரத்தை உயிர் கவனித்துக் கொள்ளும். இவை இரண்டையும் யார் கவனிப்பது, அதுதான் "நாதம்". நாதம் என்பது தொடர்பு, ஒன்றுக்கும் மற்றொன்றுக்கும் உள்ள ரகசிய தொடர்புதான் "ம்" எனப்படுவது.

இந்த வாய் புதைந்த வார்த்தையை தான் எவரும் முனு முனுக்கவும் இல்லை. இது இயற்கையில் அமைந்துள்ள உயிர் நாதம்

1. சந்தத்தை கேட்டுத்தான் அனைவரும் விழிந்து கொள்ளுகிறார்கள் - (கல்யாண மண்டபம்)

2. சத்தம் அடங்கும் போது சப்தநாடியும் ஒடுங்கிப் போவது - (உறக்கம்)

3. விழிப்பு நிலையில் அங்கும் இங்கும் பலவிதமான சத்தம் கேட்டவண்ணம் இருக்கும்.

அந்த மோகத்தில் இயற்கையான நாதத்தை அறியவிடாமல் தடுக்கும். அதற்காகத்தான் தான் மனித சஞ்சாரம் இல்லாத இயற்கை சூழலில் சித்தர்கள் வாழ்ந்தார்கள். அந்த அமைதியான சூழலில் அந்த உயிர் நாதம் கேட்கும். அது காதால் கேட்கப்படுவது இல்லை. செவிடனும் அதை உணரும் வண்ணம் மனதில் ரீங்காரம் இடும். ரீங்காரம் என்பதுவும் ஓங்காரம் என்பதுவும் "ம்" தான்.

**சம், ம, தம்**
**சம் = சர்வம்**
**ம = மங்களம்**
**தம் = நான், உயிர்**

**சம் + ம + தம் = சர்வ மங்களமான உயிர் "சர்வ மங்களமான உயிர்" கடவுள் அதை உயிர் என்கிறோம்.**

உயிர் என்ற தனிப்பொருள், நாதத்தை எழுப்பி விஸ்வ பிரபஞ்சம் முழுவதும் நிறைந்துள்ளது. அது ஒன்றே தனித்து அந்த நாதத்தை எழுப்புகிறது. அதை எதுவும் வாயைவிட்டு சொல்லாததால். நாம் அதை வெளிப்படுத்துவது நம்பிக்கை துரோகம், என்று எண்ணி அதை அரிந்த எவரும் சொல்லாது போனார். நான் ஒருவன் பாவியானாலும் சரி, இந்த பூமி முழுவதும் புண்ணியம் நிறையுமாறு இதை அருளினேன். அருட் செயலும், பொருட் செயலும் இதுவே செய்கிறது.

ம = உலகஞானம், ம் = உயிர் ஞானம்

= "ம்" உயர்ந்த அறிவு

இந்த வார்த்தையை அடிக்கடி சொல்லுவதால் தான் ஆட்டையும், மாட்டையும் வீடுகளில் வளர்க்கிறார்கள். தொன்று தொட்டு வந்த பண்டைய் நாகரீகம் எல்லாம் இதற்குச் சான்றாக சொல்லுகிறேன். சாத்வீக ஜீவனாக இருக்கிறது. சுத்த சைவமாகவும், வள்ளல் தன்மையுடன் அது விளங்குகிறது, பால் தருகிறது, ஏர் உழுவதற்கு பயன்படுகிறது. "ம்ம" என்றுதான் சொல்லும். அதைக் காதால் கேட்க புண்ணியம். பசுவை வளர்ப்பதும், பசுவுக்கு உபகாரம் செய்வதும், பசுவை பார்ப்பதும், தொடுவதும், கோமுயம், சானம், பால், நெய், தயிர், கொம்பு எல்லாம் புண்ணியம் என்றும் அதனிடத்தில் முப்பத்து முக்கோடி தேவ ரிஷிகள், தெய்வம், புண்ணிய நதிகள் எல்லாம் இருப்பதாக சொன்னது எல்லாம் இந்த ஓர் எழுத்தை கண் மறைக்கத்தான் என்றால் கதை கேட்கும் ஆர்வத்தில் ஒரு விஷயத்தை மட்டும் மறந்து போனோம். அது என்ன சொல்லி கத்துகிறது என்பதை யாரும் சொல்லவே இல்லை. சானி, மூத்திரத்தை கூட ஆராய்ச்சி செய்த மஹான்கள், ஏன் அது சொல்லும் சொல்லின் ரகசியத்தை மறைத்தார்கள்? இதனை முதலில் வெளிப்படுத்திய குற்றவாளி நான், எனவே எனக்கு நரகம் கிட்டினாலும், உன் அருளே என் உணர்ச்சிக்கு விரோதமில்லாமல் வாழ்ந்ததை எண்ணித்தான் மகிழ்ச்சி கொள்கிறேன். உணர்ச்சி பூர்வமாக ஒத்தவரொடு கூடி வாழ்ந்ததை எண்ணி சிந்தையும் நெஞ்சமும் குளிர்ந்து போனேன். இனி சொர்க்கம் என்ன? நரகம் என்ன? எனக்கு எல்லாம் ஒன்றுதான். வெற்றி என்ன, தோல்வி என்ன, வாழ்ந்தவர்க்கு இனிமேலே, நான் யாரு, நீ யாரு என்று தெளிந்த அப்போது சிக்கர தெளிந்து நின்றேன், சித்தன் போலே.

படிக்காத பாமரனுக்கும் பக்குவமாய் சொல்லிவிட்டேன், என் எளிய தமிழ் நடையில், கற்பனை புத்தி இல்லாது இதை எதார்த்தமாக படித்து பாரு. பார் உலகில் இதுபோலே நூல் ஏதும்

இல்லை. பொய் புரட்டு இல்லை, மறைப்பு இல்லை, கற்பனை வசனங்கள் இல்லை, தனித்து நின்று போராடி உலகில் செத்து போகாதே. கூடி வாழ்பவர்க்கு கோடி நன்மையுண்டு குவலயத்தினுள்ளும், பரத்தினுள்ளும். இகத்திலும், (உலகம்) பரத்திலும் (ஞானம்) ஒருவனே அரசன். இகத்தில் தோற்றவன் பரத்திலும் தோற்பான். இகத்தில் நஷ்டப்பட்டவன் பரத்தில் சென்று லாபம் சம்பாதிக்க என்னுதல் வீண் முயற்சி. ஊர் ஊராக சென்று வேலை தேடுவது போல், வேலை தேடுவது ஒரு வேலையாகுமோ? உண்மையான அறிவுதான் தேர்ந்த அறிவு. எந்த தேர்விலும் அது வெல்லும். அறிவும் உழைப்பும் இல்லாத சோம்பேறிக்கு ஆயுள் முழுவதும் சிறைவாசம். கண்ணால் கண்டதையெல்லாம் கையெடுத்து வணங்குவான். சேத்தை வைத்து பொம்மை செய்து கட்டிப்பிடித்து கொஞ்சுவான். வாழ்க என்று சொல்லிவிட்டு விண்ணுலகம் செல்லுவான். இந்நூலைப் படித்துவிட்டு நீ வாழ்ந்த காலங்களை திரும்பிப்பார், வயிற்றெரிச்சலாகிப் போகும், தான் பயனற்ற வாழ்க்கை வாழ்ந்ததை எண்ணியும், வீண் கால விரயம் செய்ததை எண்ணியும் வாடிப்போவாய். இதை நீ உணர்ந்த பின்பு நீ தான் அந்த கடவுள். கற்சிலையும், சுண்ணாம்புக் கல்லும், செங்கல்லும், பாறையும், சேறும், மணலும் சாமியைப் போல் ஆகும் போது நீ மட்டும் இங்கே இப்படி எப்படி? எங்கே பதில்?

வானவர் வணங்கும் உயிராகிய மூலப் பொருளே எனை ஈர்த்து ஆண்டு கொண்டருளிய ஞானக் கொழுந்தே, ஆண்டவனே. என் உளமதில் புகுந்து கொண்ட தூயவனே, புண்ணியனே புண்ணியம் ஏதுமிலா பிறப்பு என்றெண்ணிய வாழ்க்கையை புரியும்படியே எனக்கு சொன்ன என் ஆருயிர் காவலனே, எனக்குற்ற நல் தோழனே, எனதாருயிராகிய தெய்வமே ஆதி அந்தமதுவாக நின்று உலகாளுகின்ற உயிரே, கருணை மிகுந்து வளரும் இடத்தில் திரளுகின்ற உயிரை, உடலோடு இணைத்து சரி பாதி தந்து என்னோடு அமர்ந்த உயிரே, ஆதியந்தம் அறிவாக நின்று எனை ஆளுகின்ற உயிரே, என்னவனே, எனக்குள் விளங்கும் ஜோதியனே,

தூயவனே, தாய் தந்த அமிர்தினும் தூயவனே, யாவர்க்கும் நல்லவன், வல்லவன், இவனை கடவுள் என்று கைத்தொழுவார் எவரும் வெல்லுவார் மரணத்தை, என்று காலன் என்னிடம் சொன்னது சத்தியமே.

உயிரை மட்டும் கடவுள் என்று கைத்தொழுவான் குறைகள் அனைத்தையும் களைவான் நிமிடத்தில். பயம் அறவே செய்யும் தருமத்தின் அரசனையே பணிவோர் வாழ்வில் எல்லா நலன்களுடன் குறைகள் ஏதும் இன்றியே, மனோதர்மப்படி வாழ்வதே, சமத்துவத்தார் வாழ் நெறியாகும். உயிரை கடவுளாக எண்ணினோர், உடலை உயிராகவே நிலைத்து பின் நிலையான வீடு பெறுவர். உடல் அது கல் கட்டிடம் அல்ல, மாமிச மலைகள் அல்ல, நோய்கள் நிரப்பிய குதிர் அல்ல. வெந்த சோற்று துருத்தியும் அல்ல.

எனவே உனக்கான ஆலயம் தேகமே, உனக்கென்ற வீடு ஆகுமே. தினமும் உயிரே என் உணர்வுகளை பகிர்ந்து கொள்ள, உயிரே எனக்குள் உன்னை நண்பனாக அழைக்கிறேன். நீ இல்லாத இடம் தான் எது. உயிர்தான் கடவுள் என்ற உண்மையை, நீயே எடுத்துச் சொன்னால்தான் என்ன? உனக்கு என்ன வெட்கம், சத்தியம் செத்துப்போவதில்லை, உன் சம்மதம் ஒன்றே என் எதிர்பார்ப்பு. உயிர் உடல் எடுத்து வந்ததும், உன்னை எனக்குள் சந்தித்ததும் எல்லாம் நான் செய்த பாக்கியமே. உயிர்தான் கடவுள் என்று விளங்கும்போது, என் உணர்வே நீயாக நின்று விட்டாய். தாயை விட அன்பு செய் உள்ளம் உனக்கு, தரணியிலே யார்தான் அறிவார், சாகாதவரே. செத்தபின்பே தெரியும் "உயிர்தான் கடவுள்" என்ற உண்மை, அதை சாகுமுன் எனக்கறிய வைத்த தயாபரியே, எனக்குள்ளே நான் துன்பப்பட்டு இருக்கும் முன், உனது உயிரை எனக்கு தந்து, துயரது களைந்தாயே. எனக்குள் இருக்கும் உன்னை நேசிக்காமல், தெருவில் அலையும் நாய்களிடத்தும், நரிகளிடத்தும், பேய்களிடத்தும், பழகியே பொன்னான பொழுதையெல்லாம் பெண்ணிடத்தில் கழித்தேனே. நீ கொடுக்கும் சுகம் அறியாமல், மலடு ஆனேனே, மரணம்

ஆனேனே. செத்தவன் கடவுள் என்று ஊர் சொல்ல நம்பிவிட்டேன், "சாகும்நிலை" அறிவேன். "சாகாநிலை" அறியேன். வாழ்நாளில் உன்னுடன் வாழ்ந்ததை மறந்துவிட்டு, செத்துவிட்ட ஆசாமிக்கு சாமிவேஷம் பட்டாடை, பூப்பல்லக்கில் தேர்பவனி வர, வீதி எல்லாம் மலர்கள் தூவி, பாடையிலே பரதேசம் "உயிர்தான் கடவுள்" என்று ஒருவருக்கும் சொல்லாமல் வாய் அடைத்துபோய்விட்டான்." பட்டு வேட்டி, மாலை போட்டு, ஊர் மணக்க பேராரு, உயிர்தான் கடவுள் என்பதை மறந்துவிட்டு கோபமாக போராரு, போகும் போது வாக்கரிசி தின்னுகிட்டே போராரு. இடுகாட்டு புதைகுழியில் பொத்திகிட்டு போராரு, சாகும்போது ஒரு வார்த்தை உயிர்தான் கடவுள் என்று சொல்லாமலேயே போராறு, செயற்கரிய வீர செயல் செய்து விட்டு போராறு மன்னவி மக்கள் மாடு மனை சேர்த்து வைத்துப் போராறு. உன்னை எதிர்த்தவன் எல்லாம் பிடிசாம்பல் ஆகிப் போனான். நீ சாகாநிலை ஓதுவித்த உயிராகிய பொருள் உறையும் சம்மதமே உன் சந்நிதானம், செத்தவனும் சாமி அல்ல, வாழ்பவனும் சாமி அல்ல, சாகா கல்விதனை ஓதிய என் அப்பா, அம்மா குரு, நீயே என் தெய்வம், உடலை உயிராய் பிரதிஷ்டை செய்யும் பிரதிஷ்டாதத்துவமே "சாகா கலை" என்றால் உடலது உயிராகிப் போனால் உயிரது தெய்வமாகிப் போகும் என்ற உண்மை எனக்கு, நீ சொன்னபோதே பிறந்த பயன் அனைத்தையுமே அடைந்துவிட்டேன்.

"உடலை உயிர்" என ஆராதனை செய்யும் பிரதிஷ்டா தத்துவம். உலகம் முழுதும் சென்று அடைய என்னை செய்தியாளனாக பதவி வகிக்க சொன்னது, யாவர்க்கும் ஒரே சட்டம். பாகுபாடு இல்லை. செத்தவன் ஒருவன் மட்டும் தீண்டத் தகாதவன். செத்தாலும் சம்மதமே என்று நிலை நிற்போருக்கு அல்லால் மற்றவருக்கு சாவாமை அரிது ஆகும். "சம்மதமே" தன் மதம் என்றது. சம்மதமே என் மதம் என ஏற்றுக்கொண்டவனை, கண்டு விதிவினை விலகிப் போகும். உயிராகிய கடவுளே உனக்கு உறுதுணையாய் நின்பான். உடலாகிய கர்ப்பகோடி காலாந்திரங்கள் பூவுலகில் நீயும் ஒரு

பொக்கிஷம். உயிருக்கு உயிரான உயிரே, என் உடலுக்கு உயிரான உயிரே, என் கவனத்தில் உறைகின்ற உயிரே, உணவுக்குள் நிறைகின்ற உயிரே, உயிருக்கு உயிரான உணவே, உடலுக்கு உணர்வான உயிரே, வாழ்க்கைக்கு பொருள் தந்த உயிரே, உங்களிடத்தில் இல்லாத ஒன்றை கற்றுக்கொள்ள சொல்லவில்லை. உங்களிடத்தில் இருப்பவனிடம் உறுதியாக நம்பிக்கை வையுங்கள், இதுவே உயிரின் சம்மதம். இதை நம்பாதவன் ஊர் சுமக்க பாரமாகிப் போகிறான் வெள்ளை பணத்துக்கும், கறுப்பு பணத்துக்கும், விலை போகாத பெண் தெய்வம். உண்மையாய் என்றும் சரீரம் விளங்கவே உருவான தெய்வம், என் தெய்வம். அழகு என்ற சொல்லுக்கு உயிரே நல் விளக்கமாம். உலகத்தில் எந்நாளும் கண்கண்ட தெய்வமாகக் காட்சி அளிக்கும் உயிர் ஒன்றே ஒரே தெய்வம். ஜீவன் பூமியில் ஜனிக்கும் போது மட்டற்ற மனமகிழ்ச்சியையும், இறக்கும் போது பெரும் சோகத்தை விட்டு விட்டு செல்கிறார். ஆனால் வாழும் காலத்தில் "உயிரை" இவன் மட்டும் மதிப்பது இல்லை. உயிர்தான் உறுதுணையாக நிற்பது, அறியாததால் உயிர் அழிந்து போகிறார். மரணம் என்ற நோய்க்கு இரையாக அமைகிறது. இதுதான் மாயவிலை, பாசக்கயிறு வாழும் காலத்தில சாந்தி அடையாத உயிர்தான் அந்த உடல், உடல்தான் அந்த உயிர், இந்த உயிருக்குள் உடம்பை ஒடுக்குவதுதான் நமது லட்சியம். "உயிர்" என்ற மூன்று எழுத்துதான் சுவாசித்துக் கொண்டிருக்கிறது. சரீரம் அதனை விசுவாசிப்பது இல்லை. சரீரத்திலிருந்து காற்று உட்புகுந்து வெளிப்படுகிறது. உயிரில் உடம்பை ஒடுக்குபவர்க்கு வயது குறைந்து பாலர் ஆவார். உயிர் சத்தாக உள்ளது என்பதை தேகம் உணர வேண்டும். உயிருக்கு உயிரே உணவாக தகுந்தது. உயிரின் மீது பற்று இல்லாத தேகம் வெறும் ஜடம். கடைந்தெடுத்த ஜடம். உயிர் கலை அறியாத தேகம் பாவத்தின் பலனாக மரணம் அடைகிற விதி நியாயமாகியது. அந்த வெறும் ஜட உடல் அழிவதில், உயிருக்கு விருப்பம் இல்லை. எனினும் அந்த தேகம் பாவத்தின் பலனை தார்மீகமாக ஏற்றுக்கொள்கிறது. உயிரை

சார்ந்து நிற்கும் தகுதியை தான் உடல் இழந்து போகிறது. இதை நோய், முதுமை, நரை, திரை, மரணம், எனப்படுகிறது. பிருத்திவி என்ற பூமி தத்துவமான சரீரமே உயிரின் வீடாக உள்ளதால் முதலில் இந்த வீட்டை சொந்தமாக்கிக் கொள்ள முயற்சியுங்கள். இதை ஆலயமாக வழிபடுபவனுக்கு மரணமில்லாத பெருவாழ்வு. அழகு என்பது தேகத்தில் உள்ள மினுமினுப்பான பிரகாசமான சோதி என்று அழைக்கப்படுகிறது. அது அந்த உயிர்தான், அதன் குறைபாடே அவலட்சணம்.

## 35. உயிரே உடலின் ஆதாரம்

உயிர்தான் உடலாக வடிவம் எடுத்து நிற்கிறது. உயிரும் உடலும் பேதா அபேதம் அற்ற ஒரே பொருளாக உள்ளது. இதுவே இறுதி வரையிலும் உண்மையானது. தாயின் மடியில் புகுந்தது உயிர்தான் அந்த உயிர்தான் சரீரத்தை செய்து கொண்டு வந்துள்ளது. தனது சரீரத்தை தன் விருப்பப்படியே செய்து கொள்ளுகிற பிறவி குணம் இதனுக்கு (உயிருக்கு) உண்டு. உயிரின் எண்ணமே சரீரமாக வடிவெடுக்கிறது. மனம் விரிந்து சரீரமாக மாற்றம் அடைகிறது. அப்போது தனது சரீரத்தை உயிராக பாவித்து தியானத்தில் சிசு ஆழ்ந்து இருக்கும் ஜெனனத்திற்கு முன்னால் கருவறையை உலகம் என அதற்கு கட்டுப்பட்டு வாழும். ஆனால் அந்த கருப்பையை சொந்தமாக்கிக் கொள்ள முடியாது. அங்கு வந்து கருவறையில் தங்கி எண்ணியதை எண்ணம் போல் செய்த பின்பு அந்த இடத்தை விட்டு அதுவாகவே வெளியேறுகிறது. அப்படி கருப்பையை விட்டு உடலோடு கூடிய உயிர்தான் பூமியில் வந்து ஜனிக்கிறது. உடல்தான் உயிர் என்று பழகிக் கொண்டு வெளிவந்த அந்த சிசுவுக்கு உலகத்தில் முதலில், தாய் மட்டும் அறிமுகம் ஆகிறாள். பிறகு தாயையே தனது தெய்வம் என நம்பி வாழும், சில காலங்களுக்கு பிறகு தந்தையே உலகம் என எண்ணிக்கொள்ளும் எண்ணம் போல் வடிவெடுத்த சிசு மனம் போல வாழவும் விருப்பமேற்படுகிறது. ஒவ்வொரு சிசுவும் தாய் தந்தையின் எல்லையற்ற ஆனந்தத்தில் ஜெனித்த உயிர் பொருள். ஒவ்வொரு சிசுவும் ஏதோ கற்பனையில் ஏதோ ஒன்றை தான் எண்ணிக் கொண்டு வாழ்க்கை பயணத்தை

துவங்குகிறது. சரீரத்தின் மீது தனக்குள்ள கவனம் குறைய, குறைய, உலகத்தின் மீது கவனம் சிறிது சிறிதாக அதிகரிக்க துவங்குகிறது. பிறகு காலப்போக்கில் உலகத்தை தான், என அனுமானித்து தனது கவனத்தில் உள்ள சரீரத்தை மறந்து போகிறான். சரீர கவனம் போன பின்தான் பயம் என்ற உணர்வின் பொருளை முதன் முறையாக அந்த குழந்தை அனுபவிக்கும். அது அறியாமையில் ஏற்பட்டது என்றாலும், அதுதான் உண்மையும் கூட. உலகத்தையே முழுமையாக நம்புபவரை சிலகாலம் உலகம் இவனை ஆதரித்துக் கொண்டு வரும். இவனது தேகத்தில் பலம் உள்ளவரை மட்டுமே இந்த உலகம் இவனை ஆதரிக்கும், என்ற உண்மை இவனுக்குத் தெரியாமல் இதுவே பரசுகம் என பாவித்து, மூவாசை கொண்டு, சரீர கவனத்தை இழந்து சரீரத்தையும் இழந்து சடலமாக மாற்றம் அடைகிறான். எண்ணத்தால் உருவான சரீரம், எண்ணம் கெட்டுப் போகும் போது சரீரம் செத்துப் போகிறது. எப்போதாவது ஒரு நாள் இந்த சரீரம் தன்னிடத்தில் வந்து சேரும் என்ற நம்பிக்கையில், பல காலமும் உயிர் காத்து கிடந்துவிட்டு சலிப்பு அடைந்து போய்விடுகிறது. இனியும் இந்த சரீரத்தை வைத்து எதையும் சாதிக்க இயலாத பட்சத்தில் இந்த முடிவை உயிர் எடுக்கிறது. உயிரின் பரிபாஷையை உடல் மறந்து போவதற்கு காரணம், உலகத்தில் அதற்குள்ள அழுத்தம் ஒன்றே. சரீர கவனம் அற்று போனவனுக்கு சரீரம் மரத்துப் போகும், மறந்து போகும், உணர்விழந்து போகும், உணர்ச்சியாக வெளியேறி போகும், மரணமாகிப் போகும். விதியை மதியால் வெல்லலாம் என்பதற்கு உதாரணம், மரணத்தை வெல்ல மதியால் இயலும் என்பது தான். உடலின் எல்லா இயக்கங்களின் கட்டுப்பாட்டையும் உயிர் தன்னிடத்தில் வைத்துக் கொண்டுள்ளது. உயிரின் கட்டுப்பாட்டை இழந்து சரீரம் உலக வாழ்க்கையில் தாறுமாறாக செல்லும் போது உடலை விட்டு உயிர் விலகுகிறது. உடல் வேகம் அதிகம் செல்ல, செல்ல உயிரின் விவேகம் சிறிது சிறிதாக குறைய ஆரம்பிக்கிறது. விவேகம் இல்லாத வேகம் எமனாக மாறுகிறது. விவேகத்தின் வேகம் நிறைந்தது உயிர், உடல் எப்படி இருக்க வேண்டும் என்றால்

வேகத்தில் விவேகம் நிறைந்ததாக இருக்க வேண்டும். உயிர் செயல்படும்போது விவேக சக்தியாகவும், உடல் செயல்படும் போது வேக சக்தியாகவும் உருவெடுக்கும்.

விவேகம் + விவேகம் = உயிர்தான் கடவுள் (உண்மைநிலை உணர்ந்தவன்)

விவேகத்தில் + வேகம் = ஞான வாழ்க்கை, ஆன்மீகம் ஆத்மஞானம்.

வேகத்தில் + வேகம் = உலகத்தில் உயர்ந்த வழிகாட்டி

வேகத்தில் + விவேகம் = விவேகம் அற்றது.

## 36. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

குரங்கு ஒன்று கண்ணாடியை பார்ப்பதற்கும் ஒரு மனிதன் கண்ணாடியை பார்ப்பதற்கும் வித்தியாசங்கள் உண்டு. குரங்கு தனது உருவத்தை கண்ணாடியில் பார்த்து வெறுப்பு ஏற்பட்டு கண்ணாடியையே உடைத்துவிடும். அதன் கோர குணம், கோர உருவமாக கண்ணாடியில் வெளிப்படுகிறது.

அதே போலத்தான் மனம் என்பது குரங்கு, சரீரம் என்பது கண்ணாடி, குரங்கின் சுபாவத்துக்கு தகுந்த உருவத்தை ஏற்படுத்திக் கொண்டு, சரீரத்தை உற்று மனம் உடலை நோக்கும் போது மன விகாரம் சரீரத்தின் மூலம் பிறர்காணும் அளவுக்கும், தான் உணர்ந்து வருத்தப்படும் அளவுக்கும் விகார ரூபமாகிப் போகிறது. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதன் பொருள் இதுதான். உடல் விகாரப்படும் போது, நோய், மனம் விகாரப்படும்போது வேகம். சரீரம் விகாரப்படும் போது ஊயிரை விட்டு உடல் முழுமையாக விலகி நிற்கும். இவ்வுலகில் தாமரை இலை நீர்போல் உடலில் உயிர் ஒட்டி இருக்கும். மனம் விகாரப்பட்டு பஞ்சமாபாதகத்தையும் செய்யச் சொல்லி, சரீரத்தை தூண்டி அழைப்பு விடுக்கும். இதற்கு எந்த தேகம் உடன்படுகிறதோ, அந்த தேகமும் மனமும் அதன் பாபங்களை ஏற்கும். இவைகள் எவையாயினும், உடன்படாத உயிர் எப்போதும் தாமரையிலை தண்ணீர்தானே.

உயிர் உடலோடு எப்போதும் சேராது. உடல் தான் உயிரோடு இணைய வேண்டும். உயிருடன் சரீரம் இணையவேண்டுமானால் சரீரம் அதற்குள்ள எல்லா தகுதியும் பெற்று இருக்க வேண்டும், தகுதி இல்லாத உடல், தரமான உயிரிடத்தில் இணைவது நடவாத காரியம். உயிர் நிறைந்த உடலே தரமான உடல். தாயார் வயிற்றில் சிசு ஜெனனமாகும் முன்பு சுக்ல ரூபமானதாக இருந்து தேகம் பெறுகிறது. சுக்ல சுரோணிதத்தால் உடலாக மாற்றம் அடைகிறது. சுக்கிலம் உயிராகவும் சுரோணிதம் உடலாகவும் உருவெடுக்கத் துவங்குகிறது.

## 37. உயிருக்கு உணவளிப்போம்

சுரோணிதம் 100 பங்கு + சுக்கிலம், 1 பங்கு பெண், சுக்கிலம் 100 பங்கு + சுரோணிதம் 1 பங்கு ஆணாகவும் வடிவெடுக்கிறது. சுக்கிலம் என்பது உயிர் பலம், சுரோணிதம் என்பது தேக பலம். சுரோணிதத்தால் சரீர லட்சணமும், தேகம், அழகு, மலர்ச்சி, சுக்கிலத்தால் உயிர் லட்சணமும், தேகம், அழகு, கவர்ச்சி, சுக்கிலத்தால் உயிர் லட்ச்மும். மனம், அறிவு, உணர்ச்சி இவைகளில் உள்ள சிறந்த் அனுக்களும் திரவ பொருளில் பலதரப்பட்ட கோளாறுகளும் மனிதனின் தலை எழுத்துக்கு காரணமாகவும் மரணம், நோய், கவலை அனைத்துக்கும் காரணமாக அமைகிறது.

உடலில் சுக்கிலத்தின் அளவு கூடுதலாக உள்ள பெண்கள் ஆண்களுடைய உருவ அமைப்பு உள்ளவர்களாக தோன்றும். தேகத்தில் லட்சண குறைபாடாகவும், ஆண் தேவைக்கு குறைவாக சுரோணிதம் உள்ளது, காளியை போலும், காட்டேரியை போலவும் வீரப் பெண்ணாகவும், நாடாளும் திறமை கொண்டவளாகவும், உருவான ரகசியம் இதுதான். உடலில் சுரோணிதத்தின் அளவு கூடுதலாக உள்ள ஆண்கள் பெண்களுடைய உருவ அமைப்பு உள்ளவையாக தோன்றும் தேகத்தின் லட்சண குறைபாடாகவும் பெண் தன்மையில் விளங்கும் தேகமாகும். இது தேவைக்கு அதிகமாகவே உடலில் சுரோணிதம் உள்ளதே, காரணமாகும்.

தேவை குறைவாக சுக்கிலங்கள் உள்ளவன் பேடியாகவும், அலியாகவும், மிகுந்த பொருமையாகவும், நிதானமாகவும், பாசமாகவும், பரிதாபமாகவும், மற்றவரை கவரும் விதத்திலும் பழகுவார்கள். இவைகள் யாவும் சங்கமகாலத்தில் ஏற்பட்டுள்ள வித்தியாசங்களே, அவர் அவர்களும் பேசிக் கொள்ளும் நிறை குறை என்பதாகும். சுக்கில சுரோனிதங்களே, உயிர் என்பது சரீரத்தில் சுக்கிலம் திரவ ரூபமாகவும், சுரோணிதம் திடப் பொருளாகவும் உள்ளது. சுக்கிலத்தை உற்பத்தி செய்ய எவ்வளவோ வழிமுறைகள் நமக்குத் தெரியும். ஆனால் சுரோணிதங்களை உருவாக்க என்ன செய்ய வேண்டும். ஈஸ்ட்ரோஜன் கொடுத்தால் சுரோணிதம் கூடுதலாக சுரக்கும். ஆனால் வீரமும், ஆண்தன்மையும் குறைந்து விடும். கருப்பையில் வேலை செய்யும் எல்லா மருந்தும் சுரோணித்த்தை உடலில் ஏற்படுத்திக் கொள்ள உதவுகிறது. இவையால் அழகு, கவர்ச்சி, பொலிவு, தேக மினுமினுப்பு தேவதா ரூபம் ஆகியவற்றை பெறலாம். இந்த மருந்தை கவர்ச்சிக் குறைவாக உள்ள ராட்சஷிகளுக்கு தந்தால் அவள் பதுமையாவாள். ஒவ்வொருவரும் அவரவர் குணத்துக்கு ஏற்ற சரீரத்தை பெறுகிறார்கள். குணம் மாறும் போது சரீரமும் மாறுகிறது. ஆகவே குணத்தை மாற்றினால் சரீரம் மாறும்.

சரீரத்தை மாற்ற வேண்டும் என்றால் சுக்கிலம், சுரோனிதம் இரண்டும் தொட்டு விட்டால் போதும், இரண்டையும் சேர்த்து தொட்டால் அதுவே “சாகாகலை” என நான் தீர்மானமாக சொல்லுகிறேன். நான் ஒரு திறந்த புத்தகம். அறிவு திட்டமிட்டு, மனம் செல்ல சரீரத்தை இழுத்து செல்கிறது. இப்படித்தான் ஒரு மனிதனின் வாழ்நாள் பயணம் இருக்க வேண்டும். சரியான திட்டமிட்ட அறிவு, அறிவுக்கு அடங்கிய மனம் மனதுக்கு கட்டுபட்ட சரீரமாக இருப்பவரை கண்டால் அரசன் என்று மக்கள் வணங்குவார்கள்.

காய்கறிகளை வாங்கி வந்து நறுக்கி பாகப்படுத்தி கழுவி தண்ணீரை 5 முறை கழுவி ஊற்றி விட்டால் அந்த உணவில் உள்ள விந்து ரூபமான உயிர் சத்தான சுக்கிலம் போய் வெறும் சுரோணிதம் மாத்திரமே தங்கி இருக்கும். இது வெறும் ஜடப்

பொருளாக உள்ளதை, பசிக்கு ருசிப்பார்த்து உண்ணலாமே ஒழிய, உயிர் இல்லா உணவு வைக்கோலுக்கு சமம். சுத்தம் பார்த்து சமைப்பதாக பெருமை பேச்சு, இது முற்றிலும் சுகாதாரம் அற்றது என்று யாவருக்கும் தெரியாது. உயிர் உணவே உயர் உணவு. தானியங்களை வேக வைத்து தண்ணீரை கீழே கொட்டுவது, உப்பு போட்டு வேக வைத்து தண்ணீரை கீழே கொட்டுவது போன்ற அக்கிரமம் நடக்கும் இல்லத்தில் வியாதிக்கு பஞ்சமே இருக்காது. பிறகு வீட்டில் உள்ளவர்களையும் சாகடித்து கொள்ளி வைத்து சாம்பலை கொண்டு போய் சாக்கடையில் கரைக்க வேண்டியதாக ஆகிவிடும். மன திருப்திக்காகத்தான், உடல் உணவை ஏற்றுக்கொள்கிறது. நிறம், மனம், சுவை, பதம், சூழ்நிலை பார்த்து சரீரம் உணவை ஏற்கும், ஆனால் உயிருக்கு உயிர்தான் தேவை, உடலை விட உயிர்தான் உயிருக்கு தேவை. இந்த சட்டத்துக்கு கட்டுபட்ட உடலை மட்டுமே உயிர் தனக்குள் ஏற்க சம்மதிக்கும். உயிர் உணவு உண்போம், உடல் நலம் காப்போம். முறையான ஆகாரம் வளமான வாழ்க்கைக்கு என்றென்றும் ஆதாரம். முறையற்ற வாழ்க்கை முறை, சோகங்கள் நிறைந்தது. உடல் = சுரோணித மயம், உயிர் = சுக்கில மயம் = உடல் உயிர். சுக்கில சுரோணிதம் என்னும் திரவம், சாகாமைக்கான மருந்து, உயிர் உடம்பு ஏற்படுத்தும் மருந்து. உயிர் உடம்பை யாரும் விருப்பம் இல்லாமல் ஏற்க முடியாது. அது அமிர்தமே என்றாலும், எனவே ஒரு வேளை பட்டினி போட்டு உடலை உயிருக்காக ஏங்க வைத்து விட்டு தந்தால் விஷம் கூட அமிர்தமாக மாறிப்போகும். வயதான காலத்தில் இளம் பாரியை விஷம் தானே? ஆனால் இளம் பாரியைப் போய் யாராவது இவ்வுலகில் விஷம் என்று சொல்லுவார்களா. இவ்வுலகில் கரும்பு தின்ன கூலியா கேட்பர் என்பார்கள். சமச்சீரான உணவு முறை தட்பவெப்பத்துக்கு தகுதியான உணவு, சரியான உணவின் அளவு, ஒரு வேளை ஊன் உடம்புக்கு உணவு இரண்டு வேளை உயிருக்கு உயிர், உணவு, உண்ணும் பழக்கம் இவை நேர்யற்ற வாழ்க்கைக்கு வழிகாட்டியேயாகும். பசிக்கு மட்டுமே உணவு, இது உடலுக்கு ஏற்படும் பசி, இதற்கு உபகாரமாக அமையும் உணவில் உயிர்

பொருளும், சேர்ந்ததாக இருப்பது மிகவும் அவசியம். ஆனால் உயிர் ஆனந்தப்படுகிறது. உடலும் ஆனந்தப்படுகிறது. உயிரை ஆனந்தப்படுத்துங்கள். அதற்கு குதூகலம் என்ற பெயராம். உயிரை ஏற்படுத்தர்தவரை (உற்பத்தி) சிலைகள் கடவுளாக மாறாது. அந்த வெறும் பொம்மைகள் எந்த நிவேதனத்தையும் ஏற்கவும் இயலாது. உணவு அவசியம், உணவு கட்டுப்பாடு முறையான உணவு பழக்கம், உணவு தயாரிக்கும் விதம், உடலினுடைய தேவையை பூர்த்தி செய்யும் ஞானம் எவனுக்கு உண்டோ அவனே வைத்தியன் ஆவான். உயிரின் உயிர்த்தேவையை அறிந்து பூர்த்தி செய்யும் அறிவு எவனுக்கு உள்ளதோ அவனே ஞானியாவான். உயரிய கலைகளுக்கு எல்லாம் உயரிய கலையாம் "உயிர்கலை".

## 38. ஆசையை ஏன் துறக்க வேண்டும்?

**ஆசையை அறவே ஒழிக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். எதற்காக ஆசையை ஒழிக்க வேண்டும். ஆசை துன்பத்துக்கு முதல் காரணமாக உள்ளது என்றால் இன்பத்துக்கும் அதுவே காரணம்** நியாயமான ஆசைகளை நிறைவேற்றுவது இறைவனின் ஆசையும் கூட, உடலில் உயிர் ஒட்டி இருப்பதற்கு கூட ஆசையே காரணம். உலகத்தில் ஒருவன் உயிருடன் இருப்பதற்கும் வாழ்வதற்கும் காரணம் ஆசை. அன்பும் ஆசையும் உயிரின் இரு கண்கள் ஆகும். உயிர்களிடத்தில் பணிவும், பக்தியும், கொண்டவரிடம் உயிர் கட்டுப்படுகிறது. கடல் அளவு கொண்ட ஒரு உயிரை, பக்குவப்படுத்தினால், உயிர் ஒரு சிறிய கலசத்துக்குள் கட்டுபட்டுவிடும். அன்பும் ஆசையும் இல்லாதவனை எப்படி ஒரு பெண்ணும் நேசிக்கமாட்டாளோ, இதுவும் அப்படித்தான் ஒரு பெண்ணின் மனநிலையை எந்த புருஷன் புரிந்து கொள்ளுவானோ, அவனே அவளிடத்தில் சுகத்தையும், நேயத்தையும் பெற முடியும். செல்வத் திரவியங்களால் ஒரு பெண்ணுக்கு திருப்தியை ஏற்படுத்தி விடலாம் என எண்ணும் கயவர்களின் போலியான அன்புக்கு கட்டுப்படாமல் வெளியேறி செல்வாளோ, அப்படித்தான் கடவுளை செல்வ திரவியங்களால் மகிழ்ச்சி

அடைய முயற்ச்சிப்பதுவும், அவைகளால் ஏமாற்றமுற்று கடைசியில் கடவுள் இல்லை, என்று நிர்பந்திப்பதும் ஆகும். கண்டதையும் கடவுள் என்று எண்ணி கையெடுத்து வணங்கியது யாருடைய குற்றம்? அந்த குற்றத்தை செய்தவர் படும் இன்னல்களுக்கு கடவுள் எப்படிப் பொறுப்பாக முடியும். உன்னுடைய ஏளனம் எந்த விதத்தில் நியாயமானது. பைத்தியக்காரன் என்ற வார்த்தை உனக்கு மட்டுமே பொருத்தமானதாக கருதுகிறேன். உன்னுடைய தவறுக்கு நீ மட்டும்தான் பொறுப்பு ஏற்கிறாய். மனிதன் இன்பத்தை, தான் மட்டுமே அனுபவிக்க வேண்டும் என்ற சுயநலம் கருதி கடவுள் பக்தியை கூட கள்ளக்காதலாக எண்ணுவர்க்கு, துன்பத்தை மட்டும் இறைவனுக்கு பங்கு தர எண்ணுகிறார்கள். பாபிகளின் பரோபகாரம் பகவானுக்கு தெரியும். தெருவில் செல்லும் பைத்தியக்காரனிடம் நீ என்றாவது ஒரு நாள் பேசியது உண்டா? கருத்து பரிமாற்றங்கள் செய்து கொள்ள வேண்டும், என்ற விருப்பம் எப்போதாவது உனக்கு ஏற்பட்டது உண்டா? ஏன் அவனும் ஒரு மனிதன்தானே அவனிடம் நீ நன்கு பழகி அவனை மாற்றி விட்டால்தான் என்ன? அது எப்படி சாத்தியம் இல்லையோ, அப்படித்தான் கடவுளும் மக்களும் ஊர் ஊராக பக்தி பரவசத்தில் அலைந்து திரிந்தாலும், சரி மன அமைதி என்பது எதையும் உனக்கு தராது போகும். கடைசியாக உயிர்தான் கடவுள் என்ற உன்ம்மயை நீ செத்துப் போன பிறகு அறிவதில் உனக்கு என்ன லாபம் இருக்கிறது. எங்கு அலைந்தாலும் ஒரு நாள் கட்டாயம் தேர் நிலைக்கு வந்துதான் தீரவேண்டும். பாதை தெரியாமல் நடை தடுமாறி மைல் கல்லை வணங்கும் பாத யாத்திரிகளுக்கு பரலோகம்தான் வழி என்பதை உணர்த்துகிறேன். ஆட்டையும் மாட்டையும் கொன்று தின்னும் மனிதனுக்கு இன்னும் பசி அடங்கவில்லையோ, அப்படித்தான் எமனும் எந்த பாவமும் பார்ப்பது இல்லை, மனிதனிடம். இரக்கமற்றவனை கொல்வதற்கென்றே படைக்கப்பட்ட இரக்கமற்ற சாகா ஜீவிதான் எமன். கருணை என்பது கடுகளவும் இல்லாத தர்மவான். சற்றும் கருணை இன்றி கொல்லுவதுவே இவனின் தொழிலாக உள்ளது. கருணை வடிவான கடவுளுக்கு இவன்

எப்படி வேலைக்காரனாக இருக்க முடியும். கசாப்பு கடைகாரனை தர்மவான் என்றும் புண்ணியவான் என்றும் புகழலாம். பயத்தால் வேண்டுமானால் இந்த பக்தி ஏற்பட்டு இருக்கலாம், உண்மையில் இவன் ஒரு கொலைகாரன். உன்னுடைய சொத்தை எடுத்து பிறருக்கு தானம் பண்ணுபவனுக்கு தர்மவான் என்பதை விட கொள்ளையன் என்பதுவே பொருத்தமானதாக இருக்கும். உயிரை கடவுளாக எண்ணுபவன் தவிர மற்ற எவரையும் தாட்சண்யம் இல்லாமல் கொல்லுவதை எந்த சட்டமும் தடுப்பது இல்லை. எமன் **வழிபடும் இறைவன் உயிர்தான்,** உயிர் தான் கடவுள் என்ற கொள்கை உடையவரின் உயிர் நண்பன் எமனாவான். சண்டைக்காரன் காலில் விழுகின்ற வித்தை இதுதான். நோய் என்ற சாட்சிக்காரன் வாயில் அகப்படாது இருக்க இதுவே வழி.

## 39. உடலுக்குள் உயிர் அடங்குவதே மரணம்

*வகை வகையால் வாத்தியங்கள் முழங்கிகிட்டே*
*போறாரு,*
*பல்லக்கிலே ஏறிகிட்டு ஆடிகிட்டே போறாரு.*
*வகைவகையாக சலவை துணி மடித்துவைத்து விட்டு*
*போறாரு,*
*ஊருக்கெல்லாம் வட்டிப்பணம் தந்து வாங்காமலே*
*வள்ளல் போல போறாரு,*
*வாணிபரிடம் கடனுக்கு பொருள் வாங்கி ஏமாற்றிவிட்டு*
*சேர்ந்தாரு,*
*மருந்து மாத்திரைகள் தாராளமாக சாப்பிட்டுவிட்டு*
*செத்தாரு,*
*பன்னீரிலே குளித்தவரு தீக்குளிக்கப் போறாரு,*
*வாழும் வாழ்க்கை யாவற்றையும் நரகமாக்கி*
*கொண்டாரு,*
*இப்போ செத்தபின்பு சிவகைலாயம் தேடிக்கிட்டு*
*போறாரு.*

உயிர் என்பது உடலை விட்டு செல்வது இல்லை உயிர் என்பது அடங்கி விடுகிறது. விளக்கில் எண்ணெய் தீர்ந்தவுடன்

எப்படி தீபம் அமைதியாகி விடுகிறதோ அப்படித்தான் பலம் இல்லாத உடலிலும், உறுதி இல்லாத உள்ளம் ஆகிப்போன நிலையிலும் உயிர் அடங்குகிறது. உயிருக்குள் உடல் அடங்காமல் போய்விட்டது. இவையாலேயே இந்த கோர நிகழ்வுகள் நிகழ்கின்றன. உடலில் கட்டுபட்டுள்ள மிகச்சிறிய பொருள் உயிர் என்று எண்ணி உதாசீனப்படுத்தியதால் உயிரை இழந்து உடல் ஏமாந்து போய் விடுகிறது. மனிதன் தனது வாழ்நாளில் ஒரு நாளேனும் கடவுள் யார் என்பதை அறியாமல் முக்தி அடைய விருப்பம் கொண்டால் அது எப்படி ஈடேறும் என நினைக்கிறீர்கள். செத்தவனுடைய துக்கம் செத்தவனுக்கு மட்டும் தான் தெரியும், அந்த சாமிக்குக்கூட தெரியாது. தன்னுடைய நம்பிக்கை பொய்யாகிவிட்ட போதும் நம்பியவனும் அந்நிலையை அடைகிறான் எண்ணத்தில், கருத்தில், எது அழகாக இருக்க வேண்டும் என்றால் உயிர். அங்குதான் அது தங்குகிறது அந்த இடத்தை விட்டு எங்கு தேடினாலும் காண்பது இல்லை. உயிர் உணர்ச்சியின் வடிவமாக உள்ளது எனும் போது உன்னுடைய கோளாறான உணர்ச்சிகள் மாறி உயிர் உணர்ச்சியாக மாறுவாய். ஊறுகாய் என்று 108 தடவை சொன்னால்தான் வாயில் எச்சில் ஏற்படும் என்பது இல்லை. அதை உணர்ந்து சொன்ன ஒரு வார்த்தையில் வாயில், சொல்லும் வழியும் உனை அறியாதவர் எத்தனை முறை சொன்னாலும் அதை ஒரு நாளும் உணர முடியாது. அதுபோல் உண்மையான பொருளுடன் உன்மையாக பழகிய அனுபவத்தை ஏற்படுத்திக்கொண்டு அதை நினைத்த மாத்திரத்தில் உடம்பில் உயிர் சுரக்கும். உள்ளம் நிறையும் உடல் சூடு ஏறும். உணர்ச்சியில் தேகம் நிற்கும். நல்ல பொலிப்பு உள்ள காளையின் பொலிப்பு அடங்கும்போது காளையும் அடங்கும். பிற பசுவிடம் கூடி தனது பொலிப்பு அடங்கிப்போகிறது. தன்னிடத்தே அந்த பொலிப்பு அடங்கிப் போனால். "சாகாநிலை" தேகம் அடையும், வீறு கொண்ட உடல் உயிருடன் அடங்கிப் போனால் உடல் உயிராக மாற்றம் அடையும், கொள்ளிக்கட்டைக்கும், குடத்தில் இருக்கும் விளக்குக்கும் வித்தியாசங்கள் நிறைய உள்ளது. உடலில் இருந்து வெளிப்பட்ட உணர்ச்சியை வெளியில்

விடாமல் உடலுக்குள்ளேயே கிரகிக்கச் செய்யும் தந்திரமார்க்கம் ஆதி விந்தை வெளியேற்றாமை. அதை உயிர் பொருளாக எண்ணி மரியாதை தருதல், உயிர் பொருளை உடலாக பாவித்தல், சுக்கில தேகமாக மாற்றிக் கொள்ள உத்தியை ஏற்படுத்திக் கொள்ளல், உயிர் அனுக்களை, கிருமிகளை அழிக்கக்கூடிய ஏந்த இயற்கைக்கு மாறாக உள்ள வஸ்துக்களை தீண்டுவது மட்டுமல்ல, பழகுவதும் உயிர்க்கு எமன் ஆகும். முதியவனே கைத்தடியை தூக்கி எறிந்துவிட்டு என்னுடன் வந்து விளையாடி மகிழ்கிறாயா? தாயை விட பெரும் கருணை உடைய அந்த உயிருடன் சென்று மகிழ்வோம் வாருங்கள். 100 ஐ 16 ஆக மாற்றும் காலக்கணக்கு சொல்லி விட்டேன். முதியவருக்கு உணர்ச்சி வந்தால் 16 தானே உணர்ச்சி என்றால் உயிர்தானே. உயிர் பலம் என்பது தெய்வபலம், இதை அறிந்து கொண்டவன் ஆன்ம பலம், மனோபலம், தேகபலம், பெறுகிறான் உடலை விட்டு உயிர் விலகுவதும் இல்லை செல்வதும் இல்லை, சரீரம் படும் ஒவ்வொரு துன்பத்திற்கும், இன்பத்துக்கும் காரணம் நீயாகவே இருக்கிறாய். சரீரத்துடன் கூடி இன்பத்தையும், துன்பத்தையும் சேர்த்தே உயிர் அனுபவிக்கிறது. உடலைத்தவிர, உயிருக்கு எந்த விருப்பமும் இல்லை. உயிரை தவிர உன்னிடம் அன்பு செய்ய யாரும் இல்லை. அன்பே உருவான உயிர் தன்னிடத்தில் உள்ள சக்தி எதையும் வெளிப்படுத்தாமல் அமைதியின் உறைவிடமாகவும், துடிப்பாகவும், இருக்கிறது. என் உயிர் காதலியும் நானும் மட்டுமே தான் தனிமையில் இருக்கிறோம். உயிரை கடவுளாக வணங்குபவர்க்கு மட்டுமே உடலில் உயிர் கட்டுப்படும். உடல் உயிரின் வடிவமாக இருக்கிறது. இது உடலை உணர்ச்சி வடிவமாக மாற்றுகிறது. அந்த உணர்ச்சியிலேயே தேகம் நிலைக்கிறது. உணர்ச்சி என்றால் மட்டுமே தேகம் அழியாமல் நிலைத்திருக்கச் செய்கிறது. தன் சுய உணர்ச்சியை இழந்து எதிரிட்ட காட்சிகளில் உணர்ச்சிவயப்பட்டு தேகம் வீணாக அழிகிறது. கடும் பனியில் தன்னை பாதுகாத்துக் கொள்ள உதவும் போர்வையை போல், எல்லாவிதமான சூழ்நிலையிலும் தன்னை இழக்காமல் வேறு ஒரு உணர்ச்சியாக மாறி, அதில் சென்று

மனம் கலங்காமல், கலங்கிப் போகாமல் தான் தன் உணர்ச்சியை விட்டு விலகாமல் இருக்க உயிர் உடலுக்கு ஒரு போர்வை போல் உதவுகிறது. போர்வை என்பதற்கு கவசம் என்று பொருள். சூழ்நிலை என்பது கட்டாயத்தை ஏற்படுத்துகிறது. அதில் மனம்,புத்தி, சரீரம் எல்லாம் கைதியாகி விடுகிறது. கட்டுப்பட்டு வாழ்வதை வாழ்க்கை என்று நினைக்கிறார்கள், கைதிகளுக்கு ஏது சுதந்திரம். மாயை என்ற நிழலுக்கு கட்டுப்பட்ட நிஜமான மனிதர்கள் சாவதற்கென்றே பூமிக்கு வந்த சாதனையாளர்கள். ஆன்மீகம் பேசும் சாதுர்யவான்களிடம், விதண்டாவாதம் பேசும் வேடிக்கைச் சரித்திரம். கதையை எழுதி சுபத்தில் முடிக்கும் ஆசை கொண்ட மனிதனின் வாழ்க்கை மட்டும், ஏன் அசுபத்தில் கருப்பு பத்திரிக்கை வைத்து முடிக்கிறார்கள். தனக்குள்ளே ஏதோ ஒரு பொய்யான கற்பனையில் ஊறிப்போய் இருக்கும் சண்டாளர்களுக்கு "சாகாநிலை" என்பது சர்க்கரைப் பொங்கல் போல் தெரிகிறது, கற்பனை வாதிகளுக்கு கல்லறையும், சுடுகாடுமேதான் சாஸ்வதம். உண்மையை அறியாத மூடனுக்கு ஞானம் புகட்ட வேண்டும், என்று புராணக்கதை புத்தகங்களை ஓதி முட்டாள்கள் ஆக்க முடியுமே ஒழிய தெளிவு பிறக்காது. குழப்பம் சந்தேகம் பயம் இவை மூன்றையும் அழிக்க வல்லது சம்மதம் மட்டுமேதான், சாகாக்கல்வியும், சாகா நிலையுமேதான்/ அதன் மைல்கல். வாழ்வும் சாவும் பழகிப்போன ஒரு விஷயமாகிவிட்டது. மனிதன் உயிருடன் வாழ முடியாது என்று பூரணமாக நம்புகிறான், காரணம் உயிரிடத்தில் அனுவளவு கூட பக்தி இல்லை, அன்பு இல்லை, இவன் அழிவது உறுதி என்று இவனுக்கே தெரியும். உயிருடன் வாழ்கின்ற நாட்களில் கூட உயிருடன் நட்பு செய்யாத வாழா வெட்டிகளுக்கு மரணம் நிச்சயம் என்பது மகத்தான உண்மைதான்.

## 40. உயிரின் சம்மதம்

உயிரின் சாபம்தான் உடலை வாட்டுகிறது. எவன் விடும் சாபமும் எவருக்கும் பலிக்காது. உயிரே அனைத்தையும் உணர்ந்த பொருளும் உணர்த்தும் பொருளும் ஆகும். உயிரை

விட மேலான பொருள் உலகத்தில் இல்லவே இல்லை, இதை உறுதிபடுத்தவே, உடலை உறுதிப்படுத்தவே, உலகை உறுதிப்படுத்தவே, எழுதப்பட்ட **"உயிரின் சம்மதம்"**, மற்றவர்களுக்கு மட்டுமே காட்சிக்கு வைக்கப்பட்ட இந்த பொக்கிஷத்தை சாகும் முன் கற்பர் "சாகாநிலை" எய்துவர். உயிருடன் வாழ்பவனே ஆன்மையுடன் வாழ்பவனாம். உயிர்தான் கடவுள் என்று ஏற்றுக் கொண்டவன் எல்லா சாபங்களில் இருந்தும் விடுபடுகிறான். ஏன் எனில் இவனின் அறியாமையை அது மன்னித்து ஏற்றுக்கொள்கிறது. கற்பனையில் சிவகைலாயம் தெரிகிறதா என்று கேட்க ஆமாம் தெரிகிறது குருவே என்று ஒருவருக்கு ஒருவர் பாராட்டி பேசிக் கொண்டு ஒவ்வொரு நாளும் மரண தண்டனைக்கு வாய்தாவாங்கலாமே தவிர, தண்டனை ஒரு நாள் உறுதி, அந்த ஆட்டு மந்தைகளுக்கு ஜீவசமாதிகள் காலத்தின் கொடூரம், பக்தி கொண்டவன் முக்தி அடைவது உறுதி ஆனால் உறுதியான ஒன்றின் மீது பக்தி இருக்க வேண்டும். கடவுளை காணவேண்டும் என்று தற்கொலை செய்து கொள்கிறார்கள். உலகம் வியக்க வேண்டும் என்று மக்களை மிரட்டும் மகான்கள், மதவாதம் என்று மக்களை மிரட்டும் மகான்கள், மதவாதம் பேசி கத்துவார்கள் மிதவாதம் அறியாத மூடக் கயவன்ஒவ்வொருவனையும் தேடிப்பிடித்து அழிக்க வேண்டியது இல்லை, கயவனிடத்தில் கயவன் போலவே இருக்கும் பச்சோந்தியான உயிர் தனது சுயரூபத்தை அதை உண்மையில் விரும்புவர்களுக்கு மட்டுமே காட்ட வல்லது ஆளத்தெரியாதவனுக்கு எதற்கு இரண்டாவது மனைவி? இது, தன்னை கட்டுபடுத்த அறியாதவன், உலகத்தை கட்டுப்படுத்த ஆசைப்படுகிறான். உயிர் தனக்கு கட்டுப்பட்ட அதே நேரத்தில் உலகம் அவனுக்கு வயப்படும், இது தந்திரமாகும். இதற்கு எந்த மந்திரமும் தேவை இல்லை. உன் மனதுக்குப்பட்ட நியாயத்தை மற்றவரிடம் வலியுறுத்தும் போது நீ பகைவன் ஆகி விடுகிறாய். நீ பச்சோந்தியை போல் கசாப்பு கடையில் ஆடு வேஷம் போட்டுக்கொண்டு நிற்காதே, உலகில் சங்கல்பம் செய்பவர் உலகத்தின் சங்கல்பம் அறிய வேண்டியது மிகவும் அவசியம், உதாரணத்துக்கு "உலகஞானம்" என்பது

பொது அறிவு, தந்திரசாலிகள் இங்கே தலைவனாவார், ஒருவனை அழித்து ஒருவன் வாழ்வதுவே உலக நடைமுறை. சுக்கில சுரோனிதங்கள் அத்துப்போனவனே நிரந்தர நோயாளி, சுக்கிலாதிகள் அத்துப்போனவனுக்கு மருந்து தேவைப்படுகிறது. தன்னிடத்தில் உள்ள உயிர்ப் பொருளை இழந்துவிட்ட வருத்தம்தான் நோயாளியின் முகபாவம். சிருஷ்டி சங்கல்பமாக, ஜீவ சிருஷ்டிக்கு என வகுக்கப்பட்ட இந்த மாயைக்கு உயிராகிய உடலையும் இழக்கிறது, ஆனால் உயிர் பொருளை உற்பத்தி செய்து கொள்ளும் தந்திரம் தெரியாதவன், அதை செலவு செய்யும் தகுதியை மட்டும் எப்படி அடைவான். அந்த உயிர் பொருள்தான் சாரீரம் உண்டானதற்கு காரணமாக உள்ளதால் சரீர ஆரோக்கியத்துக்கும் அதுவே ஆதாரசக்தியாக உள்ளது. அந்த ஆதாரம் இல்லாமல் சரீரம் நிற்க முடியாமல் நிலைக்கவும் முடியாமல் நொந்து வீழ்கிறது. உயிர் பொருள் ஒன்றே உயர் பொருள் சாகக்கிடக்கும் எருமையை ஈமொய்க்கும் எறும்பு மொய்க்கும், கழுகு கொத்தும், காக்கை உண்ணும், அதுபோல உயிர் பொருள் இல்லாததை உணர்ந்து நோய் பட்டாளங்கள் உயிருடன் இருக்கும் போதே சமாதி கட்டுகிறது. கண்முன்னால் எந்த வார்த்தையாலும் வர்ணிக்க முடியாத சோகங்களை உங்களிடம் சொல்லி ஆற்றுகிறேன். இறுதி யாத்திரைக்கு தயாராக இருப்பவர்கள் இறுதியாக என் சம்மதத்தைக் கேளுங்கள். ஏன் என்றால் எமன் எனக்கு மட்டும் நண்பன் இல்லை, உங்களுக்கும் நண்பன்தான். இவன் உயிரிடத்தில் கொண்ட விசுவாசத்துக்கும் அன்புக்கும் எல்லையே இல்லை, இவனை கண்டு ஒவ்வொரு கனமும் வியந்துபோகிறேன். அருள் வெளிக்குள்ளே இவருக்கு என்ன வேலை கருணைக்கடவுளான கடவுளுக்கு சிறிதும் தயவு தாட்சன்யம் மில்லாத இரக்கம் அற்ற அரக்கன் எப்படி ஊழியனாக இருக்க முடியும், உயிரை கடவுளாக மதிக்காதவனை மட்டுமே வதைப்பதற்கான சிறப்பு அதிரடிப்படையின் தலைவன். இவன் தனது சட்டத்துக்கு உடன்படாத எவரையும் நண்பனாக பாவிக்க மாட்டான், அவன் கடவுளின் அவதாரமாக இருந்தாலும் கூட. கொல்லும்

அதிகாரம் உள்ளவன். இவனுடைய படைகளான சேனைகள், வியாதி, பீடை, தரித்திரம், அகோரம், அழுகை, சோகம், பசி, பஞ்சம், ராகு, தீமை, மரணம், வெகுளி போன்றவற்றை கொண்டு கணக்கு தீர்ப்பான். காலக் கணக்கன், உயிரை கடவுளாக வணங்குபவனைத் தவிர மற்ற எவரையும் நண்பனாக பாவிக்க மாட்டான். அவன் கடவுளின் அவதாரமாக இருந்தாலும் கூட மன்னிக்க மாட்டான் நோயின் அச்சுறுத்தலுக்கு அடங்கிவிட்டு சரீரங்களை ஆடவிட்டு பார்க்கும், எனது அற்புத சித்து, உயிராகிய கடவுள் எனக்கு கற்றுக் கொடுத்தது. 6 வயதும் 60 வயதும் ஒன்றுதான். 100 வயது ஆனாலும் அனைவரும் தகுதி உடையவரே ஆவார். 100 வயது கிழவனும் இந்த கொள்கையை ஏற்றுக் கொண்டால் பச்சிளம் குழந்தையைப் போல் கையும், காலும், விழியும் மாறும். பிரேத களை போய் குழந்தையை போல் மாறுவான். உயிரினுடைய விந்தையான உண்மைகள் எல்லாம் விளையாடிக் கொண்டு இருப்பவருக்கு தெரியாது. காலங்கள் வேடிக்கையாக நகர்ந்து கொண்டே இருக்கிறது. உயிர் தான் கடவுள். இதுதான் ஒவ்வொருவருடைய வாழ்விலும் உண்டான ரகசியம் இது மட்டும்தான். மற்றவை வெறும் செய்திதான். சுத்த ஜோதியாய் தேகம் மாறும் நல்ல நாளை தினம் தினம் எதிர்பார்த்து மன உறக்கம் அகன்று போனேன். ஒவ்வொருவன் பிறப்பிலும் எதிர்காலத்தை பற்றிய கற்பனையும், லட்சியமும் கண்டிப்பாக இருக்கும், ஆனால் ஆவியோடு தேகம் கலக்கும் அந்த நல்ல நாள் கண்டிப்பாக வரும். என் கைக்கு எட்டும் தூரத்திலேயே இருந்து கொண்டு என் இதயத்தில் நிறைந்த உயிராகிய தெய்வமே, மீளா இன்பம் அடையும் அந்த திருகுறிப்பு எப்போதென்று திருவாய் மலர்ந்தருளு. உன் அருள் பார்வை என் மேல் பட்டால் பசி ஆறிப் போவேன். என் மீது இரக்கம் இல்லையா. என் வாழ்வின் முடிவு, பெற்றவளாலும் இல்லை, என் கையிலும் இல்லை. முடிவான இன்பம் நல்கும் கடவுள், ஒருவருக்கே உயிர் அது சொந்தம் ஆகும். எந்தையே என்னிடம் உறவு கொண்டருளிய எம்பிரான் ஒருவனே வீடு புகுத்த வல்லான். உயிரை கொடுத்து உனக்கு

புத்திமதி சொன்னேன். உயிரிடத்தில் நிலையான பக்தியை ஏற்படுத்த வேண்டி எனக்கு தெரிந்த எல்லா ரகசியங்களையும் செந்தமிழ் படுத்தினேன். புரியாத புதிர் அல்ல, தெரியாத மொழி அல்ல, கடினமான வார்த்தைகளும் அல்ல. உள்ளதை உள்ளபடி சொன்னேன். மெய்யே ஆன பயன் உள்ள இச்சம்மதத்தின் கொள்கை நன்கு உணர்வார் நிச்சயமாய் நித்திய வாழ்வை பெறுவர் திண்ணம். மனதை திறந்து சொன்ன மஹா வாக்கியம் "உயிர் ஒன்றே கடவுள்" என்பது மட்டும்தான்.

## 41. "உயிர்" எனும் சொல்லின் சக்தி

**உயிர் என்ற வார்த்தையை கூட உணர்ச்சி பூர்வமாக சொல்லும் போதுதான் அந்த உயிர் என்ற வார்த்தைக்கே உயிர் பிறக்கும். அதன் அர்த்தம் மனதில் படியும்.** அப்படி உணர்ச்சி பூர்வமாக உயிரை எண்ணும் போதுதான் உடல் உயிரில் கலந்து நிற்கிறது, என்று உணர்வீர்களாக. இந்த நிலையான நிலையே சமாதி ஆகும். ஆதியான உயிருக்கு சமமான நிலையை அடைவது என்பதான். பசும்பாலை போல் விளங்கும் சுத்த சரீரம், உயிருடன் உறவு கொண்டு சில காலங்கள் சேர்ந்தே இருக்கும். அந்த சில காலங்கள் இணைபிரியாமலும் வேறு வேட்கைகள் ஏதும் இல்லாமலும். உயிர் இன்பம் அனுபவிக்க முழு பிரயாசையுடன் சரீரத்தையும் தியாகம் செய்ய வேண்டும். அப்போது உனக்கு எந்த சம்மந்தமும் இல்லை என்பதாம். உடலைப்பற்றிய சிறு கவலையும் இல்லை. உடலை விட்டு உன் கவனத்தை உயிரில் கொண்டு போய் நிறுத்து, கவனம் உயிராக மாற வேண்டும். இதுவே மனம் அசைவற்ற, சைவ நிலை என்று சொன்னேன். பிறகு கவனத்தை உயிர்ஆக்கினால் உயிருக்கு கவனம் ஏற்படும். நீ சரீரத்தை கவனிக்கும் வரை உயிர் சரீரத்தை கவனத்தில் வைத்துக்கொள்ளாது. நீ உயிரை நோன்பு இருந்து நோக்கினால், உயிர் உடலை நோக்கும். எதற்கும் பொறுமை மிகவும் அவசியம். ஆனால் எருமைகளைப் போல் இருந்து விடாதீர்கள். காய்ச்சிய பாலை

சிறிது ஆறவைத்து ஒரு துளி தயிரிடம் உறைவைக்க 1 நாள் கடந்த பின்னர் பால் எல்லாம் தயிராக மாறும். அதை கவனித்துக் கொண்டே இருக்க வேண்டியது இல்லை. பால் தயிராக மாறும் என்பதை நம்பிக் கொண்டு பொறுமையாக இருந்தால் கட்டாயம் மறுநாள் தயிர்தான். அதுபோல உன் முழு கவனத்தையும் உயிர் ஒன்றால் மட்டும்தான் கருத்து ஒன்றி கலந்து ஒரு கனம் நின்று விட்டால் உயிராகிய கடவுள் ஒரு கனமும் சரீரத்தை விட்டு பிரியவே மாட்டான். தயிராக மாறிவிட்ட நிலைக்கு பெயர்தான் சுக்ல தேகம். அதாவது ஊற்றை தேகத்தை சுக்ல தேகமாக மாற்றிய பிறகு இந்த தேகம் ஒளி தேகமாக மாற எல்லா தகுதியையும் அடைந்து விட்டதை உணர்வீர்களாக. கடவுளுக்காகவே தயாரிக்கப்பட்ட அழகு மிகு பொன்ஒளிமின்னும் பூரண தேகம். இதுவே கற்பூரம் ஆகும். சரீரத்தை இப்படி கற்பூரமாக மாற்றி பகவானுக்கு என்று தயார் நிலையில் சரீரத்தை நிறுத்தி வைப்பது சுத்த தேகம் இந்நிலையில் தேகம் கர்ப்ப கோடி காலங்கள் நிலையாக நிலைத்து நிற்கும். உன்கவனத்தை விட்டு உயிர் விலகாத வரை உன் உடலை விட்டு உயிர் ஒருக்காலமும் விலகாமல் ஒன்றை ஒன்று விசுவாசிக்கும். இந்த தேகம் இயற்கை வடிவமாக நிற்கிறது என்று எண்ணுவீர்களாக. என்னிடத்தில் உள்ள ஒரே சக்தி கவனம் மட்டும்தான். கவனம் என்ற அரசன் விதையை உயிருக்குள் புதைத்து வைத்துவிட்டு 1000 காலங்கள் தவம் செய்யலாமே, இவ்வுடலில் உயிர் ஒன்றே ஆதார சக்தி. மாய இருள் போக்கும். அருள் ஒளி பிரவாகமான உயிரினுள் சோதியாய் தேகம் நிலைத்த காய கலைஞான தீபம். கடவுளின் கடைக்கண் பார்வையில் கற்பூர தேகம் ஒளிபிரவாகமாகும். கற்பூரமாக படைக்கப்பட்ட போதே அது எந்த தெருவில் கிடந்தாலும் அது பகவானின் சன்னிதானத்துக்கு அழைத்து வரப்பட்டு படைத்தவன் கண் முன்னே பரஞ்சோதி ஆவார், திண்ணம். எல்லை இல்லா ஆனந்தம் அடைவர், உயிரை கடவுள் என்று உணர்வால் உணர்வர் நம்பிக்கை மோசம் போகார். அருள்வழி செல்வர் அழைப்பு கிட்டும், வா என்று உன்னை சொல்லாததால், உன்

முகத்தில் உள்ள வருத்தம் யாவும், வா என்றழைக்கும் போது, முகம் மலர்வது ஆகும். கவனம் கொண்டவர் மட்டும் அழைக்கப்படுவர். எம்மதமும் சம்மதம் என்றுனை அனைக்கவே 1000 கரங்கள் கொண்ட சம்மதக் கொள்கையின் சிறப்பான அழைப்புதான் இந்நூல். உனக்கு என்று நீ எல்லோரிடத்திலும் அன்பு செய்யும் கருணை உள்ளத்தை கடவுள் ஒரு நாளும் களங்கபடுத்த மாட்டான். சில்லரையை போல் உலகில் சிதறாத சிந்தைக்கு சிக்கல் என்பது சிறிதும் இல்லை. சில்லரையே வாழ்வில் ஏனைய சிக்கல்களுக்கும் காரணமாகும். எனவே ஒருவர் பொங்கி அனைவரும் உண்போம். காக்கைகள் போல கூட்டம் கூட்டமாய் அருள் ஒளிக்குள்ளே புகுவோம், வாருங்கள். அதற்கு உயிர் உணர்ச்சியில் தேகம் நிலைத்து வாழும்படிக்கு தியானியுங்கள். உடலை பெரிய பொருள் என்னும் உயிரை ஊசிமுனை அளவு என்றும் எண்ணுதலினாலேயே உயிரிடம் உடல் தோற்றுப் போகிறது. காலப்போக்கில் கால வெள்ளத்தில் அடித்து செல்லப்படுகிறது.

## 42. "எம்மத(மு)ம் சம்மதம்"

எம்மதமும் சம்மதம் என்ற உயரிய குணத்தி;ல வாழும் கொள்கை உலகம் முழுதும் ஓங்கும், ஒப்பில்லா வேதம் இதனை சிக்கற கற்றவர் தேகம் பழுத்துப் பரஞ்சோதியாவர். நற்றவம் செய்தவர் சம்மதத்தார் சீரும் சிறப்புடன் வாழ்வர் பல்லாண்டு பல்லாண்டு. திருஉள்ளம் என்னை ஏற்றுக்கொள்ளும் படிக்கு மன்றாடி உள்செல்வேன். நின் திருவருள் கருணையினால் உன் மனக் கதவுகளை திறப்பேன். உயிராகிய தேவன், உன் மீது ஆணையிட்டேன், உயிரினுள் உடலது புகுமாறு அறியேன், உன்னை மட்டும் அறிந்தேன். உண்மை என உணர்ந்தேன். திருஅருள் எம்முன் திருக்கூத்து செய்யும் நாளை, திருறிப்பு அதுவாய் மலர்ந்தருளு. நான் இம்மண்ணை விட்டகலும் அந்த பொன்னான நாளை மட்டும் எதிர்பார்த்து உட்புக விரைந்தேன். வீண் பொழுது போக்க விரும்பேன். என்னை அழைத்து வரும்படி கட்டளை சொல்லில், உயிர் வாழ்வேன். இனியும் தாங்குமோ என்

உள்ளம், என்று மாறுமோ உன் எண்ணம். பாபச்சுமைகளை நான் எங்கே இறக்கி வைப்பது என்று இடம் அறியாமல் அலைகிறேன். அழுக்கு மூட்டை சுமக்கும் கழுதையைப் போல் ஆனேன். சேர்ந்திருக்க வழி அறியேன். விலகி இருக்கவும் நான் விரும்பேன். உயிரோடு உடல் கலந்து வாழ்விக்க வல்லானை நம்பியே வாழ்கிறேன். ஊர் காண என் தேகம் வீழ்ந்து விடுமோ என்ற அச்சத்தால் பசி உறக்கம் அற்றுப் போனேன். நீ என்மீது வெறுப்புற்றால் நான் எங்கே சென்று வாழ்வது. இப்பூவுலகில் உன் விருப்பம் அல்லால் என் விருப்பம் ஏதும் எமக்கில்லை. தாயை தவிர பிள்ளைக்கு தேவையேதும் இல்லை. மகன்படும் பாடுகள் யாவும், தாய் உள்ளம் அறியும், பொண்மயமாகும், பேராளியாய் இந்த பிரபஞ்சம் முழுவதும் கனத்தில் என் தேகம் கலக்கும் அப்பொன்னான நாள் எப்போதென்று திருக்குறிப்பு சொல்லு. இன்னும் யான் ஒழியாமல் என்னை காத்தருளிய உயிராகிய தெய்வமே எனக்கு எல்லை இல்லா மகிழ்ச்சி அருளி, நின் கடைக்கண் பார்வை என்மீது பட்டு கற்பூரம் போல் பிரகாசித்து உயிருடன் வாழ்வேனோ? அந்தமில்லா ஆனந்தம் சொந்தம் இல்லா வாழ்வு, சொந்தமானவற்றை இணையும்படிக்கு இச்சை வைத்தேன். இணையில்லா நின் நட்புக்கு ஈடில்லாத நின் அன்புக்கு முன்னே கரையாத தேகமும் உண்டோ? மலைபோல் உள்ள கஷ்டங்கள் பனிபோல் கரையும் இக்கணத்தே, துக்கம் தாளாது என் மேனி மெழுகுபோல் உருகுவதை நீ அறிந்தும் சும்மா இருப்பது முறையோ. எனக்குள் இருப்பவன் உறங்குவதை போல கண்களை மூடிக்கொண்டு பாசாங்கு செய்கிறான், என்பதை நான் அறிவேன். கோபம் கொண்டவர் போலே முகம்காட்ட மறுப்பதுவும், பேசாமல் மௌனமாக இருக்கும் சாமியே நின் புன்சிரிப்பையும் ஓரப்பார்வையையும் கண்டுவிட்டேன். இனியும் பாசாங்கு செய்வதுவும், ஏனோ? சம்மதத்தார்கு என கொள்கை எழுத சொன்னாய். இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்த நாள் முதலாய் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்து பழகிய அன்பின் மீது ஆணையிட்டு கூறுகிறேன். உன் இதயக் கோயில் தாழ் திறவாய். பக்குவப்படுத்தி பரஞ்சோதி ஆக்குவாய்

திண்ணமாய் அறிவேன். பிறப்பில் புண்ணியம் நான் உன்னை எனக்குள் சந்தித்து. வாழ்வில் நான் செய்த பாக்கியம், உன்னோடு வாழ்ந்ததும் மனம் விட்டு பழகியதும். தாயையும் மகனையும் பிரிப்பது என்பது விதியோ சதியோ நான் அறியேன். மனிதகுலத்துக்கு பொதுவான அன்னையே, தந்தையே, உயிர் ஒன்றே கடவுள் என்று தெளிவாய் அறிந்தவர் ஒளி உடம்பு பெறுவர். சரீரம் ஒளிதான் என்று திடமாக நம்புகிறேன், மாமிசங்கள் அல்ல. சரீரம் வெறும் மாமிசங்கள் தான் என்றும் அகங்காரங்கள் ஒழிந்து திடப்பொருள் ஒளிப்பொருளாய் ஒளிர்கிறேன். இயற்கை வெளிக்குள்ளே இயற்கை ஒளிகண்டேன், இயற்கையில் பிறந்து யான் இயற்கையுடன் பழகி, இயற்கையில் உட்புக அறிவேன். இயற்கையின் உண்மையை இயல்பாக கற்றேன். இயற்கை அறிவே உயிர் என்றுணர்ந்தேன். தடை இல்லா நின் கொடை சாகா நிலை. ஓர் உயிர் ஈருடலாய் விளங்கும் தத்துவம் அறிந்து கோடான கோடி தேகம் அதனுள் நின்ற ஓர் உயிரே "உயிர்தான் கடவுள்" என்ற உண்மையை அறிந்த பின் உயிர் போகுமோ, வருமோ என்ற அச்சம் கடுகேனும் எனக்கில்லை.

ஒரு சட்டிக்குள்ளே ஒரு தீபம், சட்டி உடையவும் தீபம் அணைந்தது அறியார். தீபம் அணைந்ததை எண்ணி வருந்துவர். பந்தபாச சேற்றிலே செய்த சட்டி. சட்டி சூடேறி கைநழுவி விட்டது போல், கெட்டதடா காமத்தால் சூடறிய தேகம், ஓட்டை சட்டியை எடுத்து வீதி வீதியாய் பிச்சை எடுத்து சேர்த்தாலும், ரசமது ஒழுகி ஓடிய பின்னே வெறும் சோற்றை யார்தான் உண்பார் காம பசியாலும், பழகிய ருசியாலும், சக்தியிழந்து வெறும் உடம்பாச்சு. வெறுப்பும், கோபமும், தாபமும், காமமும் நிறைந்த தேகத்தை ஒளியுடம்பாக்கிட முடியுமோ, நீயே சொல்லு. சுவை இல்லா சோற்றை நாய் உண்ணவும் மறுக்கும். அதை நான் உண்ணுவது எப்படி? என்று, உயிர் தேகத்தை வெறுத்து ஒதுக்கும். நலம் ஏதும் இல்லாத வெறும் குப்பையை கொண்டுபோய் எரிப்பதுவும் புதைப்பதுவும் நலமே. வெறும் உடம்பை வீசி எறியும் கோபம் கொண்டு, வெறும் உடம்பு என்று எண்ணுவர், நோய்வாய்பட்டு

அவதிபடுவர் எண்ணிலா நோய்களுக்கு எண்ணற்ற மருந்துகளும் நாட்களை நகர்த்தும் மனிதனே, உயிர்த்து எழுவாய், இவ்வையகத்தில் பூரண தேகம் பெற்று தேவையை அறிந்து உடலில் வேண்டிய அளவு அதை நீயே உற்பத்தி செய்து கொள்ளு. "உயிரே மருந்து ஆகும்". மருந்தினால் உயிர் செய்ய இயலாது. மூடனே மருத்துவனின் மேல் பக்தி! நோயின் அச்சத்தால் விளைந்தது. மருந்தும் அதுவே மருத்துவனும் அதுவே மகத்தான உண்மை! உயிரும் அதுவே, அச்சம் தீர்த்தவன், அருமருந்து ஆனவன், எனதாருயிர் கண்மணியே! உடலில் ஏற்றம் இறக்கம், குறையும், நிறையும், தானே தன்னை அறிந்து பக்குவமாய் பழகும் பகை இல்லாத உயிர் மருந்து எப்போதும் என்னை அனைத்துக் கொண்டே சரீரத்தை நிலைக்க வைக்கும். உயிர் மருந்து உண்மை, உயிர், பொருள் அதுவே.

தாயைவிட உயர்ந்தது தரணியில் இல்லை தாய்ப்பாலை விட உயர்ந்த உணவாகிய மருந்து இல்லை. தன்னலம் அற்ற தாயின் உபசாரம் சேயிற்கு கிடைத்தது. தெய்வமகள் இவளிடத்தே பெற்ற சுகமும் பேனிய அன்பும் கருணையே வடிவாய் பெண் உருவெடுத்து தன்னை எனக்கு தந்ததால் கலை பலவும் கற்றுணர்ந்தேன். பிறந்த பயன் அடைந்தேன். இப்போது என்னை பெற்ற தாய்க்கும் வளர்த்த கைகளுக்கும் நன்றி சொல்ல தேடுகிறேன். அந்த அன்பான கரங்களையும், பாதங்களையும் எனது மிக்கான நன்றியை சொல்ல எனது காலம் கடந்த இந்த ஞானத்தை நினைத்து மேலும் வருந்துகிறேன். தாய் இருக்கும் போது தாயின் அன்பு புரிவதில்லை. அவள் போன அடுத்த நிமிடமே அதை புரிய வைத்துப் போகிறாள். அதை போலத்தான் நாம் உயிருடன் வாழும் காலத்தில் உயிர்தான் கடவுள் என்பது அறிய முடியாது. அது விட்டு அகன்று விட்ட போது உயிர்தான் கடவுள் என அறிவதினால் என்ன ஆனந்தம் கிடைக்கும். காலத்தில் கிடைக்க வேண்டிய ஒன்று காலம் கடந்து கிடைத்தால், கிட்டியதால் எந்த சந்தோஷமும் இருக்காது. வயதுக்கு மீறிய அனுபவம், காலத்தை மீறிய கனவு, வரவை மீறிய செலவு, வரம்பை மீறிய

வார்த்தை, வாழ்க்கைக்கு உதவாத கல்வி, வாழப் பிடிக்காத மனைவி, ஊருக்கு உதவ்ாத பிள்ளை, உழவுக்கு உதவாத மாடு, காலுக்கு உதவாத செருப்பு, காலத்துக்கு பொருந்தாத வார்த்தை, இருப்பவன் பேசிக்கொண்டு இருப்பதை, இல்லாதவன் கேட்டு ரசிப்பது, போன்ற இத்தகைய பயன் அற்றவைகளை விட்டு விலகி பரத்தில் நிற்கவும் நினைக்கவும் அருள்வாய் கடவுளே.

உன்னிடம் நான் வாழ்ந்த அந்த சில நாட்கள் மறக்க முடியாது, நின் செயல். உன் உயிர் தந்து ஊடல் செய்த வன்னம் அமைத்த அந்த ஒரு நாள் ஆனந்த திருநாளை எனக்காக அமைத்து, ஆனந்தத்தின் எல்லையில் என்னை உன்னிடத்தில் இருந்து வெளிப்படுத்தியதை நான் அறிவேன்.

## 43. "சுவாசத்தை விசுவாசிப்பவர் செல்லும் மெய்வழிப்பாதை"

காற்றை விடவும் மெல்லியது ஒளி. ஒலியைவிட மெல்லியது ஒளி. ஒளி என்பது உயிரின் ஸ்வாசம். ஆக உயிர் சுவாசிப்பது ஒளியைத்தான். ஒளி உடம்பே உயிர் எனப்படும். ஒளி உடம்பு செய்ய ஊற்றை தேகத்தை உயிர் உடம்பு ஆக்கவேண்டும். ஆதியான விந்தே நாதம் எனப்படும் ஒலி பொருள். எனில் ஊற்றை தேகம், ம் என்ற ஒலி உடம்பாகிப்பின், ஒளி உடம்பாகிறது. காயம் திரி என்று வேதமெலாம் சொன்னது ஏது என நான் கேட்டபோது, சொன்னதுவே பொய் உடம்பு போய் மெய் உடம்பில் நின்று அருள் உடம்பு ஆனது என்றாய். யோகியின் தேகம் மெய் உடம்பு. ஞானியின் தேகம் அருள் உடம்பு.

1. பொய் உடம்பு வாழும் மாயை உலகத்தில் அகப்பட்டு சீர் அழிந்து போகும். மரணத்தை வெல்வது கட்டுக்கதை என்பர். பக்தி என்பதெல்லாம் கற்பனை லோகத்து சஞ்சாரம். பொருளை உருவாக்க பொக்கிஷத்தையும் இழக்கலாம்.

2. மெய் உடம்பு வாழும் ஞான லோகத்தில் நிலைபட்டு

தேகம் உறுதியுடன் வாழ்வர். மரணமெனும் பெரிய நோயை வெல்ல சிறிய தந்திரம் செய்வது. சரீரத்தில் உள்ளது ஆத்மா வேறு, பரமாத்மா வேறு இல்லை எனும் தீவிர கொள்கை உடையோர் உடம்பு பெரியது அதில் ஊசி முனை அளவுதான் ஆத்மா என்பர். தியானம், சமாதி என்பது ஞானத்தின் இறுதி நிலையாகும்.

3. அருள் உடம்பு வாழும். அருள் ஒளிப்பாதை செல்லும். ஒப்பற்ற ஒளிமண்டபம் தான் தேகம். உயிர் பொருளிடம் உறவாகுவார். தேகத்தை பின் தேகமது உயிர் உடம்பாக்கும். அருள் வெளிக்குள்ளே தேகத்தை பொருத்தும் விஞ்ஞானம் **"சம்மதகொள்கை."** இருளில் மறையாத தேகம், பச்சை ஒளி பரவும் தேகம், வழிதவரியபேர்களுக்கு வழியைகாட்டும், மினுக்கட்டாம் பூச்சி.

"மினுக்கட்டாம் பூச்சி", உயிருக்குள் தேகம் இருக்கிறது என உணர்ந்த பூச்சிக்கு உடலுக்குள் உயிர் ஒன்றே சுவாசம். சுக்கிலமே உயிர், உடல் செய்ய அதுவே ஆதி. அந்த விதை கெட்டுப்போனால் விளைச்சல் என்ன ஆகும். பச்சை மாமலைபோல் மேனியும், பவழம் போல் வாய், தாமரை போன்ற கண்கள், தெய்வ லட்க்ஷணம், பெற்று தருவது சுக்கிலமே. சுக்கிலம் என்றால் வெண்மை என்பதே அதன் பொருள். இது அனைத்து வண்ணங்களுக்கும் ஆதியான நிறம். தூய்மையின் அடையாளமாக விளங்குகிறது. நோய் என்ற அகத்தில் இருந்து தேகத்தை மீட்டு சுத்த வஸ்துவால் நிலைத்து நிற்கும்படி செய்கிறது. உடலை காப்பது, உயிர்தான் என்ற அடிப்படை உண்மையை உணரும் இவர் உயிரின் அடிப்படை உண்மையை மட்டும் ரகசியமாகவே வைத்து இருக்கிறார்கள். பூமியில் இருந்து நீர் ஊற்றில் வெப்பம் உண்டாகி பூமிக்கு மேல்பரப்பில் நீராவியாக சென்று விண்ணில் கலப்பது போல். உடலில் உள்ள சுத்தவஸ்துவுக்கு வெப்பம் அதிகமாகி உடலைவிட்டு நீராவியைபோல், உடலை சுற்றி ஒளி வட்டம்,

தேகம் முழுவதும் பரவுகிறது. விளக்கில் இருந்து வெளிச்சம் வருவது போல் ஏற்படுகிறது. இதற்க்கு எண்ணை என்பது சுத்த வஸ்து ஆகும். எண்ணை இல்லாமல் வெறும் திரியாகப்பட்ட தேகம் எப்படி ஒளியுடன் ப்ரஹாசிக்கும். இந்த என் எளிய கேள்விக்கு பதில் சொல்லுங்கள் பார்ப்போம்? சரீரமாக்கப்ட்ட திரி கருகி சுடரும் உள்ளே ஒன்று கொதிப்பு அடையும்போது தேகம் சூடுயேறும், சொரனையேறும் இயற்கைதானே. தன்னிடத்தில் இல்லாத ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள முடியாது. ஒரு சிறிய பொரியை நன்கு ஊதி பெரியதாக்கி தேகத்தில் அதை ஒட்டவைத்து, ஊதி, ஊதி, சரீரத்தை தீ பிழம்பாக்கி தேகத்தை விட்டு வெளி கடந்து, காண்பவர்க்கு கண் முன்னே ஒளியாகிய தேகத்தை உயிருக்குள் ஒடுக்குவதுவே. ஊசி முனை நெருப்பை ஊதி ஊதியே பெரியதாக்கும் அற்புத வித்தை "சாகாகலை". காயகலை என்பது காசு கொடுத்து வாங்க இயலாது. உயிரை கொடுத்து வாங்கவேண்டிய பொக்கிஷம். "ம்" எனும் நாதம் கேட்கும் நாதமண்டபம். அருட்செல்வரின் அருள் உடம்பு செல்லும் அருள் ஒளி பாதையில் பலகோடி அகல்விளக்கு பாதையை உனக்கு காட்டும். பதறாமல், பின் நோக்காமல் "உயிர் ஒன்றே கடவுள்" என்று லட்சியம் கொண்டார் தேகத்தை ஒளி மண்டபமாக இருப்பதை பிறர் கானுவார். உயிர் என்னும் ஒரே பொருளை உணரும்போது "உணர்ச்சியாகவும்", பார்ப்பவர் கண்ணுக்கு ஜோதியாகவும், கேட்பவர்க்கு நாதமாகவும், வாயார புகழுபவர்க்கு சுவையாகவும், மனதால் என்னுபவர்க்கு ஜோதியாகவும் உள்ள இதன் அத்தனையுமே ஐந்து முகம் கொண்ட அற்புத விளக்கு. அதை விளங்காதவர் கண்ணுக்கு தேகம் சேதம். உயிரே ஐந்து வடிவம் எடுத்து நிற்கிறது, ஆதியில் அது உயிர் என்பது மட்டும் தான் உண்மை. தனித்த உயிர் வெறும் சுக்கிலம்தான். பரிசுத்த, ஆத்மா, சுத்த வஸ்து, எந்த விஷயமும் உடம்பில் இல்லாமல் எந்த பொருளும் செய்ய முடியாது. சுக்லாதிகளால் இக சுகம், பர சுகம் இரண்டும்

பெறுவர். தன்னிடத்தில் உள்ளதையே தான் தன்னிடத்தில் இருந்து வெளிப்படுத்துகிறது. கண்ணை மூடிக்கொண்டு தவம் செய்ய வேண்டும் என்று எண்ணும், உடலுக்குள் எந்த விஷயமும் இல்லாத செல்லாத காசு. கடவுளிடத்து சென்று சில்லரை மாற்றும் முயற்சி வீண்பேச்சு, வெட்டி முயற்சி. ஒன்றும் இல்லாத சட்டியை ஏதோ ஒன்று இருப்பதாக சொல்லி ஊரை எத்தனை காலங்களுக்கு ஏமாற்ற முடியும். சட்டி உடைந்தால், புட்டு வெளிப்பட்டு போகும். மண்சட்டி ஆனால் உடைந்து போகும். என் சட்டியோ ஒளிச்சட்டி அதை பாதுகாக்க ஒரு வெளிச்சட்டி. அதை தட்ட கிளம்புது நாதம், அதை கேட்டவர் வாழ்விலே ஏதடி மோகம். வண்ண கலாப தீபம், அதை கண்டவர் கண்ணுக்கு ஏதடி மயக்கம். பாபத்தை போக்கிடும் தீபம் அதை பார்த்தவர் கண்ணுக்கு ஏதடி உறக்கம். ஒளியில் நனையுது தேகம் அதில் ஒய்யாரமாகவே வாழும் தேகம். கட்டு விறகுக்கு கட்டுப்படுமோ, சித்தன் உடலது செத்து வீழுமோ, கைப்பொருள் விட்டே கதறி அழுகிறார், அதை உயிர் பொருள் என்று அறியாமையாலே, கைப்பொருள் அதனை களவு கொடுத்தார். அந்த ஏமாளிக்கு பெயர் தான் நோயாளி. காலதேவன் போடும் தெருக்கூத்துக்கண்டு திருக்கூத்தை மறந்துபோன வேடிக்கை மனிதன்.

சம்மத வழியினில் சிந்தைவைப்பார் தேகம் இயற்கையோடு இயல்பாய் கலக்குது, தன்னை ஆண் என்றே அரியாததே நான் செய்த பாவம், பெண் என்றுணை புரியாது போன காரணம். உடலும், உயிரும் சேர்ந்த உறவுக்கு பெயர்தான் இறை உணர்வு. உணர்வை இறைவன் ஆக்குதல். உணருபவன் உணர்ச்சியில் இறைவன் தோன்றுகிறான். ஆயிரம் உணர்ச்சிகள் மாறும்போதும் பொதுவான உணர்ச்சி. இயல்பான உயிரே உன்னுடன் பழகும் தகுதியும் எனக்கில்லை உன்னை விட்டு பிரியும் விருப்பமும் எனக்கு இல்லை. இந்நிலையில் என்னோடு உறவாகிய, என் மீது உள்ள உன் விருப்பம் என் மீது அருளிய ஆனந்த வெப்பம் நான்

அடைந்தேன். நெருப்பு இல்லாமல் சூடு எப்படி? என்ற சாதாரண அறிவு கூட இல்லாத மூடனுக்கு அருளிய அறிவு பிரகாசமே. விளக்கை ஏற்றி வைத்துவிட்டு இருளுக்குள்ளே நான் இருந்து கொண்டு எத்தனையோ காலங்கள் இதுதான் ஜோதி என்று எண்ணி, இருட்டு சிறையைவிட்டு வெளியே வர முடியாமல் திகைத்தது கூட உண்டு. அந்த விளையாட்டுப் பருவத்தில் கடவுளிடம் கூட நான் விளையாடி இருக்கிறேன். கண்களை கட்டிக்கொண்டு கடவுளை எண்ணிக்கொண்டு கிணற்று ஆழம் தெரியாமல், குதித்தது கூட உண்டு, கடவுள் என்னைக்காப்பாற்றுவான் என்ற எண்ணத்தில், காப்பாற்றாது போன கடவுளை "கல்" என்று கூட ஏசியது உண்டு. கடவுளிடத்தில் பேசாமலும், அவரை பற்றி என்னிடம் எவரும் பேசக்கூடாது என்றும் சொல்லிவிட்டு பிறகு ரகசியமாக யாருக்கும் தெரியாமல் கடவுளை வழிபட்ட நாட்களும் உண்டு. சாமிவேஷம் போட்டு ஆடும் கோமாளிகளைப் பார்த்து பயந்ததுவும் உண்டு. ஆடு வெட்டி சாமி கும்பிடுபவரை கண்டு அழுதது உண்டு.

கண்மூடும் நேரம் பார்த்து எமன் என் உயிர் எடுத்து செல்வானோ, என்று தலைசாய்க்கவும் அச்சப்பட்டேன். கண் உறக்கம் அகன்று போனேன். அச்சத்தால் உடல் முழுவதும் விபூதியும் குங்குமமும் பூசி அலைந்தேன்.

அழியாத தேகம் அதை நீ தான் கொடுத்தாய். அதற்காகத்தானே இந்த ஜென்மம் எடுத்தேன். தாய் அரியா பிள்ளையானேன், ஊர் ஊராக தேடி அலைந்தேன். வருத்தம் எனக்கு தாங்காமல் குறைகளை கேட்பாரும் நாதியத்துபோய், புரண்டு அழுத என்னை முன்னொரு சென்மத்தில் செய்த தவத்தாலும் புண்ணியத்தாலும் பூமியில் பூத்த இந்த "சுத்த சம்மத திருச்சபை" என் தெய்வம் இந்த சபை இருக்கும் வரை கலக்கம் எவர்க்கும் இல்லை.

அரியாத பாவம் என்னுடையது என்றால், அதை அறிவிக்காத பாபம், அது யாருடையது. தாய்க்குள்ள இப்பிள்ளையின் சோகம் இவ்வுலகை விடவும் நீ பெரிது. அனைவருக்கும் தாயாக இருப்பதனால் என் சோகம் உனக்கு புரியவில்லை. செத்தவனை எழுப்பி குறைகளைக் கேட்க விரும்புகிறார்கள். உயிரை விட்டு உடல் வீழ்ந்த அந்த ஒரு சோகம் மட்டும் தான் என்று அறியாத மூடன், செத்தவர்க்கு அறுசுவை அன்னம் படைப்பர், உணவைப் பார்த்துவிட்டால் உயிர் வந்து விடும் என்றும், பிடி சோறும் உண்ணாதோ என்று ஏங்குகிறார்கள். அனைவருக்கும் புரியும்படிக்கு நீயே திருவாய் மலர்ந்தருளு. இங்குள்ள மக்கள் யாவரும் ஒரு தாய் மக்கள், ஒரே தந்தையின் உயிரில் ஜனித்தவர்கள். எல்லோரும் ஓர்குலம் எம்மதம் சம்மதம் என்றே உண்மையை அறிந்து கொண்ட சம்மதத்தார் வந்து நாளும் மண்டி இட்டு வணங்கும் எம் அரசே, நின் ஆளுகைக்கு என்னை உட்படுத்து, சமத்துவத்தார் வாழ்வில் சம்மத நெறி தழைத்தோங்கும், அன்பு என்னும் சோதியில் உயிர்த்து எழாத தேகம் கணல்பட்டுக் கருகி அடங்கும். உயிர் என்றால் என்ன? என்று கூட அரியாமல் உயிரை வெறுத்தவர் உண்டு, தானே தன் உயிரை விட்டவரும் உண்டு. பயன் அற்ற வாழ்க்கை, பிறப்பு, என்றெண்ணி செத்துவிடலாம் என்று நினைத்து, உருப்படி இல்லாத உசுறு என்றும் பலவாறாய் திட்டியது உண்டு. வெற்றியும் தோல்வியுமே பழகிப்போன வாடிக்கை மனிதர்களுக்கு பிறப்பு இறப்பு இரண்டும் ஒன்றுதான். இவர்கள் சித்தாந்தத்தின்படி சாவதர்க்கென்றே பிறப்பு எடுத்ததே உண்மை. உயிரை மயிறு என்று சொல்லிவிட்டு ஊருக்குள் எல்லோரும் ஷேமமாக இருக்க, பலி பூசை இட்டு கூத்தும் கும்மாளமும், தாரையும் வேட்டு சத்தமும் கேட்டு ஆட்டம் ஆடும் அந்த ஆசாமி. பிரேதம் என்று கிடந்தது கண்டால் சாமி கதவை சாத்திக் கொள்ளும். அவன் பக்தனே ஆனாலும் ஆசி வழங்காது கண்ணிரண்டும் இல்லாத பொம்மை கதவையும்

சேர்த்து சாத்திக்கொள்ளும். செத்தவனை கண்டால் சாமிக்கு கூட பயம்தான். அந்த மரியாதை தெரியாத ஆசாமியிடத்தில், நீயே உன்னை வெளிப்படுத்திக் கொண்டால் ஒழிய வேறுவழி இல்லை அரசே. சிக்கர கற்றேனே "காயக்கலை" சீக்கிரம் வருமோ சாகாநிலை. ஒருவரிக்குள்ளே வேதம் முடிந்ததை வேதியர் அரிவரோ! உண்மையாக இருக்கும் விஷயத்தை, "உயிரே கடவுள்".

ஓதிய வேதத்தை உணர்ந்தவன் கண்ணுக்கு எல்லா உண்மையும் விளங்கும் தானாகவே இதைவிட வேறுவழி இல்லை என்று நன்கு உணர்த்திய வித்தகனே நம்பாத பேர்களை பிடி சாம்பலாக்குது. இதை நம்பாதபேர்கள் விதி என்று சொல்லி அந்த பாபக்கணக்கான சாதகத்தை பட்டியல் போட்டு பார்த்துவிட்டு, 'மூடிவைத்தார் புறப்பட்டு சென்றுவிட்டார். வாழ்வுக்கும், சாவுக்கும் விதியை நம்புபவர், விதித்தவரை மட்டும் ஏன் நம்பவில்லை? எண்ணத்தினில் பல வண்ணங்கள் பாயுது உயிருடன் வாழ கசக்குமோ ஞானப்பெண்ணே. சோதனை அதனை சாதனையாக்கும் தெய்வம் இருக்குது திருச்சபையில். சந்தோஷமாகவே வா என்று சொல்லுது, வாரி அனைத்துக் கொள்ளும் யாவரையும் ஏற்றம் இரக்கமும், உயர்வு, தாழ்வு இல்லாமலே உத்தமன் வாழ்ந்திடும் வீடு இது. (ஆனந்தத்தின் எல்லை). பிராண நாதன் சரண்புகும் தேகம் வெந்து தனியுமோ ஞானப் பெண்ணே. உனக்கெதிராக காலம் இருக்கட்டும். உனக்கெதிராக விதியும் இருக்கட்டும், உனக்கெதிரான சாட்க்ஷி இருக்கட்டும், காசை வாங்கி கொண்டு வழக்கில் நியாயம் செத்து போனாலும், நீதியுடனே அரசு ஆளும் சபையினில் வந்து உண்மையை ஒன்றுவிடாமல் சொல்லிவிட்டு, குற்றம் செய்தவர் கடவுளானாலும் கட்டாயம் தண்டிக்கும் அதிகாரம் உள்ள "சுத்த சம்மத திருச்சபை" வாழும் எம் அரசு ஓர் நீதி தேவதை. வளையாத செங்கோலைக்கொண்டு நீதியுடன் என்றென்றும் வாழும் உயிராகிய நீதி தேவதை எமக்கிங்கிரர்கள் தினமும்

வந்து சேவகம் செய்யும் நீதி வழுவா அரசன் வாழும், அச்சம் ஏதும் இன்றி ஆண்மையுடன் தலை நிமிர்ந்து அமர்ந்த, சமத்துவத்தார் பணிந்தேத்தும் வீரசபை. "ம்" எனும் நாதம் கேட்கும் அந்த சபையில் வாழும் என் பிரான் சொன்னது அனைத்தும் சத்தியமே. தாயிடத்தில் மகனுக்கு உள்ள எல்லா உரிமைகளும் இந்த சபையில் உனக்கு உண்டு. உண்ண உணவு உண்டு உறங்க இடம் உண்டு வாழ வழி சொல்லும் நிலையான வாழ்க்கை உண்டு. தண்டிக்கும் அதிகாரம் உண்டு. பாரில் உள்ளவர் அனைவரையும் இன்பங்கொள்ள வைக்கும் நல் இதயங்கள் உண்டு. நான் மாட கூடம் உண்டு, தாய் அரியா பிள்ளைக்கெல்லாம் தான் அழைக்கத் தாயும் உண்டு, பூமியிலே சொர்க்கம் போலே, வானவர் இங்கே வருவது உண்டு, பாடையிலே போகாமலே காத்திடுவாள், அவள் பாசம், இந்த பூமி அரியாமலே போகுது போது, கையில் உள்ள ஈரம் காயும் முன்னே நன்றியை மறந்த நெஞ்சமே! நெஞ்சம் பல்லாக்கில் போவது ஏனோ தனியே.

"சுத்த சம்மத திருச்சபை நாடுவோம்"
உயிராகிய கடவுளை தஞ்சமடைவோம்
ஊண் உடலை, உயிர் உடலாக்கி, பின் ஒளி உடலாக்கி
அடைவோம் ஆனந்தத்தின் எல்லையான
கடவுளின் வீட்டை

**"திருவருள் சம்மதம்"**

*படைப்புகள் தொடரும்...*